॥ ஓம் ஸ்ரீபரமாத்மனே நம: ॥

590

குடும்பத்தில் எப்படி இருக்கவேண்டும்?



ஸ்வாமி ராம்ஸுகதாஸ்

|| ஸ்ரீ ஹரி: ||

குடும்பத்தில் எப்படி இருக்கவேண்டும்?

[நம்முடைய கடமைகளைச் செய்வது;
பிறருடைய உரிமைகளைப் பாதுகாப்பது.]

ஸ்வாமி ராம்ஸுகதாஸ்

॥ ஸ்ரீ ஹரி: ॥

முதல்பதிப்பு 1993 பிரதிகள் 10,000

தமிழாக்கம்: திரு. டி.எஸ்.கோதண்டராமன்,
தஞ்சாவூர்.

விலை ரூ.
Price Rs. : 6.00

கீதாப்ரஸ் புத்தகங்கள் கிடைக்குமிடம்:
கோபால் சேவா டிரஸ்ட்,
82, கிருஷ்ணா டாக்கீஸ் ரோடு,
ஈரோடு - 638 003.
தொலைபேசி: 212902, 211668

பதிப்பாளர்: கீதாப்ரஸ்,
கோரக்பூர் - 273 005.

3-1

॥ ஸ்ரீ ஹரி: ॥

பணிவான வேண்டுகோள்

தற்காலத்தில், ஹிந்து பாரம்பர்யத்துக்கு ஏற்ப வகுக்கப்பட்டுள்ள வாழ்க்கை நெறிகள் தாறுமாறாகப் போய் இருக்கின்றன. ஆஶ்ரமங்கள் எனப்படும் நான்கு வகையான வாழ்க்கை நெறிகளுக்கும் அடித்தளமாக அமைந்த இல்வாழ்க்கை நெறி மிகவும் வருந்தத்தக்கதாக இருக்கிறது. இல்வாழ்வானை பற்பல பிரச்னைகள் கோரமாகப் பற்றியுள்ளன. அவன், நம்பிக்கையிழந்து, அமைதியையிழந்து, ஜீவனற்ற வாழ்க்கையைக் கழித்து வருகிறான். பெரு மதிப்பிற்குரிய ஸ்ரீஸ்வாமிஜீ அவர்களிடமும், இப்படிப் பட்ட ஆண்-பெண் சம்சாரிகள் வந்து, தமது சொந்தக் கவலைகளைக் கூறி, அவரவர்களுக்கு ஏற்புடைய ஆறுதல் - ஆலோசனைகளைப் பெற்றுச் செல் கின்றனர். இதிலிருந்துதான், குடும்ப வாழ்க்கையில் உள்ளவர்களின் பலதரப்பட்ட சிக்கல்களையும் அவற்றுக்கான தீர்வுகளையும் ஒருங்கே ஒரு புத்தகமாக வெளியிடும் யோசனை உருவாயிற்று. இந்த நூல், அந்தத் தேவையை நிறைவேற்றுகிறது. மனம் தோய்ந்து இந்நூலைப் படிக்க வேண்டும் என்று வாசகர்களைக் கேட்டுக் கொள்கிறோம். அத்துடன், பிறரையும் படிக்கச் செய்யவும் வேண்டும். திருமணம் போன்ற நிகழ்ச்சிகளில் இந்நூலை வழங்கலாம்.

- வெளியீட்டாளர்கள்

நாகர எழுத்துக்கள்

இப் புத்தகத்தில் வடமொழி ஸ்லோகங்களும், ஹிந்திப் பாக்களும் மேற்கோள்களாக அடிக்கடி கையாளப் படுகின்றன. அந்த எழுத்துக்களின் சரியான உச்சரிப்பு ஆங்கில எழுத்துக்கள் மூலம் விளக்கப்பட்டுள்ளது. "ஶ" என்ற எழுத்து ஓசை, இசை, பிசகு, கசடு இவற்றில் ஒலிக்கும் "ச" எழுத்தை ஒத்தது.

க	க$_2$	க$_3$	க$_4$
Ka	Kha	Ga	Gha
ச	ச$_2$	ஜ	ஜ
Ca	C̣ha	Ja	Jha
ட	ட$_2$	ட$_3$	ட$_4$
Ta	Tha	Da	Dha
த	த$_2$	த$_3$	த$_4$
Ta	Ṭha	Ḍa	Dha
ப	ப$_2$	ப$_3$	ப$_4$
Pa	Pha	Ba	Bha
ஷ	ஸ	ஜ்ஞ	க்ஷ
Sha	Sa	Gna	க்ஷ

பொருளடக்கம்

6

॥ ஓம் ஶ்ரீபரமாத்மனே நம: ॥

குடும்பத்தில் எப்படி இருக்கவேண்டும்?

ருத்$_3$ரோ முண்ட$_3$த$_4$ரோ பு$_4$ஜங்க$_3$ஸஹிதோ கௌ$_3$ரீ து ஸத்$_3$பூ$_4$ஷணா
ஸ்கந்த$_3$: ஶம்பு$_4$ஸுத: ஷடா$_3$னனயுதஸ்துண்ட$_3$ ச லம்போ$_3$த$_3$ர: ।
ஸிம்ஹக்ரேலிமமூஷகம் ச வ்ருஷப$_4$ஸ்தேஷாம் நிஜம் வாஹனம்
இத்த$_2$ம் ஶம்பு$_4$க்$_3$ருஹே விபி$_4$ன்னமதிஷு ஸைக்யம் ஸதா$_3$ வர்ததே ॥

பகவான் ஶங்கரர் மண்டை ஓட்டாலான மாலையையும், பாம்பையும் அணிந்து கொண்டிருக்கிறார். பார்வதியோ, மிக அழகிய அணிகலன்களை அணிந்து கொண்டிருக்கிறார். ஶங்கரருடைய குமாரர்களாகிய கார்த்திகேயனுக்கு முகங்கள் ஆறு; கணேசனுக்கு நீண்ட தும்பிக்கையும், பெருத்த வயிறும். பகவான் ஶங்கரர் முதலியோருடைய வாஹனங்களாகிய எருது, சிங்கம், மயில், சுண்டெலிகள் ஒன்றையொன்று உண்ணக் கூடியவைகள். இவ்விதம் தங்களிடையே விரோதமான இயல்புடையவர்களைக் கொண்ட ஶங்கரரின் குடும்பத்தில் எப்போதும் ஒன்றுமை நிலவி வருகிறது. [அதுபோலவே, நாமும் நமது குடும்பத்தில் பலவகைப்பட்ட இயல்புடையவர்களோடு, நம்முடைய சொந்த மரியாதை, இன்பம் ஆகியவற்றை த்யாகம் செய்வதுடன் மற்றவருடைய நலன், ஸுகம் ஆகியவற்றை எண்ணி, நமக்குள் அன்புமயமான ஒற்றுமை விளங்க வாழவேண்டும்.]

1. குடும்பியின் கடமை

ஸானந்த$_3$ம் ஸத$_3$னம் ஸுதாஶ்ச ஸுதி$_4$ய: காந்தா ந து$_3$ர்பா$_4$ஷிணீ
ஸன்மித்ரம் ஸத$_4$னம் ஸ்வயோஷிதி ரதிஶ்சாஜ்ஞாபரா: ஸேவகா: ।
ஆதித்$_2$யம் ஶிவபூஜனம் ப்ரதிதி$_3$னம் ம்ருஷ்ட்டான்னபானம் க்$_3$ருஹே
ஸாதோ$_4$: ஸங்க$_3$முபாஸதே ஹி ஸததம் த$_4$ன்யோ க்$_3$ருஹஸ்தா$_2$ஶ்ரம: ॥

வீட்டில் எல்லோரும் ஸுகமாக இருக்கிறார்கள்; புத்திசாலியான மகன்; இனிமையாகப் பேசுகிற துணைவி; நல்ல நண்பர்கள்; மனைவியோடு நல்லுறவு; சொன்னதைச் செய்யும் வேலைக்காரர்கள்; நாள்தோறும் விருந்தோம்பல்; சிவபூஜை; அறுசுவை உண்டி; தினமும் மஹான்களின் உபதேஶம் - இப்படிப்பட்ட குடும்பி மிகவும் பாக்யசாலி!

வினா: திருமணம் ஏன் செய்து கொள்ள வேண்டும்? திருமணம் செய்து கொள்வது இன்றியமையாததா?

விடை: நம்முடைய சமுதாயத்தில் இரண்டு விதமான ப்ரம்மசாரிகள் இருக்கிறார்கள் - நைஷ்டிகன், உபகுர்வாணன். வாழ்க்கை முழுவதும் ப்ரம்மசர்யத்தோடு இருப்பவர்கள் நைஷ்டிக ப்ரம்மசாரிகள் எனப்படுகிறார்கள்; விசாரத்தின் மூலமாகத் தம்முடைய இன்பநுகர்ச்சி வேட்கையைத் தணித்துக் கொள்ள முடியாமல், இன்பநுகர்ச்சி ஆசையைத் தணித்துக் கொள்வதற்காக மட்டுமே திருமணம் செய்து கொள்பவர்கள் 'உபகுர்வாண ப்ரம்மசாரிகள்' என்று அழைக்கப்படுகிறார்கள். புலனின்பத்தை அனுபவிக்க வேண்டும் என்ற ஆசையை விசாரம் மூலம் அடக்கிக் கொள்ள முடியாதவர்கள் விவாஹம் செய்து கொள்ளட்டும்; புலன்நுகர்ச்சி வேட்கை, புலனின்பங்களை அனுபவிப்பதன் மூலம் அடங்குவதில்லை என்பதைத் தாங்களே உணர்ந்து கொள்ளட்டும் - என்பதுதான் தாத்பர்யம். அதனால்தான், குடும்ப வாழ்க்கை நடத்திய பிறகு வானப்ரஸ்தம், ஸந்யாஸம் ஆகிய ஆஶ்ரமங்களைக் கைக்கொள்ள வேண்டும் என்று விதி செய்யப்பட்டிருக்கிறது. எப்போதும் குடும்ப வாழ்க்கையில் இருந்து கொண்டு இன்பங்களை அனுபவித்துக் கொண்டிருப்பது என்பது மனிதத்தன்மை அல்ல.

எவருடைய மனத்தில் இன்பவேட்கை இருக்கிறதோ அல்லது எவர் தன்னுடைய வம்ச பரம்பரை தொடர வேண்டும் என்று விரும்புகிறாரோ, [வம்ச பரம்பரையைத் தொடரக் கூடிய] ஒரு ஸஹோதரர்கூட இல்லாத அவர், தன்னுடைய இன்பவேட்கையைத் தணித்துக் கொள்ளும் எண்ணத்துடனோ அல்லது வம்ச பரம்பரை தொடர்வதற்காகவோ திருமணம் செய்து கொள்ளலாம். மேலே சொல்லப்பட்ட இரு விருப்பங்களும் இல்லாவிடில் திருமணம் செய்து கொள்ளத் தேவையில்லை. துறவு மார்க்கமே, மிகவும் உயர்ந்ததென அறநூல்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ***"நிவ்ருத்திஸ்து மஹாபலா"***.

வினா: கலியுகத்தில் துறவு மேற்கொள்வது தடை செய்யப்பட்டிருக்கும்போது, மனிதன் நிவ்ருத்தியை எப்படி செய்ய முடியும்?

விடை: கலியுகத்தில் ஸந்யாஸ தர்மங்களைக் கடைப்பிடிப்பது மிகவும் சிரமம்; அதனால், ஸந்யாஸ தர்மங்களை முற்றிலுமாகச் செய்ய முடியாமல் போகும் என்பதால்தான், கலியுகத்தில் துறவுக்குத் தடை போடப்பட்டிருக்கிறது. அரசு அலுவலிலிருந்து பணி ஓய்வு பெறும் அலுவலர்களைபோல, மனிதன் குடும்பப் பொறுப்புக்களை பிள்ளை-பேரன்களிடம் ஒப்படைத்துவிட்டு, வீட்டிலேயே பூஜை-த்யானம் செய்து கொண்டிருக்கவேண்டும். தேவையான உணவு-உடைகளுக்கு மட்டும், பிள்ளைகள் வற்புறுத்தினால் குடும்பத்தோடு தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டும்; பிள்ளைகள் வற்புறுத்தவில்லையென்றால், அந்தத் தொடர்பையும் விட்டுவிட வேண்டும். 'எனக்கு இவை எங்கிருந்து கிடைக்கும்?' என்ற கவலை தேவையில்லை. ஏனெனில்,

प्रारब्ध पहले रचा, पीछे रचा सरीर।
तुलसी चिन्ता क्यों करे, भज ले श्रीरघुबीर ॥

[ப்ராரப்த கர்மா முதலில் செயல்படத் தொடங்கிவிட்டது; ஶரீரம் எடுத்ததோ, பின்னாலே. என்ன கவலை? ரகுவீரனைத் துதித்துக் கொண்டிருந்தால் போதும்!] என்று துளஸீதாஸர் கூறுகிறார்.

வினா: குடும்பியின் முக்கிய கடமை என்ன?

விடை: ப்ரம்மசர்யம், க்ருஹஸ்தம், வானப்ரஸ்தம், ஸந்யாஸம் ஆகிய நான்கு வாழ்வு முறைகளிலும் உள்ளவர்களுக்குத் தொண்டு செய்வதே, குடும்பியின் முக்கியமான கடமை. ஏனெனில், குடும்பவாஸிதான் எல்லோருக்கும் தாய்-தந்தையர், வளர்ப்பவர், காப்பாற்றுபவர். அதாவது, குடும்பத்திலிருந்துதான் ப்ரம்மசாரி, க்ருஹஸ்தன், வானப்ரஸ்தன், ஸந்யாஸி ஆகியோர் தோன்றுகிறார்கள்; வாழ்க்கைத் தேவை களைப் பெறுகிறார்கள்; குடும்பியால் காப்பாற்றப் படுகிறார்கள். அதனால், நான்கு நிலைகளைச் சேர்ந்தவர்களையும் போற்றி வளர்ப்பதுதான் குடும்பியின் முக்கிய கடமை.

விருந்தோம்பல், ஆடு-மாடு போன்ற நாற்கால் பிராணிகளின் நல்வாழ்வுக்கு ஆவன செய்தல், வீட்டில் வாழும் எலி முதலியவற்றைக்கூட குடும்பத்தைச் சேர்ந்தவைகளாகக் கருதுதல், அவற்றுக்கெல்லாம் உணவளித்து வளர்ப்பது குடும்பியின் தலையாய கடமை. இவ்விதமே, மஹான் களுக்குத் தொண்டு செய்தல்; முன்னோர்களுக்கு அன்ன-நீர்க்கடன் இயற்றுதல்; பகவானிடம் மிக ஆர்வத்தோடு பணிந்து வணங்குதல் [வழிபாடு - த்யானம்]. குடும்பத்திலுள்ளவரின் முக்கிய கடமை ஆகும்.

வினா: குடும்ப வாழ்க்கை என்னும் நிலையில் எவ்வாறு இருக்கவேண்டும்?

விடை: மனித உடலும், குறிப்பாக, குடும்ப வாழ்வும் நம்மைக் கடைத்தேற்றுவதற்கான பள்ளிக்கூடம். உலகியல் இன்பங்களைத் துய்ப்பதற்கும் ஓய்வு கொண்டு ஸுகமாக இருப்பதற்கும், இம்மனித உடல் கொடுக்கப்பட வில்லை. ***"ஏஹி தன கர ப$_2$ல பி$_3$ஷய ந ப$_4$ாயீ" [மானஸம். உத்தரம் 44/1].*** ஶாஸ்த்ரங்களில் கூறப்பட்டுள்ள யாகம் முதலிய கர்மாக்களைச் செய்து ப்ரம்மலோகம் முதலிய லோகங்களை அடைவதுகூட முக்கிய விஷயம் அல்ல. ஏனென்றால், அங்கே சென்று பின்னர் மீண்டும் திரும்பிவரத்தான் நேரிடுகிறது. ***"ஆப்$_3$ரஹ்மபு$_4$வனால்லோகா: புனராவர்தின:" [கீ$_3$தா 8/16].*** ஆகவே, உயிர்ப் பிராணிகளின் நலனை கருத்தில் கொண்டு குடும்ப வாழ்க்கையில் ஈடுபடவேண்டும். தனது சக்திக்கு ஏற்றபடி உடல், உள்ளம், அறிவு, தகுதி, அதிகாரம் ஆகியவற்றால் மற்றவர்களுக்கு நன்மை உண்டாகும்படி நடந்து கொள்ள வேண்டும். மற்றவர்களின் நலன்-நன்மைக்காகத் தனது ஸுக-சௌக்யங்களை த்யாகம் செய்வதில்தான் மனிதனின் மனிதத்தன்மை இருக்கிறது.

வினா: குடும்பத்திலிருப்போர் வேலை-வெட்டி செய்யும்போது ஏற்படுகிற ஹிம்ஸையிலிருந்து எவ்வாறு விடுவிக்கப்படுவார்?

விடை: குடும்ப வாழ்வில், நாள்தோறும், ஐந்துவித கொடுஞ்செயல்கள் நிகழ்கின்றன. [1] சமையற்கட்டில் எறும்பு முதலிய சிறுசிறு உயிர்கள் நெருப்பில் மரிக்கின்றன; விறகுக் கட்டைகளில் இருக்கும் சிற்றுயிர்களும் மரிக்கின்றன. [2] தண்ணீர் வைத்திருக்கும் குடங்களை இடம் மாற்றும்போதும்கூட

நுண்ணுயிர்கள் உயிர்விடுகின்றன. [3] துடைப்பத்தால் பெருக்கும்போது பற்பல உயிர்கள் நாசமடைகின்றன. [4] இயந்திரத்தில் தான்யத்தை இட்டு மாவாக்கும்போது அநேக உயிர்களும் அரைபட்டுப் போகின்றன. [5] நெல்லை உமி நீக்கி அரிசியாக்கும்போதும் உயிர்கள் இறந்துபடுகின்றன. இக்கொடிய தீச்செயல்களின் விளைவிலிருந்து விடுதலை பெறுவதற்காக, வைசுவதேவ பலி - பஞ்ச மஹாயக்ஞம் ஆகியவற்றை குடும்பஸ்தன் நாள்தோறும் செய்ய வேண்டும். எவர் எப்போதும் பகவானையே சரண் அடைந்துள்ளாரோ, அவரை இக்கொடுஞ்செயல்கள் பாதிக்க மாட்டா. அவர் அனைத்துப் பாபங்களிலிருந்தும் விடுவிக்கப் படுகிறார்.

வினா: மாவு அரைப்பதற்கும், உமி நீக்குவதற்கும் இயந்திரத்தைப் பயன்படுத்தாதவரை பாபம் தொடராதல்லவா?

விடை: அரைக்கப்பட்ட மாவு, தோலி நீக்கப்பட்ட தான்யம் ஆகியவற்றை உபயோகப்படுத்துகிறீர்கள். அந்த மாவு அரைக்கப்பட்டபோதும், தோலி நீக்கப்பட்டபோதும் ஏற்பட்ட ஜீவஹிம்ஸை என்னும் தீவினை உங்களைப் பற்றிக் கொள்ளும்.

வினா: வயல்வெளியில் அநேக உயிர்கள் கொல்லப்படுகின்றன என்பதால் குடியானவன் உழவுத் தொழிலையே விட்டுவிடுவதா?

விடை: அவஶ்யம் உழவு செய்யவேண்டும். ஆனால், உயிர்களுக்குத் துன்பம் நேரிடக்கூடாது என்பதை நினைவிற்கொண்டிருக்க வேண்டும். உழவுத் தொழில் செய்வது குடியானவருக்கு விதிக்கப்பட்ட தொழிலாதலால், அவருக்குச் சிறிதளவு பாபமே ஏற்படுகிறது. அதனால்; பாபத்திற்குப் பயந்து, தன்னுடைய கடமையை அவர் விட்டுவிடலாகாது. ஆம்,

மிக அதிகமான உயிர்களுக்குத் துன்பம் ஏற்படாதபடி கவனத்துடன் செயல்படுவது மிகவும் முக்கியம்.

வினா: இப்போதெல்லாம், நல்ல விளைச்சல் ஏற்பட வேண்டும் என்பதற்காக, விஷ மருந்துகளைத் தெளிக்கிறார்களே, அது சரியா, என்ன?

விடை: குடியானவர்கள் இக்கார்யத்தை செய்யவே கூடாது. முன்பு இப்படிப்பட்ட பாபத்தை மக்கள் செய்யாதிருந்தபோது, தான்யம் குறைந்த விலைக்குக் கிடைத்தது. இப்போது, உயிர் வதையாகிற பாபம் செய்தும் தான்யத்தின் விலை ஏறிவிட்டது. ஜந்துக்களை அழிப்பதன் மூலம் தான்யம் நிறைய விளைவதுபோல் தோன்றினாலும், இச்செயலின் விளைவு நல்லதாக இருக்கப் போவதில்லை.

வினா: சாஸ்த்ரங்களில், குடும்பஸ்தனுக்கு ஐந்து கடன்கள் சொல்லப்பட்டுள்ளன - பிதிர்க்கடன், தேவர்கடன், ரிஷிகடன், பூதகடன், மனிதர்கடன். இவற்றில் பிதிர்க்கடன் என்பது என்ன? அதிலிருந்து விடுதலை பெறுவதற்கான வழி என்ன?

விடை: தாய்-தந்தையர், பாட்டனார்-பாட்டி, கொள்ளுப்பாட்டனார்-கொள்ளுப்பாட்டி, அம்மாவைப் பெற்ற பாட்டனார்-பாட்டி, கொள்ளுப்பாட்டனார்-கொள்ளுப்பாட்டி - இவர்கள் இறந்தவுடன் செய்யப்படும் கார்யங்களுக்குப் "ப்ரேத கார்யம்" என்று பெயர். மேலும், குலமுறையாக, சிராத்த-தர்ப்பணம், அன்னபிண்டம்-நீர்க்கடன் முதலிய முன்னோர்களைக் குறித்து செய்யப்படும் செயல்கள் எல்லாம் "பித்ரு கார்யம்" தான். இறந்தபின் உயிர்கள், தேவதை, மனுஷ்யன், பறவை-மிருகம், பூத-ப்ரேதம், செடி-கொடி முதலியவற்றில், ஏதோ ஒன்றுடன் சேர்ந்தாலும், "பிதரர்" என்ற பொதுப்பெயர் கொடுக்கப்பட்டுள்ளது.

தாய்-தந்தையரின் சோணித - சுக்ல ஸம்பந்தத்தால் உடல் உண்டாகிறது. தாய்ப்பால் மூலமாகவும்,

தந்தையால் சேகரிக்கப்படும் உணவு மூலமாகவும் ஶரீரம் போஷிக்கப்படுகிறது. தந்தையின் செல்வத்தின் மூலமாகப் படிப்பும், தகுதியும் அடையப்படுகின்றன. தாய்-தந்தையரின் முயற்சியால் திருமணம் நடக்கிறது. இவ்விதம், பிள்ளைக்குத் தன் தாய்-தந்தையரிடமும், தாய்-தந்தையருக்குப் பாட்டனார்-பாட்டியிடமும், பாட்டனார்-பாட்டிக்குக் கொள்ளுப்பாட்டனார்-கொள்ளுப் பாட்டியிடமும் கடன் ஏற்படுகிறது. தொடர்ந்து வரும் இந்த பிதிர்க்கடனிலிருந்து விடுதலை பெறுவதற்காக, பிதிரர்களுக்கு நல்ல கதி கிடைப்பதற்காக அவர்கள் பெயரில் பிண்டம்-நீர் அளிக்கவேண்டும்; சிராத்தம்-தர்ப்பணம் செய்யவேண்டும்.

ஒரு மைந்தன் தன் வாழ்நாள் முழுவதும், பெற்றோர் முதலியோர் குறித்து பிண்டம்-நீர் கொடுக்கிறான். ஆனால், எதிர்காலத்தில் பிண்டம்-தண்ணீர் கொடுப்பதற்காக ஒரு மகனை உற்பத்தி செய்யவில்லையானால், அவன் பிதிர்க்கடனிலிருந்து விடுதலை பெறுவதில்லை; அதாவது, அவனிடம் பிதிர்க்கடன் இருந்து கொண்டிருக்கும். ஆனால், மகன் பிறந்து விட்டானேயானால், அவனிடம் பிதிர்க்கடன் ஒட்டிக் கொண்டிருப்பதில்லை; மாறாக, அந்தக் கடன் அவன் வழித்தோன்றலை வந்தடைகிறது. முன்னோர்கள் பிண்டம்-தண்ணீர் விரும்புகிறார்கள். அதனால், அன்ன உருண்டை-தண்ணீர் கிடைத்தால், அவர்கள் சௌக்யத்தை அடைகிறார்கள்; கிடைக்காவிட்டால், துக்கத்தோடு போகிறார்கள். தம் மைந்தனுக்குக் குழந்தை இல்லாமற்போனாலும், "இனிமேல் நமக்கு அன்னமும், நீரும் யார் அளிப்பார்கள்?" என்று கவலையோடு போவார்கள்.

வினா: முன்னோர்களைக் குறித்து அளிக்கப்படுபவைகள் அவர்களைப் போய் அடைகின்றனவா?

விடை: முன்னோர்களை முன்னிட்டு என்ன கொடுத்தாலும், அது முழுவதும் அவர்களுக்குக் கிடைத்துவிடும். அவர்களுக்காக அளிக்கப்படும் அன்னம்-தண்ணீர்க்கடன், அவர்கள் எந்த யோனியில் பிறந்திருந்தாலும், அந்த யோனிக்கு ஏற்ற உணவுப் பண்டமாக அல்லது குடிக்கத்தக்கதாக உருவம் பெற்றுப் போய்ச் சேர்கிறது. முன்னோர்கள் மிருக ஜாதியில் பிறந்திருந்தால், அவர்கள் பெயரைக் கூறி அளிக்கப்படும் அன்னம், புல்லாக மாறிக் கிடைக்கும்; தேவ ஜாதியில் தோன்றியிருந்தால் அமுதமாக மாறிக் கிடைக்கும். அதாவது, எந்தப் பொருளைக் கொண்டு அவர்கள் காப்பாற்றப்படுவார்களோ, அதே பொருள் அவர்களுக்குக் கிடைத்துவிடும். அமெரிக்காவில் உள்ள ஒருவருக்கு பணவிடை மூலமாக அனுப்பும் ரூபாய், அங்கே டாலராக மாற்றப்பட்டுக் கிடைத்துவிடுவதைப் போல, முன்னோர்கள் குறித்து நாம் அளிக்கும் பிண்டம்-நீர், தானம்-புண்ணிய கர்மா ஆகியவை, அவர்கள் எந்த வகைப் பிறவி எடுத்திருக்கிறார்களோ, அந்த வகைக்கு ஏற்ற உணவு அல்லது குடிபொருள் உருவத்தில் கிடைத்துவிடுகிறது.

இன்று நமக்குக் கிடைக்கும் உயர்ந்த உணவு-உடைகள், முன்பு செய்த நமது புண்ணியச் செயல்களின் விளைவாக இருக்கலாம்; அல்லது நம்முடைய முந்திய பிறவியில் உண்டான பிள்ளை - பேரன்கள் செய்யும் சிராத்த-தர்ப்பணங்களின் பலனாகவும் இருக்கலாம். எனினும், பலன் கொடுக்கத் தொடங்கிவிட்ட நமது ப்ராரப்த கர்மத்தின் விளைவே, இது.

ஒருவன் ஒரு வங்கியில் ஒரு லக்ஷம் ரூபாய் சேர்த்து வைத்தான். அதில் ஒரு பகுதியைத் தன் பெயரிலும், ஒரு பங்கினை மனைவியின் பெயரிலும், இன்னொரு பங்கை மகன் பெயரிலும் போட்டிருந்தான் என்றால்,

தன்னுடைய பெயரில் போட்டிருந்த தொகையை மட்டுமே அவன் கையெழுத்திட்டுப் பெற முடியுமே ஒழிய, மனைவி-மகன் பெயர்களிலுள்ள பணத்தைப் பெற முடியாது. அந்தத் தொகை அவனுடைய மனைவி, மகனையே போய்ச் சேரும். அவ்விதமே, முன்னோர்களைக் குறித்து அளிக்கப்படும் பிண்டம்-தண்ணீர், அந்தப் பித்ருக்களையே போய்ச் சேருமேயன்றி, நம்மை அல்ல. ஆமாம்! நாம் உயிருடன் இருக்கும்போதே கயைக்குச் சென்று பிண்டம்-நீர் இறைத்தால், மரணத்துக்குப் பின் அது நம்மை வந்தடையும். கயையில் மிருகம்-பறவை பெயரில் அளிக்கப்படும் பிண்டம்-நீர்கூட அவைகளைச் சென்றடைகிறது. ஒரு கனவானுக்குத் தனது பசுவிடம் மிகவும் பிரியம் இருந்தது. அந்தப் பசு இறந்த பின்னர், அவருடைய கனவில் தோன்றித் தன் துயரத்தைக் காட்டியது. அவர் கயைக்குச் சென்று பிண்டம்-தண்ணீர் அளித்தார். மறுபடியும் அந்தப் பசு கனவில் தோன்றியபோது மகிழ்ச்சிகரமான தோற்றத்தைக் காட்டியது.

நம்மிடம், நாமே சேர்த்த செல்வமும், தந்தை, பாட்டனார், கொள்ளுப்பாட்டனார் தேடி வைத்த செல்வங்களும் இருக்குமேயானால், நாமே சேர்த்த பொருட்களின் மேல் நமக்குப் பூரண உரிமை இருக்கும் அளவுக்கு, அப்பா - தாத்தா சேர்த்து வைத்த பொருட்களின் மேல் கொண்டாட முடியாது. குல வழக்கப்படி, அப்பா-தாத்தாவின் சொத்துக்களின் பேரில் மகன்-பேரன்களுக்கு உரிமை உண்டு. இவ்விதமே, பித்ருக்களின் குலமுறைப்படி, மகன்-பேரன்களால் அளிக்கப்படும் பிண்ட-நீர்க்கடன்கள், அவர்களுக்குக் கிடைக்கிறது. அதனால், மகன்-பேரன்களுக்குத் தந்தை-தாத்தாவுக்குப் பிண்ட-நீர்க்கடன் செலுத்தும் பொறுப்பு இருக்கிறது.

பித்ருலோகம் என்று ஒன்று இருக்கிறது. ஆனால் இறந்தவுடன் எல்லோரும் பித்ருலோகம் போய்ச் சேரவேண்டும் என்ற சட்டம் இல்லை. காரணம் தத்தம் வினைக்கேற்பவே எல்லோருடைய மறுபிறப்பும் ஏற்படுகிறது.

வினா: ***ஒருவருடைய பெற்றோர்கள் முக்தி அடைந்துவிட்டார்கள்; பகவானுடைய திவ்ய ஸந்நிதியில் சேர்ந்துவிட்டார்கள் என்றால் அவர்கள் பெயரைச் சொல்லி அளிக்கப்படும் பிண்ட-நீர்க்கடன் என்ன ஆகும்?***

விடை: தன்னுடைய தாய்-தந்தையர் முக்தி அடைந்துவிட்டார்கள்; பகவானுடைய இருப்பிடத்தை [வைகுண்டத்தை] அடைந்துவிட்டார்கள் என்ற செய்தி, மகனுக்குத் தெரியாதாகையால், அவன் மிகுந்த ஆர்வத்துடன் அளிக்கும் அன்ன-நீர்க்கடன், தானம்-புண்ணியம் முதலியன அவன் பெயரிலேயே சேர்க்கப்பட்டு, அவன் இறந்தபிறகு அவனுக்கே கிடைக்கின்றன. பம்பாயிலுள்ள ஒருவருக்கு நாம் பணம் அனுப்பி, அவர் அங்கே இல்லாது போனால், நமக்கே திரும்பி வருவதைப் போல்தான் இதுவும்.

வினா: ***பிள்ளைப்பேறு அடையாவிட்டாலும்கூட ஒருவன் பிதிர்க்கடனிலிருந்து விடுதலை பெறமுடியுமா?***

விடை: ஆமாம். விடுதலை பெறமுடியும். பகவானிடமே எல்லாவிதத்திலும் சரண் புகுந்துவிட்ட வரிடம் எந்தக் கடனும் எஞ்சியிருக்க முடியாது.

தே₃வர்ஷிபூ₄தாப்தந்ருணாம் பித்ரூணாம்
ந கிங்கரோ நாயம்ருணீ ச ராஜன் ।
ஸர்வாத்மநா ய: ஶரணம் ஶரண்யம்
க₃தோ முகுந்த₃ம் பரிஹ்ருத்ய கர்தம் ॥

[ஸ்ரீமத்₃பா₄க₃வதம் 11/5/41]

"அரசே! எவனொருவன் எல்லாச் செயல்களையும் துறந்து, முற்றிலுமாக அடியாரிடம் பரிவுடைய பகவானுடைய திருவடிகளை வந்தடைகிறானோ, அவன், தேவர், ரிஷி, உயிர்கள், குடும்ப வாழ்க்கையிலுள்ளோர், பிதிரர்கள் ஆகிய எவருக்கும் கடன்பட்டவனாக இருக்கமாட்டான்; அடிமைப் பட்டவனாக இருக்கமாட்டான்."

வினா: தேவருணம் என்பது என்ன? அதிலிருந்து விடுபடும் வழி என்ன?

விடை: மழை பெய்கிறது; செங்கதிர் சுடுகிறது; காற்று வீசுகிறது; எல்லாவற்றையும் நிலம் தாங்குகிறது; இரவில் சந்த்ரனும், பகலில் சூரியனும் ஒளி வீசுகின்றன. இதனால் எல்லோருடைய வாழ்க்கையும் நடக்கிறது. இவையெல்லாம் நம்மீது சுமந்துள்ள தேவர்கடன் ஆகும். யாகம், யக்ஞம் செய்வதால் தேவதைகளுக்கு உடல்நலம் ஏற்படுகிறது; இதனால், நாம் தேவருணத்திலிருந்து விடுதலை பெறுகிறோம்.

வினா: முனிவர்கடன் என்பது என்ன? அதிலிருந்து விடுதலை பெறுவதற்கான வழி என்ன?

விடை: ரிஷி-முனிவர்களும், பெரியோர்களும் எழுதி வைத்துள்ள அறநூல்களைப் படிப்பதனால் ஞான ஒளி பெறுகிறோம்; கல்வி பெறுகிறோம்; செய்யத்தக்கது-தகாதது என்ற அறிவைப் பெறுகிறோம். இவ்விதமாக நாம் அவர்களுக்குக் கடனாளி ஆகிறோம். அவர்களுடைய நூல்களைப் படிப்பதன் மூலமும், திரும்பத் திரும்ப சிந்தித்துப் பார்ப்பதன் மூலமும், படித்தல்-படிப்பித்தல் மூலமும், ஸந்த்யா-காயத்ரீ செய்வதன் மூலமும், ரிஷிகள்பால் நாம் ஏற்றுள்ள கடனிலிருந்து விடுதலை பெறுகிறோம்.

வினா: பூதருணம் என்பது என்ன? அதிலிருந்து விடுதலை பெறுவதற்கான வழி என்ன?

விடை: பசு-எருமை, ஆடு-மாடு, ஒட்டகம்-குதிரை என்று எத்தனையோ பிராணிகளைக் கொண்டு நமது வேலைகளை நடத்திக் கொள்கிறோம்; வாழ்க்கையைக் கழிக்கிறோம். செடி, கொடி முதலியவற்றிடமிருந்து பழம், பூ, இலை, விறகு முதலியன எடுத்துக் கொள்கிறோம். இதன் மூலம் நம்மீது மற்றவைகளின், உயிர்ப் பிராணிகளின் கடன்சுமை ஏற்படுகிறது. மிருகம்-பறவைகளுக்கு புல், உணவு கொடுப்பதாலும், நீர் ஊட்டுவதாலும், செடி-கொடிகளுக்கு உரமிட்டு நீர் பாய்ச்சுவதாலும் நாம் பூதருணத்திலிருந்து விடுபடுகிறோம்.

வினா: மனுஷ்யருணம் என்பது என்ன? அதிலிருந்து விடுபடுவதற்கான வழி என்ன?

விடை: பிறருடைய உதவி இல்லாமல் நம்முடைய வாழ்க்கையை நடத்திச் செல்ல முடியாது. பிறரால் போடப்பட்ட சாலைகளில் செல்கிறோம்; பிறரால் தோண்டப்பட்ட கிணற்று நீரை உபயோகப் படுத்துகிறோம்; பிறரால் வளர்க்கப்பட்ட மரம்-செடிகளைப் பயன்படுத்துகிறோம்; பிறரால் உற்பத்தி செய்யப்படும் அன்னம் போன்ற உணவுப் பொருட்களை உண்கிறோம் - இதுவே, அவர்கள் நம்மீது சுமத்தும் கடன் ஆகிறது. மற்றவர்களுடைய சௌகர்யத்துக்காகக் கிணறு தோண்டச் செய்வது, தண்ணீர்ப் பந்தல் அமைப்பது, தோட்டம் ஏற்படுத்துவது, சாலை போடச் செய்வது, தர்மசாலை அமைப்பது, அன்னதான நிலையங்கள் நடத்துவது ஆகியவற்றால் நாம், மனிதக்கடனிலிருந்து விடுதலை பெறுகிறோம்.

பிதிர்க்கடன், தேவர்கடன், ரிஷிகடன், பூதருணம், மனிதக்கடன் - இவ்வைந்தும் குடும்பஸ்தனுக்கே

உரியவை. எவன் பகவானிடம் முற்றிலுமாக அடைக்கலம் புகுந்து விடுகிறானோ, அவன் பித்ருக்கள், தேவர்கள் முதலிய எவருக்கும் கடன்பட்டவனாக இருப்பதில்லை; எல்லாக் கடன்களிலிருந்தும் விடுபடுகிறான்.

***வினா:* தனக்கு ஒரு பிள்ளைப்பேறும் உண்டாகாதபோது தனது உறவினர் அல்லது அனாதைச் சிறுவர்-சிறுமியரை தத்து எடுத்துக் கொள்ளலாமா, கூடாதா?**

விடை: இந்தக் காலத்திய விவகாரங்களைப் பார்க்கிறபோது, தத்து எடுத்துக் கொள்ளாமலிருப்பதே நல்லது. தன் வயிற்றில் பிறந்த பிள்ளையே பணிவிடை செய்வதில்லை; நம் சொற்படி நடப்பதில்லை என்று ஆகிவிட்டபோது, தத்து எடுத்துக் கொண்ட பிள்ளை என்ன சாதித்துவிடப் போகிறான்? பிண்டம்-நீர்க்கடன் அளிப்பதற்காகத் தத்து எடுத்துக் கொள்ளவேண்டும் என்ற சட்டம் இருந்தாலும், அவன் பிண்டம்-தண்ணீர் கொடுக்கமாட்டான் என்றாகும் போது, தத்து எதற்காகத்தான் எடுத்துக் கொள்வது? நமக்குப் பிள்ளை அவஶ்யம் தேவை என்றால், இறைவன் கொடுப்பான். நமக்குப் பிள்ளை தேவையில்லை; அதனால், கடவுள் நமக்குப் பிள்ளையைக் கொடுக்கவில்லை. அதனால், ஸ்வீகாரம் செய்துகொண்டு, தனக்குத்தானே ஆபத்தை விலைக்கு வாங்குவானேன்? அநேகமாக, ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளப்பட்ட பையன்கள் எல்லாம், தாய்-தந்தையருக்குத் துயரத்தின் மேல் துயரங்களைக் கொடுக்கிறார்களே தவிர, அவர்களுக்குப் பணிவிடை செய்வதில்லை. ஆகவே, அனாதைச் சிறுவர்களுக்குக் கல்வி கற்பிக்க வேண்டும்; அவர்களுக்குத் தொண்டு செய்ய வேண்டும்; உடம்பைப் பேணுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

வினா: ஒரு மைந்தனும் இல்லாவிட்டால், முதுமைக் காலத்தில் நமக்கு யார் தான் தொண்டு செய்வார்கள்?

விடை: யாருக்கு மைந்தர்கள் இருக்கிறார்களோ, அந்தப் பையன்கள் எல்லாம் தத்தம் அப்பா-அம்மாவுக்குப் பணிவிடை செய்கிறார்களா, என்ன? இந்நாளைய மைந்தர்கள் அப்பா-அம்மாவின் சொத்து, ஸுகங்களைத் தம் பெயரில் மாற்றிக் கொள்ள விரும்புகிறார்கள்; சிராத்தம்-தர்ப்பணம் பயனற்றவை என்று எண்ணுகிறார்கள். இப்படிப்பட்ட பையன்கள் எங்கே தொண்டு செய்யப் போகிறார்கள்? துன்பங்களைக் கொடுப்பவர்களாக மட்டுமே அவர்களால் இருக்க முடியும். உண்மையில், நமது ப்ராரப்த வினையின்படி, எப்படிப்பட்ட தொண்டு கிடைக்க வேண்டுமோ, எவ்வளவு ஸுக-சௌக்யங்கள் கிடைக்க வேண்டுமோ, அவ்வளவும் கிடைக்கும். மகன் இருந்தாலும், இல்லாவிட்டாலும் முற்றும் துறந்த துறவிகளுக்குச் செய்யப்படும் அளவு தொண்டு, குடும்பஸ்தர்களுக்குக் கிடைப்பதில்லை என்பதைக் கண்கூடாகப் பார்க்கிறோமே? அதாவது, பிள்ளை இருந்தால் பணிவிடை செய்வான் என்று எண்ணக் கூடாது.

வினா: மகன் இல்லாவிட்டால், மரணத்துக்குப்பின் பிண்ட-நீர்க்கடன் செலுத்துவதற்கு ஆள் யார்? பிண்ட-நீர்க்கடன் செலுத்தப்படாவிட்டால், நமக்கு உய்வு எப்படி ஏற்படும்?

விடை: பிண்டம்-தண்ணீர் கொடுப்பதால், அந்தப் பிண்டம்-தண்ணீரைப் பெறுகிறவர்களின் பிறப்பு-இறப்பு தொடர்ந்து நிகழ்வதாகிறது. சாலையில் போய்க் கொண்டிருக்கிற ஒருவன் பசி-தாகத்தால் ஓரிடத்தில் நிற்கிறான்; அவனுடைய நடை தடைப்படுகிறது. உணவும், நீரும் கிடைத்தவுடன், தன்னுடைய வழியில் செல்லத் தொடங்குகிறான்.

அதுபோலவே, மரித்துப் போனவர்களுக்குப் பிண்டம்-தண்ணீர் கிடைக்காது போனால், அவர்கள் ஓர் இடத்தில் தடைப்படுகிறார்கள்; தங்கிவிடுகிறார்கள். பிண்டம்-தண்ணீர் கிடைத்தவுடன் அங்கிருந்து புறப்பட்டுச் செல்கிறார்கள். அதாவது, அவர்களுடைய பயணம் தொடர்கிறது; அவர்களுடைய பிறப்பும், இறப்பும் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும்; ஆனால் முக்தி, நற்பேறு உண்டாகாது.

உண்மையில் முக்தி பெறுவதும் உயர் உலகங்களில் மேன்மையோடு வாழ்வதும், சிறிதளவுகூட நமது மக்களைச் சார்ந்திருக்கவில்லை. முக்தி என்பது மக்களைச் சார்ந்திருந்தால், அது பிறர் வசப்பட்டதாகிவிடுகிறது. அப்படியானால், மனிதப் பிறவியில் சுதந்திரத்துக்கு என்ன கௌரவம்? உடற்பற்றும்கூட விண்ணுலக நல்வாழ்வுக்கு, ஆன்ம விடுதலைக்குப் பாதகமானது என்னும்போது, மரணத்துக்குப்பின் பிள்ளையிடமிருந்து பிண்டம்-தண்ணீர் எதிர்ப்பார்ப்பது எவ்வாறு பொருந்தும்? அது பந்தத்தில்தான் ஆழ்த்தும். ஆகவே, தன்னுடைய நன்மையைக் கோருபவன், புத்ரைஷணா [மகன் மீது உள்ள பாசப்பற்று], லோகைஷணா [உலகத்தில் மானம்-மரியாதை, அருமை-பெருமை அடையும் பெரு விருப்பம்], வித்தைஷணா [செல்வத்தின் மேலுள்ள ஆசை] - இம்மூன்றையும் விட்டொழிக்க வேண்டும். ஏனென்றால், இம்மூன்றும்தான் பரமாத்மாவை அடைவதில் தடைகளாக அமைந்துள்ளன.

மகனைப் பெற வேண்டும், பிண்டம்-தண்ணீர் கிடைக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறவன், பிறப்பு-இறப்புச் சுழலில் சிக்கிக் கொள்ள விரும்புகிறான். ஏனென்றால், ஏதேனும் ஒரு பிறவி எடுத்தால்தானே, பிண்டம்-தண்ணீரை எதிர்பார்க்க

நேரிடும்? பிறவியே இல்லாமற்போய்விட்டால் பிண்டமும், தண்ணீரும் யாருக்கு வேண்டும்?

புத்திரன் இல்லாவிட்டால் நற்கதியே கிடைக்காது என்பது முற்றிலும் தவறு. ஸந்ததியின் மூலமாகத்தான் நற்கதி கிடைப்பது உண்மையானால், பத்து பதினோரு குட்டிகளைப் பெற்றுக் கொள்ளும் பன்றியும், நூற்றுக்கணக்கில் குட்டிகளைப் பெறும் பாம்பும் நற்கதி அடைய வேண்டுமே? அப்படியே அதிக மக்களைப் பெறுகிறவர்களுக்கு விரைவில் நற்கதி கிட்டவேண்டும். ஆனால் இப்படி நிகழ்வதேயில்லை.

ஸந்ததி இருந்தாலும், இல்லாமற்போனாலும் மனிதன், பகவானிடமே ஈடுபட்டிருக்க வேண்டும்; பகவானையே சார்ந்து இருந்து பஜனம் செய்ய வேண்டும். ஆனால் ஸந்ததி இல்லாத ஒருவருக்குப் பிள்ளைப் பாசத்தை அடக்க முடியாமற்போனால், ஸ்ரீராம்லலா-ஸ்ரீக்ருஷ்ணலலா, பாலகோபாலன்-பால முருகன் ஆகியோரைத் தனது சொந்தக் குழந்தையாகவே கருதி, அவர்களிடம் ஆசையைக் காட்டலாம். அந்த மகன் [பகவான்] எப்படித் தொண்டு செய்வானோ, அப்படிப்பட்ட தொண்டினை வயிற்றில் பிறந்த மகன்கூடச் செய்யமாட்டான். அந்த மைந்தன் இஹலோக-பரலோக வாழ்க்கைக்கான எல்லா நற்செயல்களையும் செய்து முடிப்பான்.

வினா: குடும்ப வாழ்க்கையில் குழந்தை-குட்டிகளை வளர்த்துப் பராமரிப்பது, திருமணம் போன்றவை ஸம்பந்தமாகப் பற்பல கவலைகள் ஏற்படுகின்றனவே, அந்தக் கவலைகளிலிருந்து எவ்வாறு விடுதலை பெறுவது?

விடை: ஒவ்வொரு ஜந்துவும் தனது ப்ராரப்த கர்மாவுக்கு ஏற்ற பிறவியையே அடைகிறது. ப்ராரப்தத்தில் மூன்று பொருட்கள் அடங்கியுள்ளன

பிறப்பு, ஆயுள், புலன்நுகர்ச்சி† - இம்மூன்றில் உயிரினுடைய 'பிறப்பு' நடந்துவிட்டது; அதற்கு எவ்வளவு ஆயுள் உண்டோ, அதுவரை வாழ்ந்துதான் தீரும்; மனதிற்கியைந்த-உகக்காத சூழ்நிலைகளின் தோற்றமே போகம் அல்லது புலன்நுகர்ச்சி எனப்படும். உண்மையில், எந்தச் சூழ்நிலையும், எந்த மனிதனையும் ஸுகப்படுத்துவதோ, துன்பப் படுத்துவதோ இல்லை; மாறாக, மனிதன் தனது அறியாமையால் ஸந்தர்ப்பச் சூழலிலிருந்து ஸுக வாஸியாகவோ, துக்கப்படுபவனாகவோ எண்ணிக் கொள்கிறான்.

மகள் வயதுக்கு வந்துவிட்டாள் என்றால், அவள் திருமணம் குறித்து கவலைப்பட ஆரம்பித்துவிடக் கூடாது. ஏனென்றால், அவள் தன் விதியைக் கையுடனே கொண்டு வந்திருக்கிறாள். அதனால், அவளுக்கு அனுகூலமான அல்லது விரோதமான வாய்ப்புக்கள், அவளுடைய வினைப்படியே தோன்றும். "எந்த இடத்தில் நம் வீட்டுப் பெண்ணைக் கொடுத்தால் சௌக்யமாக இருப்பாள்?" என்ற ஒரு சிந்தனை மட்டும் தாய்-தந்தையருக்கு இருந்தால் போதும். இப்படிச் சிந்தித்து அலசுவது தாய்-தந்தையினரின் கடமை. ஆனால், அவளை நாம் சௌக்யமாகவே வைத்திருப்போம். நல்ல குடும்பத்திலேயே கொடுப்போம் - என்பது நம் கையில் இல்லை. ஆதலால், கடமையைத் தவறாது செய்யத்தான் வேண்டும். ஆனால் கவலைப்படத் தேவையில்லை.

---

† *ஸதி மூலே தத்₃விபாகோ ஜாத்யாயுர்போ₄கா₃:।*

[யோக₃த₃ர்ஶனம் 2/13]

ப்ராரப்தத்தின் விளைவுகளே பிறப்பு, ஆயுள், போகங்கள்.

கவலை என்று ஒன்று; ஆராய்ச்சி [விசாரம்] என்று ஒன்று. அறியாமையிலிருந்து கவலை தோன்றுகிறது; அதனால் உள்மனத்தில் மாசுபடிகிறதே தவிர புதிய முன்னேற்றம் ஏற்படுவதில்லை. ஆனால், ஆராய்ச்சி செய்வதன் மூலமாக அறிவில் தெளிவு உண்டாகிறது. ஆகவே, ஒவ்வொரு செயலிலும் ஈடுபடும்போதும் அதை எவ்வாறு செய்வது, எந்த முறையில் செய்வது என்பது பற்றிச் சிந்தித்து ஆராய வேண்டும்; கவலை கொள்ளக் கூடாது. கவலைப்படாமல், சிந்தனை செய்தால் ஏதேனும் ஒரு வழி கிடைக்காமல் போகாது.

வினா: முதுமைக் காலத்தில், பிள்ளைகள் கவனிக்காவிட்டால் என்ன செய்யவேண்டும்?

விடை: "இவர்கள் என்னுடையவர்கள்" என்ற மமகாரத்தை நீக்கிவிட வேண்டியதுதான். "இவர்கள் எனது மக்கள் அல்லர்" என்ற மனோபாவத்தைப் பெறவேண்டும். எவருமே பணிவிடை செய்வதில்லை என்ற சூழ்நிலையில் குடும்பத்திலுள்ளவர் களிடமிருந்து உதவி கிடைக்கும் என்ற நன்னம்பிக்கை உண்டாகிறதோ, அதே நபர்களிடமிருந்து துன்பம்தான் கிடைக்கும். "எதிர்பார்ப்பு மிகவும் துக்கம்; எதையும் எதிர்பாராதிருத்தல் மிகவும் ஸுகம்" - ***"ஆஶா ஹி பரமம் து$_3$:க$_2$ம் நைராஶ்யம் பரமம் ஸுக$_2$ம் ।"*** ஆதலால், அந்த எதிர்பார்ப்பை த்யாகம் செய்து ஏற்படும் இடைஞ்சல்களை தவம் செய்வதற்கு உகந்ததாகக் கொண்டு, "பகவானுக்கு என்மீது எத்துணை கருணை! நாமே தவம் மேற்கொள்வதற்கான வாய்ப்புக் கொடுத்திருக்கிறார். குடும்பத்திலுள்ளவர் கள் நம்மீது அக்கறை கொண்டு பணிவிடை செய்வார்களேயானால், அவர்கள்பால் நாம் மோஹ மமகார வலையில் சிக்கிக் கொள்வோம். நல்ல காலமாக அருளுடைய பகவான் அப்படிப்பட்ட

சிக்கலில் நம்மை ஆழ்த்தவில்லை" என்று கருதவேண்டும்.

மனிதனுடைய ஆன்மிக முன்னேற்றத்துக்குத் தடையாக இருப்பது, மோஹ மமகார வலைதான். அந்தத் தடையை நீக்குபவர்கள், நமக்கு உபகாரம் செய்வதாகக் கருதவேண்டும். "தடை ஏதும் இல்லாமல் செய்து, நமக்கு நன்மையையே செய்கிறார்கள். நம்மிடம் அவர்களுக்கு எவ்வளவு அன்பு இருக்கிறது" என்று எண்ணவேண்டும்.

வாழ்நாள் முழுவதும் பிறருடைய தொண்டினை எதிர்பார்த்தே வாழ்வதால், முதுமைக் காலத்தில் இயலாமை காரணமாக, குடும்ப அங்கத்தினர் களிடமிருந்து உதவியை எதிர்பார்க்கும் ஆசை அதிகமாகிவிடுகிறது. அதனால், தொடக்கத்திலிருந்தே மனிதன் கவனமாக இருக்கவேண்டும் - தொண்டு களைப் பெறுவதற்காக நான் இங்கே வரவில்லை. எல்லோருக்கும் தொண்டு செய்வதற்காகவே வந்திருக்கிறேன். ஏனென்றால், மனிதர், தேவர், ரிஷி, முனிவர், பித்ருக்கள், மிருகம், பறவை, பகவான் ஆகிய எல்லோருக்கும் உதவியாக இருப்பதற்காக மனித உடல் கிடைத்திருக்கிறது. அதனால், எவரிடமிருந்தும் உதவி, உபகாரங்களை எதிர்பார்க்கக் கூடாது. ஆரம்பத்திலிருந்தே எவரிடமிருந்தும் நாம் உதவி, உபகாரங்களை எதிர்பார்க்காமல் இருப்போமேயானால், வயோதிக நிலையிலும், பிறருடைய தொண்டு கிடைக்காவிட்டால் நமக்குத் துயரம் ஏற்படாது. ஆம். மற்றவர்களிடமிருந்து பணிவிடைகளை எதிர்பார்க்கும் உளப்பாங்கு நமக்கு இல்லாமற்போனால், மற்றவர்கள் மனத்தில் நமக்கு "ஸேவை செய்ய வேண்டும்" என்ற விருப்பம் விழித்தெழும்.

ஒவ்வொரு துறையிலும் த்யாகத்துக்கு அவஶ்யமேற்படுகிறது. த்யாகம் செய்வதால், அப்போதைக்கு ஶாந்தி கிடைக்கிறது. பாதகமான சூழ்நிலை ஏற்படும்போதும் மகிழ்ச்சியோடிருத்தல் என்பது மிகப் பெரிய தவம் ஆகும். உள்ளத்தூய்மை என்பது தவத்தின் மூலம் பெறப்படுகிறது. சௌக்யங்களை அனுபவிப்பதன் மூலமாக அல்ல. சௌக்யத்திற்கான வசதிகளை விரும்புவதனால் அந்தக்கரணம் மாசடைகிறது. அதனால் மனிதன் தன்னுடைய ஸுகத்தை ஒருபொழுதும் விரும்பக் கூடாது. மாறாக, தன் உடல், உள்ளம், சொல் மூலமாகப் பிறருக்கு நலன் ஏற்படச் செய்வதிலேயே கருத்தாயிருக்க வேண்டும்.

வினா: குடும்பத்தில் ஒருவர் இறந்துபோய்விட்டால், இறந்தவரின் ஆன்மா ஶாந்தி அடையவும், தன்னுடைய துக்கம் குறையவும் என்ன செய்யவேண்டும்?

விடை: [1] இறந்தவருக்காக முறைப்படி, நாராயண பலி, சிராத்த-தர்ப்பணங்கள் செய்ய வேண்டும். [2] அவருடைய நினைவு வரும் போதெல்லாம், பகவானுடைய திருப்பாதங்களில் அவரைக் காணவேண்டும். [3] அவர் நினைவாக கீதை பாராயணம், பாகவத ஸப்தாஹம், ஶ்ரீராமசரித மானஸ பாராயணம் [ஒன்பது நாட்கள்], நாமஜபம், ஸங்கீர்த்தனம் ஆகியன நிகழ்த்த வேண்டும். [4] அவர் பொருட்டு ஏழைக் குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கலாம். இனிப்பைப் பெறும் சிறுவர்கள் மகிழ்ச்சி அடைகிறார்கள். அவர்கள் அடையும் மகிழ்ச்சியினால், இறந்தவருடைய ஆன்மா மகிழ்கிறது; நாமும் மகிழ்கிறோம்.

ஸத்ஸங்கம், புராணப் பேருரைகள், நாம ஸங்கீர்த்தனம், கோவிலுக்குச் செல்லுதல், புனித நீராடல் போன்ற விஷயங்களில் நமது சோகத்தை வெளிப்படுத்தாமல், அக்கார்யங்களில் அவஶ்யம் ஈடுபடவேண்டும். இவற்றுள்ளும் அடியார்கள் கூட்டத்தில் சேர்வது என்பது மிக்க சிறப்புடையது; ஏனென்றால் ஸத்ஸங்கத்தினால் எல்லாத் துயரங்களும் விலகிப் போகின்றன.

2. நடத்தை

வினா: குடும்பத்திலுள்ள பெரியோர் முதியோரிடம் நாம் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும்?

விடை: பெரியோர்களின் சௌக்யத்துக்கும், ஓய்வுக்கும் ஏற்பாடு செய்தல், அவர்களுக்குத் தொண்டு செய்தல், அவர்களுக்குப் பெருமை அளித்தல், மரியாதை காட்டுவது, அவர்களுடைய ஆணைப்படி நடப்பது, அவர்களுடைய கட்டுப்பாட்டில் இருப்பது - இவை சிறியோர்களின் கடமையாகும். ஆனால் இது பெரியோர்களுடைய சொந்தக் கடமை அல்ல. அதாவது நாம் பெரியவர்கள், மதிக்கப்பட வேண்டியவர்கள், கௌரவத்துக்குரியவர்கள் - என்று பெரியோர்கள் எண்ணிக்கொண்டுவிடக் கூடாது. காரணம் இவ்வித எண்ணம் இருக்குமேயானால், பிறருடைய உள்ளத்தில் மட்டு-மரியாதை குறைந்து, நாளடைவில் அவமரியாதைகூடத் தோன்றிவிடும். ஆதலால் எல்லோருடைய நல்வாழ்வுக்கான செயல் களைச் செய்வது, இன்னல்களைத் தாங்கிக் கொள்வது சிறியவர்களின் ஸுக-சௌகர்யங்களைக் கவனிப்பது ஆகியவையே பெரியவர்களுடைய நோக்கமாக இருக்கவேண்டும். சிறியவர்களும்,

பெரியவர்களும் இவ்விதப் பாசப்பற்றுதல் கொண்டிருந்தால், குடும்பமும், சமுதாயமும் சௌக்யமாக இருக்கும்.

வினா: கைம்பெண்களிடம் மாமனார், மாமியார், பெற்றோர் ஆகியவர்கள் எவ்வாறு பழகவேண்டும்?

விடை: கைம்மை அடைந்தது மகளோ, மருமகளோ - அவளிடத்தில் மாமனார், மாமியாரும், பெற்றோரும் மனப்பூர்வமாக ஆதரவு காட்டவேண்டும். அவள் கெட்டுப் போகாவண்ணம் பாதுகாப்புச் செய்து கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும். அதாவது, அவள் எப்போதும் துக்கப்பட்டுக் கொண்டிராமலும், அதே சமயம் அவள் நடத்தை கெட்டுப் போகாமலும் இருப்பதற்கான முறையில் அவளுடைய நலனில் அக்கறையுள்ளவர்கள் நடந்து கொள்ளவேண்டும்.

கைம்மை அடைந்துவிட்ட மருமகள் அல்லது மகளின் மாமியார்-தாயார், தாங்களும் எளிய வாழ்வை மேற்கொள்ளவேண்டும். படாடோபமான உடை, அணி, உணவு முதலியவற்றை மிகவும் விரும்பி அனுபவிக்கக் கூடாது. அடிப்படைத் தேவைக்கு ஏற்ற அளவே ஏற்கவேண்டும். இதைக் கண்டு மருமகளும், மகளும் தங்களைச் சீரமைத்துக் கொள்வார்கள். ஸுக-போகங்களை அனுபவிக்கும் மாமியார்-தாயாரைப் பார்க்கும் மருமகள்-மகள் உள்ளத்தில் நல்விளைவு ஏற்படாது. மாமியாரும், அன்னையாரும் நியமக் கட்டுப்பாட்டோடு இருந்தால், மருமகள்-மகள் உள்ளத்தில் அதன் தாக்கம் நல்லதாக இருக்கும். அவர்கள் வாழ்க்கை செம்மைப்படும். "இந்த அவலச்சூழலில்கூட நாம் ஓர் ஒழுங்குக் கட்டுப்பாட்டுடன் வாழாவிட்டால், பின் எப்போது தான் கட்டுப்பாட்டுடன் இருப்போம்?" என்று, மாமியார்-தாயார்கள் சிந்திக்கவேண்டும். உலகத்தில் புலன்களைக்

கட்டுப்பாட்டில் வைத்திருப்போருக்கும், தன்னலம் துறந்த த்யாகிகளுக்கும்தான் பெருமை உண்டு. இன்பநுகர்வில் ஆழ்ந்திருப்போருக்கும், பொருளாசை கொண்டோருக்கும் அல்ல.

வினா: ஸஹோதரர்களும், அவர்களது துணைவிகளும் கைம்பெண்ணிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்?

விடை: ஸஹோதரர்களும், அவர்களுடைய மனைவிமார்களும், கைம்பெண்ணிடம் அந்தரங்க மான மரியாதை பூண்டிருக்க வேண்டும். அவளை வெறுத்து ஒதுக்கக் கூடாது. அவளுடைய நடத்தையையும், உணர்வுகளையும் போற்றிப் பாதுகாக்கும் வகையில் பரிவோடு நடந்து கொள்ளவேண்டும். அவளுடைய நன்மையை முன்னிட்டு, அவள் மேல் ஒரு கட்டுப்பாடு; அவளிடம் ஓர் அன்பு - ஆகிய இரண்டும் கொண்டிருக்க வேண்டும்.

வினா: தாய்-தந்தையர், பெண்ணின் புக்ககத்தில் உணவு கொள்ளலாமா, கூடாதா?

விடை: கன்னிகாதானம் செய்து கொடுக்கப் பட்டதும், அவள் புகுந்த வீட்டின் தலைவி ஆகிறாள். அவளுடைய பெற்றோர்களுக்கு அந்த வீட்டில் உணவு கொள்ள அதிகாரம் இல்லை. தானம் செய்யப்பட்டுவிட்ட பொருளின் மீது தானம் செய்பவருக்கு உரிமை ஏதும் இல்லை. இதுபற்றி நாம் ஒரு கதை கேட்டிருக்கிறோம். பர்ஸானாவைச் சேர்ந்த ஒரு சக்கிலியர், ஏதோ காரியமாக ஒரு நாள் காலை நந்தகோபனின் கிராமத்துக்குச் சென்றார். அங்கே நண்பகல் வரை தங்கும்படி ஆயிற்று. சாப்பிடவும் இல்லை; குடிக்கவும் இல்லை. ரொம்பவும் தாகமாக இருந்தது என்றாலும் பெண் கொடுத்துள்ள கிராமத்து

நீரைப் பருக முடியுமா?† ஏனென்றால், "நம்முடைய வ்ருஷபானு அவர்கள், தன்னுடைய பெண்ணை இங்கே கொடுத்திருக்கிறார்." இவ்வாறு எண்ணி, அங்கே ஒரு சொட்டு நீர்கூடக் குடியாமல் பர்ஸானாவுக்குத் திரும்பி நடக்கத் தொடங்கினார். வழியில் நடைக் களைப்பினால் அவர் தளர்ந்து விழுந்தார். அப்போது ராதா அம்மையார் அந்தச் சக்கிலியரின் பெண்ணினுடைய உருவம் தாங்கி அவரருகே வந்து கூறினாள்- "அப்பா! நான் உங்களுக்குத் தண்ணீர் கொண்டு வந்திருக்கேன். குடியுங்கள்."

சக்கிலியர் சொன்னார்- "மகளே! நந்தருடைய கிராம எல்லைக்குள்ளேயே இன்னும் இருக்கிறேன். அதனால் இந்த இடத்துத் தண்ணீரைப் பருகலாகாது." ராதா கூறினாள்- "அப்பா! பர்ஸானாவிலிருந்தே நான் ஜலம் கொண்டு வந்திருக்கிறேன்." அவர் அந்தத் தண்ணீரைப் பருகிவிட்டுச் சொன்னார்- "பெண்ணே! நீ முன்னாலே போ, நான் பின்னே வருகிறேன்." ராதை சென்றுவிட்டாள். சக்கிலியர் தன் வீட்டை அடைந்ததும், தன் மகளை அன்போடு அணைத்துக் கொண்டு, "மகளே! எனக்குத் தண்ணீர் கொடுத்து உயிரைக் காப்பாற்றினாய். நீ மட்டும் தண்ணீருடன் வந்திராவிட்டால், என் உயிரே போயிருக்கும்" என்று கூறினார். பெண் சொன்னாள்- "அப்பா! தண்ணீரா? நான் கொண்டு வந்தேனா? நான் வரவேயில்லையே?" "ராதைதான் எனக்குத் தண்ணீர் கொடுப்பதற்காக என் மகளுடைய உருவில் வந்திருக்கிறாள்" என்பது அவருக்குப் புரிய வந்தது. அதாவது முற்காலத்தில் தம்

† உத்தரபிரதேச மாநிலத்தில் ஸ்ரீப்ருந்தாவனத்திற்கு அருகிலுள்ள பர்ஸானா என்ற சிற்றூரில் ஸ்ரீராதாதேவி அவதரித்தார். பர்ஸானா மக்கள் இன்றளவும் ஸ்ரீராதாதேவியை தத்தம் மகளாக கருதி வருகிறார்கள்.

பெண்கள் வசிக்கும் கிராமத்து உணவையும், நீரையும்கூட மக்கள் ஏற்காமலிருந்தார்கள் என்ற உண்மையை உணரவேண்டும்.

மகளுக்குப் பிள்ளைப்பேறு உண்டாகாத காலம் வரையில் அவள் வீட்டில் உணவும், நீரும் அருந்தக் கூடாது. ஆனால் பெண்ணுக்குக் குழந்தை பிறந்துவிட்டால், அவள் வீட்டில் சாப்பாடு - தண்ணீர் அருந்தலாம். தன் முன்னோர் கடனிலிருந்து விடுதலை வேண்டியே, பிறர் வீட்டுப் பெண்ணை மாப்பிள்ளை ஏற்றுக் கொள்கிறார். அவருக்கு ஸந்ததி தோன்றியதும், பிதிர்க்கடனிலிருந்து விடுதலை பெறுகிறார். அப்போது தம் மகள்மீது தாய்-தந்தையருக்கு ஓர் உரிமை உண்டாகிறது. அதனால்தான் பெண் வயிற்றுப்பேரன், தன் தாத்தா-பாட்டிகளுக்குச் சிராத்தம்-தர்ப்பணம் செய்கிறான். அவர்களுக்குச் சோற்றுருண்டை-தண்ணீர்கடன் கொடுக்கிறான். மேலுலகத்தில் வாழும் தாத்தா-பாட்டிகள், பெண் வயிற்றுப்பேரன் கொடுக்கும் சிராத்த-தர்ப்பணம், பிண்டம்-நீர் ஆகியவற்றை ஏற்கவும் செய்கிறார்கள். மகளுக்குப் பிள்ளை பிறக்காமல், பெண்ணே பிறந்தாலும்கூட அவள் வீட்டில் உணவு கொள்ளலாம். ஒரு ஸந்ததி தோன்றியவுடனேயே, கன்யாதானம் பலனுடையதாகி விடுகிறது.

வினா: தாய்-தந்தையர், மகன்-மகள் இவர்கள் தங்களுக்குள் எவ்வாறு பழக வேண்டும்?

விடை: மகனோ, மகளோ, நம் வீட்டில் பிறவி எடுத்துள்ளார்கள். இவர்களுடைய இம்மை-மறுமை நல்வாழ்வுக்கான கார்யங்களைச் செய்யவேண்டும் என்று தாய்-தந்தையர் நினைக்க வேண்டும். தங்களுடைய ஸுக-சௌகர்யங்களைப் பற்றியே எண்ணிக்கொண்டிராமல், "இவர்கள் வாழ்க்கை செம்மையாக அமையவேண்டும்" என்ற கருத்துடன்,

அவர்கள் மீது ஆதிக்கம் வைத்து, நல்ல கல்வி கற்பித்து, சமயங்களில் அவர்கள் நன்மை கருதிக் கடுமையாகவும் நடந்து கொள்ளவேண்டும்.

"இந்த உடலைக் கொண்டுதான் நாம் பரமாத்மாவை அடையவேண்டும், இந்த எல்லையற்ற ஆனந்தத்தை அனுபவிக்க இயலும். இந்த உடலைத் தாய்-தந்தையரிடமிருந்து பெற்றுள்ளோம். அதனால், ஒருபொழுதும் நம்மால் அவர்களுக்குத் துயரம் ஏற்படக் கூடாது" என்பது, மகன்-மகளின் குறிக்கோளாக இருக்கவேண்டும். நம்மால் இவர்களுக்கு அவமானம் ஏற்படக்கூடாது. மக்கள் மத்தியில் இவர்களுக்கு மரியாதையும், பெருமையும் தோன்றும்படியாக நாம் நடந்து கொள்ளவேண்டும். நமது புண்ணிய க்ஷேத்ரயாத்திரை, வ்ரத நியமம் ஆகியவற்றால் உண்டாகும் நற்பலன்கள் யாவும் அவர்களையே போய் சேரவேணும். இவ்வித எண்ணங்களால் தங்களுக்குள் அன்பு பெருகும்; நிகழ்காலத்தில் குடும்ப ஸுகமும், எதிர்காலத்தில் எல்லோருக்கும் நல்வாழ்வும் உண்டாகும்.

வினா: கணவன்-மனைவியரிடையே எவ்வாறு உறவு இருக்க வேண்டும்?

விடை: "இவள் தன்னைப் பெற்ற தாய்-தந்தையர், ஸஹோதரர் முதலியோரை விட்டு விட்டு என்னிடம் வந்திருக்கிறாள். இது எவ்வளவு பெரிய த்யாகம்!" என்று கணவன் கருதவேண்டும். "இவளுக்கு எவ்விதக் கஷ்டமும் ஏற்படக்கூடாது; உடலைப் பேணுவதற்கான உணவு-உடை-உறையுள் ஆகியனவற்றுக்கும் குறைவு ஏற்படக்கூடாது; என்னைக்காட்டிலும் உயர்ந்த சௌக்யத்தை இவள் பெறவேண்டும்" என்ற எண்ணத்துடன்கூட அவள் கட்டுப்பாடற்றுப் போகாமலும், அவளுடைய ஆன்மிக நன்மையை

முன்னிட்டும், அவளுடைய கற்பில் ஒரு கண் வைத்திருக்க வேண்டும்.

"என்னுடைய பரம்பரை, குடும்பத்திலுள்ளோரை துறந்து இவரிடம் வந்து சேர்ந்திருக்கிறேன். கடலைக் கடந்து வந்து, கரையில் ஒதுங்கியிருக்கும்போது, நான் மூழ்கிச் சாகலாமா? பெரிய த்யாகங்களைச் செய்துவிட்டு இங்கே வந்திருக்கிற நான், என் நிமித்தமாக இவருக்குத் துன்பமும், அவமானமும், பழிச்சொல்லும், இழிவும் ஏற்படாதவண்ணம் நடந்து கொள்ள வேண்டும்" என்பது மனைவியின் நோக்கமாக இருக்க வேண்டும். என் காரணமாக இவருக்கு ஏச்சு முதலியன ஏற்படுமேயானால், அது மிகவும் தவறான நடத்தை ஆகும். எனக்கு எவ்வளவு கஷ்டங்கள் ஏற்பட்டாலும், இவருக்குக் கொஞ்சமும் துன்பம் ஏற்படக்கூடாது - இவ்விதமாகத் தனது ஸுக-சௌகர்யங்களைத் துறந்து, கணவரின் இம்மை-மறுமை நல்வாழ்வையே கருத்தில் கொண்டு நடக்க வேண்டும்.

வினா: மாமியார்-மருமகளிடையே உறவு எப்படி இருக்கவேண்டும்?

விடை: "இவள் தன்னுடைய அம்மாவை விட்டு விட்டு நம் வீட்டுக்கு வந்திருக்கிறாள். என்னுடைய மகனின் ஓர் அங்கமாக விளங்குகிறாள். தன்னுடைய அம்மாவின் நினைவே இவளுக்குத் தோன்றாத வகையில் நான் பழகவேண்டும்" - என்பது மாமியாரின் எண்ணமாக இருக்க வேண்டும்.

"என்னுடைய மங்கல வாழ்வுக்குக் காரணமான என் கணவரைப் பெற்றெடுத்த தாய் இவர். எனக்கு அனைத்துமாய் விளங்குபவர். இந்த மரத்தில் பழுத்த பழம். அதனால் இவரிடம் மரியாதை வைக்கவேண்டும்; பெருமை தரவேண்டும்.

கஷ்டங்களை நான் அனுபவிப்பேன்; ஸுகங்களை இவர் அனுபவிக்கட்டும். இவர் என்னிடம் கடுமையாக நடந்தால், அதுவும் என் நலன் பொருட்டே ஆகும். நான் உடல்நலம் குன்றிக் கிடந்தபோது, என் மாமியார் செய்த பணிவிடைகளைப்போல் வேறு யாரும் செய்யமுடியாது என்பதைக் கண்ணாலேயே கண்டேன். உண்மையில் என் நலனில் நாட்டம் கொண்டு என்னிடம் மாமியார் பழகுகிற மாதிரி வேறு யாரும் பழகுவதைக் கண்டதில்லை; அது நடக்கக் கூடியதும் அல்ல. மருமகள் எங்கள் வீட்டு ராணி" என்று சொல்லி தன்னைப் பற்றிய பொறுப்பு முழுவதையும் என்னிடம் தந்துள்ளார். இவ்வளவு பெரிய பொறுப்பை வேறு யார்தான் கொடுக்க முடியும்? பல பிறவிகள் எடுத்து உழைத்தாலும், எனக்குக் கிடைத்துள்ள நம்பிக்கைக்கு ஈடு செய்ய முடியாது. அதனால் என்னால் இவர்களுக்குச் சிறிதளவுகூடத் துன்பம் உண்டாகக் கூடாது. அவ்விதமே தனது சொந்த ஸஹோதர-ஸஹோதரிகளைக்காட்டிலும் அதிக மதிப்புடன் பழக வேண்டும். மூத்த மைத்துனர்-அண்ணி தாய்-தந்தையரைப்போலும், இளைய மைத்துனர்-ஓரகத்திகள் தனது மகன்-மகளைப்போலும் கருதத்தக்கவர்கள். அதனால் இவர்களுக்குச் சௌக்யம் உண்டாகும்படி நான் நடந்து கொள்ளவேண்டும் - என்பதே குறிக்கோளாக இருக்கவேண்டும். இவர்களுக்குத் தொண்டு புரிவதற்காகவே நான் இந்த வீட்டுக்கு வந்திருக்கிறேன். ஆகவே என்னுடைய மிகச் சிறிய செயலானாலும் சரி, இவர்களுடைய நன்மைக்காக, ஸுகத்துக்காகவே செய்யப்பட வேண்டும். என்னுடன் இவர்கள் எப்படிப் பழகுகிறார்கள் என்பது பற்றிக் கவலையில்லை. ஏனென்றால் இவர்களுடைய மிகக்

கசப்பான பழக்க தோரணையில்கூட என்னுடைய நலன் இருக்கவே செய்யும்.

வினா: தன் அண்ணியிடம், இளைய மைத்துனர் எவ்வாறு பழக வேண்டும்?

விடை: அண்ணி, ஸீதையைப் போலவும், இளைய மைத்துனர், பரதன் போலவும் நடக்க வேண்டும். ஸீதாதேவி பரதனைத் தன் மகனைப் போல நடத்தினாள். காரணம் ஏதுமின்றியே இராமனைக் காட்டுக்கு அனுப்பினாள் கைகேயி. ஆனால், ஸீதாதேவி பரதன் மேல் குற்றம் சுமத்தவில்லை, பரதனை அவமதிக்கவில்லை. மாறாக சித்ரகூடத்தில் ஸீதையின் பாததூளியை சிரஸில் ஏற்றபோது, பரதனுக்கு ஆஸீர்வாதம் செய்தார். இளைய மைத்துனர் எவ்வளவுதான் மரியாதைக் குறைவாக நடந்து கொண்டாலும், அவமானப்படுத்தினாலும், அண்ணி யானவள் தன்னுடைய தாய்மை உணர்ச்சியையும், நலன் நாடும் தன்மையையும் இழக்காமல் இருக்கவேண்டும். தாயிடம் நடந்து கொள்வதைப்போல அண்ணியிடமும் நடப்பது மைத்துனரின் தன்மையாகும். ஸீதாதேவி வயது முதிர்ந்தவள் இல்லை என்றாலும், பரதன், லட்சுமணன் முதலியோர்க்கு ஸீதையிடம் தாய்உணர்வு இருந்தது.

வினா: ஒரு பெண்ணின் கணவரும், அவளுடைய ஸஹோதரனும் எவ்வாறு பழகவேண்டும்?

விடை: எனக்கு என் மனைவியிடம் அன்பு தோன்றுவதைப்போல் என்னுடைய மனைவியின் அன்புக்குரிய ஸஹோதரனாக இருப்பதால், மைத்துனனும் என் அன்புக்குரியவன். இவனுடைய வீட்டிலிருந்து அவ்வப்போது ஏதேனும் கிடைத்துக் கொண்டிருக்கிறது. அதனால் உலகாயதமாகப்

பார்த்தாலும் வரவுக்கு மேல் வரவுதான்! ஆன்மிக நிலையில் த்யாகத்துக்கே சிறப்பு.

இவர் என் ஸஹோதரியின் மதிப்புக்குரிய அம்ஶமாக விளங்குகிறார். அதனால் என்னாலும் மரியாதை செய்யத்தக்கவர் என்ற எண்ணம் மனைவியின் ஸஹோதரனுக்கு இருக்கவேண்டும். ஸஹோதரிக்கோ, பெண்ணுக்கோ பரிசு கொடுப்பதில் மதிப்பு இருப்பதைப்போல, ஸஹோதரியின் ஓர் அங்கமாக விளங்கும் காரணத்தால், ஸஹோதரியின் கணவனுக்குப் பரிசு அளிப்பதிலும் பெருமை இருக்கிறது. இவர்கள் அன்பையும், தானத்தையும் பெறுவதற்குரியவர்கள். ஆதலால் மனப்பூர்வமான மரியாதையோடு இவர்களுக்குக் கொடுத்துக் கொண்டே இருக்கவேண்டும்.

வினா: ஸஹோதர-ஸஹோதரிகள் தம்மிடையே எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும்?

விடை: அநேகமாக ஸஹோதரன் தரப்பில்தான் தவறு ஏற்படுகிறது. ஸஹோதரியின் பக்கத்திலிருந்து உண்டாகும் தவறு கொஞ்சம்தான். "இவள் திருமாங்கல்யம் அணிந்துள்ள நல்லாள்; இரக்கத்தின் திருவுரு. இவளிடம் அதிக மரியாதையும், அன்பும் காட்டவேண்டும்" என்ற எண்ணம் ஸஹோதரனுக்கு இருக்கவேண்டும். பிராமணனுக்கு உணவு அளிப்பதில் கிடைப்பதைப் போன்ற புண்ணியம், ஸஹோதரி-மகளுக்குக் கொடுப்பதிலும் கிடைக்கிறது.

தந்தையின் சொத்துக்களில் ஸஹோதரிக்கும் பங்கு உண்டு என்று அரசு சட்டம் இயற்றியிருப்பதால் ஸஹோதர-ஸஹோதரிகளிடையே சச்சரவு உண்டாகக் கூடும். மனத்தாங்கல் என்பது மிகவும் ஸாமான்யமான விஷயம். அவள் தனது பங்கைக் கேட்கும்போது, ஸஹோதரி-ஸஹோதரரிடையே அன்பு அற்றுப்

போகிறது. ஸஹோதரர்கள் ஒருவருக்கொருவர் சச்சரவிட்டுக் கொள்கிறார்கள் எனில், ஸஹோதர-ஸஹோதரியிடையே சச்சரவு தோன்றுவதைப் பற்றி என்ன சொல்ல? ஆதலால் "தந்தையின் சொத்தில் பங்கு கேட்பதில்லை" என்ற பழைய வழக்கத்தையே ஸஹோதரிகள் பின்பற்ற வேண்டும். அந்த வழக்கம்தான் அறச்சார்புடையது; தூய்மையானது. பணமும், பொருளும் முக்கியமானவை அல்ல. இவை, ஏதோ வாழ்வியலுக்காக உள்ளவைதான். இந்த உலக நடவடிக்கைகளும் அன்புக்கு முக்கியத்துவம் கொடுப்பதால் நல்லனவாக அமையுமே தவிர, பொருளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதால் அல்ல. நடைமுறையைப் பார்க்கும்போது, செல்வம் முதலிய பொருட்கள் வாக்குவாதத்தை தோற்றுவித்து, கடைசியில் நரகத்துக்கு அழைத்துச் சென்றுவிடுவனவாகவே ஆகிவிட்டன. இதில் மனிதத்தன்மை ஏதும் இல்லை. நாய்கள் பரஸ்பரம் அன்போடு விளையாடிக் கொண்டிருக்கும். இந்த விளையாட்டு எதுவரை என்றால் அவைகள் முன்னே ரொட்டித் துண்டு வராத வரையில்தான். எதிரே ரொட்டித் துண்டு காணப்பட்டவுடன், அவைகளுக்குள்ளே சண்டை துவங்கிவிடுகிறது. மனிதர்களும் இப்படியே நடந்து கொண்டால் அவர்களிடம் மனிதத்தன்மை இருப்பதாக எப்படிக் கூறமுடியும்?

அறம், தன் கடமை, பகவான்-முனிவர்களின் ஆணைகள், த்யாகம் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் கொடுப்பதன் மூலம் இவ்வுலக வாழ்க்கையும், அவ்வுலக வாழ்க்கையும் பயனுடையதாக அமையும். ஆனால் கௌரவம், புகழ், சுயநலம் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளிப்பதன் மூலம் மண்ணுலக-விண்ணுலக வாழ்க்கை வீணாகப் போகின்றது.

வினா: குடும்பஸ்தன், அதிதியிடம் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும்?

விடை: எவருடைய வருகைக்குத் திதி[நாள்], நிர்ணயிக்கப்படவில்லையோ - என்பதுதான் அதிதி என்ற சொல்லின் பொருள். குடும்ப வாழ்வில் உள்ளவர்களுக்கு விருந்தோம்பல் முதல் கடமை யாகும். வானப்ரஸ்தர்களுக்கு இது இரண்டாவது இடத்தை வகிக்கிறது. ப்ரம்மசாரிக்கும், துறவிக்கும் இந்தத் தொண்டு முக்கியமானது அல்ல.

ப்ரம்மசர்ய ஆஶ்ரமத்தின் நியமங்களைக் கடைப்பிடித்து, அடுத்த நிலைக்குத் தயாராக உள்ள ஸ்நாதகனுக்கு, அதுவரை அவன் பரிபாலித்து வந்த தீட்சை முடிவில் செய்யப்படும் உபதேஶம் - ***"மாத்ருதே$_3$வோ ப$_4$வ । பித்ருதே$_3$வோ ப$_4$வ । ஆசார்யதே$_3$வோ ப$_4$வ । அதிதி$_2$தே$_3$வோ ப$_4$வ ।" [தைத்திரீயோபநிஷத்$_3$, ஶிக்ஷாவல்லீ 11/2].*** அன்னை, தந்தை, ஆசார்யர், அதிதி ஆகியோரைத் தெய்வமாக நினைத்துத் தொண்டு செய் - என்பது இதன் பொருள். குடும்ப வாழ்வில் ஈடுபடும் நிலையில் உள்ளோர்க்கு இது தலையாய சட்டமாகும். ஆகவே குடும்பஸ்தன் தன் சக்திக்கு ஏற்றபடி அதிதிகளை வரவேற்று உபசரிக்க வேண்டும்.

விருந்தோம்பல் என்பதில் உட்காருவதற்கு ஆசனம் அளித்தல், உணவு உண்பித்தல், நீர் கொடுப்பது ஆகிய பல விஷயங்கள் அடங்கும். என்றாலும் உணவு அளிப்பதுதான் முக்கியமானது. சமையல் தயாரானதும், முதலில் முறைப்படி வைசுவதேவ பலி கொடுத்துவிட வேண்டும். உலகத்துக்கே உணவு படைத்தல் என்பதுதான் வைசுவதேவ பலி கொடுப்பதன் பொருள். பின்னர் பகவானுக்கு அமுது படைத்தல் வேண்டும். பின்னர் அதிதிகளோ, ஸாதுக்களோ வந்தால் அவர்களுக்கு

உணவு கொடு. ஆறுவகையான ஸாதுக்கள் சொல்லப்பட்டிருக்கிறார்கள்-

ப்₃ரஹ்மசாரீ யதிஸ்சைவ வித்₃யார்தீ₂ கு₃ருபோஷக: ।
அத்₄வக₃: க்ஷீணவ்ருத்திஸ்ச ஷடே₃தே பி₄க்ஷுகா: ஸ்ம்ருதா: ॥

ப்ரம்மசாரி, ஸந்யாஸி, கல்வி கற்பவன், குருவுக்குத் தொண்டு செய்பவன், வழிப்போக்கன், பொருள் இழந்தவன் [எவனுடைய வீடு தீக்கு இரையாகி விட்டதோ, திருட்டுக் கொள்ளைக்காரர்கள் எல்லாச் சாமான்களையும் களவாடிப் போய் விட்டார்களோ, வாழ்க்கை நடத்துவதற்கு எவ்வித ஆதாரமும் இல்லாமற்போய்விட்டதோ. இது போன்றவர் கள்.] - இவ்வறுவரும் ஸாது எனப்படுகிறார்கள். ஆகவே இவ்வறுவருக்கும் உண்டி அளிக்க வேண்டும்.

வைசுவதேவ பலி கொடுப்பதற்கு முன்னே, அதிதி-ஸாது வந்துவிட்டால்? சரியான நேரமாக இருந்தால் வைசுவதேவ பலி கொடு. இல்லாவிட்டால், முதலிலே ஸாதுவுக்கு உணவு கொடுத்துவிடு. ப்ரம்மசாரியும், ஸந்யாஸியும் தயாராகவுள்ள உணவுப் பொருட்களுக்கு உரிமையாளர்கள். இவர்களுக்கு உண்டி அளிக்காமல், முதலில் சாப்பிடுகிறவர்களைப் பாபம் பற்றிக் கொள்கிறது. சாந்த்ராயண வ்ரதம்† செய்தால் மட்டுமே இந்தப் பாபம் போகும். அதிதி வீட்டுக்குள் வந்து வெறுங்கையுடன் திரும்பிச்

---

† சாந்த்ராயண வ்ரதம் பற்றிய விதிமுறைகள்: அமாவாஸ்யை அடுத்த ப்ரதமையன்று ஒரு கவளம், த்விதீயையன்று இரு கவளம் - என்று படிப்படியாக ஒவ்வொரு கவளம் வீதம் அதிகரித்துப் பௌர்ணமி நாளில் பதினைந்து கவளம் உணவு ஏற்கவேண்டும். பின் பௌர்ணமியை அடுத்து வரும் ப்ரதமையிலிருந்து ஒவ்வொரு கவளமாகக் குறைத்து - அதாவது ப்ரதமையில் பதிநான்கு, த்விதீயையில் பதிமூன்று என்றபடி உணவு ஏற்க வேண்டும். அதாவது சந்த்ரனுடைய கலை வளரும்போது கவள எண்ணிக்கை வளரும்; கலை குறையும்போது கவளமும் குறையும். இது சாந்த்ராயண வ்ரதம். கவள அன்னம் தவிர வேறு எதையும் உட்கொள்ளக் கூடாது.

சென்றால், அந்த வீட்டின் சொந்தக்காரனின் புண்ணியத்தை எடுத்துக் கொண்டு, தன்னுடைய பாபங்களை விட்டுச் செல்கிறான். ஆதலால், அதிதிக்குக் கட்டாயம் உணவு அளிக்க வேண்டும்.

விருந்தாளியைப் பரமாத்ம ஸ்வரூபமாக எண்ணவேண்டும், அவரைக் கௌரவிக்க வேண்டும், அவருக்கு உணவும், நீரும் கொடுக்க வேண்டும் - என்று மனத்தளவில் குடும்பஸ்தன் கருதவேண்டும் என்றாலும், வெளிப்பழக்கத்தில் மிகவும் கவனமாக இருக்கவேண்டும். அவரிடம் வீட்டு ரஹஸ்யங்களைக் கூறக்கூடாது, வீட்டைச் சுற்றிக் காட்டக்கூடாது. அதாவது மனமார அவர்களை மதித்தாலும் முற்றிலும் நம்பிக்கை வைத்துவிடக் கூடாது. ஏனென்றால் அதிதி என்ற போர்வையில், இந்தக் காலத்தில் யார் வேண்டுமானாலும் வரலாம்.

வினா: துறவி முதலியோர்க்கு முதலில் உணவு அளிப்பது குடும்பஸ்தனின் கடமை. குடும்பஸ்தன் உணவு கொண்டபின், பிச்சைக்கு செல்லவேண்டியது துறவியின் தர்மம். இவை இரண்டும் எப்படி ஒத்துப்போகும்?

விடை: சமையல் முடிந்து உணவு தயாரானதும், முதலில் வைசுவதேவ பலி கொடுத்துவிட வேண்டும். பின் அதிதி வந்தால் சக்திக்கேற்றபடி உணவு கொடு. அதிதி வராவிட்டால் ஒரு பசு கறக்கும் காலம்வரை வாசற்கதவருகே காத்து நின்று அதிதியை எதிர் பார்த்துக் கொண்டிரு. அப்படியும் அதிதி வராவிட்டால், அவருக்கான பாகத்தை எடுத்து வைத்துவிட்டு, நீ உணவு கொள்.

துறவி எதையும் சேர்த்து வைத்துக் கொள்வதில்லை. அதனால் அவருக்குப் பசி ஏற்படும் வேளையில், பிச்சைக்காக குடும்பவாஸியின் வீட்டுக்கு வருவார். குடும்பத்திலுள்ளவர்கள் சாப்பிட்டுப்

பாத்திரங்களைக் கழுவி வைத்த நேரத்தில், அவர் பிச்சைக்காகப் போய் நின்றால்? அதாவது, குடும்பஸ்தனுக்குச் சுமை தோன்றக் கூடாது. குடும்பத்தில் ஓரிருவர் சாப்பாட்டுக்கு மட்டுமே சமையல் செய்திருக்கும் போது, ஒரு ஸாது வந்து சேர்ந்தால், சமையல் பற்றாமல் போய்விடும். வீட்டில் ஆறேழு நபர்களுக்கான உணவு தயாரிக்கப்பட்டிருந்தால், பெரிய வித்யாஸம் தோன்றாது. ஆனால் அங்கேயும் அதிக எண்ணிக்கையில் ஸாதுக்கள் வந்துவிட்டால், அவர்களுக்கும் கஷ்டம் ஏற்படும். அதனால், குடும்பத்திலுள்ளவர்கள் உணவருந்திய பிறகே, பிச்சை கேட்டு துறவி செல்ல வேண்டும். எது மிச்சமிருக்கிறதோ, அதை ஏற்கவேண்டும். ஸந்யாஸி க்ருஹஸ்தனின் வீட்டில் பிச்சைக்காக வெகுநேரம் காத்துக் கொண்டிருக்கக் கூடாது. க்ருஹஸ்தன் தடுக்காவிட்டால், ஒரு பசு கறக்கும் நேரம் காத்திருக்கலாம். அப்படியும் கொடுக்கும் எண்ணத்தில் குடும்பஸ்தன் இல்லை என்றால், அங்கிருந்து போய்விட வேண்டுமே தவிர, கோபம் கொள்ளக் கூடாது. இவ்விதமே குடும்பவாஸியும் கோபம் கொள்ளக்கூடாது.

வினா: குடும்பஸ்தன் அண்டை அயலாருடன் எப்படிப் பழக வேண்டும்?

விடை: அண்டை வீட்டுக்காரர்களைத் தன் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக மதிக்க வேண்டும். இது நம்முடையது, இது பிறருடையது - என்ற எண்ணம் இழிந்த இதயமுடையவர்களுக்கே தோன்றும். பெருந்தன்மையான உள்ளம் படைத்தவர்களுக்கு, இந்த மண்ணுலகம் முழுவதுமே சொந்தக் குடும்பம்†.

---

† *அயம் நிஜ: பரோ வேத்தி க$_{3}$ணனா லகு$_{4}$சேதஸாம் ।*
உத$_{3}$ாரசரிதானாம் து வஸுதை$_{4}$வ குடும்ப$_{3}$கம் ॥
[பஞ்சதந்த்ரம்]

பகவானிடம் நமக்கு உள்ள உறவுப்படி பார்த்தால், எல்லோரும் நமது ஸஹோதரர்களே. அதனால், குடும்பத்திலுள்ளவர்களிடம் பழகும் விதத்திலேயே அண்டையில் உள்ளோரிடமும் பழக வேண்டும். வீட்டுக்கு இனிப்புப் பொருளோ, பழமோ வந்திருக்கிறது. எதிரே நமது பிள்ளைகளும், அடுத்த வீட்டுப் பிள்ளைகளும் இருக்கிறார்கள் என்றால், இனிப்பு முதலியவற்றைப் பங்கிட்டுக் கொடுக்கும்போது, அடுத்த வீட்டுப் பையனுக்கு அதிக அளவுக்கும் உயர்ந்தவைகளுமான இனிப்புக்களைக் கொடுக்கவேண்டும். அதற்குப் பிறகு ஸஹோதரியின் பிள்ளைகளுக்கும், மகளின் பிள்ளைகளுக்கும் நிறைய, சுவைமிக்க இனிப்புக்களைக் கொடுக்கவேண்டும். பிறகு குடும்பத்துக் குழந்தைகளுக்கும், பெரியப்பா - மாமா போன்றவர்களின் பிள்ளைகள் இருந்தால், அவர்களுக்கும் கொடுக்க வேண்டும். கடைசியில், மிச்சம் மீதி இருந்தால் தன்னுடைய பிள்ளைகளுக்குக் கொடுக்க வேண்டும். "நம்முடைய பிள்ளைகளுக்குக் குறைவான மட்டமான பொருள் கிடைத்தால் நமக்கு நஷ்டம் தானே?" என்ற ஸந்தேஹம் சிலருக்குத் தோன்றக்கூடும். இதில் நஷ்டம் ஏதும் இல்லை. அண்டை வீடு, ஸஹோதரி, மகள் ஆகியோருடைய பிள்ளைகளிடம் இவ்வாறு நடந்து கொண்டால், அவர்களும் அவ்வாறே செய்வார்களாதலால், கணக்குப் பார்க்கும்போது எல்லாம் சரியாக இருக்கும்! இப்படி நடந்து கொள்வதால், நம்மிடையே அன்பு பெருகும் என்பதைக் கவனிக்க வேண்டும். அன்புக்கு உள்ள விலை வேறு எந்தப் பொருளுக்கும் இல்லை.

பக்கத்து வீட்டுக்காரரின் பசு-எருமை நமது வீட்டுக்குள் வந்துவிட்டால் அண்டை வீட்டுக்காரருடன் சண்டை போடக் கூடாது; அந்த வாயில்லாப்

பிராணியை அடிக்கவும் கூடாது. மாறாக "அண்ணே! உங்க வீட்டு ஆடு-மாடு எங்க வீட்டுக்குள்ளே வந்திடிச்சு. இனிமே இப்படி நேராதபடி பார்த்துக்குங்க" என்று அன்பு சொட்டக் கூறவேண்டும். நாம் இவ்விதம் பணிவோடு கூறினால் நமது வீட்டுக் கால்நடை அவர் வீட்டுக்குள் புக நேர்ந்தால், அவரும் இவ்வாறே கூறுவார். பக்கத்து வீட்டுக்காரர் கடுமையாக நடந்து கொண்டாலும், நாம் அவரிடம் கோபம் கொள்ளாமல், இனியாவது நமது வீட்டு பசு-எருமைகள் அவர் வீட்டுக்குள் சென்று துன்புறுத்தாதவண்ணம் கவனமாக இருக்கவேண்டும்.

நமது வீட்டு சுபநிகழ்ச்சி, திருமணம் முதலிய சடங்குகளின்போது தயாரிக்கப்பட்ட விதவிதமான அறுசுவைப் பண்டங்களை பக்கத்து வீட்டுச் சிறுவர்களுக்கும் கொடுக்கவேண்டும். அண்டை வீட்டுக்காரர் என்ற காரணத்தால், அவரும் நமது குடும்பத்தைச் சேர்ந்தவரே. இதைக் காட்டிலும் அதிக அன்போடு பழக வேண்டும் என்றால், நமது ஸஹோதரி, பெண்ணின் திருமணத்தின்போது நாம் பரிசுகள் கொடுப்பதைப்போல, பக்கத்து வீட்டுக் காரரின் ஸஹோதரி, பெண்ணின் திருமணத்தின் போது பரிசுகள் வழங்கலாம். நம் வீட்டு மாப்பிள்ளையிடம் நடந்து கொள்வதைப் போலவே, அண்டை வீட்டுக்காரரின் மருமகனிடமும் நடந்து கொள்ள வேண்டும்.

வினா: வேலைக்காரரிடம் எவ்வாறு பழக வேண்டும்?

விடை: தன்னுடைய பிள்ளையிடம் பழகுவதைப் போல வேலைக்காரரிடம் பழகவேண்டும். வேலைக்காரர்கள் இரண்டுவிதமாக அமர்த்தப் படுகிறார்கள். [1] சம்பளமும், சாப்பாடும் கொடுத்து வைத்துக் கொள்ளப்படுபவர்கள். [2] வேலைக்

காரருக்கு சம்பளம் மட்டும் கொடுப்பார்கள்; உணவு, அவர் தன் வீட்டில் சாப்பிடுவார். சம்பளம் பெற்றுக் கொண்டு சாப்பாடும் சாப்பிடும் வேலைக்காரருக்கு உணவு விஷயத்தில் பாகுபாடு காட்டலாகாது. அநேகமாக வேலைக்காரர்களுக்கு என மூன்றாம்தரமான சமையலும், வீட்டிலுள்ள மற்றவர்களுக்கு இரண்டாம்தரமான சமையலும், தன்னுடைய கணவன் - குழந்தைகளுக்கு என முதல்தரமான சமையலும் வீட்டில் செய்யப்படுகிறது. இப்படி மூன்று பிரிவான சமையல் ஆக்கப்படாமல், ஒரே மாதிரியான உணவு ஆக்கப்பட வேண்டும். நடுத்தரமான உணவு தயாரித்து அனைவருக்கும் கொடுக்கவேண்டும். அந்த நேரத்தில் யாரேனும் பிச்சைக்காரர் வந்தால் அவருக்கும் கொடுக்கவேண்டும்.

சாப்பாடு இல்லாமல் சம்பளம் மட்டும் பெற்றுக் கொள்ளும் வேலைக்காரர் தன் சௌகர்யப்படி உணவு தயாரித்துச் சாப்பிடலாம். ஆனால் நமது வீட்டில் சிறப்பான, இனிய பண்டங்கள் செய்தால், வேலைக்காரரின் குழந்தைகளுக்கும் கொடுக்க வேண்டும். திருமணம் போன்ற நிகழ்ச்சியின்போது, அவர்களுக்கும் துணிமணி எடுத்துக் கொடுக்கவேண்டும். அவர் வேலைக்குத் தகுந்த சம்பளம் கொடுப்பதோடு, அவ்வப்போது வெகுமதிகள், துணிமணி, இனிப்புப் பண்டம் முதலியனவும் கொடுத்துக் கொண்டிருக்க வேண்டும். வெகுமதிகள் ஏற்படுத்தும் விளைவுகளை சம்பளத் தொகை உயர்வு விளைவிக்காது. வேலைக்காரருக்கு வெகுமதி முதலியன கொடுப்பதால் கொடுப்பவரின் உள்ளம் விசாலமடைகிறது. அவர்களுக்குள் அன்பு பெருகுகிறது. அதனால் அவஶ்யம் ஏற்படும்போது, திருட்டுப்புரட்டுக்காரர்களிடமிருந்து அவர் நம்மைக்

காப்பாற்றவும் செய்வார்; திருமணம் போன்ற நிகழ்ச்சிகளின்போது ஆர்வத்துடன் வேலை செய்வார்.

வினா: வீட்டிலுள்ள எலி, பல்லி, கொசு, மூட்டைப்பூச்சி ஆகிய உயிர்களிடம் எவ்வாறு நடக்கவேண்டும்?

விடை: வீட்டில் வாழும் எலி முதலியவைகளையும், நம் வீட்டின் அங்கமாக மதிக்க வேண்டும். ஏனென்றால் அவைகள் நம் வீட்டுக்குள்ளேயே வசிப்பிடம் அமைத்துக் கொண்டு இருந்து வருகின்றன. ஆகவே நம் வீட்டில் இருப்பதற்கு அவைகளுக்கும் உரிமை உண்டு. அதாவது, முடிந்தவரையில் தன் குடும்பத்தினரைக் காப்பாற்றிக் கொண்டு, அவைகளையும் பேணிப் பராமரிக்க வேண்டும். ஆனால் இப்போதெல்லாம் மக்கள் அவைகளை ஒழித்துக் கட்டுகிறார்கள். இது சரியல்ல. தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் உரிமை மட்டுமே மனிதனுக்கு உண்டு; பிறவற்றைக் கொல்வதற்கான உரிமை கிடையாது. பூமியின்மேல் தனக்கென்று ஓர் இல்லம் அமைத்துக் கொண்டு மனிதன் வாழ்வதைப்போல, எலி முதலியவைகளும் தமக்கென ஒரு வசிப்பிடம் கண்டு வாழ்கின்றன. ஆகவே, அவைகளை அழிக்கக் கூடாது. வீட்டில் பாம்பு, தேள் முதலிய விஷ ஜந்துக்கள் தென்பட்டால், தந்திரமாகப் பிடித்து, வீட்டுக்குத் தொலைவில், பாதுகாப்பான இடத்தில் விட்டுவிட வேண்டும்.

தூய்மை இன்மையாலும், குப்பை சேர்வதாலும்தான் கொசு, மூட்டைப்பூச்சி முதலியன உற்பத்தியாகின்றன. ஆதலால் வீட்டில் மாசுபடியாமல், பளிச்சென்று வைத்துக் கொண்டால், இவை தோன்றவே மாட்டா. தூய்மையாக வைத்துக் கொண்டிருக்கும்போதும், அவை உற்பத்தியானாலும்

கூட, அவைகளை ஒழித்து மாய்ப்பதற்கு நமக்கு உரிமை இல்லை.

வினா: வீட்டில் நாய் வளர்க்கலாமா, கூடாதா?

விடை: வீட்டில் நாய் வைத்துக் கொள்ளக் கூடாது. நாயை வளர்ப்பவன் நரகத்துக்குப் போய்ச் சேர்கிறான். பஞ்ச பாண்டவர்களும், த்ரௌபதியும் உலகத்தைத் துறந்து, வடக்கு நோக்கிச் சென்று கொண்டே இருக்கும்போது, இடையிடையே பீமஸேனன் முதலிய எல்லோரும் கீழே விழுந்துவிட்டார்கள். கடைசியில் யுதிஷ்டிரரும் மிகவும் சோர்ந்த வேளையில், இந்த்ரனுடைய உத்திரவுப்படி ரதத்தை எடுத்துக் கொண்டு அங்கே வந்த மாதலி, யுதிஷ்டிரரிடம் சொன்னான்- "இந்த உடல் தாங்கியே தாங்கள் ஸ்வர்கத்துக்கு எழுந்தருள்க." தன்னருகில் ஒரு நாய் நிற்பதைத் தர்மர் கண்டார். அவர் சொன்னார்- "இந்த நாய் என்னை அண்டி வந்திருக்கிறது. அதனால் இதுவும் என்னுடன்கூட ஸ்வர்கம் செல்ல வேண்டும்." இந்த்ரன், தர்மபுத்ரரிடம் கூறினான்-

ஸ்வர்கே₃ லோகே ஶ்வவதாம் நாஸ்தி தி₄ஷ்ண்யம்
இஷ்டாபூர்தம் க்ரோத₄வஶா ஹரந்தி ।
ததோ விசார்ய க்ரியதாம் த₄ர்மராஜ
த்யஜ ஶ்வானம் நாத்ர ந்ருஶம்ஸமஸ்தி ॥

[மஹாப₄ாரதம், மஹாப்ரஸ்தானம் 3/10]

"தர்மராஜனே! நாயை வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு ஸ்வர்க லோகத்தில் இடமில்லை. வேள்வி செய்வதன் மூலமும், கிணறு-குட்டை தோண்டுவதன் மூலமும் அவர்களுக்குக் கிடைக்கும் புண்ணியப்பேற்றை க்ரோதவச என்னும் பெயருடைய ராக்ஷஸர்கள் அபஹரித்துச் செல்கிறார்கள். எனவே, நன்றாகச் சிந்தித்துச் செயல்படு. இந்த நாயை

விட்டுவிடு. ஈவு இரக்கமற்ற கார்யமாக இது கருதப்பட மாட்டாது."

யுதிஷ்டிரர் சொன்னார்- "நான் இதைப் போஷித்து வளர்க்கவில்லை. இதுவாக என்னை அடைக்கலம் புகுந்திருக்கிறது. என்னுடைய புண்ணியத்தில் பாதிப் பங்கை இதற்கு அளிக்கிறேன். இதன் பயனாய், இதுவும் என்னுடன் வரட்டும்." யுதிஷ்டிரர் இப்படிக் கூறி முடித்தவுடன், அந்த நாயிடமிருந்து தர்மராஜர் வெளிப்பட்டுக் கூறினார்- "நான் உன்னைச் சோதிக்கவே இப்படிச் செய்தேன். நீ என்னை வென்றுவிட்டாய். வா ஸ்வர்கத்துக்கு."

க்ருஹஸ்தன் வீட்டில் நாய் வைத்துக் கொள்ளக் கூடாது என்பதுதான் இதன் தாத்பர்யம். மஹாபாரதத்தில் இப்படி வருகிறது-

பி4ன்னப4ாண்ட3ம் ச க2ட்வாம் ச குக்குடம் ஶுனகம் தத2ா ।
அப்ரஶஸ்தானி ஸர்வாணி யஶ்ச வ்ருக்ஷோ க்3ருஹேருஹ: ॥
பி4ன்னபா4ண்டே3 கலிம் ப்ராஹு: க2ட்வாயாம் து த4னக்ஷய: ।
குக்குடே ஶுனகே சைவ ஹவிர்நாஶ்னந்தி தே3வதா: ।
வ்ருக்ஷமூலே த்4ருவம் ஸத்த்வம் தஸ்மாத்3 வ்ருக்ஷம் ந ரோபயேத் ॥

[மஹாபா4ரதம், அனுஶாஸன பர்வம் 127/15-16]

"உடைந்த பாத்திரம், உடைந்த கட்டில், சேவல், நாய், அரச மரம் போன்ற மரங்கள் வீட்டிலிருப்பது நற்குறியாகக் கருதப்படவில்லை. உடைந்த பாத்திரத்தில் கலியுகம் குடி கொள்வதாகக் கூறப்பட்டுள்ளது. உடைந்த கட்டில் இருப்பதால் தனநாசம் ஏற்படும். சேவலும், நாயும் வளர்கிற வீட்டில் அளிக்கப்படும் அவியுணவை தேவதைகள் ஏற்பதில்லை. வீட்டை ஒட்டினாற்போல் பெரிய மரம் இருந்தால், அதன் வேர்களிடையே பாம்பு, தேள் முதலியன இருப்பதைத் தடுக்க முடியாது. ஆதலால், வீட்டுக்குள்ளே மரம் வளர்க்கக்கூடாது.

நாய் மிகவும் அசுத்தமான, புனிதமற்ற பிராணி. அது உண்டு-குடிப்பதிலிருந்து, தொடுவதிலிருந்து, ஆங்காங்கே உட்காருவதிலிருந்து குடும்பஸ்தனின் உணவு-பானங்களில், அங்கிங்கே நடந்து போவதில் தூய்மைக் குறைவும், புனிதக் குறைவும் ஏற்படுகிறது. புனிதமின்மையிலிருந்து விளைவதும் புனிதமின்மை யாகவே [நரகம் முதலியனவாக] இருக்கும்.

வினா: வயல் முதலியவற்றின் காவலுக்காக நாய் வைத்துக் கொண்டிருப்பதில் என்ன தவறு?

விடை: வயல்வெளியின் காவலுக்காக மட்டுமே நாய் வைத்துக் கொள். அவ்வப்போது அதற்கு ரொட்டி கொடு. ஆனால் உன்னிடமிருந்து தொலைவிலேயே வைத்துக் கொள். அதைத் தன்னுடனே வைத்துக் கொள்ளுதல், அதை எடுத்துக் கொண்டு ஊர்சுற்றுதல், தீண்டல்-தீண்டாமை நோக்கின்றி பண்புக்குறைவாக நடத்தல் - ஆகியவை தடுக்கப்பட்டுள்ளன. நாய்க்கு உணவூட்டுவதோ, அதைப் பாதுகாப்பதோ குற்றம் இல்லை. உயிர்ப் பிராணிகளுக்கு உணவு அளிப்பது என்பது குடும்பஸ்தனின் முக்கியமான கடமையாகும் அல்லவா? ஆனால் நாயைக் கட்டியணைத்துக் கொள்வது, தன்னருகிலேயே அதை வைத்துக் கொள்வது, அதனிடம் ஆழ்ந்த பற்று வைப்பது ஆகியவையே வீழ்ச்சிக்குக் காரணம். ஏனென்றால், கடைசிக் காலத்தில் நாயின் நினைவு வருமேயானால், வருகின்ற பிறவியில் நாயாகப் பிறக்க நேரிடும்.†

---

† ***யம் யம் வாபி ஸ்மரன்ப₄ாவம் த்யஜத்யந்தே கலேவரம் ।***
தம் தமேவைதி கௌந்தேய ஸதா₃ தத்₃ப₄ாவப₄ாவித: ॥
[கீ₃தா 8/6]

"குந்தி மைந்தனான அர்ஜுன! மனிதன் தன் கடைசி நேரத்தில் எந்த உணர்வுகளை சிந்தித்தபடி ஶரீரத்தை விடுகிறானோ, அதே உணர்வுகளே எப்போதும் மீதூறப் பெற்று, அதையதையே அடைகிறான். அதாவது, அவ்வுணர்வுகளுக்கேற்ற யோனிகளையே சென்றடைகிறான்."

வினா: வீட்டுக் கூரையின் மேலோ, சுவரிலோ அரசு முளைவிட்டால் அதைப் பிடுங்கி எறியலாமா, கூடாதா?

விடை: அதைக் கெல்லி எடுத்து நாற்சந்தியிலோ, கோவிலுக்கு முன்பாகவோ, அல்லது தெருவில் ஒரு நல்ல இடத்திலோ ஊன்றவேண்டும். அதற்குத் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருக்க வேண்டும். கூரை அல்லது சுவரைச் சற்று இடிக்க நேர்ந்தாலும் சரி, பரவாயில்லை; பின்னால் அதைச் செப்பனிட்டுக் கொள்ளலாம். ஆனால் முடிந்தவரையில் அரசங்கன்றை வெட்டிப் போடுவது கூடாது. மனிதனைப் புனிதமாக்கும் அரசு, ஆல், நாட்டு அத்தி, காட்டு அத்தி, நெல்லி, துளஸி முதலிய புனித மரங்களை நாம் வணங்கிப் போற்றவேண்டும்.

வினா: குடும்பத் தலைவர் வாழ்க்கை நடத்துவதற்கு வேண்டிய செல்வத்தை எவ்வாறு சேர்க்கவேண்டும்?

விடை: பிறருடைய உரிமையில் கை வைக்காதபடி, உடலுழைப்பின் மூலம் பணம் சேர்க்கவேண்டும். எவ்வளவு வருமானம் கிடைக்கிறதோ, அதில் பத்தில், பதினைந்தில் அல்லது இருபதில் ஒரு பங்கை தான, தர்மத்துக்காக ஒதுக்கி வைத்துவிட வேண்டும். பணம் ஸம்பாதிப்பதில் சிறிதளவேனும் முறைகேடு நேராமலிருக்காது. ஆகவே அந்த முறைகேட்டுக்குப் பரிஹாரம் செய்வதற்காக ஒதுக்கி வைக்கவேண்டும்.

வினா: நேர்மையான வழியில் நாம் பணம் சேர்க்க முடியாதபடி இன்றைய அரசு சட்டமியற்றியுள்ளதே, அதற்கு என்ன செய்வது?

விடை: அரசு சட்டத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ள வழி இருக்கிறது. தன் சொந்தச் செலவுகளைக் குறைத்தல்; சுசிருசியான ஆகாரம், நவீனப் பொருட்கள், வெளி அலங்காரம் ஆகியவற்றுக்காகச் செலவு செய்யாதிருத்தல்; நடுத்தரமான வாழ்வு நடத்துதல்; மிக எளிமையாக,

அமைதியாக வாழ்க்கையைக் கழித்தல். பணம் சேர்ப்பது என்பது கையால் எட்டிப் பிடித்து விடக்கூடிய விஷயமல்ல. எவ்வளவு பணம் கிடைக்கவேண்டுமோ அவ்வளவுதான் கிடைக்கும். ஆனால் செலவைக் குறைப்பது நம் கையில் உள்ளது. இவ்விஷயத்தில் நாம் நம் இச்சைப்படி நடக்க முடியும்.

வினா: நாம் வரி முழுவதையும் கொடுத்தால் பணம் போய்விடுகிறது. வரி முழுவதையும் செலுத்தாமல், மறைத்து விடுவதனால் பணம் தங்குகிறது என்பதைக் கண்ணால் பார்க்கிறோம். அதனால் மறைத்து வைப்பதுதான் நல்லது என்றாகிறதல்லவா?

விடை: வரி செலுத்தாததால் பணம் மிச்சப்படுவதுபோல் ஒரு சமயம் தோன்றும்†. மிச்சப்பட்ட பணத்தை வெளிப்படையாகச் செலவழிக்கவும் முடியாது. ஆனால் பணத்துக்காக பொய், வஞ்சனை, ஏமாற்று, அநீதி முதலியன செய்திருக்கிறோமே, அவற்றுக்கான தண்டனையை அனுபவிக்க நேரிடும். நேர்மையற்ற முறையில் சேர்க்கப்பட்ட பணத்தை விட்டு விட்டு இறக்கவும் நேரும். அதாவது குறுக்கு வழியில் ஸம்பாதிக்கப்பட்ட பணம் மருத்துவர்கள், வழக்குரைஞர்களுக்குப் போய் சேரலாம்; திருடர்களால் கொள்ளையிடப்படலாம்; வங்கியில் தூங்கிக் கொண்டு இருக்கலாம். ஆனால் நம்முடைய கார்யத்துக்கு உபயோகப்படாது. நம்முடைய கார்யத்துக்கு உதவாத பணத்துக்காகப் பாபத்தையும், முறைகேட்டையும் ஏன் செய்யவேண்டும்?

---

† ***அன்யாயோபார்ஜிதம் த்$_3$ரவ்யம் த$_3$ஶவர்ஷாணி திஷ்ட$_2$தி ।***
ப்ராப்தே சைகாத$_3$ஶே வர்ஷே ஸமூலம் தத்$_3$வினஶ்யதி ॥

"நீதியற்ற முறையில் ஸம்பாதிக்கப்பட்ட பணம் பத்து ஆண்டுகள் வரை இருக்கும். பதினோராவது ஆண்டு வந்தவுடன், அடிவேருடன் அது அழிந்து போகிறது."

நேர்மையாகச் சேர்த்தால் பணம் குறைவாகத்தான் கிடைக்கும் என்பது சரியல்ல. நமக்குச் சேரவேண்டிய பணம் வந்தே தீரும். ஆமா, அது எப்படி வரும்? அது தெரியாது. ஆனால் வரவேண்டிய பணம் கட்டாயம் வரும். செல்வத்தைத் துறந்தவர்கள், பணத்தைத் தொடாதவர்கள் - இப்படிப்பட்டவர்களுக்குக்கூட பணம் சேருவதைப் பல சான்றுகளால் அறிகிறோம். பொருள் இழப்பு, நோய், துன்பம் முதலியன நமது முயற்சியில்லாமலே ஏற்படுவதைப்போல, கிடைக்க வேண்டிய செல்வம், ஸுகம் முதலியவைகளும் நமது முயற்சியின்றியே வந்து சேரும்.

ஸுக$_2$மைந்த்$_3$ரியகம் ராஜன் ஸ்வர்கே$_3$ நரக ஏவ ச ।
தே$_3$ஹினாம் யத்$_3$ யத$_2$ா து$_3$:க$_2$ம் தஸ்மான்னேச்சே$_2$த தத்$_3$ பு$_3$த$_4$: ॥
[ஸ்ரீமத்$_3$ப$_4$ாக$_3$வதம் 11/8/1]

"அரசே! பிராணிகளுடைய விருப்பமில்லாமலே, தொடங்கிவிட்ட கர்மவினைப்படி துன்பம் எவ்விதம் உண்டாகிறதோ, அதுபோலவே புலன்கள் மூலம் பெறுகின்ற இன்பம் ஸ்வர்கத்திலும், நரகத்திலும் பெறப்படுகின்றன. அதனால் அறிவாளியான மனிதன் அத்தகைய ஸுகபோகங்களை விரும்பக்கூடாது."

3. சிறுவரைப் பற்றிய கருத்துக்கள்

வினா: லக்ஷிய ஸந்ததியை எவ்வாறு உற்பத்தி செய்வது?

விடை: தாய்-தந்தையரின் நடவடிக்கைகள், எண்ணங்கள் சீரியனவாக இருந்து, பிள்ளைப்பேறு பிதிர்க்கடனிலிருந்து விடுதலை பெறுவதற்காகவே, தன்னுடைய இன்பத்துக்காக அல்ல என்ற நிலையில்தான் உயர்வான மகப்பேறு உண்டாகக் கூடும். ஏனென்றால், புலன்வழி இன்பநுகர்ச்சியில் ஆசையினால் தோற்றுவிக்கப்படும் குழந்தைகள், அநேகமாக தரக் குறைவானவர்களாகவே இருக்கிறார் கள். குந்தியின் செயல்பாடுகளும், சிந்தனைகளும் மேன்மையானவைகளாக இருந்ததால்தான், தர்மராஜா தானே அவரிடம் பிறந்தார்.

சூலுற்ற பெண்கள், தமக்குப் பிறக்கப் போகும் குழந்தையின் சிறப்பையும், நலனையும் மனதிற்கொண்டு, பகவானுடைய, இறையடியார் களுடைய கதை, வரலாறுகளைக் கேட்க வேண்டும். அவர்களைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்க வேண்டும். அப்படிப்பட்ட படங்களையே பார்க்க வேண்டும். இவ்விதமாக, தாயின்மேல் நல்லோர் இணக்கத்தின் தாக்கம் ஏற்படுவதால், உயர்வான ஸந்ததி தோன்றும். பிரஹலாதனின் தாயார் கருவுற்றிருந்தபோது கருவிலிருந்த குழந்தையின் பொருட்டே, பகவானுடைய கதைகளை நாரத முனிவர் சொன்னார்; உபதேஶம் செய்தார். அதனால், அரக்கர் பரம்பரையில் தோன்றியபோதிலும் பிரஹலாதர் உயர்ந்து விளங்கினார்.

ஸத்கர்மம் [நற்செயல்], நற்சிந்தனை, நற்பேச்சு, நல்லுறவு - என்று நால்வகை உள்ளன. நல்ல

செயல்களைச் செய்வது 'ஸத்கர்மா' எனப்படும். மற்றவர்களுடைய நலனைப் பற்றியும், பகவானைப் பற்றியும் சிந்தித்திருப்பது 'ஸச்சிந்தனம்' [நற்சிந்தனை] ஆகும். பகவான், அவன் அடியார்கள் வரலாறுகளைப் பற்றித் தமக்குள் விரிவாகப் பேசுவதும், கேட்பதும் 'ஸச்சர்ச்சா' [நற்பேச்சு] எனப்படுகிறது. "நான் பகவானைச் சேர்ந்தவன், பகவான் என்னுடையவர்" - என்று பகவானுடன் உறுதியாகப் பிணைந்து நிற்பது 'ஸத்ஸங்கம்' எனப்படும். இந்நான்கின் மூலமாகவும் ஸந்ததிகளை லக்ஷிய புருஷர்களாக, உயர்ந்தோராக ஆக்க முடியும்.

மேம்பாட்டுக்காகச் செப்பனிடுவதும், உயர்வடைவதும், மேல் தரத்தை எட்டுவதும் சுதந்திர உரிமை. ஆதலால், ஸாது-மஹாத்மாக்களுடன் மனிதன் கூடிப் பழகவேண்டும். ஸாது-மஹாத்மாக்கள் கிடைக்காவிட்டால், ஆன்மிகப் பயிற்சியில் ஆழ்ந்திருக்கும் ஸாதகர்களுடன் சேரவேண்டும். இப்படிப்பட்ட ஸாதகர்களும் கிடைக்காவிட்டால் கீதை, இராமாயணம் போன்ற நன்னூல்களைப் படிக்கலாம், படிக்கச் செய்யலாம், நெட்டுருப் பண்ணலாம், தன் ஆன்மிக மேம்பாட்டுக்கான வழிகளைப் பின்பற்றலாம். இதனால், அவன் உயர்மனிதனாக ஆகமுடியும்.

வினா: தாய்-தந்தையரின் நடவடிக்கைகள், எண்ண உணர்வுகள் முதலியன மிக உயர்ந்தவையாக இருந்தும், அவர்களுடைய வழித்தோன்றல்கள் நல்லவர்களாக இல்லை. இதற்கு என்ன காரணம்?

விடை: இதற்கு முக்கிய காரணம் சேர்க்கைக் குற்றம் - சிறுவர்களுக்கு நல்ல சேர்க்கை கிடைக்காததுதான். போன ஜன்மத்தில் பெற்றோர்கள் பட்டிருக்கும் கடனை வசூலிப்பதற்காக இத்தகைய குழந்தைகள் பிறக்கிறார்கள். கெட்டவர்கள் சேர்க்கையால் கெட்டுப் போகிறவன், மேன்மக்கள் உறவால் சீரடைய முடியும்.

ஆனால், சென்ற பிறவியில் ஏற்பட்ட கடனைக் கழிப்பதற்காக வந்திருப்பவன், துயரத்தையே கொடுத்துக் கொண்டிருப்பான். ஆதலால், நம்முடைய செயல்கள், உணர்வுகள் நல்லவையாக இருந்தும் இப்படிப்பட்ட ஸந்ததி தோன்றுமேயானால், "பழைய கடன் வசூல்" என்று எண்ணி, "நமது கடன் குறைந்து கொண்டிருக்கிறது" என்பதால் மகிழ்ச்சியுடன் இருக்கவேண்டும்.

விச்ரவஸ் அந்தண குலத்தினர்; அவருடைய மனைவி கைகஸி அரக்க குலத்தினள். அதனால் ராவணன் தோன்றினான். உக்ரஸேனர் அறவழி நடப்பவர். ஒரு நாள் ஓர் அரக்கன் உக்ரஸேனரின் உருவம் தாங்கி அவருடைய பத்தினியோடு கூடினான். அதன் காரணமாகக் கம்ஸன் பிறந்தான்.

வினா: தாய்-தந்தையரின் நடத்தை சரியில்லை. ஆனால், அவர்களுடைய ஸந்ததிகள் நல்லவர்களாக இருக்கிறார்கள். இதற்கு என்ன காரணம்?

விடை: பொதுவாக, தாய்-தந்தையரின் இயல்புகள்தான் குழந்தைகளுக்கும் இருக்குமானால், பழைய கடன் கழிப்பு அல்லது கர்ப்பாதானத்தின் போது ஒரு நல்ல ஸம்ஸ்காரம் ஏற்படுவது அல்லது கருவுற்றிருந்த நாட்களின்போது ஒரு மஹானுடைய வரவு - இவை காரணமாக நன்மகவு தோன்றுகிறது. இப்படித்தான் ஹிரண்யகசிபுவின் வீட்டில் பிரஹலாதர் பிறந்தார். பிரஹலாதனின் பிறப்பு பற்றி ஒரு செய்தி என்னவென்றால், ஹிரண்யகசிபுவின் தவத்திற்கு இடையூறு ஏற்பட்டபோது, மனைவியோடு கூடி மகிழ வீட்டிற்கு வந்து, கூடியிருக்கும் காலத்தில் பேச்சினிடையே பல தடவை "விஷ்ணு"வின் பெயரைச் சொன்னான். அவனுடைய மனைவி கயாது கருவுற்றிருந்தபோது, கருவிலிருந்த குழந்தையை முன்னிட்டுப் பக்தியின் பெருமையை நாரதர்

விளக்கமாகக் கூறினார். இக்காரணங்களால், பிரஹலாதரின் உள்ளத்தில் பக்தி உணர்வு படிந்தது. தண்ணீரின் சுவை இனிமையானதுதான் என்றாலும் மண்ணின் தொடர்பினால் சுவை மாறுபடுகிறது. வெவ்வேறாகப் போகிறது [ஒவ்வொரு கிணற்றின் நீரும் தனித்தனி சுவை பெறுகிறது.] - இவ்வித சேர்க்கை காரணமாக மனிதனின் இயல்புகள் மாறிப் போகின்றன.

வினா: தந்தையின் ஆத்மாவே, மகன் உருவத்தில் வருகிறது. இதன் கருத்து என்ன?

விடை: ஒருவன் ஓர் அந்தணனைத் தன் குலகுருவாக மதிக்கிறான். இன்னொருவன், முப்புரி அளிப்பவனை ஆசார்யராக எண்ணுகிறான். அவர்கள் உடலைத் துறந்தபின், அவர்களுடைய பிள்ளையை ஆசார்யராக மதித்து, அவரைப் போலவே பிள்ளைக்கும் உபசார-மரியாதை செய்யப்படுகிறது†. செல்வத்துக்குச் சொந்தக்காரனான தந்தை இறந்ததும். அந்தச் செல்வத்துக்கு மகனே உரிமையாளனாகிறான். இவ்விதமே, மகன், தன் தந்தையின் பிரதிநிதியாகத் தோன்றுகிறான். தந்தையின் இடத்திலிருந்து செயலாற்றுகிறான்.

இந்த இடத்தில், "ஆத்மா" என்ற சொல் "கௌணாத்மா"வைக் குறிக்கிறது. அதாவது, "ஆத்மா" என்ற சொல், உடலைச் சுட்டுகிறது. உடலிலிருந்து

---

† அஶ்வத்தாமாவைக் கட்டாகக் கட்டி, த்ரௌபதியின் முன்னே கொண்டு வந்து நிறுத்தினான் அர்ஜுனன். த்ரௌபதி அஶ்வத்தாமவை விட்டுவிடும்படி அர்ஜுனனிடம் வற்புறுத்தி, "எவருடைய அருளினால் தாங்கள் எல்லா ஶஸ்த்ர-அஸ்த்ர ஞானம் பெற்றீர்களோ, அந்த த்ரோணரே, மகன் உருவத்தில் தங்கள் எதிரே நிற்கிறார்" என்று கூறுகிறாள்.

"ஸ ஏஷ ப₄க₃வான் த்₃ரோண: ப்ரஜாரூபேண வர்ததே ।"

[ஶ்ரீமத்₃பா₄க₃வதம் 1/7/45]

உடல் [மகன்] தோன்றுகிறது. அதனால், உலகாயத நோக்கில், மகன், தந்தையின் பிரதிநிதி ஆகிறான். ஆனால் ஆன்மிக மேம்பாட்டுக்கு மகன் காரணம் அல்ல.

வினா: குழந்தைகள் மேன்மக்களாவதற்கு ஏற்ற கல்வியை எவ்வாறு புகட்டுவது?

விடை: பொதுவாக, கண்ணால் பார்த்தே சிறுவர்கள் கற்றுக் கொள்கிறார்கள். அதனால், அவர்கள் எதிரில், பெற்றோர்கள் நல்ல முறையில் நடந்து கொள்ளவேண்டும். தம் வாழ்க்கையைக் கட்டுப்பாட்டுடனும், புனிதமாகவும் வைத்துக் கொள்ள வேண்டும். இப்படிச் செய்வதால், சிறுவர்கள் நல்ல விஷயங்களைக் கற்றுக் கொண்டு, உயர்நிலையை அடைவார்கள்.

குழந்தைகளின் முன்னேற்றத்துக்காக, முதலாவதாக, தாய்-தந்தையர் தமது நடத்தையை ஓர் ஒழுங்கில் வைக்கவேண்டும். இரண்டாவதாக அவர்களுக்கு நல்ல விஷயங்களையே கூறவேண்டும். உயர்தரமான கல்வி அளிக்கவேண்டும். அடியார்களுடைய, பகவானுடைய சரித்திரங்களைச் சொல்லவேண்டும். உலக நடவடிக்கைகளிலும் ஆன்ம தத்வ ஞானத்தைச் சிறுவர்களுக்கு உணர்த்தக்கூடிய கல்வியே, சிறந்த படிப்பாகும். இது பற்றி இன்னும் கொஞ்சம் பார்ப்போம்.

பெற்றோர்கள் வெளியே போக விரும்பினால், "நீ இங்கேயே இரு" என்று பிள்ளைகளிடம் கூறுகிறார்கள். இப்படிச் சொன்னால் பிள்ளைகள் கேட்பதில்லை. பிடிவாதம் செய்கிறார்கள். அதனால், பெற்றோர்களுக்கு எரிச்சல் வருகிறது. குழந்தைகளும் துக்கம் அடைகிறார்கள். வீட்டில் கலகம் தோன்றிவிடுகிறது. அதனால் குழந்தைகளிடம்

முன்னதாகவே சொல்லிவிட வேண்டும். "நாங்கள் வெளியிலே போறபோது பிடிவாதம் பண்ணாதே. நாங்கள் என்ன சொல்றோமே, அப்படியே நடந்துக்கணும்" என்று நாள்தோறும் இரண்டு-மூன்று தடவை இப்படிச் சொல்லி வந்தால், குழந்தைகள் இதனை ஏற்றுக் கொள்வார்கள். பின்னால், வெளியே புறப்படும்போது, "பிடிவாதம் கூடாது. நாங்கள் சொன்னபடி நடந்துக்கணும்" என்று பிள்ளைகளிடம் கூறினால், அவர்கள் தங்கள் சொல்லை மதித்து நடப்பார்கள்.

வீட்டுக்கு இனிப்பு வருகிறது, பழம் வருகிறது, நல்ல தின்பண்டம் வருகிறது என்றால், அதை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று குழந்தை அடம்பிடிக்கிறது. அதனால் தின்பண்டம் கண்ணில்படாத நேரத்தில், ஏதேனும் பட்சணம் வந்தால், "முதல்லே மற்றவர்களுக்கு கொடுக்கணும், மிச்சம் மீதியைத்தான் நாம் சாப்பிடணும்" என்று நாள்தோறும் இரண்டு-மூன்று தடவை சொல்லி வரவேண்டும். பின்னால் ருசியான தின்பண்டம் எதிரே வைக்கப்பட்டதும் அவன் அடம்பிடித்தால், "குழந்தே! பிடிவாதம் கூடாது. மற்றவர்களுக்குக் கொடுத்துட்டு எடுத்துக்கோ, பங்கு போட்டு அருந்து, வைகுண்டம் போ பறந்து!" என்று கூறவேண்டும். அப்புறம் அவன் அடம் பண்ணமாட்டான். இம்மாதிரி, குழந்தைகளுக்கு என்னென்ன கருத்துக்களைக் கற்பிக்க வேண்டுமோ, அக்கருத்துக்களை பகலில் இரண்டு, மூன்று தடவை குழந்தைகளிடம் சொல்லி, மனமுவந்து அவர்கள் ஏற்றுக் கொள்ளும்படிச் செய்யவேண்டும்.

குழந்தைகளுக்கு நல்ல நல்ல விஷயங்களைக் கற்பிக்கவேண்டும். "குழந்தே! இதோ பாரு! ஒருபொழுதும் எந்தச் சாமானையும் திருடக்கூடாது.

அம்மாவைக் கேட்டு எடுத்துக்கணும். கொடுக்கல்லேன்னா, அழுது ரகளை பண்ணி எடுத்துக்கணும். ஆனா, திருட மட்டும் கூடாது. தம்பி, தங்கைகிட்ட அன்பா இருக்கணும். அவங்களுக்குச் சாதம் ஊட்டு, விளையாடு. இராமபிரான் எப்படி பரதன் முதலியோரிடத்திலே ஆசையாயிருந்தாரோ, ஆசையோடு புத்திமதிகள் கூறினாரோ, அப்படி நீயும் உன்னோட ஸஹோதர-ஸஹோதரிகளிடத்திலே ஆசை யாயிருக்கணும், சண்டை போடக்கூடாது. உங்களுக்குள்ளே ஏச்சுப் பேச்சு வந்ததுன்னா, அவங்க சொல்றதை ஒப்புக் கொண்டுவிடு. நான் சொல்றதைத்தான் கேட்கணும்னு அடம்பிடிக்காதே. அப்பா-அம்மா சொல்றபடி வீட்டு வேலைகளைச் செய். நேரத்தை வீணடிக்காமல், நல்ல கார்யங்களைப் பண்ணிண்டிருக்கணும். மத்தவங்க பொருள் மேலே உரிமை கொண்டாடாதே. தன்னுடைய சாமான்களை யெல்லாம் நல்லதுக்கு மேலே நல்ல வேலைகளுக்குப் பயன்படுத்தணும், இப்படி இப்படி." இவ்விதமாகக் குழந்தைகளுக்கு என்னென்ன கற்பிக்க வேண்டுமோ, அதனை, தினந்தோறும் இரண்டு-மூன்று தடவை குழந்தைகளுக்குச் சொல்லிவிட வேண்டும். அதனால், அவர்கள் உள்ளத்தில் இக்கருத்துக்கள் பதிவாகின்றன.

கருத்து என்னவென்றால், சிறுவர்களுக்கு முன் ஒழுக்கத்துடன் நடந்து காட்டுவது என்பது ஒன்று; நல்ல போதனைகள் செய்விப்பது என்பது மற்றொன்று. இந்த விஷயமாக, பகவானுடைய பின்வரும் வார்த்தைகளை தாய்-தந்தையர் உருப்போட வேண்டும்.

ந மே பார்த₂ாஸ்தி கர்தவ்யம் த்ரிஷு லோகேஷு கிஞ்சன ।
நாநவாப்தமவாப்தவ்யம் வர்த ஏவ ச கர்மணி ॥
யதி₃ ஹ்யஹம் ந வர்தேயம் ஜாது கர்மண்யதந்த்₃ரித: ।
மம வர்த்மானுவர்தந்தே மனுஷ்யா: பார்த₂ ஸர்வஶ: ॥

உத்ஸீதே₃யுரிமே லோகா ந குர்யாம் கர்ம சேத₃ஹம் ।
ஸங்கரஸ்ய ச கர்தா ஸ்யாமுபஹந்யாமிமா: ப்ரஜா: ॥

[கீ₃தா 3/22-24]

"ஏ பார்த்த! மூன்றுலகிலும் நான் ஆற்றவேண்டிய கடமை ஏதுமில்லை. என்னால் அடையப்பட வேண்டிய பொருள் எதுவும் அடையப்படாமலும் இல்லை. அப்படியும் நான் செய்யவேண்டிய கருமங்களில் ஈடுபட்டே இருக்கிறேன். எப்போதாவது நான் கவனத்துடன் கடமையாற்றுதலை நிறுத்தினால் மிகவும் மோசமான விளைவுகள் தோன்றும். ஏனென்றால் மனிதர்கள் எல்லா விதத்திலும் என் வழியையே பின்பற்றுகிறார்கள். நான் கர்மாவைச் செய்யாவிட்டால், எல்லா மனிதர்களும் தட்டுத் தடுமாறிப் போவார்கள். சாதிக்கலப்புக்கு நான் காரணமாகி விடுவேன். அத்துடன் எல்லா மக்களையும் சீர்குலைத்தவன் ஆவேன்."

வினா: இப்போது, கல்விக்கூடங்களின் சூழ்நிலை நன்றாக இல்லை. அதனால் குழந்தைகளின் படிப்புக்கு என்ன செய்யவேண்டும்?

விடை: குழந்தைக்கு நாள்தோறும் வீட்டில் நற்போதனை அளிக்க வேண்டும். அப்பா-அம்மா சொற்படி நடந்தவன் முன்னேறினான். அப்பா-அம்மா சொற்கேளாதவன் வாழ்வு பாழாயிற்று என்பது போன்ற கருத்துக்களைக் கொண்டுள்ள கதைகளைச் சொல்லவேண்டும். குழந்தை படிக்கத் தொடங்கியதும், அவனுக்குப் பக்தர்களின் வரலாறுகளைப் படிக்கக் கொடுக்கவேண்டும். "பையா! ஒவ்வொரு குழந்தையோடும் சுதந்திரமாகப் பழகாதே. ரொம்பவும் கூடிக் குலாவி வம்பளக்காதே. படிச்சுட்டு நேரே வீட்டுக்கு வரணும். பெரியவங்க பக்கத்திலே இரு. ஏதாவது பட்சணம் வேணும்னா, அம்மாவைப்

பண்ணிக் கொடுக்கச் சொல்லிச் சாப்பிடணும். கடைத்தெருவிலேருந்து வாங்கிச் சாப்பிடக் கூடாது. ஏன்னா, பணம் சேர்க்கிறதுதான் கடைக்காரனுக்குக் குறியே தவிர, பண்டத்தின் தரத்தைப் பற்றிக் கவலையில்லே. எப்படியோ நிறையப் பணம் சேரணும் அவனுக்கு. குழந்தைப் பருவத்திலே ஜீரண சக்தி வலுவாக இருப்பதாலே கடையிலே வாங்குகிற பட்சணம் எல்லாம் ஜீரணமாயிடும். ஆனா, அதன் பலன் பின்னாலேதான் தெரியும்" என்று குழந்தைகளிடம் கூறவேண்டும்.

குடும்பஸ்தன், பணம் ஸம்பாதிப்பதைக் காட்டிலும் குழந்தைகளின் ஒழுக்கத்தில் அதிகக் கவனம் செலுத்தவேண்டும். ஏனென்றால் சேர்க்கப்பட்ட பொருளைப் பயன்படுத்தப் போகிறவர்கள், குழந்தைகள் தாமே. குழந்தைகள் கெட்டுப் போனால், பணம் அவர்களை மேலும் கெடுத்துவிடும் என்பது பெரியோர்களின் வாக்கு. இதன் பொருள்: "பையன் நல்லவனாக இருந்தால் அவனுக்குப் பணக்கஷ்டமே ஏற்படாது. கெட்டவனாக இருந்தாலோ, சேமித்து வைக்கப்பட்டுள்ள பணத்தையும் செலவழித்து ஒழித்துவிடுவான். அதனால் பணத்தை ஏன் சேர்த்து வைக்கிறாய்?"

வினா: கிறிஸ்தவப் பள்ளிகளில் கல்வி கற்கப் பையன்களை அனுப்பலாமா? கூடாதா?

விடை: கிறிஸ்தவப் பள்ளிக்கூடங்களுக்குப் பையன்களை அனுப்பினால், அவர்கள் நம் வீட்டுக்குள்ளேயே கிறிஸ்தவர்களாக இருப்பார்கள். அதாவது உங்கள் குழந்தைகள் வெளித்தோற்றத்தில் ஹிந்துவாகவும், உள்மனத்தில் கிறிஸ்தவர்களாகவும் ஆகிவிடுவார்கள். ஆயிரக்கணக்கான மைலுக்கு அப்பாலிருந்து இங்கே வந்து, உங்கள் குழந்தைகளைக் கிறிஸ்தவர்களாக ஆக்கிவிடுகிறார்கள். நீங்கள்,

உங்கள் வீட்டுப்பிள்ளைகளைக்கூட ஹிந்துவாக வைத்திருக்க முடியவில்லை. இது மிகவும் வெட்கப்பட வேண்டிய விஷயமல்லவா? குழந்தைகள் நமது நாட்டின் அரிய செல்வம். அதனைக் காப்பாற்ற வேண்டும்.

பெரிய மனிதர்கள், சொந்தமாகப் பள்ளிக்கூடம், கல்லூரி அமைத்து, அங்கு நல்ல நிர்வாகமும், குழந்தைகளுக்கு நல்ல படிப்பும் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். படிப்பு சொல்லிக் கொடுக்கும் ஆசிரியர்களின் நடத்தையும் நல்லதாக இருக்கவேண்டும். நல்லொழுக்கமுடைய ஆசிரியர்கள் கிடைப்பது அரிதே என்றாலும், முயன்று பார்த்தால் கிடைப்பார்கள். இப்படி நிறுவப்படும் பள்ளிக்கூடம், கல்லூரிகளில் நம்முடைய தர்மத்தைப் பற்றியும், கீதை, ராமாயணம் முதலிய நூல்களைப் பற்றியும் குழந்தைகளுக்குப் போதனை அளிக்கவேண்டும். சமய போதனைக்கு என ஒரு மணி நேரம் கட்டாயம் ஒதுக்கப்பட வேண்டும்.

நீங்கள் எளிய வாழ்க்கையை மேற்கொள்ளுங்கள். குழந்தைகளுக்கு எளிமையைப் புகட்டுங்கள். நீங்கள், பல்சுவை, நவீன வஸ்துக்கள், சொகுசு ஆகியவற்றைத் துறந்து, உயர்பணிகளில் ஈடுபட்டால், அதன் விளைவு குழந்தைகளிடம் காணப்படும். வீட்டில் பகவான் வழிபாட்டு அறை அமைத்து பகவானுக்குப் பூஜை நடத்த வேண்டும். பகவானின் சரணாமுதத்தை சிறியவர்-பெரியவர் எல்லோரும் பருகவேண்டும். இல்லத்தில் கடவுள் ஸம்பந்தமான பேச்சுக்கள், பகவன் நாமகீர்த்தனம், நல்ல இசைப்பாடல் நிகழ்த்த வேண்டும். நீங்கள் எவ்வளவு மேன்மைப் படுகிறீர்களோ, அவ்வளவுக்கே குழந்தைகளும் உயர்வடைவார்கள். சொற்களைவிட நடத்தையின் பாதிப்பு ஆழமாகப் பதியும்.

வினா: மகன்-மகளின் திருமணத்துக்காக தாய்-தந்தையர் என்ன செய்யவேண்டும்?

விடை: மகன்-மகளுக்கு எத்தகைய பேறு கிடைக்க வேண்டுமோ, அவ்விதமேதான் அமையும் - என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டும். ஆனால் பையனுக்குத் திருமணம் செய்ய வேண்டுமாயின், மணப்பெண்ணின் இயல்புகளைப் பார்க்கவேண்டும். ஏனென்றால் வாழ்க்கை முழுவதும் அவளுடன் கழித்தாக வேண்டுமே? அவளுடைய உடம்பில் கொடுமையான வியாதி இருக்கிறதா? அவளுடைய தாயாரின் குணம் சரியாக இருக்கிறதா? - என்று இப்படி முடிந்தவரையில் ஆராய்ந்து பார்க்கவேண்டும். பெண்ணுக்கு விவாஹம் என்றால், மணமகனின் குடும்பம் நல்லதா? மணமகன் நல்லவனா? அவனுக்குத் தகுதி இருக்கிறதா? என்பவைகளை அலசிப் பார்த்துவிட்டுப் பெண் கொடுக்கவேண்டும். அறநூல்களில் மணமகனிடம் ஏழு விஷயங்களைப் பார்க்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறது-

குலம் ச ஶீலம் ச வபுர்யஶஶ்ச
வித்$_3$யாம் ச வித்தம் ச ஸநாத$_2$ தாம் ச ।
ஏதான்கு$_3$ணான்ஸப்த பரீக்ஷ்ய தே$_3$யா
கன்யா பு$_3$தை$_4$: ஶேஷமசிந்தனீயம் ॥

"மணமகனுடைய குலம், நடத்தை, உடல், புகழ், கல்வி, சொத்து, பெரியோர் துணை [ஆதரவு கொடுக்கக்கூடிய மேன்மக்கள்] - இந்த ஏழு வகைகளிலும் ஆராய்ந்தபின், தன்னுடைய பெண்ணைக் கொடுக்கவேண்டும்.

உண்மையில் மணமகன் நல்லவன், மணமகனின் அன்னையும் நல்லவள் என்றால், பெண் சௌக்யமாக வாழ்வாள். பெண்ணை மிக அருகிலோ அல்லது மிகவும் தொலைவிலோ கொடுக்கக் கூடாது. ஏனென்றால் அருகில் கொடுத்தால் வம்புதும்புகள்

நிறைய ஏற்படலாம்†. தூரத்தில் கொடுத்தாலோ, அப்பா-அம்மாவைப் பார்ப்பதற்குப் பெண் வருவது அரிதாகிவிடும்.

தன்னுடைய ஸந்ததி சௌக்யமாக இருக்க வேண்டும். வசதியாக வாழ வேண்டும். அதற்கு எந்தவிதமான கஷ்டமும் வரக் கூடாது. வம்சமும் வளரவேண்டும் - என்ற எண்ணத்தோடு கல்யாணம் செய்விக்க வேண்டும் என்பதுதான் இதன் கருத்து.

வினா: வரதட்சிணை வாங்குவது பாபமா?

விடை: ஆமாம். பாபம்தான்.

வினா: பாபம் என்றால் நமது ஶாஸ்த்ரங்களில் அதன் சிறப்பு ஏன் கூறப்பட்டிக்கிறது?

விடை: ஶாஸ்த்ரங்களில் வரதட்சிணை கொடுக்க வேண்டும் என்று முறை சொல்லப்பட்டிருக்கிறது. வாங்குவதற்கு அல்ல. வரதட்சிணை வாங்கக்கூடாது. வாங்காமலிருப்பதுதான் பெருமை. வரதட்சிணை கொடுப்பது, ஒருவர் சக்தியைப் பொறுத்தது. வரதட்சிணை பெற்றுக் கொள்வது, சக்திக்கு உட்பட்டதல்ல.

ஆசை என்பது இரு வகைப்படும். [1] நம்முடைய பொருள் நமக்குக் கிடைக்க வேண்டியதுதானே? - இது நியாயமான விருப்பமேயானாலும், பரமாத்மாவை அடைவதற்கு இதுவும் இடைஞ்சல்தான். [2] மற்றவர் களுடைய பொருள் எனக்குக் கிடைக்கட்டுமே? - இந்த

---

† கிட்டத்தில் இருந்தால், தன்னுடைய ஒவ்வொரு துக்கத்தையும் அம்மாவிடம் வந்து சொல்வாள். அதைப் பொறுக்க முடியாமல், பெண்ணின் மாமியார் முதலியோரைப் பற்றிக் கண்டபடி பேசுவாள். அதனால் பெண்ணின் புக்ககத்தில் மனஸ்தாபம் ஏற்படும். தன்னுடைய துக்கத்தை எவரிடமும் கூறாமல், தன் வீட்டுச்செய்திகளை வீட்டுக்குள்ளேயே வைத்துக் கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் தனக்குத்தான் அவமானம் - ஆபத்து. எந்த வீட்டில் இராப்பகலாகக் காலந்தள்ள வேண்டுமோ, அங்கே அமைதி கெட்டுப் போகும்.

ஆசை நரகத்திற்கு இட்டுச் செல்லும். இதைப்போலவே வரதட்சிணை வாங்க வேண்டும் என்கிற ஆசை நரகத்திற்கு இட்டுச் செல்லும். வரதட்சிணை நிறையக் கிடைக்கலாம். குறைவாகக் கிடைக்கலாம். கிடைக்காமலே போகலாம் - இதெல்லாம் முந்தைய கர்மவினைப்படி நடக்கும். ஆனால் நீதியற்ற முறைகளில் பிறருடைய சொத்தை அடையவேண்டும் என்ற ஆசை இருக்கிறதே, அது துன்பமயமான நரகத்துக்கே அழைத்துச் செல்லும். மனித ஶரீரம் பெற்ற பின்னர் பயங்கரமான நரகங்களுக்குச் செல்வது எத்தனை பெரிய இழிவு! எத்தனை பெரிய வீழ்ச்சி! ஆதலால் குறைந்தபட்சம் பயங்கர நரகங்களுக்கு இட்டுச் செல்லும் ஆசையை, பிறர் பணத்துக்கு ஆசைப்படுவதை நிறுத்திவிட வேண்டும்.

உண்மையில் கர்மவினைப்படியே செல்வம் கிடைக்கிறது. நமது விருப்பப்படி அல்ல. நாம் விரும்புவதாலேயே பணம் கிடைப்பதாக இருந்தால், பணமில்லாதவன் என்று யாரும் இருக்க மாட்டான். பணத்தாசை கொண்ட எவரும் அதை முழுமையாகப் பெற்றதில்லை; பெறப் போவதுமில்லை; பெறவும் முடியாது. அதனைத் துறக்கவே வேண்டும். பணம் கிடைக்கவேண்டும் என்றிருந்தால், ஆசையில்லா விட்டாலும் சுலபமாகக் கிடைக்கிறது அல்லது ஆசைப்பட்டால் மிகவும் சிரமப்பட்டு பாப-அநியாயங்களோடுகூடக் கிடைக்கிறது. கீதையில் அர்ஜுனன் கேட்கிறான்- "மனிதன் விருப்ப மில்லாமலே ஏன் பாபம் செய்கிறான்?" பகவான் பதில் கூறுகிறார்- "ஆசையே பாபங்களுக்கு ஆணிவேர்" [3/36,37].

பழைய காலத்தில் மகனுடைய மாமனார் வீட்டிலிருந்து வரதட்சிணையாக வந்த தொகையை, வெளியே வாரி வழங்கி விடுவார்கள். தன் வீட்டில்

சேர்ப்பதில்லை. "பிறருடைய மகளைத் தானமாகப் பெற்றிருக்கிறோம்." - இதற்குக் கழுவாயாக யக்ஞம், தானம், பிராமண போஜனம் முதலியன செய்தார்கள். ஏனென்றால் பிறருடைய பெண்ணைத் தானமாகப் பெறுவது, பெரும் கடன்சுமை ஆகும். ஆனால் குடும்ப வாழ்க்கைக்குப் பெண்ணைத் தானமாகப் பெற வேண்டியிருக்கிறது. அதனால் "நம் வீட்டில் பெண் உண்டானால், நாமும் கன்னிகாதானம் செய்வோம்" என்ற எண்ணம் இருக்க வேண்டும்.

விதிமுறையாகப் பசு முதலியவற்றைத் தானமாகப் பெறும் பிராமணர்கள், அதற்குப் பிராயச்சித்தமாக யக்ஞம், காயத்ரீ ஜபம் செய்கிறார்கள் என்பதை நாம் காண்கிறோம். பிறருடைய பணத்தை ஏற்பது பாபம் என்றால், வரதட்சிணை என்ற பெயரில் பணம் பெறுவதும் பாபம் என்று சொல்லவா வேண்டும்? வரதட்சிணை பெற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டால் கொடுப்பவருடைய ஆசையை நிறை வேற்றவும், அவருடைய மகிழ்ச்சிக்காகவுமே பெற்றுக் கொள்ளவேண்டும். பெற்றுக் கொள்வதில் சிறிதளவும் விருப்பமில்லாதிருந்து கொடுப்பவரின் மகிழ்ச்சிக் காகவே ஏதோ கொஞ்சம் பெற்றுக் கொண்டால், அப்படி வாங்கிக் கொள்வது கொடுப்பதற்கு இணையானதே.

4. பிள்ளைகளின் கடமைகள்

*"மாதா ச கமலா தே$_3$வீ பிதா தே$_3$வோ ஜனார்த$_3$ன: ।
ப$_3$ாந்த$_4$வா விஷ்ணு ப$_4$க்தாஶ்ச ஸ்வதே$_3$ஶோ பு$_4$வனத்ரயம் ॥"*

உண்மையில், பகவான் லக்ஷ்மீ-நாராயணன்தான் எல்லோருக்கும் தாய்-தந்தையர். இந்தக் கோணத்தில் பார்த்தால், இந்த உலகத்தில் நம்முடைய தாய்-தந்தையர் எவர்களோ, அவர்கள் ஸாக்ஷாத் லக்ஷ்மீ-நாராயணரின் உருவமே. ஆகவே, தாய்-தந்தையருக்குப் பணிவிடையை விடாமல் செய்வதே மகனின் கடமையாகும். தம்முடைய ஶரீரம் முதலியவற்றை தம்முடையதாகக் கருதாமல், தாய்-தந்தையர் உடையதாகக் கருதுபவர்களே உண்மையான புத்ரர்கள். ஏனென்றால் உடலானது தாய்-தந்தையினரிடமிருந்துதான் தோன்றியிருக்கிறது. ஸ்தூல, ஸூக்ஷ்ம, காரண ஶரீரங்களில் எதுவாக இருந்தாலும் சரி, அவை எல்லாவற்றின் மேலும் - தங்களுக்கு அல்ல - தாய்-தந்தையருக்கே அதிகாரம் உண்டு என்று அவர்கள் மதிக்கிறார்கள். மகன் தீர்த்தயாத்திரை, வ்ரதம், வழிபாடு, ஸ்மரணம் ஆகிய நற்கருமங்களில் எதைச் செய்தாலும், அதனை முழுமையாகத் தாய்-தந்தையருக்கே அர்ப்பணித்துவிட வேண்டும் என்று மனு கூறியிருக்கிறார்†. தாய்-தந்தையர் உயிரோடிருக்கும் காலத்தில் முழு முனைப்புடன் அவர்களுடைய ஆணைகளை நிறைவேற்ற வேண்டும்; அவர்கள் மனமகிழ்ச்சியோடு இருக்கும்படி நடந்து கொள்ளவேண்டும்; அவர்கள் மரணத்துக்குப் பின்னர் அவர்களுக்குப் பின்பும் -

---

† *தேஷாமனுபரோதே$_4$ன பாரத்ர்யம் யத்$_3$யத$_3$ாசரேத் ।
தத்தந்நிவேத$_3$யேத்தேப்$_4$யோ மனோவசனகர்மபி$_4$: ॥*
[மனுஸ்ம்ருதி 2/236]

தண்ணீர், சிராத்தம்-நீர்க்கடன் கொடுக்கவேண்டும்; அவர்கள் பெயரில் தீர்த்தயாத்திரை, வ்ரதம் முதலியன செய்யவேண்டும். இப்படிச் செய்வதால் அவர்களுடைய ஆஶீர்வாதம் கிடைக்கிறது; அதன் மூலம் இவ்வுலகம் - மேலுலகம் இரண்டும் செம்மையாகின்றன.

ஸ்ரீபீஷ்மர், தந்தையினுடைய ஸௌக்யத்தையும், மகிழ்ச்சியையும் முன்னிட்டு தன் ஸுக-ஸௌக்யங்களை த்யாகம் செய்தார். அத்துடன் இளமையிலிருந்தே ப்ரம்மசார்யாக இருக்கும் உறுதியையும் எடுத்துக் கொண்டார். அவர் பெண்-பொன் என்ற இரண்டையும் துறந்தார். இதனால் மனமகிழ்ந்த தந்தை, "விரும்பியபோது மரணம்" என்ற வரத்தைக் கொடுத்தார். "இச்சாம்ருத்யு" ஆனார் என்றால், அவர் எப்போது விரும்புகிறாரோ அப்போதுதான் உயிர் துறப்பார் என்பதாகும். அவருக்கு இந்தப் பேராற்றல், தந்தைக்குச் செய்த பணிவிடையினால் கிடைத்தது. ஸ்ரீராமர், தந்தையின் ஆணையைக் காப்பாற்றுவதற்காக அரசு, செல்வம், ஸுகபோகம் ஆகிய எல்லாவற்றையும் துறந்தார். வால்மீகி ராமாயணத்தில், "தந்தையார் சொல்லி விட்டால், நான் நெருப்பில் புகுவேன்; விஷத்தைக் குடிப்பேன்; மேலும் கடலில் வீழ்வேன்; ஆனால் நான் தந்தையின் ஆணையை மீறமாட்டேன்" என்று ஸ்ரீராமர் சொல்கிறார்†. ஸ்ரீராமர் ஆராய்ச்சியாளர் அல்லர்; ஆணைக்கு அடிபணிபவர். அதாவது தந்தையார் என்ன சொன்னார், எங்கே சொன்னார், எப்போது சொன்னார், எந்த நிலையில் சொன்னார், எந்தச்

---

† *அஹம் ஹி வசனாத்₃ ராஜ்ஞ: பதேயமபி பாவகே ।*
ப₄க்ஷயேயம் விஷம் தீக்ஷ்ணம் பதேயமபி சார்ணவே ॥
[வால்மீகி ராமாயணம், அயோத்₄யா॰ 18/28-29]

சூழ்நிலையில் சொன்னார் என்றெல்லாம் ஆராய்ந்து கொண்டிராமல், தந்தையாரின் கட்டளையை ஏற்றார்; வனவாஸத்துக்குச் சென்றார். அதனால் தாய்-தந்தையினரின் உத்தரவுப்படி நடப்பதில் ஸ்ரீராமர் எல்லோருக்கும் லக்ஷியபுருஷராக ஆனார். கோஸ்வாமி துளஸீதாஸர் சொல்லியிருக்கிறார்-

अनुचित उचित बिचारु तजि जे पालहिं पितु बैन। ।
ते भाजन सुख सुजस के बसहिं अमरपति ऐन॥ ।

கருத்து என்னவென்றால், மகன் ஸ்ரீராமனைப் போல் தன் நடத்தையை அமைத்துக் கொள்ளவேண்டும். "இந்த சூழ்நிலையில், இந்த நிலைமையில், இந்த சமயத்தில் என் இடத்தில் ஸ்ரீராமர் இருந்தால், என்ன செய்வார்?" என்று எண்ணிப் பார்க்கவேண்டும். இப்படி, அவரைப் பற்றிய நினைவுடனேயே செயல்களைப் புரியவேண்டும்.

மகன், தாய்-தந்தையருக்கு எவ்வளவுதான் ஸேவை செய்தாலும், அவன் தாய்-தந்தையருக்குப் பட்டிருக்கும் கடனை அடைக்க முடியாது. எந்த மனித உடல் மூலமாகத் தனக்கு மேலான நன்மை உண்டாகக்கூடுமோ, ஜீவன்முக்தி கிடைக்கக்கூடுமோ, பகவானின் அன்புக்குப் பாத்திரமாக முடியுமோ, பகவானின் மகுடத்தில் வைரமாக விளங்க முடியுமோ - இவ்வளவு பெரிய பதவியை அடைய முடியுமோ, அப்படிப்பட்ட இந்த மனித ஶரீரத்தை நம்முடைய தாய்-தந்தையர் கொடுத்து இருக்கிறார்கள். அதற்குப் பதிலுதவியை மகன் எவ்வாறு செய்து தீர்க்க முடியும்? தீர்க்கவே முடியாது.

வினா: தாய்-தந்தையருக்கு ஸேவை செய்தல் என்பதன் கருத்து என்ன?

விடை: தாய்-தந்தையருக்கு ஸேவை செய்தல் என்பதன் கருத்து நன்றி மறவாமையாகும்.

தாய்-தந்தையர் குழந்தையின், பொருட்டு என்னென்ன துன்பங்களை அனுபவித்தார்களோ, அந்தக் கடன் மகன்மேல் இருக்கிறது. அந்தக் கடனை மகனால், ஒருபொழுதும் கொடுத்துத் தீர்க்க முடியாது. அம்மா, பிள்ளைக்கு எவ்வளவு உதவி செய்திருக்கிறாளோ, அவ்வளவு உதவியை மகனால் செய்யவே முடியாது. "என்னுடைய உடம்புத் தோலைக் கொண்டு செருப்புத் தைத்து அம்மாவுக்குக் கொடுப்பேன்" என்று எந்தப் பிள்ளையாவது சொன்னால், நாம் அவனிடம் கேட்கிறோம்- "இந்தத் தோலை நீ எங்கிருந்து கொண்டு வந்தாய்? இதுவும் அம்மா கொடுத்ததுதானே? அந்தத் தோலைக் கொண்டு, செருப்புத் தைத்து அம்மாவுக்குக் கொடுப்பது, ரொம்பப் பெரிய செயலோ? கொடுக்கிறேன் என்று தற்பெருமை மட்டும் பேசிவிட்டாய்! இவ்விதமே ஶரீரம், பெரும் பங்கு அப்பாவினுடையது. அப்பாவின் முயற்சியாலேயே மகன் படிக்கவும், எழுதவும் தெரிந்து கொள்கிறான்; அவனுக்குச் சாப்பாடு, துணிமணி கிடைக்கிறது. இதற்குப் பதிலுதவி எப்படிச் செய்து கழிக்க முடியும்? ஆகவே அப்பா-அம்மாவுக்கு ஸேவை செய்வதால், அவர்களை மகிழ்ச்சியோடு வைத்திருப்பதால் அந்தக் கடன் அடைக்கப்பட்டதாக ஆவதில்லை; ஆனால் மன்னிக்கப்பட்டதாக ஆகும்.

வினா: "எனக்கு ஒரு மகன் தோன்ற வேண்டும்; அவனுக்கு மேலான நன்மை உண்டாக வேண்டும்" என்ற நோக்கத்தோடு, அப்பா-அம்மா உடலுறவு கொள்ளவில்லை. அவர்கள் தங்கள் இன்பத்திற்காகவே உறவு கொண்டார்கள்; நாம் பிறந்தோம். இதில், அவர்களிடம் நாம் கடன்பட்டது எப்படி?

வி்டை: வெறுமே இன்பப்பற்றுடன்கூட உறவு கொள்ளும் ஆண்-பெண்களுக்குப் பொதுவாக, சிறந்த மக்கள் பிறப்பதில்லை. ஶாஸ்த்ரங்களின்

கட்டளைக்கேற்ப, தங்களது இன்பத்தை நோக்கமாகக் கொள்ளாமல் பிதிர்க்கடனிலிருந்து விடுதலை பெறுவதற்கென மக்களை உற்பத்தி செய்கிற ஆண்-பெண்களே உண்மையான தாய்-தந்தையர்கள். ஆனால் மகன் எப்படித் தோன்றினாலும், ஏதோ ஒரு வகையில் தாய்-தந்தையர் இருப்பார்கள்; அவர்கள் மரியாதைக்குரியவர்கள்; ஏனென்றால் அவர்கள் மனித உடலைக் கொடுத்து, பரமாத்மாவை அடைவதற்குத் தகுதியுடையவனாக மகனைச் செய்திருக்கிறார்கள். மாணவன் கல்வியை முடித்துக் கொண்டு, ஸ்நாதகன் என்ற நிலையிலிருந்து குடும்ப வாழ்க்கையில் நுழைவதற்கு முன் ஆசார்யரிடமிருந்து அனுமதி பெறுகிறபோது, ஆசார்யர் அனுமதி அளித்துக் கூறும்போது ***"மாத்ருதே$_3$வோ ப$_4$வ, பித்ருதே$_3$வோ ப$_4$வ"*** அதாவது, "நீ தாய்-தந்தையரை ஸாக்ஷாத் பகவான் வடிவமாகவே எண்ணி, அவர்களுடைய ஆணைப்படி நட; அவர்களுக்குப் பணிவிடை செய்" என்று கூறுவதாக உபநிடதங்களில் வருகிறது. இது மாணவப்பருவ முடிவில், ரிஷிகளால் புகட்டப்படும் பாடம். இதை கடைப்பிடிப்பதில்தான் நம்முடைய உயரிய நன்மை இருக்கிறது. ஆகவே, எவர்களிடமிருந்து ஶரீரம் கிடைத்து இருக்கிறதோ, அவர்களிடம் மகன் நன்றியுணர்வோடு இருக்கத்தான் வேண்டும்.

வினா: தாய்-தந்தையர் நம்மைப் பிறப்பித்து வாழ்க்கைச் சிக்கலில் தள்ளிவிட்டார்கள்; ஆபத்துக் களில் தள்ளிவிட்டார்கள். இப்படியிருக்கையில், அவர்களிடம் நாம் எப்படிக் கடன்பட்டவர்களாவோம்?

விடை: இப்படிக் கூறுவது முற்றிலும் தவறு. தாய்-தந்தையர், மனித ஶரீரத்தைக் கொடுத்து, வாழ்க்கைச் சிக்கலிலிருந்து, பிறப்பு-இறப்பிலிருந்து விடுதலை பெறுவதற்கு மிகவும் அரிய வாய்ப்பினை

அளித்துள்ளார்கள். தாய்-தந்தையர் மகனைச் சிக்கலில் தள்ளவுமில்லை; தங்களுடைய மகனை சிக்கலில், ஆபத்தில் தள்ளும் நோக்கமும் அவர்களுக்கு இல்லை. அவர்கள் ஒவ்வொரு சூழ்நிலையிலும், தெரிந்தோ, தெரியாமலோ மகனின் நலனையே விரும்புகிறார்கள்; நலனையே செய்கிறார்கள். ஆனால் நாம் பொருட்களின் மேல், போகங்களில், சூழ்நிலைகளில், நபர்களின்மேல் மமதை கொண்டு, அவைகளிடமிருந்து இன்பம் துய்க்க வேண்டுமென்ற ஆசையால்தான் சிக்கல்களில், ஆபத்துக்களில் வீழ்கிறோம். கருத்து என்னவென்றால், தன்னுடைய ஸுகத்தின் மேல் விருப்பம், ஸுகபோகம், ஸுகவேட்கையை த்யாகம் செய்து தாய்-தந்தையரின் ஸேவையை, பரமாத்மாவை அடையும் உபாயமாகக் கருதி முழு முனைப்புடன் அவர்களுக்கு ஸேவை செய்தால், அவனுக்கு உலகுடன் இருந்த உறவு விடுபட்டுப் பரமாத்ம ப்ராப்தி ஏற்படும்.

தாய்-தந்தையரின் கடமை பற்றிய பார்வையே மகனுக்குத் தேவையில்லை. அவன் தன்னுடைய கடமையையே பார்க்கவேண்டும். தன்னுடைய கடமையைப் பார்க்காமல், தாய்-தந்தையரின் கடமையைப் பார்க்கும் மகன், தன்னுடைய கடமையிலிருந்து வழுவுகிறான்; அதாவது, கடமையைச் செய்வதிலிருந்து வீழ்ந்துவிடுகிறான். எந்த ஒரு ஶாஸ்த்ரத்திலும் யாருக்கும் தாய்-தந்தையரின், குருநாதர்களின் கடமையைப் பார்ப்பதற்கான உரிமை கொடுக்கப்பட்டிருக்க வில்லை. முதலில், மனிதர்கள் மற்றவர்களுடைய கடமையைப் பார்த்துக் கொண்டிருக்கவில்லை; ஆனால் தங்களுடைய கடமையைப் பார்த்தார்கள்; தங்கள் கடமையை நிறைவேற்றினார்கள்; அதனாலேயே அவர்கள் ஜீவன்முக்தர்களாக,

இறையன்பர்களாக இருந்தார்கள். அவர்கள் பிறருடைய கடமைகளைப் பார்ப்பவர்களாக, தங்கள் சுயநலத்தையே பார்ப்பவர்களாக இருந்திருந்தார்களே யானால், இப்போது உள்ளதைப் போலவே மனித சமுதாயம் இருந்திருக்கும். தங்கள் கடமையிலேயே கருத்தாயிருந்தவர்கள், அதை நிறைவேற்றியவர்கள் - அப்படிப்பட்ட ஸாது-மஹாத்மாக்களையும், தர்மாத்மாக் களையும் பாரத மக்கள் எத்தனை மரியாதையோடு நோக்குகிறார்கள். ஆகவே தன்னுடைய கடமையை மனிதன் ஒருபோதும் கைவிடக்கூடாது.

கடமையைப் பற்றி ஒரு ரஹஸ்யமான விஷயம் என்னவென்றால், "இது ஒரு கடமை" என்று மட்டுமே எண்ணி, அதைச் செய்வதால் உறவுப்பிளவு ஏற்படுகிறது. அதாவது தாய்-தந்தையருக்கு ஸேவை செய்வது நம்முடைய ஒரு கடமை என்ற எண்ணத்துடனே செய்கிறார்களே, அவர்களுக்கு தாய்-தந்தையருடனான உறவில் பிளவு ஏற்படுகிறது; அவர்களுக்கு தாய்-தந்தையரிடம் வணக்கத்தோடுகூடிய அன்பு ஏற்படுவதில்லை. இதற்கு மாறாக தமது உடலை தாய்-தந்தையருடையதாகவே கருதி மனமொன்றி மரியாதையுடனும், அன்புடனும் அவர்களுக்குப் பணிவிடை செய்தால், அத்தகையவர்களுக்கு தாய்-தந்தையரிடம் அன்பு ஏற்படுகிறது. உணவு கொள் வதையும், தண்ணீர் பருகுவதையும் மனிதர்கள் எவ்வாறு தம்முடைய கடமையாகக் கருதாமல், உயிருக்கு ஆதாரமாகக் கருதுகிறார்களோ, அதேபோல தாய்-தந்தையருக்குச் செய்யப்படும் ஸேவையை உயிருக்கு ஆதரமாகக் கருதவேண்டும். அவர்களுடைய ஸேவையையே தன்னுடைய வாழ்வாகக் கருதவேண்டும். தன்னுடைய முதன்மையான வேலையாகக் கருதவேண்டும்.

सेवहिं लखनु सीय रघुबीरहि।

जिमि अबिबेकी पुरुष सरीरहि॥ (मानस अयोध्या० १४२।२

இவ்விதம் தாய்-தந்தையருக்குச் செய்யும் ஸேவையைத் தன் உயிருக்கு, வாழ்வுக்கு ஆதாரமாகக் கருதி செய்வதால், "நான், என்" என்ற எண்ணம் குறைந்து போகிறது; ஏனென்றால் பரீரத்தைத் தாய்-தந்தையருக்குரிய பொருளாகக் கருதி, அவர் களுடைய ஸேவையில் அர்ப்பணிப்பதன் மூலம் - பரீரத்தின்மேல் நமக்கு எவ்வித உரிமையும் இல்லை என்று எண்ணுவதன் மூலம் - "நான் - எனது" என்ற பிடிப்பு இருப்பதில்லை.

வினா: மனிதன், தாய்-தந்தையருக்குச் செய்யும் ஸேவையை, பகவானை அடைவதற்கான வழியாகக் கருதுகிறான்; அதுவே அடையப்பட வேண்டியது என்று கருதவில்லை. தாய்-தந்தையருக்குச் செய்யப்படும் ஸேவையே அடையப்பட வேண்டிய பொருள் என்று கருதினால், தன்னுடைய உயிருக்கு ஆதாரம் என்று கருதினால், அவனுக்குத் தாய்-தந்தையரின் திருப் பாதங்களிலேயே அன்பு உண்டானால், அவனுக்குப் பகவானிடம் ப்ரேமை, பகவத் ப்ராப்தி எவ்வாறு உண்டாகும்?

விடை: இதில் மூன்று விஷயங்கள் இருக்கின்றன. [1] தாய்-தந்தையருக்குச் செய்யும் ஸேவையை, ஸாதனமாகவும், ஸாத்யமாகவும் [வழியாகவும், பெற வேண்டிய வஸ்துவாகவும்] கருதி, அவர்களுக்கு ஸேவை செய்பவன், அவர்களுக்குச் செய்யும் ஸேவையைத் தன் உயிரின் ஆதாரமாகக் கருதுபவன் எவனோ, அவனுக்குத் தாய்-தந்தையரின் திருப் பாதங்களில் ப்ரேமையும், பக்தியும் உண்டாகி, கடைசியில் அவனுக்குப் பித்ருலோகம் கிடைக்கிறது. [2] பரமாத்மாவை அடையும் நோக்கத்துடன், தாய்-தந்தையருக்குச் செய்யும் ஸேவையைத் தன் கடமையாக எண்ணிக் கொண்டு செய்பவன் யாரோ, அவனுக்கு தாய்-தந்தையரிடமிருந்து உறவு துண்டிக்கப்பட்டுப் பரமாத்ம ப்ராப்தி உண்டாகிறது. [3] தாய்-தந்தையை ஸாக்ஷாத் பகவானின் வடிவமாக

எண்ணி, அவர்களுக்கு ஸேவை செய்பவனுக்கு பகவத் ப்ராப்தி கிடைக்கிறது. இந்த மூன்றிலும் யாருக்கு எந்த முறையின் மீது ஈடுபாடு ஏற்படுகிறதோ, அதையே செய்யவேண்டும்.

பதிவ்ரதையான மனைவி, பகவானுடைய, ஶாஸ்த்ரங்களுடைய, மஹாபுருஷர்களுடைய கட்டளைக்கிணங்க உடலாலும், உள்ளத்தாலும் கணவனுக்கு ஸேவை செய்கிறாள்; அவளுக்குப் பதிலோகம் கிடைக்கிறது - அதாவது, கணவனுக்கு எந்த லோகமோ, அதே லோகம் பதிவ்ரதைக்கும் ஆகிறது. ஆனால், கெட்ட நடவடிக்கைகளின் காரணமாகக் கணவனுக்குக் கிடைப்பது நரகம் என்றால், பதிவ்ரதையின் லோகமும் நரகமே! - என்று பொருள் இல்லை. பதிஸேவையைத் தன் தர்மமாக [கடமையாக] எண்ணி, பாதிவ்ரத்யம் அனுஷ்டித்திருக்கிறாளோ, அவள் ஏன் நரகத்துக்குப் போகிறாள்? போகவே மாட்டாள். அவள் பாதிவ்ரத்யம் கடைப்பிடித்திருக்கிறாள்; அதனால் அவளுக்கு எந்த லோகம் கிடைக்குமோ, அதே லோகம் கணவனுக்கும் கிடைக்கும். அதாவது கற்பு எனும் தவவலிமையால் அவளுக்கும், அவளது கணவனுக்கும் மேலான நன்மை ஏற்படும். இவ்விதமே தாய்-தந்தையருக்கு ஆற்றும் ஸேவையை ஸாதனமாகவும், ஸாத்யமாகவும் கருதி, அவர்களுக்குத் தொண்டுபுரிபவனுக்கும், அவனுடைய தாய்-தந்தையருக்கும் பகவத் ப்ராப்தி கிடைக்கும்; ஏனென்றால் மகனுக்குக் கிடைக்கும் லோகம் எதுவோ, அதே லோகம் தாய்-தந்தையருக்கும் [பித்ருலோகம்] ஆகும்.

வினா: இந்த ஶரீரம் நம்முடைய வினையின் பயனாக, பேற்றின் பயனாகக் கிடைத்திருக்கிறது - "ப$_3$டே$_3$ ப$_4$ாக$_3$ மானுஷ தனு பாவா" என்று

சொல்லப்படுகிறது. பகவான் மிகுந்த கருணையோடு மனித ஶரீரத்தைத் தந்திருக்கிறார்.

கப₃ஹு[ம்]க கரி கருனா நர தே₃ஹீ।
தே₃த ஈஸ பி₃னு ஹேது ஸனேஹீ ॥

அப்படியானால், இந்த ஶரீரம் தாய்-தந்தையரிடமிருந்து கிடைத்தது என்பது எப்படிச் சரியாகும்?

விடை: இந்த ஶரீரம் தோன்றுவதற்கு, ப்ராரப்த கர்மாவும், பகவத் க்ருபையும் நிமித்த காரணங்கள்; தாய்-தந்தையர் உபாதான காரணம். எப்படி யென்றால், குடம் மண்ணினால் செய்யப்படுகிறது; மண் குடத்துக்கு உபாதான காரணம். குயவன் குடத்தின் தோற்றத்துக்கு நிமித்தமாக இருக்கிறான் என்பதால், குயவன் நிமித்த காரணமாகிறான் - என்பதுபோல. உபாதான காரணம் [முக்கிய காரணம்] என்பது செயலில் வடிவமாக மாறுதல் பெறுகிற காரணம். நிமித்த காரணம் பலவாறாக இருக்கக்கூடும். குடத்தைச் செய்வதற்குக் குயவன் சக்கரம், தடி முதலிய பல நிமித்த காரணங்கள் இருக்கின்றன. அவற்றில் குயவன் முக்கியமான நிமித்த காரணம். அதேபோல ஶரீரத் தோற்றத்துக்கு தாய்-தந்தையரே முக்கிய உபாதான காரணம்; ஏனென்றால், அவர்களுடைய சுக்ல-சோணிதத் திலிருந்து ஶரீரம் உருப்பெறுகிறது. பிறப்பு, ஆயுள், அனுகூலமான அல்லது அனுகூலமில்லாத சூழ்நிலை - இவை விஷயத்தில் கர்மம், நிமித்த காரணமாகும். "எந்தக் கர்மாவுக்கு எப்போது, எந்த இடத்தில், என்ன பலன் ஏற்பட வேண்டும்; எவ்விதமான சூழ்நிலை அமைய வேண்டும்" - என்று, கர்மபலனுக்கு ஏற்பாடு செய்வதில், கர்மபலனைக் கொடுப்பதில் பகவத் க்ருபை நிமித்த காரணமாகிறது; அதாவது, இவையெல்லாம் பகவானின் விருப்பப்படி, பகவானுடைய திட்டப்படி நிகழ்கிறது; ஏனென்றால்,

கர்மா என்பது ஜடப்பொருள் ஆனதால், தானே கர்மபலனைக் கொடுக்க முடியாது. கர்மபலத் திட்டமும் ஜீவர்களின் கையில் இருந்தால், அவர்கள் நற்செயல்களின் பலனை மட்டுமே எடுத்துக் கொள்வார்கள்; தீயச்செயல்களின் பலனை எடுத்துக் கொள்வார்களா என்ன? உலகியலில் நாம் பார்க்கிறோம்: மனிதன், நற்செயல்களின் பலனைத் தானாகவே எடுத்துக் கொள்கிறான்; ஆனால், தீயச்செயல் [திருட்டு, கொள்ளை முதலியன]களின் பலனை [தண்டனையை] தானாகவே எடுத்துக் கொள்ளாததால், அவனுக்கு அரசு ஏற்பாட்டின் மூலம் தண்டனை கொடுக்கப்படுகிறது.

அன்னை, குழந்தைக்காக எத்தனை கஷ்டங்களை ஏற்கிறாள். அவனை கர்ப்பத்தில் தாங்குகிறாள்; பிறக்கும்போது பொறுக்க முடியாத வேதனையைப் பொறுத்துக் கொள்கிறாள்; தன்னுடைய பாலை ஊட்டுகிறாள்; மிகவும் ஆசை-அன்புடன் சீராட்டி வளர்க்கிறாள்; சாப்பிட-குடிக்க, எழுந்திருக்க-உட்கார, நடக்க-திரிய சொல்லிக் கொடுக்கிறாள். இவ்விதம் தாயிடம் பட்டிருக்கும் கடனை மகன் அடைக்கவே முடியாது. ஆகவே, மகன் தாயிடம் நன்றியுணர்வுடன் இருக்கவேண்டும். இவ்விதமே, கேட்காமலேயே மகனின் உண்டி-உறையுளுக்குத் தந்தை ஏற்பாடு செய்கிறார்; கல்வி கற்பித்து அறிவுள்ளவன் ஆக்குகிறார்; வாழ்க்கையை நடத்துவதற்குத் தொழில் கற்பிக்கிறார்; திருமணம் செய்விக்கிறார். இவ்விதம் தந்தையிடம் பட்டுள்ள கடனை அடைக்க முடியுமா என்ன? அதனால், தாய்-தந்தையரிடம் நன்றியோடு இருக்கவேண்டும்; அவர்கள் வாழ்கின்றபோது அவர்களுடைய ஆணைகளை நிறைவேற்ற வேண்டும்; அவர்களுக்கு ஸேவை செய்யவேண்டும்; அவர்களை மகிழ்ச்சியோடு வைத்திருக்க வேண்டும். அவர்கள்

மரணத்துக்குப்பின், அவர்களுக்குப் பிண்டம்-தண்ணீர் கொடுப்பது, சிராத்த-தர்ப்பணம் செய்வது முதலியன மகனின் தலையாய கடமையாகும்.

***வினா:* தாய்-தந்தையர், குழந்தைகளுக்கு அவர்களது குழந்தைப் பருவத்திலிருந்தே நற்போதனைகள் கொடுக்கவில்லை. அதனால் மகன்கள் தாய்-தந்தையருக்கு ஸேவை செய்யவில்லை என்றிருக்கும்போது மகன்கள் மேல் என்ன குற்றம்?**

விடை: தாய்-தந்தையர் நற்போதனை கொடுக்க வில்லை என்றால், அந்தக் குற்றம் அவர்களுடையது; ஏனென்றால், அவர்கள் தங்கள் கடமையைச் செய்யவில்லை. ஆனால், தாய்-தந்தையரின் குற்றத்தைப் பார்ப்பது, மகனின் கடமை அல்ல. அவன், தன்னுடைய கடமையைத்தான் பார்க்க வேண்டும். மற்றவர்களுடைய கடமையை மதிப்பிட்டுப் பார்ப்பதனால், மனிதன் தன்னுடைய கடமையிலிருந்து வழுவுகிறான். மற்றவர்களுடைய கடமையைப் பார்ப்பதே பயங்கரமான குற்றம். கீதையிலும்கூட தன்னைத் தானே உயர்த்திக் கொள்ளவேண்டும் என்றும், செப்பனிட்டுக் கொள்ள வேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது†. ஏனென்றால், நல்ல போதனைகள் கிடைத்தால், தானாகவே அதனை ஏற்று நடப்பான். நல்ல படிப்பினை கிடைத்திருந்தும்கூட அவன் அதனை ஏற்று நடக்காவிட்டால், கெட்டுப்போனால், அந்தக் குற்றம் சிறுவனுடையதே ஆகும். ஆகவே, தன்னுடைய முன்னேற்றமோ, வீழ்ச்சியோ பெரும்பாலும் தன்னையே சார்ந்திருக்கிறது.

---

† *உத்₃த₄ரேதா₃த்மனாத்மானம் நாத்மானமவஸாத₃யேத் ।*
ஆத்மைவ ஹ்யாத்மனோ ப₃ந்து₄ராத்மைவ ரிபுராத்மன: ॥
[கீ₃தா 6/5]

வினா: தாய்-தந்தையர் பிள்ளையிடம் கடுமையாக நடந்துகொண்டால், ஓர-வஞ்சனை செய்தால், அந்த மகன் என்ன செய்யவேண்டும்?

விடை: அந்தப் புதல்வன், தாய்-தந்தையரின் கடமையைப் பார்க்கக்கூடாது. அவன் தன்னுடைய கடமையையே கருத்தில் கொள்ளவேண்டும்; மிகுந்த ஊக்கத்துடன் சிறப்பான முறையில் தாய்-தந்தையருக்குப் பணிவிடை செய்தல் வேண்டும். ராமசரித மானஸத்தில், ஒவ்வொருவருக்காகவும் கூறப்பட்டிருக்கிறது- ***"மந்த$_3$ கரத ஜோ கரஇ ப$_4$லாயீ ॥" [5/41/7].***

தாய்-தந்தையர், புதல்வனுக்கு மரியாதை காட்டினால், அந்தப் புதல்வனின் ஸேவை[யின் பலன்] செலவாகிவிடுகிறது; விற்கப்பட்டுவிடுகிறது. ஆனால், அவர்கள் மரியாதை காட்டாமல் புதல்வனை எப்போதும் அவமதித்தால், புதல்வனின் ஸேவை நிறைவாகவே இருக்கும்; செலவு ஆகாது. அவர்கள் கஷ்டம் கொடுகிறார்கள் என்றால், அதனால் மகனுக்குத் தூய்மை ஏற்படுகிறது; பொறுத்துக் கொள்ளும் தன்மை வளர்கிறது; தவம் பெருகுகிறது; பெருமை கூடுகிறது. ஆதலால், தாய்-தந்தையர் கொடுக்கும் இன்னல்களை உயர்ந்த தவமாக எண்ணி முகமலர்ச்சியோடு பொறுத்துக் கொள்ளவேண்டும். "என்னிடம்தான், அப்பா-அம்மாவுக்கு எவ்வளவு கருணை! - என்னுடைய ஸேவையில் சிறிதளவுகூட செலவாகாமல், எனக்குத் தூய ஸேவை, தூய தவம் ஆகியவற்றின் முழுப்பயனும் கிடைத்துக் கொண்டிருக் கிறது. இத்தகைய வாய்ப்பு, ஏதாவதொரு பாக்யசாலிக்குத்தான் கிடைக்கும். அடடா! என்ன பேறு எனக்கு! என் ஸேவையைத் தாய்-தந்தையர் ஏற்றுக் கொள்கிறார்கள்!" என்று எண்ணவேண்டும். அவர்கள் ஸேவையை ஏற்காவிட்டாலும், அவர்களுக்கு ஸேவை

செய்வதே மகனின் வேலை. ஸேவைப் பணியில் ஏதாவது குறை, தவறு தெரிய வந்தால், அதை அப்போதே சீர்திருத்திவிட வேண்டும்; ஸேவையிலேயே முனைந்திருக்க வேண்டும்.

சொத்து, நிலம், வீடு முதலியவற்றை அடையும் எதிர்பார்ப்புடன் அப்பா-அம்மாவுக்கு ஸேவை செய்யும் மகன், உண்மையில் சொத்து முதலியவை களுக்குத்தான் ஸேவை செய்கிறான்; அப்பா-அம்மாவுக்கு அல்ல. மகன் ஸேவையோடு மட்டுமே உறவு கொண்டிருக்க வேண்டும். [சொத்து முதலியவற்றோடு அல்ல.] "உங்களிடம் உள்ள சொத்து-பத்துகளை, உங்கள் மனசுப்படி என் ஸஹோதரனுக்கோ, ஸஹோதரிக்கோ அல்லது விருப்பமுள்ள வேறு யாருக்கோ கொடுத்துக் கொள்ளுங்கள்; ஆனால் என்னுடைய ஸேவையை ஏற்றுக் கொள்ளுங்கள்" என்று அவன் தாய்-தந்தையரிடம் கூறிவிட வேண்டும். தாய்-தந்தையர் நம்முடைய ஸேவையை ஏற்கிறார்கள் என்பதே அவர்களுடைய கருணைதான்.

வினா: முறையற்ற, மட்டமான வேலையைச் செய்யும்படி தாய்-தந்தையர் ஆணையிட்டால், மகன் என்ன செய்யவேண்டும்?

விடை: முறையற்ற ஆணை இருவிதமாக இருக்கலாம். [1] "இன்னாரைக் கொன்றுவிடு" என்பது போன்று, பிறருக்குத் தீமை பயக்கும் செயலைச் செய்யும்படியான ஆணையிடுதல்; [2] "நீ வீட்டை விட்டு, காட்டுக்குப் போ" போன்ற ஆணையிடுதல். இவற்றில், இரண்டாவது ஆணையை ஏற்று நடக்கத்தான் வேண்டும்; ஆனால் முதலாவது ஆணையை ஏற்க வேண்டாம். இதில்தான் தந்தையின் சக்தியைப் பார்க்க வேண்டும். தந்தைக்கு ஆற்றல் இருக்குமேயானால், அவருடைய ஆணையை ஏற்று

நடப்பதில் தடையேதும் இல்லை. ஜமதக்னி முனிவர், தன்னுடைய குமாரன் . பரசுராமரிடம் சொன்னார்- "உன்னுடைய தாய் நடத்தை கெட்டவள்; உன்னுடைய ஸஹோதரர்கள் நான் சொல்லியபடி செய்யவில்லை; ஆகவே இவர்களைக் கொன்றுவிடு." உடனே, பரசுராமர் அவர்களுடைய கழுத்தை வெட்டினார். ஜமதக்னி மகிழ்ச்சியடைந்து, "நீ ஏதாகிலும் வரம் கேள்" என்றார். "அம்மாவும், ஸஹோதரர்களும் உயிர்பெற்று எழவேண்டும்; என்னால் கொல்லப்பட்ட விஷயமும் நினைவில் இருக்கக்கூடாது" என்று பரசுராமர் கேட்டார். ஜமதக்னி, "அப்படியே ஆகுக" என்றார். எல்லோரும் உயிர்பெற்றார்கள்.

தந்தைக்கு ஆற்றல் இல்லை; ஆனால் அவர் முறையற்ற ஆணையிடுகிறார் என்றால், மகன் அதை மதித்து நடக்க வேண்டாம். காரணம் அந்த முறையற்ற ஆணையை மகன் நிறைவேற்றினால், தந்தைக்கு நரகம்தான் கிடைக்கும். எந்த ஆணையை நிறைவேற்றுவதால் தந்தைக்கு நரகம் கிடைக்குமோ, துக்கம் அடைய நேரிடுமோ, அந்த ஆணையை நிறைவேற்றக் கூடாது. நான் "நரகத்துக்குப் போனாலும் பரவாயில்லை; அப்பா நரகத்துக்குப் போகக் கூடாது" என்ற பாவனை இருந்தால், மகனுக்கும் நரகம் கிடைக்காது; அப்பாவுக்கும் கிடைக்காது. தாத்பர்யம் என்னவென்றால், நரகத்திலிருந்து தந்தையைக் காப்பாற்றுவதற்காக, அவருடைய ஆணையை உடைத்தெறிந்தாலும் பாதகமில்லை, முறையற்ற கார்யத்தை ஒருபோதும் செய்யக்கூடாது.

தந்தைக்கு ஆற்றல் இல்லை; ஆனால், அவர் முறையற்ற ஆணையிடுகிறார்; வாழ்நாளில் தாய்-தந்தையரின் எந்த ஒரு ஆணையையும் மீறி மகன் நடந்ததில்லையென்றால், அவசரக்குடுக்கைத்தனமாக,

முறையற்ற அந்த ஆணையை நிறைவேற்றிவிடாமல், அதனைப் பற்றி சிந்திக்க வேண்டும்; பகவானை நினைக்க வேண்டும். "உன்னுடைய தாய் நடத்தை கெட்டவள்; அவளைக் கொன்றுவிடு" என்று கௌதமர், தன்னுடைய மகன் சிரகாரியிடம் சொன்னார். இப்படிச் சொல்லிவிட்டுக் காட்டுக்குப் போய்விட்டார். சிரகாரி கத்தியை எடுத்துக் கொண்டு, தந்தையின் ஆணையைப் பற்றி ஆலோசித்தார். அங்கே கௌதமருடைய மனத்தில், "அவளை ஏன் கொல்ல வேண்டும்? அவளை த்யாகம் செய்துவிடலாமே?" என்ற எண்ணம் ஏற்பட்டது. இப்படி சிந்தனை செய்து அவர் திரும்பி வந்தார்; கையில் கத்தியுடன் சிரகாரி நிற்பதைப் பார்த்தார். "அம்மாவைக் கொல்லாதே" என்று சொல்லி, அவர் சிரகாரியைத் தடுத்துவிட்டார்.

வினா: ***கோஸ்வாமி துளஸீதாஸர் சொல்லி இருக்கிறார்-***

ஜாகே ப்ரிய ந ராம-பை$_3$தே$_3$ஹீ ।
தஜியே தாஹி கோடி பை$_3$ரீ ஸம,
ஜத்$_3$யபி பரம ஸநேஹீ ॥
தஜ்யோ பிதா ப்ரஹ்லாத$_3$, பி$_3$பீ$_4$ஷன ப$_3$ந்து$_4$,
ப$_4$ரத மஹதாரீ ।
ப$_3$லி கு$_3$ரு தஜ்யோ, கந்த ப்$_3$ரஜ-ப$_3$னிதந்ஹி,
ப$_4$யே முத$_3$-மங்க$_3$லகாரீ ॥

"பிரஹலாதன் தந்தையையும், விபீஷணன் ஸஹோதரனையும், பரதன் தாயையும், பலி குருவையும், கோபியர்கள் கணவன்மார்களையும் த்யாகம் செய்தார்களே, அவர்களுக்குப் பாபம் ஏற்படவில்லையா?"

விடை: அவர்கள் தந்தை முதலியவர்களை, எந்த விஷயத்துக்காக, எந்த அளவுக்கு த்யாகம் செய்தார்கள் என்பதை இங்கே எண்ணிப் பார்க்கவேண்டும். ஹிரண்யகசிபு, பிரஹலாதனுக்கு அநேக கஷ்டங்கள்

கொடுத்தார்; ஆனால் பிரஹலாதன் அவைகளையெல்லாம் மகிழ்ச்சியோடு பொறுத்துக் கொண்டார். "இந்த ஶரீரம் தந்தையிடமிருந்து கிடைத்தது; அவர் விருப்பப்படி இதை வைத்துக் கொள்வதற்கு அவருக்கு உரிமை இருக்கிறது" என்ற விஷயத்தை உணர்ந்து மதித்தார். அதனால் "எனக்கு, நீங்கள் ஏன் கஷ்டங்களைக் கொடுக்கிறீர்கள்?" என்று, ஒருபோதும் தகப்பனாரைக் கேட்டதில்லை. "ஆனால் நான், ஸாக்ஷாத் பரமாத்மாவின் அம்ஶம்; அதனால் நான் பகவானுக்கு ஸேவை செய்வதில், வழிபாட்டில் ஈடுபட்டிருக்கிறேன். தகப்பனார் இதில் குறுக்கிடுகிறார்; என்னைத் தடுக்கிறார். இது முறையல்ல." ஆகவே, தகப்பனாருக்கு நரகத்தைக் கொடுக்கக்கூடிய அந்த ஆணையைப் பிரஹலாதன் கைவிட்டு விட்டார். தந்தையின் ஆணையை ஏற்று, பகவத் பக்தியைத் துறந்திருந்தால், அதற்கான தண்டனையைத் தகப்பனார் அனுபவிக்க நேர்ந்திருக்கும். தகப்பனார் தண்டனையை அனுபவிக்க நேரும்படியான எந்தச் செயலையும் மகன் செய்யக்கூடாது. இந்த நோக்கில்தான், தந்தையின் ஆணையை மதிக்காததன் மூலம் தந்தைக்கு நன்மையே செய்தார்; தந்தையைத் துறந்துவிடவில்லை.

ராவணன், விபீஷணனைத் துச்சமாக எண்ணி, "நீ இங்கிருந்து போய்விடு" என்று சொன்னதும் ஶ்ரீராமரிடம் போய்ச் சேர்ந்தார். ஆகவே விபீஷணன் ஸஹோதரனைத் துறந்துவிடவில்லை. மாறாக, அவனுடைய அநியாயத்தைத் துறந்தார்; அநியாயத்தை நியாயப்படுத்தவில்லை; ஆதரவு காட்டவில்லை. விபீஷணன் இராவணனுக்கு அவனுடைய நன்மைக்கான விஷயத்தையே சொன்னார்; அவனுக்கு நன்மையே செய்தார்.

தாயார், ஸ்ரீராமனைக் காட்டுக்கு அனுப்பி வைத்தார்; துன்பம் கொடுத்தார் - இதனால்தான் பரதன் தாயாரைத் துறந்தான். எப்படி கௌஸல்யா அம்மா, ராமனைக்காட்டிலும் அதிக அன்பை என்னிடம் காட்டுகிறாரோ, அப்படியே நீயும், என்னிடம் உள்ளதைக்காட்டிலும் அதிக அன்பை ராமனிடம் காட்டியிருக்க வேண்டும். ஆனால், ஸ்ரீராமனை நீ காட்டிற்கு அனுப்பிவிட்டாய். ஸ்ரீராமனுக்கு அம்மாவாக இல்லாமற்போய்விட்ட பிறகு, நீ எனக்கு மட்டும் அம்மாவாக எப்படி இருக்கமுடியும்? இதற்காக உனக்குத் தண்டனை கொடுப்பது எனக்கு முறையல்ல. "நான் உன்னை அம்மா என்று சொல்ல மாட்டேன்" என்பதை என்னால் செய்ய முடியும்; என்னதான் செய்ய!

"ஸாக்ஷாத் பகவான், பிராமண உருவில் வந்து என்னிடம் பிச்சை கேட்கிறான்; ஆனால், ஆசார்யர், நான் தானம் கொடுப்பதிலிருந்து என்னைத் தடுத்துக் கொண்டிருக்கிறார்; ஆகவே நான் ஆசார்யனின் வார்த்தையை மதிக்கமாட்டேன்" என்ற வகையில்தான் பலி, குருவைத் துறந்தார். பலி, குருவின் ஆணையை ஏற்காததுகூட, குருவின் நன்மைக்காகவே தான். தானம் கொடுப்பதற்குப் பலி தயாராகவே இருந்தார். அந்தச் சமயத்தில், அவர் குருவின் வார்த்தைக்கு மதிப்புக் கொடுத்திருந்தால், அந்த வார்த்தையின் விளைவான பாபம் குருவையே அடைந்திருக்கும். அதனால் அவர் குருவின் சாபத்தை ஏற்றுக் கொண்டார்; அந்தக் குற்றத்திலிருந்து, தீங்கிலிருந்து குருவைக் காப்பாற்றிவிட்டார். தானே தண்டனையை அனுபவித்தார்; ஆனால் தண்டனையிலிருந்து குருவைத் தப்ப வைத்தார்! - என்றால், இது குருஸேவை அல்லவா!

பகவானைக் கண்களால் பார்க்கவிடாமல் கணவன்மார்கள் தடுத்துக் கொண்டிருந்தார்கள். இதனாலேயே, கோபியர்கள் கணவன்மார்களைத் துறந்தார்கள். அவர்கள் கணவன்மார்களின் சொற்படி நடந்திருந்தால், கணவன்மார்கள் பாபத்தின் பங்காளி களாகியிருப்பார்கள். ஆகவே கணவர்களின் சொல்லை மதிக்காததால், அவர்கள் கணவன் மார்களைப் பாபத்திலிருந்தே காப்பாற்றினார்கள்.

கருத்து என்னவென்றால், மனித ஶரீரத்தைப் பயனுள்ளதாக்குவது என்பது, பரமாத்மாவை அடைவதிலேயே இருக்கிறது. ஆகவே அந்த முயற்சியில் உதவியாளனாக இருப்பவன் நமக்கு உகந்ததைச் செய்கிறான்; அதில் தடை போடுகிறவன் நமக்குத் தீங்கைச் செய்கிறான். பிரஹலாதன் முதலிய எல்லோரும் பரமாத்மாவை அடைவதில் இடைஞ்சல் ஏற்படுத்தியவர்களை துறந்தார்கள், தந்தை முதலியவர் களை அல்ல. ஆகவே அவர்களுக்கு மேன்மேலும் நலன் உண்டாயிற்று.

வினா: தாயின் நிலை உயர்ந்ததா? அல்லது தந்தையின் நிலையா? மேலும், உயர்நிலைக்குக் காரணம் என்ன?

விடை: உயர்நிலை அம்மாவுக்குத்தான். தாயின் மதிப்பு, தந்தையுடையதைக் காட்டிலும் நூறு மடங்கு அதிகம் என்று சொல்லப்பட்டிருக்கிறது- ***"ஸஹஸ்ரம் து பித்ரூந்மாதா கௌரவேணாதிரிச்யதே" [மனுஸ்ம்ருதி 2/145].*** ஶ்ரீராமன் வனவாஸத்திற்காகப் புறப்பட்ட போது, அவர் அன்னையிடம் சென்று, பாதங்களில் வணங்கிக் கூறினார்- "அம்மா! வனவாஸத்துக்குப் போகும்படி எனக்கு ஆணையிடப்பட்டுள்ளது." "இது தந்தையுடைய கட்டளையே என்பதால் அம்மாவை உயர்வாக மதித்து நீ காட்டுக்குப் போகாதே" என்று, தாய் சொன்னார்-

जौं केवल पितु आयसु ताता ।
तौ जनि जाहु जानि बड़ि माता ॥ (मानस, अयोध्या॰ ५६ । १)

ஆனால் உனது சிற்றன்னையும், தந்தையுமாகச் சேர்ந்து, காட்டுக்குப் போகும்படி சொல்லியிருந்தால்,† காடு, உன்னைப் பொறுத்தவரையில் நூறு அயோத்திகளுக்கு ஸமமாகும்.

ஜௌ பிது மாது கஹேஉ ப₃ன ஜானா।
தௌ கானன ஸத அவத₄ ஸமானா ॥
[மானஸம். அயோத்₄யா₀ 56/2]

சொத்து-செல்வம் முதலியவைகளால், தந்தை மகனைப் போஷிக்கிறார்; ஆனால் அன்னை தன் ஶரீரத்தையே கொடுத்து மகனைப் போஷிக்கிறார். சொத்து-செல்வம் என்பது மமதையைக் குறிப்பிடும் பொருள்; ஶரீரம் என்பது "நானை"க் குறிப்பது. "என்னுடைய"தைக் காட்டிலும் "நான்" அருகில் இருக்கிறது. "என்னுடையது" என்று சொல்லப்படும் பொருட்கள் வந்து, போகும் தன்மையுடையவை; ஶரீரம் வேறெதையும் எதிர்பாராமல் நிலைத்திருப்பது. ஆகவே அன்னையின் நிலை உயர்ந்ததாகவே இருக்கும்.

தாய், தன்னுடைய கன்னிப்பருவத்தைப் பாழாக்கிவிட்டார். தன்னுடைய ஶரீரத்தைக் கொடுத்து, தன்னுடைய பாலை ஊட்டிப் போஷித்திருக்கிறார். தாதியாக, நாவிதனாக, வண்ணானாக, தையற்காரனாக, ஆசானாக அம்மா

---

† தன்னிலும் அதிகமான அன்பு சிற்றன்னையிடம் காட்டவேண்டும் என்ற கௌஸல்யாதேவியின் அறிவுரை, அவருடைய பரந்த உள்ளத்தைக் காட்டுகிறது. குடும்பத்தில் ஒவ்வொருவருக்குமிடையே உள்ள அன்பு கட்டுக்குலையாமல் இருக்கவேண்டும் என்பதற்காக தாயிடம் காட்டுவதைவிட அதிக அன்பு, பிற அன்னையரிடம் காட்டவேண்டும் என்று, கௌஸல்யாதேவி எல்லோருக்கும் பாடம் புகட்டியிருக்கிறார்.

செயல்பட்டிருக்கிறார். அவ்வளவுக்குப் போவானேன், மலமூத்திரம் கழுவித் தோட்டி வேலைகூடச் செய்திருக்கிறார். அந்த வேலைகளையும் ஏதோ சுமையாகக் கருதிச் செய்யவில்லை; மாறாக, மிகவும் பாசத்துடன், "என்னுடையது" என்ற உரிமை உணர்வுடன், ஆர்வத்துடன் செய்திருக்கிறார் என்பது மட்டுமல்ல; பதில் உதவி பெறவேண்டும் என்ற எண்ணமும் இருந்ததில்லை. குழந்தை நோயாகப் படுத்தால், அம்மாவின் உடல்பலம் குறைகிறது. ஆகவே உலகத்தில் அன்னைக்கு ஈடாகக் குழந்தையைப் பராமரிக்கக்கூடியவர் வேறு யார்? ***"மாத்ரா ஸமம் நாஸ்தி ஶரீரபோஷணம் ।"*** ஆகவேதான், அம்மாவின் நிலை உயர்ந்தது. மகன் ஸாது-ஸந்யாஸியான பின், அன்னையைக் காண நேர்ந்தால், அவர் அன்னை எதிரே, நிலந்தோய வணங்குதல் வேண்டும் என்று அறநூல்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வளவு உயர்ந்த நிலை வேறு யாருக்கு ஏற்பட முடியும்!

வினா: தாய்-தந்தையருக்கு ஸேவை செய்வதால், என்ன லாபம்?

விடை: தாய்-தந்தையருக்கு ஸேவை செய்வதால் இஹலோக-பரலோக வாழ்க்கை செம்மைப்படுகிறது; பகவான் மகிழ்ச்சி அடைகிறார். தாய்-தந்தையருக்கு ஸேவை செய்யாதவனிடம் பகவான் நம்பிக்கை வைப்பதில்லை - "அப்பா-அம்மாவுக்குப் பணிவிடை, பக்தி பண்ணாத இவன், என்னிடமா பக்தி செலுத்தப் போகிறான்!"

புண்டரீகன், உடலாலும், உள்ளத்தாலும், ஆழ்ந்த ஈடுபாட்டுடனும் தாய்-தந்தையருக்கு ஸேவை செய்தார். அவருடைய ஸேவையால் மகிழ்ந்த பகவான், அழைப்பு இல்லாமலே புண்டரீகன் வீட்டுக்கு வந்து சொன்னார்- "புண்டரீகனே! நீ உன் அப்பா-அம்மாவிடம் காட்டும்

பக்தியினால் மனம் மகிழ்ந்து, நானாகவே உனக்குத் தர்சனம் கொடுப்பதற்காக நானே உன்னிடம் வந்திருக்கிறேன்." அந்தச் சமயத்தில் புண்டரீகன், தாய்-தந்தையரின் பணிவிடையில் ஆழ்ந்திருந்தார். அதனால், அவர் பகவானிடம் சொன்னார்- "தாய்-தந்தையருக்குச் செய்யும் எந்த ஸேவை காரணமாகத் தாங்கள் இங்கே எனக்குத் தர்சனம் கொடுப்பதற்காக வந்திருக்கிறீர்களோ, அந்த ஸேவையை நான் எப்படி விடுவேன்? இப்போது நான் தாய்-தந்தையருக்குப் பணிவிடை செய்து கொண்டிருக்கிறேன்; அது முடிந்த பின்னர்தான், நான் தங்களைத் தர்சனம் செய்ய முடியும். அதுவரை நீங்கள் காத்திருக்க விரும்பினால், இந்தச் செங்கற்களின் மேல் நின்று கொள்ளுங்கள்." இப்படிச் சொல்லிக் கொண்டே புண்டரீகன், இரண்டு செங்கற்களை முதுகுக்குப் பின்னால் விட்டெறிந்தார். பகவான் அவற்றின் மேல் நின்று கொண்டார். செங்கற்களின்மேல் நின்ற காரணத்தால், பகவானின் பெயர் "விட்டல்" என்றாயிற்று. பகவானுடைய இந்தக் காக்ஷியைக் காண விரும்பினால், [மஹாராஷ்ட்ரத்திலுள்ள] பண்டரீபுரம் சென்று காணலாம். இதுபோலவே, மஹாபாரதத்தில், ஊமைச் சண்டாளியின் கதை வருகிறது. ஊமைச் சண்டாளிக்கு அப்பா-அம்மாவிடமிருந்த பக்தியைப் பார்த்து, பகவானே அவள் வீட்டில் வசித்து வந்தார்! கருத்து என்னவென்றால், தாய்-தந்தையருக்குச் செய்யப்படும் ஸேவையால், மண்ணுலகத்திலும், மேலுலகத்திலும் எல்லாவிதமான நன்மைகளும் உண்டாகின்றன.

வினா: தாய்-தந்தையருக்கு ஆற்றும் ஸேவைக்கு இவ்வளவு பெருமை இருக்கும்போது, அவர்கள்

ஸேவையை விட்டுவிட்டு மனிதர்கள் ஏன் ஸாது-ஸந்யாஸியாகப் போகிறார்கள்?

விடை: ஒருவன் இறந்துவிடுகிறான் என்றால், அவன் தாய்-தந்தையருக்குச் செய்யவேண்டிய பணிவிடைகளை விட்டுவிட்டுத் தான் இறக்கிறான்; அதனால் அவனுக்குப் பாபம் ஏற்படுவதில்லை. அப்படியே யாருக்கு உலகத்திலிருந்து உண்மை யான வைராக்யம் ஏற்படுகிறதோ, அவனுக்குப் பாபம் உண்டாவதில்லை. இவ்விதமே எவன் எவ்வகை யிலும் பகவானையே புகலடைந்து விடுகிறானோ, அவனுக்கும் எவ்வித பாபமும் உண்டாவதில்லை; ஏனென்றால் யாரிடமும் பட்ட கடன் பாக்கி அவனுக்குக் கிடையாது.

தே₃வர்ஷிபூ₄தாப்தந்ருணாம் பித்ரூணாம்
ந கிங்கரோ நாயம்ருணீ ச ராஜன் ।
ஸர்வாத்மனா ய: ஶரணம் ஶரண்யம்
க₃தோ முகுந்த₃ம் பரிஹ்ருத்ய கர்தம் ॥

[ஶ்ரீமத்₃பா₄க₃வதம் 11/5/41]

"அரசே! எவனொருவன் எல்லா விருப்பங்களையும் விட்டு, புகலடைந்தவர்களிடம் அன்பு கொண்டவனான பகவானின் திருப்பாதங்களை முழுமையாகச் சென்று அடைகிறானோ, அவன் தேவர், முனிவர், பிராணிகள், குடும்பம் நடத்துவோர், பிதிரர் கூட்டம் - இவைகளில் எவருக்கும் கடன்பட்டவனாகவோ, ஏவலாளனாகவோ இருக்க மாட்டான்."

கருத்து என்னவென்றால், எவன் மனிதப்பிறவியின் உண்மையான லக்ஷியப் பொருளான பகவானிடம் ஈடுபடுகிறானோ, அவன் தாய்-தந்தையரின் ஸேவை, குடும்பம் ஆகியவற்றைத் துறந்தாலும் அவனைப் பாபம் ஒட்டுவதில்லை.

***வினா:* இரண்டு-மூன்று பையன்கள் இருந்து, அவர்களில் ஒருவன் ஸாது-ஸந்யாஸியாகப் போய் விட்டால், அது ஒன்றும் பெரிய விஷயமல்ல. ஆனால், ஒருவருக்கு ஒரே பையன்தான் இருக்கிறான்; அவனும் ஸாது-ஸந்யாஸியாகப் போனால், அவனுடைய தாய்-தந்தையர் யாரை அண்டிப் பிழைப்பார்கள்?**

விடை: தாய்-தந்தையர் இருக்கும்வரையில் அந்தப் பையன், அவர்களுக்கு ஸேவை செய்து கொண்டிருக்க வேண்டும்; அவர்களை விட்டுவிடக் கூடாது. ஏனென்றால் பகவத் ப்ராப்திக்கு ஸாதுவாகப் போவது ஒரு காரணமல்ல; மாறாக உலக வாழ்விலிருந்து வைராக்யமும், பகவானிடம் ப்ரேமையும்தான் காரணம். ஆதலால் அவன் தாய்-தந்தையருக்கு ஸேவை செய்து கொண்டே வழிபாடு-த்யானங்களைச் செய்தால், அவனுக்கு பகவத் ப்ராப்தியில் எவ்வித இடையூறும் ஏற்படாது; மாறாக தாய்-தந்தையரின் மகிழ்ச்சியினால் பகவத் ப்ராப்தியில் உதவிதான் கிடைக்கும். கருத்து என்னவென்றால், தாய்-தந்தையரிடம் பட்டுள்ள கடனை அடைக்காமல், அவர்களைத் துறக்கலாகாது. ஆனால் தீவிர வைராக்யம் ஏற்பட்டு, பகவானின் திருவடிகளில் தனித்த அன்பு ஏற்பட்டு, அந்த நிலையில் தாய்-தந்தையரின் ஸேவை விடப்பட்டால், அவனுக்குப் பாபம் உண்டாகாது.

வீட்டில் உட்கார்ந்து கொண்டு, அப்பா-அம்மாவுக்கு ஸேவை செய்யாமல், தன்னுடைய மனைவி-மக்களை வளர்ப்பதில் மட்டுமே குறியாக இருக்கிறானோ, அவனைப் பாபம் ஒட்டவே செய்யும். அப்படியே எவன் அப்பா-அம்மாவையும், வீடு-மக்களையும் விட்டுச் சென்று ஸாதுவாகி, குடில்-ஆஶ்ரமம் ஏற்படுத்திக் கொண்டு, ரூபாய் சேர்த்துக் கொண்டு, சிஷ்யன்-சிஷ்யை சேர்த்துக் கொண்டு,

ஸுக-ஸௌக்யத்தோடு இருக்கிறானோ, அவனை அப்பா-அம்மாவுக்குப் பணிவிடை செய்யாத பாபம் ஒட்டிக் கொள்ளத்தான் செய்யும்.

வினா: ஒருவன் ஸாது-ஸந்யாஸியாகி ரூபாய் சேர்க்கிறான்; தாய்-தந்தையர், மனைவி-மக்களுக்குப் பணம் அனுப்புகிறான்; அவர்களை வளர்த்துப் பராமரிக்கிறான் என்றால், அவனுக்குப் பாபம் ஏற்படுமா?

விடை: ஸாது-ஸந்யாஸியானபின்னர், அப்பா-அம்மா முதலியோருக்குப் பணம் அனுப்புகிறவர்கள், பாபத்தில் பங்கேற்பவர்களே. அத்துடன் அவரால் கொடுக்கப்படும் பணத்தைக் கொண்டு தங்கள் வாழ்க்கையை நடத்துகிறவர்களும் பாபத்தில் பங்கு கொள்கிறார்கள். ஏனென்றால் அவ்விருவருமே அறநூல் ஆணைக்கு எதிரான கார்யம் செய்கிறார்கள். அவர்கள் குடும்ப வாழ்வில் இருந்து கொண்டேயல்லவா, தாய்-தந்தையருக்கு ஸேவை செய்யவேண்டும்? ஆனால் அவர்கள் ஶாஸ்த்ர விரோதமான கார்யம் செய்து ஸந்யாஸ ஆஶ்ரமத்தையே மாசுபடுத்துகின்றனர் என்பதால், அவர்களுக்குப் பாபம் ஏற்படவே செய்யும். அவர்கள் பாபத்திலிருந்து தப்ப முடியாது.

வினா: வீட்டில் தாயாரைப் பராமரிப்பதற்கு, கண்காணிப்பதற்கு வேறு யாரும் இல்லாத நிலையில், ஸாது-ஸந்யாஸியாகிவிட்ட பையன், அம்மாவைப் பராமரிக்கலாமா, கூடாதா?

விடை: அம்மாவுக்கு வேறு ஒரு ஆதாரமும் இல்லாவிட்டால், ஸாது ஆகிவிட்டாலும்கூட, அவன் அம்மாவைப் பராமரிக்க வேண்டும்; பராமரிக்கத்தான் வேண்டும். நாதியற்ற நிலையில் பிற பிராணிகளுக்குக்கூட ஸேவை செய்யவேண்டும் என்னும்போது, ஶரீரத்தைக் கொடுத்த தாயைப் பற்றிச்

சொல்லவா வேண்டும்? அவர் நாதியற்று இருந்தால், அவருக்கு ஸேவை செய்வதில் எவ்விதக் குற்றமும் இல்லை.

***வினா:* மகள், கணவன் வீட்டுக்குப் போய்விடுகிறாள். அப்புறம் அவள் அப்பா-அம்மாவுக்கு எப்படி ஸேவை செய்ய முடியும்? ஸேவை செய்யாவிட்டால், அப்பா-அம்மாவிடம் பட்டுள்ள கடன் சுமை எப்படி நீங்கும்?**

விடை: ஒருவருக்கு அவர் மனமார விரும்பியும்கூட அடைக்க முடியாத அளவுக்குக் கடன் ஏறிவிட்டது என்றால், அவர் கடன் கொடுத்தவரிடம் சென்று, "நான், என் மனைவி-மக்கள், வீடு, நிலம் ஆகிய எல்லாவற்றையும் தங்களுக்கு ஸமர்ப்பிக்கிறேன்; இப்போது நீங்கள் இவைகளை உங்கள் விருப்பம்போல் பயன்படுத்திக் கொள்ளலாம்" என்று சொல்ல வேண்டும். இப்படிச் சொல்வதால் அவன்மேல் கடன் சுமை நிற்பதில்லை; நீங்கிவிடுகிறது. இவ்விதமே மகள், குழந்தைப் பருவத்திலிருந்தே தாய்-தந்தையருக்கு அர்ப்பணமாகி இருக்கிறாள். அவள் தன் மனத்தில் எதையும் வைத்துக் கொள்வதில்லை. தாய்-தந்தையர், எங்கே அவளைத் திருமணம் செய்து கொடுக்கிறார்களோ, அவள் மகிழ்ச்சியோடு அங்கேதான் செல்கிறாள். அவள், தன் கோத்திரத்தையும் கணவனின் கோத்திரத்தோடு இணைத்துவிடுகிறாள். இவ்வளவு பெரிய த்யாகம் செய்திருக்கிற அவள்மேல் கடன் எப்படி இருக்க முடியும்? இருக்கவே முடியாது.

***வினா:* அப்பா-அம்மாவுக்கு ஆதரவு யாரும் இல்லை என்ற நிலையில், திருமணமாகியுள்ள மகள், அப்பா-அம்மாவைப் பராமரிக்கலாமா, கூடாதா?**

விடை: துணையற்ற அப்பா-அம்மாவுக்கு அவள் ஸேவை செய்யலாம். திருமணமான மகளுக்குக்

குழந்தை இருந்தால், அப்பா-அம்மா, அவளுடைய வீட்டில் சோறு-நீர் ஏற்கலாம்; அவளுடைய வீட்டில் வசிக்கலாம். ஆனால் அவளுக்குக் குழந்தை-குட்டி இல்லையென்றால், அவள் வீட்டில் சோறு-நீர் ஏற்க, அப்பா-அம்மாவுக்கு உரிமை இல்லை.

தாய்-தந்தையர், கன்னிகையைத் தானம் செய்து கொடுத்திருக்கிறார்கள் என்பதால், அவர்கள் அந்த வீட்டில் உணவு ஏற்கலாகாது; ஏனென்றால் தானம் கொடுத்தவருக்கு, தானம் கொடுக்கப்பட்ட பொருளின்மீது உரிமை கிடையாது. ஆனால், பெண்ணுக்குக் குழந்தை பிறந்துவிட்டால், தாய்-தந்தையர் பெண்ணின் வீட்டில் உணவு கொள்ளலாம். காரணம் என்னவென்றால், மகளின் கணவன் [மாப்பிள்ளை], தன்னுடைய பிதிர்க்கடனிலிருந்து விடுதலை பெறவே வேறொருவர் பெண்ணை ஏற்றுக் கொண்டார்; அவள் மூலம் குழந்தை உண்டானதும், அவர் பிதிர்க்கடனிலிருந்து விடுதலை பெறுகிறார். ஆகவே குழந்தை பிறந்ததும், தாய்-தந்தையருக்கு மகளிடம் உரிமை ஏற்பட்டு விடுகிறது. அதே கோத்திரத்தைச் சேர்ந்தவனாக இல்லாவிட்டாலும், பெண் வயிற்றுப்பேரன், தன்னுடைய தாய்வழிப் பாட்டனார்-பாட்டிக்கு சிராத்த-தர்ப்பணம் செய்ய முடியும்.

தாய்-தந்தைக்குத் துணை இல்லாத நிலையில், அவர்களுக்கு ஸேவை செய்வதற்கு யாருமில்லாத போது, அவர்களுக்கு ஸேவை செய்யும் பொறுப்பு மகளின் மேல்தான் இருக்கிறது. ஆகவே தனக்குக் குழந்தை உண்டாகாவிட்டாலும், திருமணமான பெண், அவர்களுக்கு ஸேவை செய்யத்தான் வேண்டும். மற்றொரு விஷயம்: இப்போதுள்ள சட்டத்தில் தந்தையின் சொத்துக்களில் மகனுக்கும், மகளுக்கும் ஸமமான உரிமை இருப்பது

ஏற்கப்பட்டுள்ளது. ஆகவே இன்றைய சட்ட நோக்கில் பார்த்தாலும், எப்பொழுது மகளுக்குச் செல்வத்தைக் கொடுக்கும் உரிமை ஏற்பட்டுவிட்டதோ, அதேபோல் அவளிடமிருந்து ஸேவையை ஏற்றுக் கொள்ளும் உரிமையும் தாய்-தந்தையருக்கு உண்டுதானே!

5. மகளிர் ஸம்பந்தமான விஷயங்கள்

வினா: கன்னிப் பெண்கள் சுயம்வரம் மூலமாகக் கணவனைத் தேர்ந்தெடுக்கலாமா?

விடை: அறநூல்களில் சுயம்வரம் பற்றிய குறிப்பு வருகிறது. ஆனால் தாமே தம் கணவனைத் தேர்ந்தெடுத்துக் கொண்டவர்கள் துன்பத்தையே அனுபவித்திருக்கிறார்கள். ஸீதை, த்ரௌபதி, தமயந்தி முதலியோர் சுயம்வரத்தின் மூலம் கணவனை அடைந்தார்கள் என்றாலும், அநேகமாக துன்பமே அடைந்தார்கள். இப்போதெல்லாம் தம் கணவனைத் தானே தெரிந்து ஏற்றுக் கொள்ளும் பெண்கள், தங்கள் மனம்போல மணந்து கொள்கிறவர்கள், என்ன ஸுகத்தைக் காண்கிறார்கள்? துயரத்தின் மேல் துயரம் அடைகிறார்கள்; அமைதியில்லாமலே இருக்கிறார்கள்.

தன் கணவனைத் தானே தேர்வு செய்து கொள்ளும் பெண் விஷயத்தில், அதன் பொறுப்பு அவள் பேரிலேயே விழுகிறது. பெண்ணின் நலனை நாடுபவர் தந்தை. அப்படி நலனை விரும்புவராக இருப்பதால்தான் மணமகனைத் தேடி அலைகிறார்; தேடித் தொடர்பு கொள்கிறார். அதனால், இந்த உறவின் முழுப் பொறுப்பும் தந்தையிடமே உள்ளது; பெண்ணிடம் அல்ல. தந்தை மூலமாகக் கணவனைப் பெறும் பெண், ஏதோ ஒரு தவறு செய்தால், அது மன்னிக்கப்படும். ஆனால் தானே கணவனைத் தேடிக் கொண்ட பெண் தவறிழைத்தால், அது

மன்னிக்கப்படமாட்டாது. தாய்-தந்தையருக்கு செய்யும் பணிவிடைகளில் மகன் சிறிது குறை வைத்தாலும், அது ஒரு பெரிய குற்றமாகாது. ஏனென்றால் மகன் அவர்களிடமிருந்தே தோன்றியவன்; தானாக விரும்பிப்பெற்ற உறவல்ல. ஆனால் தத்துப்போன பிள்ளை தவறிழைத்தால், அதற்கான தண்டனையை அனுபவிக்கவே நேரும். ஏனென்றால் அவன் அறிவு பூர்வமாக உணர்ந்து சேர்த்துக் கொள்ளப்பட்டவன். ஒரு வீட்டில் வேலை செய்கிற வேலைக்காரன், வேலையில் பிழை செய்தால் அவனுக்கு மன்னிப்புக் கிடையாது. ஏனென்றால் அவன் தானாகவே வேலை தேடி வந்து சேர்ந்தவன். இரக்கமுள்ள யஜமானன், அவனை மன்னிக்கலாம். ஆனால் அவன் மன்னிக்கத் தக்கவனல்லன். ஒருவரைக் குருவாக ஏற்றுக் கொண்டபின், அவருடைய ஆணைக்குப்பணிந்து நடப்பது அவனுடைய கடமையாகிறது. ஆனால் அவன் குருவின் ஆணைக்குப் பணிந்து நடக்காவிட்டால், குருவை மதிக்காவிட்டால், இழித்துரைத்தால் அவன் கடுமையான தண்டனையை அனுபவிக்க நேரிடும். அவனை பகவான்கூட மன்னிக்கமாட்டார். கடவுள் கோபம் கொண்டால், குரு மன்னித்துவிடுவார். ஆனால் குரு கோபம் கொண்டால் கடவுளால்கூட மன்னிக்க முடியாது. ஆதலால் கணவனைத் தானே தேர்ந்தெடுத்துக் கொள்ளும் பெண்களுக்கு அதிகமாக பொறுப்பு இருக்கிறது.

வினா: கன்னிகை திருமணம் செய்து கொள்ளாமல் ஆன்மிகப் பயிற்சி, இறைவழிபாட்டிலேயே வாழ்க்கையைக் கழிக்க விரும்பினால், அது என்ன - சரிதானா?

விடை: திருமணம் செய்து கொள்ளாமலிருப்பது பெண்களுக்கு உகந்ததல்ல. ஏனெனில் அவள்

தனியாகவே இருந்து தன் வாழ்க்கையை நடத்திக் கொள்ளலாம் என்பது மிகவும் சிரமம். அதாவது, திருமணம் செய்து கொள்ளாமலிருப்பதால் வாழ்க்கை நடத்துவதில் சிரமங்கள் நேரும். அப்பா-அம்மா இருக்கும்வரையில் எல்லாம் சரியாக இருக்கும். அப்பா-அம்மா இல்லாதபோது, அண்ணன்-தம்பிகள் [தங்கள் மனைவியின் வசப்பட்டு] ஸஹோதரியை மதிப்பதில்லை; மாறாக, அவளை வெறுக்கிறார்கள்; இழிவான நோக்கோடு பார்க்கிறார்கள். ஸஹோதரர் களின் மனைவிமார்களும் அவளை வெறுப்புடனே பார்க்கிறார்கள். இதனால், கன்னிகையின் மனத்தில், அடிமை என்ற எண்ணம் ஏற்படுகிறது. அதனால், திருமணம் செய்து கொள்வதே நல்லது.

"நாம் கணவன்-மனைவி என்று உடலுறவு வைத்துக் கொள்ளாமல் ஆன்மிக ஸாதனை, கடவுள் வழிபாட்டுக்காகவே இணைந்து வாழ்வோம்" என்று, திருமணத்துக்கு முன்பே உறுதி எடுத்துக் கொண்டு வாழும் சிலரை நாம் பார்த்திருக்கிறோம். அவர்கள், அந்த உறுதியைக் கடைப்பிடித்தும் வருகிறார்கள். ஆன்மிக ஸாதனை, தெய்வ வழிபாட்டுக்காகவே திருமணம் என்ற உறவு என்றிருக்கக் கூடிய ஆண்-பெண்களைக் காண்பது இக்காலத்தில் அரிதே ஆனாலும்கூட, அப்படிப்பட்டவர்கள் தென்படுவது ஒன்றும் நிகழக்கூடாததல்ல.

மீராபாயைப் போல, குழந்தைப் பருவத்திலிருந்தே ஸங்கீர்த்தனம்-ஸ்மரணம் ஆகியவற்றில் மூழ்கிப் போவது என்பது வேறு விஷயம். ஆனால் இது விதிமுறை அல்ல; உள்ளுணர்வு. இவ்வுணர்விலும் சிரமம் வரத்தான் செய்கிறது. மீராபாயின் வாழ்க்கையிலும் நிறையத் துன்பங்கள் வரத்தான் செய்தன. ஆனால் பகவானிடம் உறுதியான நம்பிக்கை என்ற சக்தியைக் கொண்டு, எல்லாத்

துன்பங்களையும் கடந்து சென்றாள். இப்படிப்பட்ட உறுதியான நம்பிக்கையுடையவர்கள் மிகவும் குறைவாகவே காணப்படுகிறார்கள். இவ்வளவு பலமான நம்பிக்கை யாருக்கு இருக்கிறதோ, அவரைப் பொறுத்தமட்டில் திருமணம், திருமணமின்மை என்ற சட்டம் ஏதும் இல்லை. பகவானிடம் உறுதியான ஆர்வம் - நம்பிக்கை உடைய மனிதர் எப்படி இருந்தாலும், அவர் உயர்ந்தவரே ஆவார் என்பதுதான் இதன் உட்கருத்து.

வினா: பெண், ஸாது-ஸந்யாஸியாக மாறுவது உகந்ததுதானா?

விடை: உலக வாழ்க்கையில் பற்றுதல் நீங்கி, வீடு முதலியவற்றைத் துறந்து, பாபம் நீங்கி, ஸங்கீர்த்தனம்-ஸ்மரணம் செய்து கொண்டே வாழ்க்கையைக் கழிக்கும் உரிமை ஆணுக்கு உண்டு. ஆனால், பெண்களுக்கு இப்படிப்பட்ட ஒரு சட்டத்தை நாம் எங்கேயும் காணவில்லை. ஆகவே, ஸாது-ஸந்யாஸியாக ஆவது பெண்களுக்கு உகந்ததல்ல. அவர்கள் வீட்டிலேயே இருந்துகொண்டு, தங்கள் கடமையை ஆற்றவேண்டும். அவள் குடும்பத்தில் தன்னலமறுப்புடனும், கட்டுப்பாட்டுடனும் வாழவேண்டும். இதில்தான் அவளுடைய பெருமை இருக்கிறது.

உண்மையில் த்யாக - வைராக்யம் எவ்வளவு உயர்நெறிக் கொள்கையோ, அவ்வளவு ஸாது-ஸந்யாஸி ஆவதில் இல்லை. எவளுடைய மனத்தில், பொருட்களுக்கு அடிமையாயிருக்கும் தன்மை இல்லையோ, அவள் வீட்டிலேயே இருந்தாலும் ஸாத்விதான், ஸந்யாஸினிதான்.

வினா: பதிவ்ரதை, ஸாத்வீ, ஸதீ என்று யாரைச் சொல்கிறார்கள்?

விடை: சொல் அகராதிப்படி பதிவ்ரதை, ஸாத்வீ, ஸதீ இம்மூன்றும் ஒரே பொருளுடையன என்றாலும், மூன்றினிடையே வேற்றுமை காண முற்படும்போது, கணவனுடன் கூடவே இருந்தும் தன் கடமைகளில் உறுதியாக இருப்பவள் பதிவ்ரதை. கணவன் இல்லாதவள் தன்னுடைய கடமைகளில், த்யாகத்தில் திடமாக இருப்பவள் ஸாத்வீ. எவள் ஸத்யத்தைக் கடைப்பிடிக்கிறாளோ, கணவனோடு பலமாகத் தன்னைப் பிணைத்துக் கொண்டிருக்கிறாளோ, கணவன் இறந்தால் அவனோடு உடன்கட்டை ஏறுகிறாளோ, அவள் ஸதீ.

வினா: உடன்கட்டை ஏறும் வழக்கம் சரியானதா, இல்லை தவறானதா?

விடை: உடன்கட்டை ஏறுதல் என்பது ஒரு வழக்கம் அல்ல. கணவனோடுகூட எரிந்து போவது ஸதீ ஆகிவிடாது. எவளுடைய மனத்தில் ஸத்யம் வந்துவிடுகிறதோ, பேரார்வம் வந்துவிடுகிறதோ, அவள் நெருப்பில்லாமலே எரிந்து போகிறாள். அவள் எரிந்து போவதில் சிறிதளவு துன்பமும் உண்டாவதில்லை. "இவள் இப்படித்தான் செய்யவேண்டும்" என்று ஏதும் வழக்கம் இல்லை. மாறாக, இது அவளுடைய ஸத்யமாக, தர்மமாக, அறநூல் கூற்றுக்களில் உள்ள நம்பிக்கையாக இருக்கிறது.

ஹர்தோய் மாவட்டத்தில் இக்னோரா என்று ஒரு கிராமம். அங்கே ஒரு பெண் தன் அம்மா வழிப்பாட்டனார் வீட்டில் இருந்தாள். கணவன் நோய்வாய்ப்பட்டு இறந்து போனான். அவளுக்குக் கணவனுடைய மரணச் செய்தி கிடைத்தது. ஸதி சுலோசனாவுக்கு அவளுடைய கணவனின் தலை கிடைத்திராவிட்டால், அவள் என்ன செய்திருப்பாள் என்று மாமாவிடம் கேட்டாள். "எனக்கு என்ன

தெரியும்?" என்று கூறிவிட்டார் மாமா. "மாமா நான் உடன்கட்டை ஏறப் போகிறேன்" என்றாள் அவள். அப்படிச் செய்யாதே என்றார் மாமா. அவள் சொன்னாள்- "நான் செய்யவில்லை; அது தானாக நிகழ்கிறது." அவள் விளக்கை ஏற்றினாள். அதில் கைவிரல்களை வைத்ததும் ஊதுபத்தியைப்போல எரியத் தொடங்கியது. "நான் உடன்கட்டை ஏறுவதற்கு அனுமதி கொடுக்கிறீர்களா, இல்லையா? இல்லா விட்டால் உங்களுடைய இந்த வீடு முழுவதுமே சாம்பலாகிவிடும்" என்று மாமாவிடம் சொன்னாள். "சரி, உன் மனசுக்குத் தோன்றியபடியே செய்" என்று சொன்னார் மாமா. அவள் எரிந்து கொண்டிருந்த விரலை சுவரில் தேய்த்து அணைத்தாள். வீட்டுக்கு வெளியே சென்று, அரச மரத்தின் அடியில் நின்றாள். "எனக்கு விறகு கொடுங்கள்" என்று மாமாவிடம் கேட்டாள். "விறகும் கொடுக்க மாட்டேன்; நெருப்பும் கொடுக்க மாட்டேன்" என்று சொல்லிவிட்டார் மாமா. கிராமத்து மக்கள் அங்கே கூடிவிட்டார்கள். கைகளை கூப்பிக் கொண்டு அவள் சூரிய பகவானிடம் வேண்டினாள்- "கடவுளே! நீங்கள் நெருப்புத் தாருங்கள்." இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும் போது அங்கு நின்றபடியே அவள் தானாகவே எரிந்து போனாள். அந்த நெருப்பினால் அரச மரத்தின் இலைகள் எரிந்தன. இவை எல்லாவற்றையும் கிராம மக்கள் தம் கண்ணாலே கண்டார்கள். அங்கேயுள்ள முஸல்மான்களைக் கேட்டபோது, "எங்கள் முன்னாலே இது நிகழ்ந்தது" என்று அவர்கள் சொன்னார்கள். கரபாத்ரீஜீ மஹாராஜ் அங்கே சென்றார். சுவரில், எங்கே அந்தப் பெண் தன் எரியும் விரலைத் தேய்த்து அணைத்தாளோ, அந்த கரிக்கோட்டைப் பார்த்தார். அரச மரத்தின் எரிந்துபோன இலைகளையும் பார்த்தார்.

இந்த ஸதீ என்பது ஒரு வழக்கம் அல்ல என்பதுதான் உட்கருத்து. இது பெண்ணின் சொந்த, தார்மிகப் பற்று. இது விஷயமாக ப்ரபுதத்த ப்ரம்மசாரிஜீ அவர்கள், "ஸதீ தர்மம் ஹிந்து தர்மத்தின் முதுகெலும்பு"† என்று ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார். அதைப் படிக்க வேண்டும்.

வினா: பதிவ்ரதையின் எண்ணங்களும், நடவடிக்கையும் எப்படி இருக்கும்?

விடை: அவளிடம் நல்லற எண்ணங்கள் வலிமை பெற்றிருக்கும். அதனால் உடலாலும், உள்ளத்தாலும் கணவனுக்குப் பணிவிடை செய்கிறாள். கணவன் உள்ளத்தோடு தன் உள்ளத்தை இணைத்துவிடுகிறாள். தனக்கு என்று எதுவும் வைத்துக் கொள்வதில்லை. அவளுடைய மனம் கணவனிடமே லயித்து நிற்கிறது. அவளுடைய இத்தகைய பாதிவ்ரத்யமே அவளைக் காப்பாற்றுகிறது.

பொதுவாக, போன ஜன்மத்தில் கணவனாக இருந்தவனிடமே பதிவ்ரதைக்குத் தொடர்பு உண்டாகிறது. சில இடங்களில் பெண்ணின் குழந்தைப் பருவத்திலிருந்தே அவளுக்கு நல்ல கல்வி, நல்ல கூட்டுறவு கிடைப்பதன் மூலம் அவளுடைய உள்ளுணர்ச்சிகள் மேன்மையடைந்து, அவளுக்குத் திருமணம் ஆனதும் பதிவ்ரதையாகத் திகழ்கிறாள்.

வினா: பதிவ்ரதையை எவ்வாறு கண்டு அறிவது?

விடை: பதிவ்ரதையின் வீட்டில் அமைதி நிலவும். எல்லோரும் தத்தம் கடமையைச் செய்பவர்களாக இருப்பார்கள். அவர்களுடைய குழந்தைகளும் மேன் மக்களாக தாய்-தந்தையரிடம் பேரன்பு கொண்டவர்

† இந்தப் புத்தகம் கிடைக்குமிடம்: ஸங்கீர்த்தன் பவன், தார்மிக டிரஸ்ட், ப்ரதிஷ்டான்பூர் [ஜூஸீ], அலஹாபாத்.

களாக இருப்பார்கள். அண்டையில் இருப்போர், அந்தப் பகுதியில் இருப்போர் மீதும் இவர்களுடைய நல்லுணர்வுகள் பதியும்.

பதிவ்ரதையைக் காண்பவர்களுடைய கெட்ட எண்ணங்கள் அழிந்து போகும். ஆனால் இந்தச் சட்டம் எல்லா இடத்திலும் செல்லுபடியாகாது. ஏனெனில் பதிவ்ரதையைக் கண்டவுடன் நம் அந்தரங்கத்தில் நல்ல எண்ணங்களே விழித்தெழுகின்றன. எவனிடம் நல்ல உணர்வுகள், நல்ல ஸம்ஸ்காரம் இல்லையோ, அவனிடம் பதிவ்ரதையின் தர்சனத்தால் ஏற்படும் நல்விளைவு குறைவாகவே இருக்கும். ஒரு வேடன், தமயந்தியை மலைப்பாம்பின் பிடியிலிருந்து விடுவித்தான். ஆனால் அவள் அழகைக் கண்டு மோஹித்தான். அவன் நெஞ்சில் தீய எண்ணம் தோன்றியது. தமயந்தியின் சாபத்தால் அவன் அங்கேயே சாம்பலாகிப் போனான். யுதிஷ்டிரர் பெரிய தர்மாத்மா; ஸாத்வீகர். ஆனால், துர்யோதனனிடம் அவரது தாக்கம் ஏற்படவில்லை.

வினா: இன்றைய நிலையில், பதிவ்ரதா தர்மத்தைக் கடைப்பிடிக்க முடியுமா, என்ன?

விடை: பதிவ்ரதா தர்மத்தைக் கடைப்பிடிப்பதற்கு இந்தக் காலம் ஓர் இடைஞ்சல் இல்லை. தன்னுடைய கடமையைக் கடைப்பிடிப்பதற்கு எல்லோருக்கும், எப்போதும் தன்னுரிமை உண்டு. தர்மத்துக்கு எதிரான செயல்களைச் செய்யும் போதுதான் ஶாஸ்த்ரம், அறம், கௌரவம் ஆகியவை தடங்கல்களாக இருக்கின்றன.

வினா: கணவன், மனைவியைக் கைவிட்டு விடலாமா?

விடை: மனைவி நல்லவளாக இருக்கிறாள். நன்னடத்தையுடையவளாக இருக்கிறாள். ஆனால், கறுப்பு நிறம்; அம்மாவோடு ஒத்துப் போவதில்லை.

ஒருபோதும் அம்மா சொல்வதைக் கேட்பதில்லை. "இவளை விட்டுடு" என்று அம்மா சொல்கிறார். இப்படிப்பட்ட சூழ்நிலையில் மனைவியைக் கைவிடுபவன் பெரிய பாபத்துக்கு ஆளாகிறான். பெரிய அநியாயம் செய்கிறான். அதனால் கொடுமையான நரகத்துக்குப் போவான். இந்தக் காலப் பையன்கள், மனைவியிடம் குற்றம் கண்டு அவளைக் கைவிடுகிறார்கள். அவர்கள் தம்மளவில் எவ்வளவு பரிசுத்தமானவர்கள்? ஆகவே மனைவியை எப்பொழுதும் கைவிடலாகாது.

வினா: மனைவி, கெட்ட நடத்தையுள்ளவளாக, கற்பு தவறியவளாக இருந்தால், அவளை விலக்கிவிடலாமா, கூடாதா?

விடை: இன்றைய நிலையில் கூடுமானவரை அம்மாதிரி மனைவியைத் துறந்துவிடக் கூடாதுதான். தன்னால் இயன்ற அளவுக்கு அவள் மீது ஆதிக்கம் செலுத்த வேண்டும். அவளை நல்வழிப் படுத்துவதற்கான முயற்சிகளைச் செய்யவேண்டும். அவளுக்கு ஏதேனும் தண்டனை கொடுத்துத்தான் ஆக வேண்டும் என்றால், அவளுடன் பேசாமல் இரு. அவள் கையால் தயாரித்த சாப்பாட்டையும் சாப்பிடாதே.

வினா: கணவனின் புண்ணியத்தில் பாதி மனைவிக்கும், மனைவியின் பாபத்தில் பாதி கணவனுக்கும் சேருகிறது. இது ஏன்?

விடை: தன்னுடைய தாய்-தந்தையர், ஸஹோதரன்-அண்ணி ஆகிய எல்லோரையும் வீடு முழுவதையும் த்யாகம் செய்துவிட்டு மனைவியாக வந்திருக்கிறாள். த்யாகத்தினால் புண்ணியம் கிடைக்கிறது. அவள், தன்னுடைய வம்சாவளியையும் துறந்து, கணவனின் நெஞ்சத்தோடு தன் நெஞ்சைப் பிணைத்திருக்கிறாள். அதனால் அவள் புண்ணியத்தில் பங்கு பெறுகிறாள். கணவன், ஸந்த்யா-காயத்ரீ செய்வதால் உண்டாகும்

புண்ணியப் பலனில் அரைப்பங்கு அவளுக்குக் கிடைக்கிறது. ஆகவே கணவனுக்கு இரு முப்புரிகள் உள்ளன. ஒன்று தனக்காக; மற்றது மனைவிக்காக.

குழந்தைப் பருவத்தில் பெண்களுக்குக் கல்வி கற்பிப்பது தாய்-தந்தையர், ஸஹோதரர் ஆகியோரின் பொறுப்பு. திருமணம் ஆனவுடன் போதனை அளிக்கும் பொறுப்பு கணவனுடையது. கணவனிடமிருந்து நல்ல போதனைகள் கிடைக்காததால், மனைவி பாபம் செய்தால் அதில் அரைப்பங்கு கணவனுக்குச் சேர்கிறது.

கணவன், மனைவிக்கு நல்ல புத்திமதி சொல்கிறான். ஆனால் அவள் கணவனின் சொற்களை மதிப்பதில்லை. பாபம் செய்கிறாள் என்றால், அவளுடைய பாபத்தில் பாதி கணவனை அடையாது. ஏனென்றால் அவள் தன் பொறுப்பைத் தானே ஏற்றுக் கொண்டுவிட்டாள். எந்தப் பெண், கணவன் சொற்படி நடக்கிறாளோ, கணவனுடைய மேலாண்மையில் இருக்கிறாளோ, அவளே கணவனின் புண்ணியத்தில் பங்குக்கு உரியவள். எவள் கணவனுடைய சொல்லுக்கு ஏற்ப நடக்கவில்லையோ, அவள் கணவனின் புண்ணியத்தில் பங்காளி ஆகமுடியாது.

வினா: வேறு மதத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு பெண்ணை வலியப் பற்றிக் கொண்டு சென்றால், அந்தப் பெண்ணை என்ன செய்ய வேண்டும்?

விடை: அவளால் முடிந்த அளவுக்கு அவர்களிடமிருந்து விடுவித்துக் கொள்ள முயல வேண்டும். ஸந்தர்ப்பம் கிடைக்கும்போது அங்கிருந்து ஓடிப் போய்விட வேண்டும். எந்த வழியும் புலப்படவில்லையானால், பகவானைக் கூவி அழைக்க வேண்டும். ஏதோ ஒரு வழியில் பகவான் விடுவித்து விடுவார்.

ஒரு பெண்ணின் வாயில் துணியை அடைத்து, இரு கைகளையும் முதுகுக்குப் பின்னால் சேர்த்துக் கட்டி, மேலிருந்து பர்தா அணிவித்து, வேற்று மதத்தினர், ரயில் பெட்டியில் கடத்திச் சென்று கொண்டிருந்தார்கள். லக்னௌ ஸ்டேஷனில் டிக்கட் பரிசோதகர் வந்து அந்தப் பெண்ணின் எதிரே டிக்கட்டுக்காக நின்றபோது, அவள் அந்தப் பரிசோதகரின் காலைத் தன் காலால் மிதித்தாள். "இவர் ஏன் என் காலை அழுத்துகிறார்?" என்று டிக்கட் பரிசோதகர் சிந்தித்தார். "இதில் ஏதோ ரஹஸ்யம் இருக்கிறது?" அவர், ரயில்வே காவல்படையினரை அழைத்தார். காவலர்கள், பரிசோதனை செய்து அந்தப் பெண்ணை விடுவித்தார்கள். அவளைக் கடத்திச் சென்றவர்களையும் பிடித்துக் கொண்டார்க்ள். இப்படியே நௌஆகாலியிலும் வேற்றுமதத்தினர் ஒரு பெண்ணைப் பிடித்துக் கொண்டார்கள். அந்தப் பெண், பகவானை அழைத்தாள். இதற்கிடையில் இன்னொரு வேற்றுமதக்காரன் வந்து, "நான் இவளை என் மனைவியாக்கிக் கொள்ளப் போகிறேன்" என்று சொல்ல ஆரம்பித்துவிட்டான். இந்த விஷயமாய் அந்த இரண்டு ஆசாமிகளுக்கும் சண்டை உண்டாகிவிட்டது. அவர்கள் தங்களுக்குள் சண்டையிட்டு மாண்டார்கள். அந்தப் பெண் காப்பாற்றப்பட்டாள்.

வினா: எவனுடைய மனைவியை வேற்றுச் சமயத்தினர் கடத்திச் சென்றுவிட்டார்களோ, அந்த ஆணின் கடமை என்ன?

விடை: ஆணுக்கு, அவளை விடுவித்துக் கொண்டு வரும் திறன் இருந்து, அவளும் விருப்போடு வருவதாயிருந்தால், அவளைத் தன் வீட்டுக்கு அழைத்து வரவேண்டும். காரணம் அவள்மேல் பலாத்காரம் செய்யப்பட்டதால், அவள் கற்பினை இழந்தாளே தவிர, அவளுடைய தர்மம்

குறைந்துவிடவில்லை. தானே விரும்பி தவறு செய்யும் போதுதான் தர்மம் குலைகிறது. அச்சுறுத்தல் மூலம் யாரும், எவருடைய தர்மத்தையும் கைவிடச் செய்துவிட முடியாது. அறவழியிலிருந்து விலகியவராகவும் செய்ய முடியாது. ஒருவன் பலவந்தமாக இன்னொருவன் வாயில் பசு மாமிசத்தை வைத்துத் திணித்தாலும், அவன் இவனுடைய தர்மத்தை விட்டுவிடச் செய்ய முடியாது. ஆகவே அந்தப் பெண் மனத்தால் மாசற்றவளாக இருந்து, புணர்ச்சி இன்பத்தை அனுபவிக்காதவளாக இருந்தால், அவளுடைய கற்பு இழக்கப்பட்டதாக ஆகாது. அதனால், அவள் திரும்பி வந்தால், கீதை-ராமாயணம்-பாகவதம் முதலியவற்றைப் படிக்கச் சொல்லியும், கங்கா ஜலத்தால் நீராட்டியும் தூய்மைப்படுத்தி ஏற்றுக் கொள்ளவேண்டும். இவை எல்லாவற்றையும் செய்து முடித்தபின், அவளுக்கு மாதவிலக்கு ஏற்பட்டதும், அவள் எல்லாவகையிலும் சுத்தமாகிறாள். "மாதவிலக்கினால் பெண் தூய்மையடைகிறாள்." - *"ரஜஸா ஶுத்₃த்₄யதே நாரீ".*

ஜமதக்னி முனிவரின் மனைவியான ரேணுகாதேவி, தன் கற்பின் ஆற்றலால் தினந்தோறும் துணியில் தண்ணீர் பிடித்துக் கொண்டு வருவது வழக்கம். ஒரு நாள் ஆற்றங்கரையில் தங்கம் போல் மின்னிக் கொண்டிருந்த அழகிய ஒரு கூந்தலைக் கண்டாள். "இந்த முடியே இவ்வளவு அழகாக இருக்கும்போது, இதற்குரிய ஆடவன் எவ்வளவு அழகாக இருப்பான்?" என்று அவள் மனத்தில் தோன்றியது. இப்படியாக மனத்தில் ஓர் அசைவு ஏற்பட்டவுடன் அவளுடைய தர்மம் குறைவுபட்டது. முன்பு செய்தது போல் துணியில் தண்ணீரை நிரப்பிக் கொண்டுவர அவளால் முடியவில்லை.

இந்த்ரன், கௌதம முனிவரின் உருவத்தை ஏற்று அகல்யாவைச் சீர்குலைத்தான் எனில், அவனுடைய தர்மத்துக்குக் குறைவு ஏற்படவில்லை. மாறாக ஒரு பதிவ்ரதைக்கு அழிவு ஏற்பட்டது. அவளுடைய கணவருக்குக் கோபம் ஏற்பட்டு, அதனால் அவளைக் கல்லாகப் போகும்படி செய்தாலும் பகவான் ராமன் அவளைப் புனிதமாக்கி விட்டார். ஏனென்றால் அவர் தன்னுடைய தர்மத்தில் பிடிப்புடன் இருந்தார்.

கீதாப்ரஸ்ஸின் நிறுவனர் ஸ்ரீஜயதயாள்ஜீ கோயந்தகா அவர்கள், தூய்மைக்கும், புனிதத்துக்கும் தன் நெஞ்சத்தில் முதலிடம் கொடுத்திருந்தார். பிற சமயத்தினர் பலவந்தப்படுத்தி ஒரு பெண்ணின் கற்பைச் சூறையாடினால், அவள் தர்மம் தவறியவளாக ஆகமாட்டாள் என்று அவரும் சொல்லியிருக்கிறார். ஆதலால் அவர்கள் ஹிந்து தர்மத்துக்கு வர விரும்பினால், அவர்களை ஏற்றுக் கொள்ள வேண்டும். கங்கா ஸ்நானம், கீதை-ராமாயண பாராயணம் முதலியவற்றால் சுத்தப்படுத்தி ஏற்றுக் கொள்ள வேண்டும். "இன்னொரு மதத்தைச் சேர்ந்த ஒருவர் ஹிந்து தர்மத்துக்கு வர விரும்பினால், அவரையும் ஏற்றுக் கொள்ளவேண்டும். அதாவது, அவரும் ஹிந்துவாக முடியும். ஹிந்து தர்ம முறைப்படி ஜப-த்யானம், பூஜை-பாராயணம் முதலியன செய்ய முடியும்" என்றும் அவர் கூறியிருக்கிறார்†.

---

† பிற மதத்திலிருந்து ஹிந்துக்களாக விரும்புபவர்கள் எந்த வர்ணத்தை அடைவார்கள்? அதாவது ப்ராமணர் ஆவார்களா? க்ஷத்ரியர் ஆவார்களா? வைச்யர் ஆவார்களா? நான்காம் வர்ணத்தவர் ஆவார்களா? ப்ராமணனாவதற்கோ, க்ஷத்ரியனாவதற்கோ, வைச்யனாவதற்கோ தகுதியில்லையே. ஹிந்துக்களாக விரும்புபவர்கள் நான்காம் வர்ணத்தில் சேர விரும்ப மாட்டார்களே என்ற கேள்வி ஏற்படலாம்.

ஆனால் ஹிந்து தர்மத்தில் பாகவத தர்மம் என்று ஒன்று இருக்கிறது. அதில் வர்ணாஶ்ரம தர்மம் அடங்கும். அதாவது எல்லா வர்ணத்தில் உள்ளவர்களும், ஆஶ்ரமத்தில் உள்ளவர்களும், பாகவத தர்மத்தைக் கடைபிடித்து பகவானுடைய திருவடிகளை அடைந்துவிடலாம்.

வினா: தானே விரும்பி வேறிடம் சென்ற மனைவி திரும்பி வந்தால் என்ன செய்வது?

விடை: அவளைத் தன் மனைவியாக அங்கீகரிக்கக் கூடாது. அவளோடு மனைவி என்ற முறையில் உறவு வைத்துக் கொள்ளக் கூடாது. மகான் கூபாஜீ மஹாராஜின் மனைவி அவரை விட்டுவிட்டு வேறொருவரிடம் சென்றுவிட்டாள். அங்கே, அவளுக்குக் குழந்தையும் பிறந்துவிட்டது. ஆனால், அவளுடைய அந்தக் கணவன் இறந்துவிட்டான். அதனால் வாழ்க்கை நடத்துவதே அவளுக்கு மிகவும் கஷ்டமாகி விட்டது. அதனால் அவள் மறுபடியும்

ஆனால் பாகவத தர்மம் வர்ணாஶ்ரம தர்மத்திற்கு உட்பட்டதல்ல. அதாவது நான்கு வர்ணத்திலும், நான்கு ஆஶ்ரமங்களிலும் உட்படாத வேடர்களும், ஹூணர்களும், மலைவாசிகளும், துருக்கர்களும்கூட பாகவத தர்மத்தைக் கடைபிடித்து பகவான் திருவடிகளை அடைந்துவிடலாம் என்று ஸ்ரீமத்பாகவதம் கூறுகிறது.

கிராத ஹூணாந்த்₄ரபுலிந்த புல்கஸா:
ஆபீ₄ர கங்கா யவனா: க₂ஸாத₃ய: ।
யேऽன்யே ச பாபா யது₃பாஶ்ரயாஶ்ரயா:
ஶுத்₄யந்தி தஸ்மை ப்ரப₄விஷ்ணவே நம: ॥

[ஸ்ரீமத்₃ப₄ாக₃வதம் 2/4/18]

இதை ப்ரமாணமாக எடுத்துக்காட்டி ஸகல பிராணி ஸம்ரக்ஷகர்களான ஸ்ரீபகவந்நாம போதேந்த்ர ஸரஸ்வதீ ஸ்வாமிகள் - பகவன் நாம பஜனத்திற்கு - பகவன் நாமம் சொல்ல நாக்குப் படைத்திருப்பதைத் தவிர வேறு வர்ணாஶ்ரம தர்மங்களாலும், மற்ற விதிமுறைகளாலும் ஏற்படக்கூடிய தகுதிகள் தேவையில்லை என்பதைத் திட்டவட்டமாக நிருபித்திருக்கிறார்கள்.

ஆகவே வர்ணாஶ்ரம தர்மத்திற்கு உட்பட்டு பகவன் நாம பஜனம் செய்பவர்கள் எப்படி பகவானுடைய திருவடிகளைச் சேர்வது எவ்வளவு திண்ணமோ, அவ்வளவு திண்ணமானது, வர்ணாஶ்ரமக் கட்டுப்பாட்டுக்கு உட்படாத எந்த மானுடனும் பகவன் நாம பஜனத்தினால் பகவானுடைய சரணங்களை அடைய முடியும் என்பது. ஆகவே, பிறமதத்தினர் ஹிந்துக்களாக விரும்பினால் பகவன் நாம பஜனம் என்ற பாகவத தர்மத்தைக் கடைப்பிடித்து பாகவதர்கள் ஆகி பகவானுடைய திருவடி நிழலை அடைந்துவிடலாம்.

கூபாஜீயிடமே வந்து சேர்ந்தாள். அவளுடைய வாழ்க்கைக்கு வேண்டிய உணவு, நீர், துணிமணிக்கு கூபாஜீ ஏற்பாடு செய்தார். ஆனால் தன் மனைவியாக ஏற்கவில்லை.

வினா: கணவன் கெட்ட நடத்தையுடையவனாக இருந்தால், மனைவி என்ன செய்யவேண்டும்?

விடை: கெட்ட நடவடிக்கையுடைய கணவனை மனைவி துறந்துவிடக் கூடாது. மாறாக தன்னுடைய பதிவ்ரதா தர்மத்தைக் காப்பாற்றிக் கொண்டு, அவனுக்கும் அறிவுறுத்த வேண்டும். மண்டோதரி, ராவணனுக்கு அறிவுரை சொன்னாள். அவனை விலக்கிவிடவில்லை - அது மாதிரி.

திருமணத்தின்போது கணவன் மனைவி இருவரும், ஒருவருக்கொருவர் உறுதிமொழி கூறி கட்டுப்படுகிறார்கள். அந்த உறுதிமொழியின்படி, கணவனுக்கு ஆலோசனைகள் கொடுப்பதற்கு, தன் மனத்தில் தோன்றுவதைக் கணவனிடம் சொல்வதற்கு மனைவிக்கு அதிகாரம் உண்டு. காந்தாரி எவ்வளவு உயர்ந்த பதிவ்ரதையாக இருந்தாள்! "எனக்கு எவருடன் திருமணம் நிகழப் போகிறதோ, அவருக்குக் கண் இல்லை." அவள், தன்னுடைய கண்களின்மேல் துணிப்பட்டை கட்டிக் கொண்டாள். "ஏனென்றால், என் கணவனுக்குக் கிடைக்காத இன்பத்தை நானும் பெறக்கூடாது." ஆனால் நேரம் வந்தபோது, "நீங்கள் துர்யோதனனின் சொல்லுக்குச் செவிசாய்க்கக் கூடாது. இல்லாவிட்டால் நமது குலமே அழிந்துவிடும்" என்று கணவனுக்கு [த்ருதராஷ்ட்ரனுக்கு] நல்லுரை சொன்னாள். இப்படியாகப் பலமுறை அவள் ஆலோசனை சொன்னாள். ஆனால் த்ருதராஷ்ட்ரன் அவள் சொற்களைக் கேட்காததால், குலநாசமே ஏற்பட்டது. உட்கருத்து என்னவென்றால்,

கணவனுக்கு நல்ல யோசனைகள் கூறுவதற்கு மனைவிக்கு முழு உரிமை உண்டு என்பதுதான்.

உடலாலும், உள்ளத்தாலும் கணவனுக்குப் பணிவிடை செய்து, தன் கடமையை நிறைவேற்றுகிற பதிவ்ரதையான பெண், மரணத்துக்குப்பின், கணவன் இருக்கும் உலகத்துக்கே [கணவன் அருகேயே] செல்கிறாள் என்று ஶாஸ்த்ரங்களில் வருகிறது. கணவன் கெட்ட நடவடிக்கையுடையவனாக இருந்தால், அவன் நரகலோகத்துக்குத்தான் போவான். அதனால் பதிவ்ரதைப் பெண்ணும் நரகலோகத்துக்குத்தானே போகணும்? ஆனால், கற்புடைய பெண் நரகங்களுக்குச் செல்லமாட்டாள். ஏனென்றால் அவள் அறநூல்களுடைய, பகவானுடைய, ஸாது-மஹாத்மாக்களுடைய சொற்களையே கடைப்பிடித்திருக்கிறாள். கற்புநெறியைக் கைக்கொண்டிருக்கிறாள். அதனால் அவள் தன்னுடைய கற்பின் ஆற்றலால் கணவனை உயர்த்திவிடுவாள். அதாவது மனைவிக்கு எந்த நல்லுலகம் உண்டோ, அதுவே கணவனுக்கும் கிடைக்கும். கருத்து என்னவென்றால், தன்னுடைய கடமையை நிறைவேற்றுகிறவன், பிறரையும் உயர்த்துபவனாக ஆகிறான் என்பதுதான்.

வினா: கணவன், மனைவியை விபசாரம் செய்யத் தூண்டினால், மனைவி என்ன செய்யவேண்டும்?

விடை: தன் மனைவியை மற்றொருவனுக்கு கொடுப்பதற்குக் கணவனுக்கு அதிகாரம் இல்லை. ஏனென்றால் மனைவியின் தகப்பனார், கணவனுக்குத்தான் அவளைத் தானமாகக் கொடுத்திருக்கிறார். உணவு, உடை முதலியவைகளைத் தானமாகப் பெறுகிறவர்கள், உணவு முதலியவற்றைப் பிறருக்குக் கொடுக்க முடியும். ஆனால், கன்னிகாதானம் பெறுகிற கணவன், தன்

மனைவியைப் பிறருக்குக் கொடுக்க முடியாது. அவன் அப்படிச் செய்தால் மஹாபாபத்துக்கு ஆளாகிறான். இம்மாதிரி நிலைமையில் மனைவி, கணவனின் சொல்லைக் கொஞ்சமும் கேட்கக் கூடாது. அவள் தன் கணவனிடம் கண்டிப்பாகச் சொல்லிவிட வேண்டும். "என்னுடைய தந்தை உங்களுக்குத்தான் கன்னிகா தானம் செய்திருக்கிறார். அதனால் பிறருக்குக் கொடுக்கும் உரிமை தங்களுக்கு இல்லை." இந்த விஷயத்தில் அவள் கணவனின் உத்தரவை மீறுகிறாள் என்றாலும், அவளுக்கு எந்தப் பாபமும் உண்டாவதில்லை. ஏனென்றால் கணவனுடைய ஆணை அநியாயமானது. அநியாயத்தை ஏற்பது என்பது அநியாயத்துக்கு உதவுவது ஆகும். அநியாயத்துக்குத் துணை நிற்பது என்பது எல்லோருக்குமே தவறு ஆகும். மற்றொரு விஷயம், கணவனின் அறம் தவறிய ஆணைகளை மனைவி ஏற்று நடந்தால், அதன் காரணமாகக் கணவனுக்கு நரகங்கள்தான் கிடைக்கும். அதனால் கணவனை நரகத்தில் தள்ளக்கூடிய இத்தகைய ஆணைகளை மனைவி ஏற்று நடக்கலாகாது.

ஶாஸ்த்ர சட்ட திட்டங்களுக்கு எதிராகக் கணவனே மனைவியிடம் உடலுறவு கொண்டால், அது முறையற்றது; பாபகரமானது. தர்மத்தோடு கூடிய காமம், கடவுள் வடிவம். ***"த₄ர்மாவிருத்₃தே₄ா பூ₄தேஷு காமோऽஸ்மி ப₄ரதர்ஷப₄ ॥" [கீ₃தா 7/11].*** அதனால், இதில் குற்றம், பாபம் ஏதுமில்லை. ஆனால், தர்மத்துக்கு விரோதமாக தன் மனம் போனபோக்கில் மனைவியை நடத்துவது தவறு. மனிதன் எப்போதும் அறநூல் விதிகளின்படியே ஒவ்வொரு கார்யத்தையும் செய்ய வேண்டும். [கீதை 16/24]

வினா: கணவன், புலால்-போதைப் பழக்கம் உடையவனாக இருந்தால் மனைவி என்ன செய்யவேண்டும்?

விடை: கணவனுக்குப் புத்திமதி சொல்ல வேண்டும். விலக்கத்தக்க செயல்களிலிருந்து விடு விக்கவேண்டும். கணவன் அதை ஏற்காமல்போனால் ஒன்றும் செய்ய முடியாது. ஆனால், கணவனுக்கு அறிவுறுத்துவது மனைவியின் தர்மம்; உரிமை. மனைவி தன் உணவு-பான வகைகளைத் தூயதாகவே வைத்துக் கொள்ளவேண்டும்.

வினா: கணவன், அடித்து உதைத்துத் துன்பப்படுத்தினால் மனைவி என்ன செய்யவேண்டும்?

விடை: "என்னுடைய முன்பிறவியில் செய்த வினைகளின் மாற்று விளைவு, கடன், இந்த உருவத்தில் வந்து கணக்குத் தீர்த்துக் கொண்டிருக்கிறது. என்னுடைய பாபம் கழிந்து கொண்டிருக்கிறது. நான் பரிசுத்தமானவளாக ஆகிக் கொண்டிருக்கிறேன்" என்று மனைவி அறிந்து கொள்ள வேண்டும். பிறந்தகத்துக்காரர்களுக்கு விஷயம் தெரிந்தால், அவர்கள் அவளைத் தம் வீட்டுக்கு அழைத்துச் சென்றுவிடுவார்கள். ஏனென்றால், அடி-உதை வாங்குவதற்காகத் தம் பெண்ணைக் கொடுக்கவில்லை.

வினா: பிறந்தகத்தாரும் அவளைத் தம் வீட்டுக்கு அழைத்துச் செல்லாவிட்டால், அவள் என்ன செய்வது?

விடை: அப்படியானால் அவள் தன் பழைய வினைகளின் பலனை அனுபவித்துத்தான் தீர வேண்டும். அதைத் தவிர போக்கற்ற அவள், வேறு என்னதான் செய்யமுடியும்? அவள், கணவனின் அடி-உதைகளைத் தைர்யமாக ஏற்றுக் கொள்ளணும். ஏற்றுக் கொள்வதால் பாபம் குறைந்து போகும்.

நாளடைவில் கணவன் அன்பு காட்டவும் கூடும். கணவனின் அடி-உதைகளை அவளால் பொறுத்துக் கொள்ள முடியாமற்போனால், கணவனிடம் சொல்லி விட்டு அவள் தனியே போய்விட வேண்டும். தனியாக இருந்து தன் வாழ்க்கைக்கு வேண்டிய கார்யங்களைச் செய்து கொண்டும், பகவானின் வழிபாடு - த்யானம் செய்து கொண்டும் அச்சமின்றி வாழவேண்டும்.

ஆடவன், ஒருபொழுதும் பெண் மீது கை வைக்கக் கூடாது. பீஷ்மரைக் கொல்வதற்கு என்றே சிகண்டி பிறந்தார். ஆனால் போர்க்களத்தில் பீஷ்மருக்கு எதிரே வந்து நின்றபோது பீஷ்மர் அம்பு செலுத்துவதை நிறுத்திவிட்டார். காரணம் சென்ற பிறவியில் சிகண்டி பெண்ணாக இருந்தார். இந்தப் பிறவியிலும் பெண் உருவத்திலேயே பிறந்தார். பின்னால் அவர் ஆண்உருவம் அடைந்தார். அதனால் பீஷ்மர் அவரைப் பெண்ணாகவே கருதினார். அவர் மீது பாணம் செலுத்தவுமில்லை.

ஏதோ ஒரு தீவினையின் பயனாகவே ஆபத்துக்கள் தோன்றுகின்றன. அந்தச் சமயத்தில் மிகுந்த ஆர்வத்துடன் கடவுள் வழிபாடு-பக்தி செய்வதால் இருமடங்கு லாபம் உண்டாகிறது. ஒன்று: பாபங்கள் அழிகின்றன. இரண்டு: இறைவனைக் கூவி அழைப்பதால், இறை நம்பிக்கை வளர்கிறது. அதனால் ஆபத்து வரும்போது பெண்கள் தைர்யத்தை விட்டுவிடக் கூடாது.

ஆபத்து நேரும்போது தற்கொலை எண்ணத்துக்கு மனத்தில் இடம் கொடுக்கக் கூடாது. ஏனென்றால், தற்கொலை செய்து கொள்வதால் மிகப் பெரும் பாபம் ஏற்படுகிறது. ஒரு மனிதனைக் கொல்வதால் எவ்வளவு பாபம் ஏற்படுமோ, அதே பாபம் தற்கொலை செய்து கொள்வதாலும் நேரும். "தற்கொலை செய்து

கொள்வதால் என்னுடைய துன்பம் குறைந்து போகும்; நான் ஸுகவாஸியாக ஆகிவிடுவேன்" என்று மனிதன் நினைக்கிறான். இது முற்றிலும் முட்டாள்தனமான எண்ணம். ஏனென்றால் பழைய பாபமும் கழிவதில்லை. அத்துடன் புதிய பாபமும் உண்டாகிறது. தற்கொலை செய்து கொள்ள முயன்று அதிலிருந்து உயிர் தப்பியவர்கள், "தற்கொலை செய்து கொள்வது மிகவும் கஷ்டமான கார்யம். நான் அப்படிச் செய்திருக்க வேண்டாம் என்ற கழிவிரக்கம் இப்போது உண்டாகிறது. இப்போது என்ன செய்யறது?" என்று கூறுவதைக் கேட்டிருக்கிறோம். தற்கொலை செய்து கொண்டவர்கள் பொதுவாக பூத-ப்ரேதங்களாக மாறு கிறார்கள். அங்கே பசிதாகத்தோடு துன்பப்படு கிறார்கள். கருத்து என்னவென்றால் தற்கொலை செய்து கொண்டவர்களுக்குத் துன்ப நிலையே ஏற்படுகிறது என்பதுதான்.

வினா: கணவன், மனைவியைத் துறந்துவிட்டால், அவள் என்ன செய்ய வேண்டும்?

விடை: அவள் தன்னுடைய தந்தையின் வீட்டில் தங்கவேண்டும். தந்தையின் வீட்டில் இருக்க முடியாவிட்டால் புக்ககம் அல்லது பிறந்தகத்தார் அருகே, வாடகைக்கு அறை எடுத்துக் கொண்டு கௌரவம், கட்டுப்பாடு, ப்ரம்மசர்யம் மேற்கொண்டு தன் தர்மத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். கடவுள் வழிபாடு, த்யானம் செய்யணும். தந்தையிடமிருந்தும், மாமனாரிடமிருந்தும் கிடைப்பதைக் கொண்டு தன்னுடைய வாழ்க்கையை நடத்திச் செல்லவேண்டும். பணம் இல்லாமற்போனால் வீட்டிலிருந்தபடியே தன் கைகளால் நூல் நூற்றல், நெசவு வேலை, தைத்தல், கூடை முடைதல் செய்து தன் வாழ்வைச் சமாளிக்க வேண்டும். இது கஷ்டமாகத்தான் இருக்கும். தபஸ் என்றாலே கஷ்டம்தான். சௌக்யம் இல்லை.

இவ்விதம் தவம் செய்வதால் அவளிடம் ஆன்மிக ஒளி பெருகும். அவளுடைய மனம் தூய்மை பெறும்.

தாய்-தந்தையர், ஸஹோதரன்-அவர் மனைவி ஆகியோர், "தமது மகள், ஸஹோதரிகள் அற வடிவினர். ஆதலால் அவர்களைச் சீராட்டி வளர்ப்பதனால் மிகவும் புண்ணியம் உண்டாகும்" என்று உறுதியாக நினைக்க வேண்டும். அவர்கள் இந்த வாக்கியத்தின் ஒவ்வோர் எழுத்தையும் செயல்படுத்திக் காட்டவேண்டும். ***"பி$_3$பதி கால கர ஸதகு$_3$ண நேஹா" [மானஸம். கிஷ்கிந்த$_4$ாம 7/3].*** "ஆபத்துக் காலத்தில் மகள்-ஸஹோதரிகளிடம் நூறு மடங்கு அன்பு செலுத்தவேண்டும்" என்பது இதன் பொருள். அவர்களால் அப்படிச் செய்ய இயலாமற்போனால், "காட்டில் வஸிக்கும் பிராணிகளுக்குக்கூட பகவான் உணவளித்துக் காப்பாற்றும்போது என்னை கண் காணித்துக் காப்பாற்ற மாட்டாரா, என்ன?" என்று, அந்தப் பெண்மணி நினைக்க வேண்டும். எல்லோருக்கும் தலைவனாக பகவான் இருக்கும் போது நான் எப்படி அநாதையாக முடியும்? - என்ற எண்ணத்தை உறுதியாகக் கொண்டு, இறைவனிடம் முழு நம்பிக்கையோடு அச்சமின்றி, கவலையின்றி, சிந்தனையின்றி, ஸந்தேஹமின்றி வாழவேண்டும். ஒரு விதவை ஸஹோதரி இருந்தாள். அவளிடம் எதுவுமே இல்லை. மாமனார் வீட்டுக்காரர்கள் அவளுடைய அணிகளைப் பறித்துக் கொண்டார்கள். "எனக்குக் கவலையே இல்லை" என்று அவள் சொல்வது வழக்கம். "இரு கைகளுக்குப் பின்னால் ஒரு வயிறுதான்இருக்கிறது. எனக்கு என்ன கவலை."

சிறுமியருக்குச் சிறுவயதிலிருந்தே நூல்நூற்றல், நெசவு, தையல், கூடைபின்னுதல் இவற்றுடன் கல்வியும் கற்பிக்க வேண்டும். மணமானதும் கணவனுக்கு ஆற்ற வேண்டிய பணிவிடைகளில்

குறைவு வைக்கக் கூடாது. ஆனால், உள்ளத்தில் பகவானிடமே நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும். உண்மையான உதவி பகவானிடமிருந்துதான் கிடைக்கிறது. இத்தகைய உதவி கணவரிடமிருந்தோ, பிள்ளையிடமிருந்தோ, உடலிலிருந்தோ கிடைக்காது. இது முற்றிலும் உண்மையான விஷயம். ஆகவே, கணவன் கைவிட்டுவிட்டால் பயந்து விடக்கூடாது. இந்த விஷயத்தில் தன்னிடம் ஏதேனும் குறை இருந்தால், அதை அப்போதே திருத்திக் கொள்ளவேண்டும். குறை ஏதும் இல்லாமல் இருந்தால் பயமின்றி இருக்கவேண்டும். தன்னுடைய உணர்வும், நடத்தையும் சரியில்லாவிட்டால் உள்ளத்தில் தொய்வு ஏற்படுகிறது. தன் உணர்வும், நடத்தையும் சரியாக இருக்குமேயானால் உள்ளத்தில் நலிவு ஏற்படாது. அதனால் தன்னுடைய எண்ணங்களையும், நடத்தையையும் எப்போதும் தூயதாக, புனிதமானதாக வைத்துக் கொண்டு பகவானுடைய பூஜை, த்யானத்தில் ஈடுபட்டிருக்க வேண்டும். பகவானிடத்தில் நம்பிக்கை கொண்டு வேறு எதையும் பொருட்படுத்தாமல் இருக்கவேண்டும்.

இன்றைய இளைஞர்களுக்குத் தம் மனைவிகளைக் கைவிடாமல் இருப்பதே முதற்கடமை. மனைவியைத் துறப்பது மஹாபாபம்; மிகப் பெரிய அநியாயம். இப்படிச் செய்கிறவர்கள் பயங்கரமான நரகத்துக்குப் போவார்கள்.

வினா: ஆண்மகன் இரண்டாம் திருமணம் செய்து கொள்ளலாமா கூடாதா?

விடை: முதல் மனைவியிடம் குழந்தை உண்டாகாவிட்டால் பிதிர்க்கடனிலிருந்து விடுதலை பெறுவதற்காகக் குழந்தை பெற்றுக் கொள்வதற்காக மட்டுமே, ஶாஸ்த்ர நூல்களின் விதிமுறைகளுக்கேற்ப இரண்டாவது திருமணம் செய்து கொள்ளலாம். தனது

இன்பநுகர்ச்சிக்காக அவன் மறுமணம் செய்து கொள்ளக்கூடாது. ஏனென்றால் இந்த மனித உடல் தன் சொந்த இன்பநுகர்ச்சிக்காகப் பெறப்பட்டதல்ல.

மறுமணம், தன்னுடைய முதல் மனைவியின் அனுமதியோடு ஸம்மதத்தோடு செய்து கொள்ள வேண்டும். பிதிர்க்கடனிலிருந்து விடுதலை பெறுவதற்காகவே மறுமணத்துக்கு மனைவி அனுமதி கொடுக்கவேண்டும். மறுமணம் செய்துகொண்ட பின்னரும், தன்னுடைய மூத்த மனைவியின் உரிமைகள் காப்பாற்றப்பட வேண்டும்; அவளை ஒருபொழுதும் வெறுக்கக்கூடாது; நிராதரவாக விட்டுவிடக் கூடாது. மாறாக அவளை மிக உயர்வாக மதித்து, இருவரும் அவளைக் கௌரவிக்க வேண்டும்.

பிள்ளை பிறந்துவிட்டது. ஆனால் மனைவி இறந்துவிட்டாள் என்றால் அவன் மறுமணம் செய்துகொள்ள வேண்டிய அவஶ்யமே இல்லை. ஏனென்றால் அவன் முன்னோர் கடனிலிருந்து விடுதலை அடைந்துவிட்டான். ஆனால் எவனுக்கு இன்பநுகர்ச்சிக்கான ஆசை குறையவில்லையோ, அவன் மறுமணம் செய்து கொள்ளலாம். ஏனென்றால் அவன் மறுமணம் செய்து கொள்ளாவிட்டால் பிறர் மனைவியோடு புணர முனைவான்; வேசியை நாடிச் செல்வான். அதனால், அவனுக்குக் கொடூரமான பாபம் ஸம்பவிக்கும். ஆதலால் இத்தகைய பாபத்திலிருந்து காப்பாற்றிக் கொள்ளவும், கௌரவத்தோடு வாழ்வதன் பொருட்டும், அறநூல்களில் விதிக்கப்பட்டுள்ள முறைப்படி மறுமணம் செய்து கொள்ளலாம்.

வினா: முன்பு, மன்னர்கள் பல பேர்களை மணந்து கொண்டார்களே, அது சரியா?

விடை: தங்களுடைய இன்பநுகர்ச்சிக்காகப் பல பேர்களை மணந்துகொண்ட மன்னர்கள் லக்ஷியவான்களாக மதிக்கப்பட்டதில்லை. மன்னனாகி விட்டதாலேயே யாரும் லக்ஷிய புருஷனாகி விடுவதில்லை. யார் யார் ஶாஸ்த்ர நூல்களில் கூறப்பட்டபடி நடந்தார்களோ, அறத்தைக் கடைப் பிடித்தார்களோ, அந்த மன்னர்கள் லக்ஷிய மனிதர்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டார்கள்.

உண்மையில் திருமணம் என்பது ஓர் உயர்ந்த விஷயமல்ல. அதற்கு அவஶ்யமும் இல்லை. அவஶ்யமானது எது என்றால் பரமாத்மாவை அடைவதுதான். இதற்காகத்தான் மனித உடம்பு கிடைத்திருக்கிறது. மணம் செய்து கொள்வதற்காக அல்ல. ஆண்-பெண் உறவு என்பது தேவதைகள் முதற்கொண்டு பூத-ப்ரேதம் முதலியன வரையில் நிலையான-ஊர்ந்து செல்கிற ஒவ்வொரு உயிரிலும் ஏற்படுகிறது. ஆகவே இது ஒன்றும் பெருமைக்குரிய விஷயமல்ல. ஆனால் பரமாத்மாவை அடைவதற்கான வாய்ப்பு, உரிமை, தகுதி முதலியன மனிதப்பிறவிக்கு மட்டுமே உண்டு. பரமாத்மாவை அடைவதற்கான உரிமை மனிதனுக்குப் பிறவியிலேயே இருக்கிறது. சிந்தனை மூலமாகத் தன்பாலுள்ள பொருட்பற்றையும், இன்பநுகர்ச்சி வேட்கையையும் விடமுடியாத பலவீனமான மனிதர்களுக்கே திருமணம் விதிக்கப் பட்டிருக்கிறது. புலனின்பங்களை நுகர்ந்து அவற்றில் பற்றினை விடவும், அவற்றில் வைராக்யத்தை உண்டாக்குவதற்காகவுமே குடும்ப வாழ்க்கையில் நுழைய வேண்டும். புலனின்ப பொருட்பற்றை விடமுடியாதவர்களுக்கே பிதிர்க்கடன் உண்டு. அதாவது உபகுர்வாண ப்ரம்மசாரிகளுக்கு வம்ச பரம்பரைத் தொடர் நின்று போகாமல் பார்த்துக் கொள்ளும் பொறுப்பு இருக்கிறது. நைஷ்டிக

ப்ரம்மசாரிக்கும், இறையடியார்க்கும் இல்லை. புலனின்ப விருப்பத்தைக் குறைத்துக் கொள்ள முடியாதவர் பேரிலேயே பிதிர்க்கடன் தங்கி நிற்கும் என்பது கருத்து. எவரிடம் புலனின்ப ஆசை இல்லையோ, அவருக்கு எவ்விதக் கடனும் இல்லை. அவர், கர்மயோகியாகவோ, ஞானயோகியாகவோ, பக்தியோகியாகவோ இருந்துவிடலாம். காரணம், வருமானத்தின் மேல்தான் வருமானவரி விதிக்கப் படுகிறது. பொருளுக்கு விற்பனைவரி உண்டு. எவரிடம் வருமானம் இல்லையோ, அவரிடம் வரிவசூல் எப்படி? சாமானே இல்லாதபோது, விற்பனைவரி என்ற பேச்சுக்கே இடமில்லை.

வினா: பெண், ஏன் மறுமணம் செய்து கொள்ளக் கூடாது?

விடை: தாய்-தந்தையர் கன்னிகாதானம் செய்து கொடுத்துவிட்ட பிறகு, அவளுக்குக் கன்னிகை என்ற பெயரும் போய்விடுகிறது. அதனால் மறுபடியும் அவளைத் தானம் செய்வது என்பது எப்படி இயலும்? அந்த நிலைமையில் அவளுக்கு மறுமணம் என்பது மிருகநெறியே ஆகும்.

ஸக்ருத$_3$ம்ஶோ நிபததி ஸக்ருத்கன்யா ப்ரதீ$_3$யதே ।
ஸக்ருத$_3$ாஹ த$_3$த$_3$ானீதி த்ரீண்யேதானி ஸதாம் ஸக்ருத் ॥
[மனுஸ்ம்ருதி 9/47; மஹாப$_4$ாரதம் வனபர்வம் 294/26]

"குடும்பத்தில் பொருள் முதலானவைகளின் பிரிவினை ஒருமுறை ஏற்படும். கன்னிகை ஒரு தடவைதான் கொடுக்கப்படுகிறாள். "நான் கொடுப்பேன்" - இந்தச் சொல்லும் ஒரு தடவைதான் சொல்லப்படுகிறது. மேலோர்களுக்கு இம்மூன்று செயல்களும் ஒரு தடவை மட்டுமே நிகழ்கின்றன."

ஶாஸ்த்ரம், சமயம், உடலமைப்பு, உலக நடவடிக்கை - இந்நான்கு கோணத்திலிருந்து

பார்த்தாலும் பெண்களுக்கு மறுமணம் சரியானதல்ல. ஶாஸ்த்ரங்களின் நோக்கில் பார்த்தால், ஶாஸ்த்ரங்களில் பெண் மறுமணத்துக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கவில்லை. தர்மத்தின்படி பார்த்தால் பிதிர்க்கடன் என்பது ஆண்களையே சார்ந்தது. பெண்களுக்கு பிதிர்க்கடன் போன்ற எவ்விதமான கடனும் இல்லை. உடலமைப்பின்படி பார்த்தால் பெண்களிடம் காமத்தைத் தடுத்து நிறுத்துவதற்கான வலிமை இருக்கிறது. உள்ளத்தில் உறுதியும் இருக்கிறது. உலக நிலவரங்களின்படி பார்த்தால் மறுமணம் செய்து கொண்டபின், அந்தப் பெண்ணின் முந்தைய குழந்தைகள் எங்கே போகும்? அவைகளை வளர்த்து ஆளாக்குவது யார்? ஏனென்றால் அவள் யாரைத் திருமணம் செய்து கொள்கிறாளோ, அவர் இந்தக் குழந்தைகளைத் தன்னுடையதாக்கிக் கொள்ளமாட்டார். அதனால் பெண்கள் மறுமணம் செய்து கொள்ளாமல் ப்ரம்மசர்யம் ஏற்று கட்டுப்பாட்டுடன் வாழவேண்டும்.

ஒரு பெண்ணுக்கு ஆறேழு குழந்தைகள் பிறந்து அவளுடைய கணவன் இறந்ததன் பின்னர், அவள் ப்ரம்மசர்யம் காத்து வாழ்ந்தால், நைஷ்டிக ப்ரம்மசாரிகள் சென்றடையும் உயர்நிலையினையே அடைகிறாள் என்றுகூட ஶாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியிருக்கும்போது, குழந்தையே இல்லாத ஒருத்தி, கணவனின் மரணத்துக்குப்பின் ப்ரம்மசர்யம் போற்றி வாழ்ந்தால், நைஷ்டிக ப்ரம்மசாரி அடையும் மேல்நிலையை அடைவாள் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

வினா: இளம்நங்கை, கைம்மை அடைந்துவிட்டால் என்ன செய்வது?

விடை: கணவன் உயிருடன் இருந்தபோது எந்த விஷயங்களை நல்லனவாகக் கருதினாரோ, அவருடைய மரணத்துக்குப் பின்னரும் அந்தக்

கைம்பெண், அவைகளுக்கு ஏற்ற மாதிரியே நடக்கவேண்டும். "பகவான் அருளியுள்ள இந்த ஒவ்வாதநிலை, என்னுடைய தவத்துக்காகவே" என்று அவள் நினைக்க வேண்டும். அறிந்து உணர்ந்து செய்யப்படும் தவத்தைக்காட்டிலும் இந்தத் தவம் மிகவும் மேலானது. பகவானுடைய கட்டளைப்படி செய்யப்படும் தவம், புலனடக்கத்துக்கு மிகுந்த பெருமை உண்டு. இப்படி எண்ணிக்கொண்டு, "நான் எப்படிப்பட்ட பாக்யசாலி! இப்படித் தவம் செய்வதற்கான அழகான வாய்ப்பினைக் கடவுள் கொடுத்திருக்கிறாரே!" என்று ஒவ்வொரு வேளையிலும் மனத்தில் புத்துணர்ச்சி கொண்டிருக்க வேண்டும். பாகவதத்தில் இப்படி வருகிறது-

தத்தேऽனுகம்பாம் ஸுஸமீக்ஷமாணோ
பு₄ஞ்ஜான ஏவாத்மக்ருதம் விபாகம் ।
ஹ்ருத்₃வாக்₃வபுர்பி₄ர்வித₃த₄ன்னமஸ்தே
ஜீவேத யோ முக்திபதே₃ ஸ தா₃யபா₄க் ॥

[ஸ்ரீமத்₃பா₄க₃வதம் 10/14/8]

"விநாடிதோறும் மிகுந்த பூரிப்புடன் தங்களுடைய பேரருளை மிக நன்றாக அனுபவித்துக் கொண்டு, ப்ராரப்த வினைக்கேற்ப ஏதோ ஸுகமோ, துக்கமோ கிடைக்கிறதோ, அதை மனம் சலிக்காமல் ஏற்று, அன்பு நிறைந்த உள்ளம், தழுதழுக்கும் சொல், மயிர்க்கூச்சலிடும் ஶரீரத்தோடு தன்னைத் தங்கள் திருப்பாதங்களில் ஸமர்ப்பித்துவிட்டவன் - இப்படிப் பட்ட வாழ்க்கையை கழித்துக் கொண்டிருக்கும் மனிதன், தகப்பனின் சொத்துரிமை மகனுக்கே என்பதுபோல, தங்களுடைய பரமபதத்துக்கு உரிமையுடையவனாகிறான்.

கைம்பெண் தனது நடத்தையை கவனத்துடன் காப்பாற்ற வேண்டும். அவள் பாபகரமான கார்யத்தைச் செய்தால், தான்சார்ந்த இருகுலத்தையும்

மாசுபடுத்துகிறாள்; பண்பாட்டை அழிக்கிறாள்; மரணத்துக்குப்பின் பயங்கரமான நரகத்துக்குப் போகிறாள். ஆதலால் அவள் ஓர் எல்லைக்குள் இருக்கவேண்டும்; அறத்துக்குப் புறம்பான செயல் செய்யக்கூடாது. அன்னை குந்தியைப்போல, அவள் தன்னுடைய கைம்பெண் நெறியைக் கடைப்பிடிக்க வேண்டும். அன்னை குந்தியை நினைவுபடுத்திக் கொள்வதன் மூலம், தன்னுடைய தர்மத்தை அனுஷ்டிப்பதற்கு ஆற்றல் கிடைக்கும்.

வினா: பெண்ணுக்கும், ஆண்களுக்கு நிகரான ஆதிக்க உரிமை அளிக்கப்பட வேண்டும் என்று இப்போது சொல்லப்படுகிறதே, அது சரியா?

விடை: இது சரியல்ல. உண்மையைக் கூறப்போனால், மகளிர்க்கு, [ஆண்களுக்கு] நிகரான அதிகாரம் இல்லை; மாறாக அதிகமாகவே உரிமை இருக்கிறது. காரணம், அவள் தன்னுடைய தந்தை முதலியோரை விட்டுவிட்டுக் கணவன் வீட்டுக்கு வந்திருக்கிறாள். அதனால் வீட்டில் அவளுக்கு அதிகப்படியான உரிமை ஏற்படுகிறது. அவள் வீட்டின் தலைவி; மருமகள் எனப்படுகிறாள். வெளியே, கணவனுக்கு அதிகபடியான ஆதிக்கம் இருக்கிறது. தேர் இரண்டு சக்கரங்களினால் ஊர்ந்தாலும், சக்கரம் இரண்டும் தனித்தனியே இருக்கின்றதைப்போல இரண்டு சக்கரங்களையும் ஒன்றாகச் சேர்த்து வைத்தால், ரதம் எப்படி நகரும்? இரண்டு சக்கரங்களும் தனித்தனியே இருப்பதன் மூலமே தேர் நகர்வதைப்போல, கணவனும், மனைவியும் தனித்தனி சிறப்புரிமை பெற்றிருப்பதாலேயே குடித்தனம் நடக்கிறது. ஒரே மாதிரியான அதிகாரம் கொடுக்கப்பட்டால் பெண்மணியைப்போல ஆடவன் எவ்வாறு சூல் கொள்வான்? ஆகவே தத்தம்

அதிகாரமே, ஸமமான அதிகாரம் ஆகும். இதில் இருவருக்கும் தன்னுரிமை இருக்கிறது.

தங்கள் தங்கள் அதிகாரமே உயர்ந்தது; மேன்மையானது. நமக்குக் கொஞ்சம் உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது; கணவனுக்கு அதிகமான உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது - இந்த எண்ணத்தை வைத்துத்தான் மனத்திற்குள் "நமக்கும் ஸமமான உரிமை கிடைக்கவேண்டும்" என்ற சிந்தனைப்பதிவு ஏற்படுகிறது. இந்தப் பெருவிருப்பத்துக்குக் காரணம் - அறியாமை, முட்டாள்தனம். அறிவுள்ளவராக இருந்தால், சிறிதளவு அதிகாரமே உயர்தரமாகும். கடமைகள் அதிகமாக இருக்கவேண்டும். கடமையின் ஊழியன் அதிகாரம்; அதிகாரத்துக்கு ஏவலாள் கடமையல்ல. தன் கடமைகள் தன்முனைப்போடு செயலாற்றப்பட்டால் குடும்பம், அடியவர்-மஹாத்மா, அறநூல், பகவான் - இவை எல்லா அதிகாரமும் கொடுக்கின்றன.

மேலாண்மை வேண்டும் என்ற ஆசையே பிறப்பு-இறப்புக்குக் காரணம்; அத்துடன் நரகத்துக்கும் இட்டுச் செல்கிறது. ஒரு கோட்டத்தைச் சேர்ந்த நாய், வேறொரு கோட்டத்துக்குப் போனால், அந்தக் கோட்டத்தின் நாய் அதைக் கடிப்பதற்காக ஓடுகிறது. இரண்டு நாய்களும் தங்களுக்குள் சண்டையிடு கின்றன. வந்த நாய் கீழே விழுந்து, காலை மேலே தூக்கி, தாழ்மையை ஒப்புக் கொண்டால், அந்தக் கோட்டத்து நாய் அதன்மேல் ஏறி நின்று ஸமாதானத்தை ஏற்றுக் கொள்கிறது. காரணம், அது அந்தக் கோட்டத்தின்மேல் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கிறது. ஆனால், வந்து சேர்ந்த நாய், அந்தக் கோட்டத்தில் தன்னுடைய ஆதிக்கத்தை செலுத்தியதில்லை. அதன் எதிரில் தன் எளிமையை ஒப்புக் கொள்கிறது. சண்டை நின்று போகிறது.

அதிகமான ஆதிக்க உரிமையைப் பெறவேண்டும் என்ற பேராசை நாய்களுக்குள்ளும் இருக்கிறது. இதேமாதிரியான பேராசை, மனிதர்களிடையேயும் இருக்குமானால், மானுடம் என்ன வேண்டிக் கிடக்கிறது? அதிக அதிகாரத்தைப் பெறவேண்டும் என்ற பேராசை, கீழ்மக்களுக்கு உண்டாகிறது. மேன் மக்களாக இருப்போர், தம்முடைய கடமையை மிக்க ஆர்வத்துடன் ஒருமுனைப்போடு ஆற்றுகிறார்கள். கடமையைச் செய்வதால், அவர்களுடைய அதிகாரம் தானாகவே உயர்நிலையை அடைகிறது.

ஆராய்ந்து பார்த்தால் பெண்களின் அதிகாரம் குறைவாக இல்லை. அவர்கள் வீட்டின் தலைவி, க்ருஹலக்ஷ்மி எனப்படுகிறார்கள். வீட்டிலுள்ள பேர்கள் வெளியே சென்று வேலைவெட்டி செய்கிறார்கள்; அவர்கள் வந்தவுடன் பெண்களிடமே தஞ்சமடைகிறார்கள். பெண்கள் வீட்டிலுள்ள எல்லா பிராணிகளுக்கும் அடைக்கலம் அளிப்பவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் எல்லோருக்கும் பணிவிடை செய்கிறார்கள். எல்லோரையும் காப்பாற்றுகிறார்கள். அதனால், அவர்களுக்கு அதிக அதிகாரம் இருக்கிறது. ஆனால், எப்போது அவர்கள் தம் கடமையிலிருந்து நழுவுகிறார்களோ, அப்போதுதான், மேலும் அதிகாரம் பெறவேண்டும் என்ற பேராசை அவர்கள் மனத்தில் தோன்றுகிறது.

வினா: விலையேற்றமான இந்தக் காலத்தில் பெண்ணும் வேலைக்குப் போவதில் என்ன குற்றம்?

விடை: பெண்ணின் இதயம் மிருதுவானது. அதனால், அவள் வேலையிலுள்ள சிரமம், ஏச்சு, அவமானம் முதலியவற்றைப் பொறுத்துக் கொள்ள முடியாது. மாறுபட்ட விஷயம் சிறிதளவு வந்தாலுமே அவளுக்குக் கண்ணீர் வந்துவிடுகிறது. பணிமனை யில் வேலை என்பதை அடிமைத்தனம் என்றாலும்,

கட்டுப்பட்ட கூலி என்றாலும், கீழ்மை என்றாலும் - எல்லாம் ஒன்றுதான். அடிமைத்தனத்தை ஆண்மகன் பொறுத்துக் கொள்வான்; பெண் பொறுத்துக் கொள்ளமாட்டாள். ஆகவே, வேலை, விவசாயம், வணிகம் முதலியன ஆண்களின் பொறுப்பு; வீட்டுவேலை பெண்மணிகளின் பொறுப்பு. பெண்களுடைய பெருமை, கௌரவம் வீட்டுவேலை செய்வதிலேயே இருக்கிறது. வெளியே வேலைக்குச் செல்வதைப் பெண்கள் அவமதிக்கிறார்கள். மானத்தோடு வருமானம் கிடைக்குமேயானால், அதில் குற்றம் ஏதுமில்லை. அதாவது, அவள் வீட்டிலிருந்த படியே வாழ்க்கைக்கான சம்பாத்யம் செய்யலாம் - ஸ்வெட்டர் பின்னுதல், துணி தைத்தல், ஊசி-நூல் வேலை, எம்ப்ராய்டரி போடுதல், பகவானுடைய படங்களை அலங்கரித்தல் முதலானவைகளைச் செய்யலாம். இப்படிப்பட்ட கார்யங்களைச் செய்வதால், அவள் யாருக்கும் அடிமையாகவோ, சார்ந்திருப்பவளாகவோ ஆவதில்லை.

★

6. மஹாபாபத்திலிருந்து உன்னைக் காத்துக் கொள்

ப்₃ரஹ்மஹத்யா ஸுராபானம் ஸ்தேயம் கு₃ர்வங்க₃நாக₃ம: ।
மஹாந்தி பாதகான்யாஹு: ஸம்ஸர்க₃ஶ்சாபி தை: ஸஹ ॥

[மனுஸ்ம்ருதி 11/54]

பிராமணனைக் கொலை செய்தல், கள் குடித்தல், தங்கம் முதலியவைகளைத் திருடுதல், குருவின் மனைவியோடு உறவு கொள்ளுதல் - இவை நான்கும் மஹாபாபம். இந்த நான்கு மஹாபாபங்களில் ஏதேனும் ஒரு மஹாபாபத்தைச் செய்கிறவனுடன், ஒருவன் மூன்றாண்டு வரை உடனிருந்தால், அந்த

மஹாபாபிக்கு ஏற்படும் பலனே அவனுக்கும் கிடைக்கும்.†

1. பிராமணனைக் கொலை செய்தல்

நான்கு வருணங்களுக்கும் ஆசார்யன் பிராமணன். ***"வர்ணானாம் ப்$_3$ராஹ்மணோ கு$_3$ரு: ।"*** பிராமண ஜாதியார் மூலமாக ஶாஸ்த்ர அறிவெனும் ஒளி எவ்வளவு உண்டாகியிருக்கிறதோ, அத்தனை ஒளி வேறு எந்த ஜாதிக்காரர்கள் மூலமாகவும் ஏற்படவில்லை. அதனால், பிராமணனைக் கொல்வது மஹாபாபம். இவ்விதமே, எவரால் உலகத்துக்கு நன்மை உண்டாகிறதோ, அப்படி நற்பணி புரிவோரையும், கடவுள் பக்தர்களையும், பசு முதலியவைகளைக் கொல்வதும் மஹாபாபம். காரணம் என்னவென்றால், எவர்மூலமாக மற்றவர்களுக்கு எவ்வளவு அதிகமான நன்மை ஏற்படுகிறதோ, அப்படிப்பட்டவரைக் கொல்வதால் அந்த அளவுக்குப் பாபமும் அதிகமாக ஏற்படுகிறது.

2. கள் குடித்தல்

புலால், முட்டை, புகைப்பிடித்தல், போதை முதலிய தூய்மையில்லாததும், மயக்கம் தருவதுமான பொருட்களை அருந்துவது பாபமாகும். ஆனால் கள் குடித்தல் மஹாபாபமாகும். காரணம், மனிதனுடைய உள்ளத்தில் உள்ள நல்லுணர்வுகளையும், அறத்தின்பாலுள்ள ஈடுபாடு, ஸம்ஸ்காரத்தையும் குடிப்பழக்கம் அழித்துவிடுகிறது. இதனால் மனிதன் மாபெரும் வீழ்ச்சியை நோக்கிப் போகிறான்.

கள் தயாரிப்பில் எண்ணிறந்த உயிர்களின் கொலை நடக்கிறது. கங்கை நதி எல்லாவற்றையும் சுத்தப்படுத்தும். ஆனால் கங்கை நதியில் கள் வைத்திருந்த பாத்திரத்தைக் கழுவினால், அது

---

† *ஸ்தேனோ ஹிரண்யஸ்ய ஸுராம் பிப$_3$ம்ச்ச கு$_3$ரோஸ்தல்பமாவஸன் ப்$_3$ரஹ்மஹா சைதே பதந்தி சத்வார: பஞ்சமச்சாசரம்ஸ்தைரிதி ॥ [ச$_2$ாந்தே$_3$ாக்$_3$ய உபநிஷத் 5/10/9]*

சுத்தமாகிறதில்லை. கள் வைத்திருந்த பாத்திரமே இவ்வளவு கெட்டுப் போகுமானால், கள்ளைக் குடிப்பவன் எவ்வளவு கெட்டுப் போவான் - இதற்கு எல்லையே இல்லை. முஸல்மான்களின் மதத்தில், இந்த விஷயம் கூறப்பட்டிருப்பதாக நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அதாவது ஶரீரத்தின் எந்த உறுப்பில் கள் ஒட்டிக் கொள்கிறதோ, அந்த உறுப்பின் தோலை வெட்டி எறிந்துவிட வேண்டும்.

வினா: இப்போது ஆங்கில முறை மருந்துகளில் மயக்கப்பொருள் சேர்க்கப்படுகிறது. உடல் நலத்துக்காக, மருந்து என்ற வடிவத்தில் அவைகளை அருந்துவது மஹாபாபமாகி விடுமா?

விடை: எவைகளில் மயக்கப் பொருள் உள்ளதோ, அந்த மருந்துகளை உண்பதால் மஹாபாபம் ஏற்படத்தான் செய்யும்.

வினா: குடும்பத்தில் ஒருவர் கள் குடிக்கிறார். அவருடன் கூடவே இருப்பதால், குடும்பத்தில் எல்லோருக்கும் மஹாபாபம் ஏற்படுமா?

விடை: இல்லை. குடும்பத்தார்களின் பார்வையில், அவர் அந்தக் குடும்பத்துக்காரர். ஆதலால் அவர்கள் கள் குடிப்பவரோடு உடனிருப்பவர்கள் அல்லர். மாறாக, அவரைச் சார்ந்து இருப்பதால், அவருடன் உறவு கொண்டுள்ளார்கள். கணவன் கள் குடிக்கிறான்; மனைவி இரவு-பகலாய் அவனுடன் இருக்க வேண்டியிருக்கிறது என்றாலும், மனைவிக்கு மஹாபாபம் ஏற்படுவதில்லை. ஏனென்றால் அவள் குடிகாரனோடு உறவு கொள்ளவில்லை; ஆனால் கட்டுப்பட்டவள். ஆதலால் கணவனுடன் இருக்கிறாள். மனமொப்பி உறவாடுவதன் மூலமே தீய உறவின் குற்றம் ஏற்படும்.

வினா: முன்பு அறியாமையினால் கள் குடித்து வந்தவன், இப்போது தெளிவு பெற்றுவிட்டான் எனில், மஹாபாபத்திலிருந்து எவ்வாறு சுத்தப்படுத்திக் கொள்வது?

விடை: அவன் உண்மையான உள்ளத்தோடு வருத்தப்பட்டு கள் குடிப்பதை அடியோடு விட்டுவிட வேண்டும்; "இன்று முதல், இனி ஒருபோதும் கள் குடிக்க மாட்டேன்" என்று உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும். இப்படிச் செய்தால் அவனுடைய பாபம் மன்னிக்கப்படும். ஜீவன் சுயமாகத் தூய்மையுடையது. ஆதலால், ***"சேதன அமல ஸஹஜ ஸுக$_2$ராஸீ ।"*** மாசுகளைக் களைந்தவுடன், அத்துடன் நிரந்தரமாக உள்ள தூய்மை அடையப்பட்டு விடுகிறது; அது சுத்தமாகிறது.

3. களவு

எந்த ஒரு பொருளையும் திருடுவது பாபம். ஆனால் தங்கம், வைரம் முதலிய விலையுயர்ந்த பொருட்களைத் திருடுவது மஹாபாபம். எந்தப் பொருளுக்கு எத்தனை அதிக விலைமதிப்பு இருக்கிறதோ, அந்தப் பொருளைத் திருடுவது அந்த அளவுக்குப் பாபம்.

4. குருவின் மனைவியோடு உறவு கொள்ளல்

விந்து [ப்ரம்மசர்ய] அழிவுக்கு எத்தனை வழிகள் உண்டோ, அவை அனைத்துமே பாபம்தான்†. அதிலும்,

---

† விந்துவின் ஒரு துளியில் ஆயிரக்கணக்கான உயிர்கள் உள்ளன. பெண்ணுறவில் வெளியேறும் விந்துவில் கர்ப்பப்பைக்குப் போய்ச் சேரும் உயிரணு மட்டுமே கர்ப்பமாகிறது. மற்ற எல்லா உயிரணுக்களும் இறந்து போகின்றன. அந்தக் கொலைபாபம் ஏற்படுகிறது. பிள்ளை பெறவேண்டும் என்ற நோக்குடன் மட்டும், மாதவிலக்குக்குப் பின் பெண்ணுறவு கொள்வதில் பாபம் ஒட்டுவதில்லை. [பாபம் உண்டாகிறது; ஆனால், ஒட்டிக் கொள்வதில்லை.] ஏனென்றால், அது ஶாஸ்த்ரத்தின், தர்மத்தின் அனுமதி பெற்றது. ***"ஸ்வப$_4$ாவநியதம் கர்ம குர்வந்நாப்னோதி கில்பி$_3$ஷம் ॥" [கீ$_3$தா 18/47]; "த$_4$ர்மாவிருத்$_3$தே$_4$ா பூ$_4$தேஷு காமோऽஸ்மி" [கீ$_3$தா 7/11].*** ஆனால், இன்பநுகர்ச்சிக்காக பெண்ணுறவு கொண்டால், அந்த உயிரணுக்கொலையின் பாபம் ஏற்படவே செய்யும்

एक बार भग भोग ते, जीव हते नौ लाख ।
जन मनोर नारी तजी, सुन गोरख की साख ॥

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

குருவின் மனைவியைப் புணர்தல் மஹாபாபம். நமக்குக் கல்வியைக் கொடுக்கிற, நம்முடைய வாழ்க்கையை மாசற்றதாக ஆக்குகிற ஆசார்யருடைய மனைவி, அன்னையைக்காட்டிலும் உயர்ந்தவர். அதனால், அவரிடம் முறைகேடாக நடப்பது மஹாபாபம்.

பிற பெண்களோடு உடலுறவு கொள்வதும் பெரும் பாபம்தான்; அதனால்தான் இதை விபசாரம் - விசேஷ அபிசாரம் [ஹிம்ஸை] - என்று சொல்லப்பட்டிருக்கிறது. கணவன் பிற பெண்ணோடு உறவு கொண்டாலும், மனைவி வேறு ஆடவனுடன் உறவு கொண்டாலும், அம்மா-அப்பா, ஸஹோதர-ஸஹோதரி முதல், மாமனார் வீட்டில் மாமனார், மாமியார், மைத்துனர் முதலியோருக்கும் துயரம் உண்டாகிறது. இவ்விதம், இரண்டு குடும்பத்தாருக்கும் துயரம் கொடுப்பது பாபம். மேலும், தடை செய்யப்பட்டுள்ள இன்பங்களை அனுபவிப்பதால், ஶாஸ்த்ரம், தர்மம், சமுதாயம், குலம் முதலியவைகளின் கௌரவத்தைக் குலைப்பதும் பாபம். இந்த இரண்டு பாபங்களும் ஒன்றாகவே நிகழ்வதால், பிற பெண்ணுறவு அல்லது பிற ஆணுறவு கொள்வது விசேஷமான அபிசாரம் [தவறு]; மஹாபாபம். "வேறு பெண்ணுடன் உடலுறவு கொள்வதால், மனத்தில் உள்ள தெய்வநம்பிக்கை அழிந்து போகிறது. பேரழிவுக்கு முக்கிய காரணமான அவநம்பிக்கை வந்து சேர்கிறது" என்று தன்னுடைய அனுபவத்தை அறிவாளியான ஒரு பெரிய மனிதர் கூறியிருக்கிறார்.

ஹிந்து, முஸல்மான், கிறிஸ்தவர் ஆகிய யாராக இருந்தாலும், இப்படிப்பட்ட பெரும்பாபங்களை விலக்கிவிட வேண்டும். பின்னால், கீழ்ப்பிறவி ஏற்படாவண்ணம், பூத-ப்ரேத பிறவியை அடையாத வண்ணம், குறைந்தபட்சம் மஹாபாபங்களிலிருந்து காத்துக் கொண்டால்தான், மனித உடல் பெற்றது பயனுடையதாகும்.

கருச்சிதைவு, மஹாபாபத்தைப்போல் இருமடங்கு பாபம்

பிராமணனைக் கொல்வது எப்படி மஹாபாபமோ, அப்படியே கருச்சிதைவும் மஹாபாபம். ஶாஸ்த்ரத்தில், ப்ரம்மஹத்தியைப்போல், கருச்சிதைவு இருமடங்கு பாபகரமானது என்று சொல்லப்பட்டிருக்கிறது-

யத்பாபம் ப்₃ரஹ்மஹத்யாயா த்₃விகு₃ணம் க₃ர்ப₄பாதனே ।
ப்ராயஶ்சித்தம் ந தஸ்யாஸ்தி தஸ்யாஸ்த்யாகோ₃ விதீ₄யதே ॥

[பராஶரஸ்ம்ருதி 4/20]

"பிராம்ணனைக் கொல்வதால் எவ்வளவு பாபம் ஏற்படுகிறதோ, அதைப்போல் இருமடங்கு பாபம் கருச்சிதைவு செய்வதால் ஏற்படுகிறது. கருச்சிதைவு செய்ததால் ஏற்பட்ட மஹாபாபத்திற்கு எவ்வித ஶாந்திபரிஹாரமும் இல்லை. ஆகவே கருச்சிதைவு செய்யவே கூடாது."

பகவான் மிகவும் அன்புடன், ஜீவனுக்கு மனித உடலைத் தருகிறார். கருத்தடை, ஆபரேஷன், கருச்சிதைவு, லூப், கர்ப்பத்தடுப்பு மருந்து முதலியவை மூலமாக ஜீவன், மனித உடல் எடுக்கவிடாமை, தன்னுரிமையற்ற அந்த ஜீவன், பிறப்புகூட அடையவிடாமை, பிறப்பதற்கு முன்பே அழித்துவிடுதல் முதலியவை மிகப் பெரிய பாபச் செயல்கள். எந்தக் குற்றமும் செய்யாத அந்த ஆதரவற்ற ஜீவனைக் கொன்று போடுவது, அதற்கு இழைக்கப்படும் படுமோசமான அநியாயம் அல்லவா? அந்த ஜீவன் மனித ஶரீரம் எடுத்து, என்னென்ன நல்ல கார்யங்கள் செய்வதாக இருந்ததோ, சமுதாயத்துக்குப் பணி செய்வதாக இருந்ததோ, தன்னை உயர்த்திக் கொள்வதாக இருந்ததோ! ஆகவே பிறவி எடுப்பதற்கு முன்பே அதனை அழிப்பது என்பது பயங்கரமான அநீதி, மிகப் பெரிய பாபம். தன்னுடைய ஆன்மிக உயர்வு, நன்மைக்கான செயல்கள் செய்யாததே

குற்றம், பாபம் என்றால் மற்றவர் உயர்வுக்கான வாய்ப்புக் கொடுக்காமலிருப்பது எவ்வளவு பெரிய பாபம்? இத்தகைய மஹாபாபம் செய்கிற ஆண்-பெண்களுக்கு அடுத்து வரும் பிறவிகளில் குழந்தைகளே பிறக்காது. அவர்கள் குழந்தை பெறாமல் பல பிறவிகளுக்கு அழுது கொண்டேயிருப்பார்கள்.

ஒரு யஜமானர், நல்ல வேலைக்காரர்களை வேலை நீக்கம் செய்து கொண்டிருந்தால், பிறகு, அவருக்கு நல்ல பணியாளர்கள் கிடைப்பதில்லை. அது போலவே, நல்ல யஜமானர்களைவிட்டு வேலைக் காரன் விலகிக் கொண்டிருந்தால், பிறகு அவனுக்கு நல்ல யஜமானரே கிடைப்பதில்லை என்பதைக் கண்கூடாகப் பார்க்கிறோம். நல்ல பக்தர்களையும், ஞானிகளையும் அடைந்தும், எவனொருவன், தன்னை மேம்படுத்திக் கொள்ளவில்லையோ, அவனுக்கு அப்படிப்பட்ட நல்லுறவு கிடைக்காமல் போகும். எவர்களால் நன்மை உண்டாகியிருக்கிறதோ, அப்படிப்பட்ட மேலான துறவிகளை விலக்குகிறவன், அவர்களை இகழ்பவன், வெறுப்பவன் எவனோ, அவனுக்கு மீண்டும் அப்படிப்பட்ட பெரியோர்கள் கிடைக்க மாட்டார்கள். தாய்-தந்தையர் மகிழ்ச்சியுடன், பிள்ளைக்கு இனிப்புப் பண்டம் கொடுக்கிறார்கள். அவனோ, அந்த இனிப்புப் பண்டத்தைத் தின்னாமல் சாக்கடையில் எறிகிறான். இதற்குப் பின்னர், பெற்றோர்கள் அவனுக்கு இனிப்புக் கொடுப்பதில்லை அல்லவா, அதுபோலத்தான். அவ்விதமே பகவான் பேரன்புடன் மனித உடலைக் கொடுத்தும், மனிதன், அந்த உடலைக் கொண்டே பாபம் செய்கிறான், தவறாகப் பயன்படுத்துகிறான் என்றால், அவனுக்கு பகவான் மறுபடியும் மனுஷ்ய ஶரீரம் கொடுக்கமாட்டார். தாய்-தந்தையர் குழந்தைக்கு

மறுபடியும் இனிப்புக் கொடுக்கலாம், அறியாப்பிள்ளையாயிற்றே என்று நினைத்து. ஆனால் அறிந்து பாபம் செய்கிறவனுக்கு பகவான் மறுபடி மனிதப்பிறவி கொடுக்கமாட்டார். இவ்விதமே, கர்ப்பச்சிதைவு செய்கிறவர்களுக்கு, பின்வரும் பிறவிகளில் பிள்ளைப்பேறு ஏற்படாது.

உலக உற்பத்தியின் துவக்கத்தில் பகவான் ஸ்ரீக்ருஷ்ணரின் சின்மயீ சக்தி மூல ப்ரக்ருதி [ஸ்ரீராதா], தன்னுடைய கர்ப்பத்தைப் ப்ரும்மாண்ட கோளத்தின் ஆழங்காண முடியாத நீர்நிலையில் எறிந்துவிட்டாள். இதைக் கண்டு பகவான், அவளுக்குச் சாபம் கொடுத்தார்- "இன்று முதல் உனக்குப் பிள்ளைப்பேறு உண்டாகாது. இது மட்டுமல்ல, உன்னுடைய அம்ஶமாகப் பிறக்கும் தெய்விகப் பெண்களுக்கும் குழந்தைப்பேறு உண்டாகாது†." இதற்குப் பிறகு மூலப்ரக்ருதி தேவியினுடைய நாக்கின் நுனியிலிருந்து ஸரஸ்வதி வெளிப்பட்டாள். பின்னர், சிறிது காலம் கழிந்ததும், அந்த மூலப்ரக்ருதி இரண்டு வடிவங்களாகத் தோற்றமளித்தாள். வலது பக்கத்தில் தோன்றியவள் "லக்ஷ்மி"யாகவும், இடது பக்கத்தில் தோன்றியவள் "ராதை"யாகவும் ஆனார்கள். பகவான் ஸ்ரீக்ருஷ்ணரும் அப்போது இரண்டு வடிவங்களில் வெளிப்பட்டார். வலது பாதியில் தோன்றியவர்

---

† *த்3ருஷ்ட்வா டி3ம்ப3ஞ்ச ஸா தே3வீ ஹ்ருத3யேன விபூ4ஷிதா ।*
உத்ஸஸர்ஜ ச கோபேன ப்3ரஹ்மாண்ட3ம் கே3ாலகே ஜலே ॥
த்3ருஷ்ட்வா க்ருஷ்ணஶ்ச தத்த்யாக3ம் ஹாஹாகாரம் சகார ஹ।
ஶஶாப தே3வீம் தே3வேஶஸ்தத்க்ஷணம் ச யதே2ாசிதம் ॥
யதோऽபத்யம் த்வயா த்யக்தம் கோபஶீலே ஸுநிஷ்டு2ரே ।
ப4வத்வமனபத்யாபி சாத்3யப்ரப்4ருதி நிஶ்சிதம் ॥
யா யாஸ்த்வத3ம்ஶரூபா ச ப4விஷ்யந்தி ஸுரஸ்த்ரிய: ।
அநபத்யாஶ்ச தா: ஸர்வாஸ்தத்ஸமா நித்யயௌவனா: ॥
[ப்3ரஹ்ம வைவர்த புராணம்.ப்ரக்ருதி० 2/50-53]

"நான்கு கையுடைய விஷ்ணு"வாகவும், இடது பாதியில் தோன்றியவர் "இரண்டு கையுடைய க்ருஷ்ண"னாகவும் ஆனார்கள்*. அப்போது, பகவான் ஸ்ரீக்ருஷ்ணர், லக்ஷ்மி-ஸரஸ்வதி ஆகிய இருதேவியரையும் விஷ்ணுவுக்குப் பணிவிடை செய்யுமாறு ஆணையிட்டார். மூலப்ரக்ருதியிலிருந்து தோன்றியதால், லக்ஷ்மிக்கும், ஸரஸ்வதிக்கும் மகப்பேறு ஏற்படவில்லை†. இதற்குப் பிறகு ஸ்ரீக்ருஷ்ணரின் மயிர்க்கால்களிலிருந்து எண்ணற்ற கோபர்கள் வெளிப்பட்டார்கள். அவ்விதமே, ஸ்ரீராதையின் ரோமக்கால்களிலிருந்து எண்ணற்ற கோப கன்னிகைகள் தோன்றினார்கள். பகவானுடைய சாபத்தின் காரணமாக, இந்தக் கோப கன்னிகைகளுக்கும் மகப்பேறு உண்டாகவில்லை‡. இந்தக் கதையிலிருந்து தெளிவாகிற விஷயம் என்னவென்றால், எந்தப் பெண், கர்ப்பத்தைச் சிதைக்கிறாளோ, அவள் வருகிற பிறவிகளில் பிள்ளைப்பேறாகிய இன்பத்தைக் காண்பதில்லை.

வினா: கருச்சிதைவு செய்த பெண்கள் மீண்டும் கர்ப்பமுறுகிறார்கள்; குழந்தைப் பெற்றுக் கொள்கிறார்கள் என்பதைப் பார்க்கிறோம். அதனால்,

---

* அத$_2$ காலாந்தரே ஸா ச த்$_3$வித$_4$ரூபா ப$_3$பூ$_4$வ ஹ ।
வாமார்த்$_3$த$_4$ாங்க$_3$ா ச கமலா த$_3$க்ஷிணார்த்$_3$த$_4$ா ச ராதி$_4$கா ॥
ஏதஸ்மின்னந்தரே க்ருஷ்ணோ த்$_3$வித$_4$ரூபோ ப$_3$பூ$_4$வ ஹ ।
த$_3$க்ஷிணார்த்$_3$த$_4$ஶ்ச த்$_3$விபு$_4$ஜோ வாமார்த்$_3$த$_4$ஶ்ச சதுர்பு$_4$ஜ: ॥
[ப்ரக்ருதி॰ 2/56-57]

† அனபத்யே ச தே த்$_3$வே ச யதோ ராத$_4$ாம்ஶஸம்ப$_4$வா: ।
[ப்ரக்ருதி॰ 2/60]

‡ ராத$_4$ாங்க$_3$லோமகூபேப்$_4$யோ ப$_3$பூ$_4$வுர்கோ$_3$பகன்யகா: ।
ராத$_4$ாதுல்யாஶ்ச ஸர்வாஸ்தா: ராத$_4$ாதுல்யா: ப்ரியம்வத$_3$ா: ॥
ரத்னபூ$_4$ஷணபூ$_4$ஷாட்$_4$யா: ஶஶ்வத் ஸுஸ்தி$_2$ரயௌவனா: ।
அனபத்யாஶ்ச தா: ஸர்வா: பும்ஸ: ஶாபேன ஸந்ததம் ॥
[ப்ரக்ருதி॰ 2/64-65]

கருச்சிதைவு செய்து கொண்டவர்களுக்கு, மீண்டும் மகப்பேறு உண்டாகாது என்பதை எப்படி ஏற்றுக் கொள்வது?

விடை: இந்தப் பிறவிக்கான ப்ராரப்த வினை தொடங்கியாகிவிட்டது. அந்த ப்ராரப்த வினைக்கேற்ப அவர்களுக்கு மகப்பேறு உண்டாகக்கூடும். ஆனால், அடுத்தப் பிறவியில் [புதிய ப்ராரப்த வினை தொடங்கியதும்] அவர்களுக்குக் குழந்தைப்பேறு உண்டாகாது. இந்தப் பிறவியில் செய்யப்பட்ட கருச்சிதைவு என்னும் மஹாபாபத்தின் பயனை, அவர்கள் அடுத்த ஜன்மங்களில் அனுபவிக்க வேண்டும்.

வினா: கரு நழுவுதல், கருச்சிதைவு, சிசுக்கொலை - இம்மூன்றுக்கும் உள்ள வேறுபாடு என்ன?

விடை: கருப்பையில் உயிரணு உடலாக உருவெடுக்கும் முன்னரே, சுக்ல-சோணிதம் வெளியேறிவிட்டால், அதனைக் கரு நழுவுதல் என்கிறார்கள். கருப்பையில் உடல் உருவாக ஆரம்பித்தபின் அதை வெளியேற்றினால், அது கருச்சிதைவு எனப்படுகிறது. கருப்பையில் உள்ள உயிருக்கு கை, கால், தலை முதலிய உறுப்புக்கள் தோன்றி, "இது ஆண் குழந்தை" அல்லது "இது பெண் குழந்தை" என்ற வேற்றுமை தெளிவாக உண்டாகத் தொடங்கும்போது, அதை வீழ்த்துதல் சிசுக்கொலை எனப்படுகிறது. கருக்கலைப்பு, கருச்சிதைவு, சிசுக்கொலை - இம்மூன்றையும் எந்த முறையில் செய்தாலும் மஹாபாபம் ஏற்படுகிறது. ஆனால், தானாகவே கர்ப்பம் நழுவி விழுந்தால், அதனால் பாபம் ஏற்படாது. உலகத்தில் அநேக உயிர்கள் தாமாகவே இறந்து போகின்றன. ஆனால் அந்தப் பாபம் நம்மைச் சேர்வதில்லை. ஏனென்றால் நாம்

அவைகளை கொல்லவும் இல்லை; கொல்ல விரும்பவும் இல்லை.

***வினா:* கருப்பையில் ஜீவன் [உயிர்] தங்கியிருக்கவில்லை; பின்னர்தான் வருகிறது. அப்படியிருக்கையில், கருச்சிதைவு என்ற பாபம் எப்படி ஏற்படும்?**

விடை: ஆடவனுடைய வீர்யத்தின் ஒரு துளியில் ஆயிரக்கணக்கான உயிர்கள் உள்ளன. அவைகளில் எந்த உயிர், சோணிதத்துடன் ஒட்டிக்கொண்டு கருப்பையை அடைகிறதோ, அதுவே வளர்ந்து கருவாக ஆகிறது. உயிரணு இல்லாமல், வீர்யம் சோணிதத்துடன் ஒட்டிக் கொள்ளவும் இயலாது; கரு வளரவும் இயலாது. உயிரணுவில் ப்ராணசக்தி முதலில் உள்ளுறையாக மறைந்திருக்கிறது. கர்ப்பப்பையில் வந்தவுடன் உயிராற்றல் திடமாக மாறுகிறது; கரு வளர ஆரம்பிக்கிறது. கரு வளரும்போது ப்ராணசக்தி சிறப்பாகத் தெரிய ஆரம்பிக்கிறது; கர்ப்பத்தில் அசைவு ஏற்படுகிறது. அப்போது "கர்ப்பத்தில் உயிர் வந்துவிட்டது" என்று மக்கள் சொல்கிறார்கள்.

***வினா:* ஒருத்தியினுடைய கரு, தானாகவே விழுந்துவிட்டால்?**

விடை: இது ஒரு நோய். இதற்கான சிகிச்சை பெறவேண்டும். ஒரு பெண்ணின் ஐந்தாறு கரு விழுந்துவிட்டது. ஒரு பெரியார், அவளுடைய குடும்பத்தாரிடம், "அவள் கருப்பையில் உஷ்ணம் அதிகமாக இருப்பதால் கரு வெந்துபோய் விழுந்துவிடுகிறது; இதற்கு ஏதேனும் வழி செய்" என்று சொன்னார். அவள் கருவுற்றதும், இம்மாதிரியாகப் பசும்பால் குடிக்கச் செய். பால் கறப்பவன் ஒரு பாத்திரத்தைத் துணியால் மூடவேண்டும்; துணியின் மேல் குழைவாகப் பொடி

செய்யப்பட்ட கற்கண்டை வைக்கவேண்டும். அதன் மேல் பசுவைக் கறக்கவேண்டும். அதாவது, கற்கண்டுப் பொடி, பாலுடன் கலந்து, பாத்திரத்தை அடையவேண்டும். பசு எதிரிலேயே அமர்ந்து கறப்புச்சூட்டுடன்கூடிய பாலை அப்போதே, அந்தப் பெண் நாள்தோறும் காலையில் வெறும் வயிற்றில் ஒரு மாத காலம் அருந்த வேண்டும். அந்தப் பெரியார் கூறியபடி அந்தப் பெண் பால் குடித்தாள்; கரு சிதையவில்லை; அவளுக்கு மகப்பேறு உண்டாயிற்று. அந்தக் குழந்தை இப்போதும் உயிரோடிருக்கிறது.

இந்த நோயை நீக்குவதற்குப் பல மருந்துகள் உள்ளன. திறமையான, அனுபவம் பெற்ற ஆயுர்வேத வைத்தியரிடமிருந்து அவைகளைப் பெறவேண்டும்.

வினா: ஒரு நோயின் காரணமாக கருச்சிதைவு செய்விப்பது இன்றியமையாததாகிவிட்டால், என்ன செய்வது?

விடை: கருச்சிதைவு செய்வதால் உண்டாகும் பாபம் ஏற்படத்தான் செய்யும். பெண் பிழைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகக் கருச்சிதைவு செய்விப்பதற்கு மக்கள் உடன்படுகிறார்கள். ஆனால், இப்படிச் செய்யாமல், தகுந்த சிகிச்சை அளிக்க வேண்டும். எது நடக்க வேண்டுமோ, அது நடக்கத்தான் போகிறது. பெண் மரணமடைய வேண்டும் என்றிருந்தால், கர்ப்பத்தைக் கலைத்தாலும் அவள் மரணமடையத்தான் செய்வாள். அவளுக்கு இன்னும் ஆயுள் இருந்தால், கர்ப்பத்துக்குச் சேதம் விளைவிக்காமல் இருந்தாலும் அவள் மரணமடைய மாட்டாள். இறப்பு என்பது உரிய காலம் வந்ததும் ஏற்படவே செய்யும் - காரணம் எதுவாக இருந்தாலும் சரி. ஆகவே ஒருபொழுதும் கருச்சிதைவு செய்விக்கக் கூடாது.

வினா: கன்னிப்பருவத்தில் கர்ப்பமுற்றால், அதைக் கலைக்கலாமா, கூடாதா?

விடை: எவனுடைய உறவினால் கருத்தரித்தாளோ, அவனுக்கே திருமணம் செய்து கொடுத்துவிட வேண்டும். திருமணம் செய்ய முடியாமற்போனாலும், அந்தக் கருவை அழித்துவிடக் கூடாது. அதைப் பாதுகாத்து, குழந்தை கொஞ்சம் வளர்ந்ததும் அனாதை இல்லத்தில் சேர்த்துவிட வேண்டும்; அல்லது யாரேனும் தத்து எடுத்துக் கொள்ள விரும்பினால், அதைக் கொடுத்துவிட வேண்டும்.

ஒரு கன்னிப்பெண்ணிடம் முரட்டுத்தனமாக நடந்துகொண்டால், அந்த முரடனுக்கு மிகவும் பாபம் ஏற்படுகிறது. கன்னிப்பெண் புணர்ச்சி இன்பத்தை நுகர்ந்திருந்தால், அந்த அளவுக்கு அவளுக்கும் பாபம் ஸம்பவிக்கும். ஏனென்றால் எல்லாப் பாபமும் இன்பநுகர்ச்சி ஆசையால்தான் ஏற்படுகிறது.

கன்னிப்பெண் கர்ப்பமடைந்தால், அவளுடைய தாய்-தந்தையருக்கும், கவனக்குறைவு என்ற காரணத்தால் பாபம் ஏற்படுகிறது. ஆதலால், ஆரம்பத்திலிருந்தே, பெண்ணுக்குத் தன்னுரிமை கொடுக்காமல், நன்றாகப் பாதுகாத்து மிகுந்த கவனத்துடன் இருப்பது பெற்றோரின் கடமையாகும்.

வினா: ஊர் ஜனங்களுக்குத் தெரிந்துவிட்டால், அந்தப் பெண்ணுக்குக் கெட்ட பெயர் ஏற்படும்; யாரும் அவளை மணந்து கொள்ள மாட்டார்கள். அப்போது அவள் என்ன செய்வது?

விடை: பாபம் செய்தாகிவிட்டது என்கையில், அவப்பெயரைத் தாங்கிக் கொள்ள வேண்டியதுதான். கருவைச் சிதைத்தல், தற்கொலை செய்து கொள்வது, வீட்டிலிருந்து ஓடிப்போவது ஆகிய மூன்று கொலைகளிலிருந்து [பாபத்திலிருந்து] தப்பு

வதற்காகக் கெட்ட பெயரை ஏற்பதே தேவலை. அந்தக் கன்னியை மணந்து கொள்ள யாரும் முன் வரவில்லையென்றால், அவள் வீட்டில் உட்கார்ந்து கொண்டு பக்தி-பஜனை பண்ணட்டும். இதனால், அவளுடைய பாபத்துக்குப் பரிஹாரம் செய்ததாகவும் ஆகும்.

***வினா:* திருமணமான பெண்ணிடம் வலுக்கட்டாயம் செய்து, அதனால் அவள் கருத்தரித்தால் என்ன செய்வது?**

விடை: முடிந்த வரையில் அந்தப் பெண் வாயை மூடிக் கொண்டிருப்பதுதான் சிறந்தது. கணவனுக்கு விஷயம் தெரிந்துவிட்டால், அவனும் வாயைத் திறக்கக் கூடாது. இருவரும் மௌனமாக இருந்தால்தான் நன்மை. உண்மையில், இப்படிப்பட்ட ஸம்பவம் நிகழாவண்ணம் ஆரம்பத்திலிருந்தே கவனமாக இருந்திருக்க வேண்டும். கருவைச் சிதைப்பதை நாம் அனுமதிக்க மாட்டோம். காரணம், கருவைக் கொல்வது மஹாபாபம்.

***வினா:* கருத்தடை, ஆபரேஷன் செய்து கொள்வதில் என்ன தவறு?**

விடை: கருத்தடை செய்து கொண்டவர்களில் பெரும்பாலோருக்கு உடலும், இருதயமும் பலவீனப்பட்டுப் போகின்றன என்பதைக் கண் முன்னாலே பார்க்கிறோம். அவர்களுடைய உடம்பில் பலவித நோய்கள் தோன்றியுள்ளன; இருக்கின்றன; ஏற்பட்டு கொண்டேயிருக்கும். எருதாகச் செய்யப்பட்டுவிட்ட கன்றுகளிடம் ஆண்மை அழிந்து போவதால், அவற்றின் மாமிசத்தில் எருதாக மாற்றப்படாத கன்றுகளின் மாமிசத்தில் உள்ள அளவுக்கு சக்தி இல்லை என்பதையும் காண்கிறோம். அதனால் காயடிக்கப்பட்ட கன்றுகளின் மாமிசம், ஈராக், ஈரான் முதலிய நாடுகளில் மலிவாக

விற்கப்படுகின்றது என்றும், காயடிக்கப்படாத கன்று மாமிசம் அதிக விலைக்கு விற்கப்படுகிறது என்றும் நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆதலால், கருத்தடை செய்து கொள்வதன் மூலமாக ஆண்மையைத் தடுத்து நிறுத்துவதால், ஆண்மையை இழப்பதால், உடம்பின் பலம் குறைகிறது; மகிழ்ச்சி, பயமின்மை முதலிய மனோபலமும் போய்விடுகிறது.

கருத்தடை மூலமாகத் தன்னுடைய ஆண் தன்மையை இழக்கச் செய்கிறவர்கள் நபும்ஸகர்கள் [அலிகள்]. அவர்கள் மூலமாக பிதிரர்களுக்குச் சோறு-தண்ணீர் போய்ச் சேராது†. இத்தகைய நபர்களைப் பார்ப்பதுகூட அமங்கலமானதாகக் கருதப்படுகிறது. பிரயாணம் புறப்படும்போது இம்மாதிரி நபர் பார்த்தால், அது அபசகுனம் ஆகும்.

கருத்தடை ஆபரேஷன் செய்து கொள்ளும் பெண்களில் பெரும்பான்மையோருக்குச் சிவப்பு-வெள்ளைத் தழும்புகள் தோன்றியுள்ளன. இதற்குச் சிகிச்சையே கிடையாது. ராஜஸ்தானில் கருத்தடை ஆபரேஷனால், இதுவரை நூற்றுக்கணக்கான பெண்கள் இறந்துவிட்டிருக்கிறார்கள். பலருக்கு மேலே சொன்ன நோய் வந்திருக்கிறது. இதற்கெல்லாம் மருத்துவர்கள் பதில் சொல்லி இருக்கிறார்கள். இந்தத் தகவல் செய்தித்தாள்களிலும் வந்திருக்கிறது. ஆபரேஷன் செய்து கொள்வதால் பெண்களுக்கு உடல்நலம் குறைகிறது; உட்கார்ந்து - எழுந்திருக்கும்போது கண்களின் எதிரில் இருள் சூழ்கிறது; மார்பிலும், முதுகிலும் வலி தோன்றுகிறது; கார்யம் செய்யும் திறனும் போய்விடுகிறது. இப்படி மருத்துவர்கள் கூறுவதைக் கேட்டிருக்கிறோம்.

---

† *அங்க₃ஹீனாஶ்ரோத்ரியஷண்ட₄ஶூத்₃ரவர்ஜம் ।*
[காத்யாயனஶ்ரௌதஸூத்ரம் 1/1/5]

கருத்தடை ஆபரேஷன் செய்து கொள்ளும் பெண்ணுக்கு, அவளுடைய தாய்மை - அதாவது சூல் கொள்ளும் சக்தி போய்விடுகிறது. இம்மாதிரிப் பெண்களைப் பார்ப்பதும் தீமை; அபசகுனம். பகவானால் கொடுக்கப்பட்டுள்ள சக்தியை அழிப்பதற்கு யாருக்கும் உரிமை இல்லை. அதை அழிப்பது என்பது உரிமை மீறிய செயல்; குற்றம். ஆபரேஷன் மூலமாகத் தன் தாய்மையை இழந்தவர்கள் பாபம் செய்கிறார்கள் என்பது நிப்சயம். ஆனால், ஆபரேஷன் செய்து கொள்ளும்படி தூண்டுகிறார்களே, வற்புறுத்துகிறார்களே, அவர்கள் புதிய பாபத்தைச் செய்கிறார்கள். கீதையைப் படிப்பதால் மிக்க நன்மை ஏற்படுகிறது; ஆனால், கீதையைப் பிரசாரம் செய்வதால், அதைக்காட்டிலும் அதிக நன்மை ஏற்படுகிறது [கீதை 18/69] என்பதைப்போல, மற்றவர்களை ஆபரேஷன் செய்து கொள்ளும்படி பிரசாரம் செய்கிறார்களே, அவர்கள் மிகப்பெரும் பாபம் செய்கிறார்கள். பசுவதை செய்வோரின் எண்ணிக்கையைப் பெருக்குவதில் உதவியாக இருப்பதன் மூலம் பசுவதைக்குண்டான பாபத்தில் பங்கு பெறுகிறார்கள். அப்பாவி ஸஹோதரிகளுக்கு இந்த விஷயம் தெரியாது. ஆதலால் அவர்கள் அறியாமலே மிகப் பெரிய குற்றம், பாபம் செய்து விடுகிறார்கள். அவர்களை இந்தப் பாபத்திலிருந்து காப்பாற்ற வேண்டும்.

ஒருவன் ஏதோ ஒரு வழியில் குற்றம் இழைத்தால், அவனுடைய ப்ராணசக்தி விரைவில் அழிந்து போகிறது; அவனுடைய முடிவும் விரைவில் உண்டாகிறது. குற்றம், பாபம் செய்யும்போது அல்லது அப்படிச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் மனதில் தோன்றியதும், மூச்சு வேகமாக விட ஆரம்பிக்கிறது;

உயிர் அடங்கிப் போகிறது - இது கண்கூடான காக்ஷி. எவரும் இதை அனுபவித்து உணரலாம்.

கருத்தடை ஆபரேஷன் செய்து கொள்வது விபசாரத்துக்கு வழிகோலுவதாகும். இது மிகப் பெரிய பாபம். மிருகங்களைப் பலியிடுவது, கொலை செய்வது அபிசாரம் எனப்படுகிறது. அதைக்காட்டிலும் கொடுமையான அபிசாரத்தை, விபசாரம் என்கிறார்கள். இதனால் மனிதனுடைய தார்மிக, ஆன்மிகப்பற்று [உணர்வு] நசித்துப் போகிறது; அவனுக்குப் பெரிய வீழ்ச்சியும் ஏற்படுகிறது.

மனித உடல், பரமாத்மாவை அடைவதற்காகவே கிடைத்திருக்கிறது. அதை பரமாத்மாவை நோக்கி இட்டுச் செல்லாமல் உடலின்பநுகர்ச்சிக்காகப் பெரிய பெரிய பாபம் செய்வது, கருச்சிதைவு செய்வது, கருத்தடை செய்வது, ஆபரேஷன் செய்வது என்பது எவ்வளவு பெரிய பாபம்! கருச்சிதைவு, கருத்தடை செய்வதில், உடலின்பம் துய்த்தல் என்பதைத் தவிர வேறு என்ன இருக்கிறது? கருத்தடையால் யாருக்கேனும் ஏதாவது தார்மிக - ஆன்மிக நன்மை உண்டாகியிருக்கிறதா, உண்டாகுமா அல்லது உண்டாக முடியுமா? கருத்தடை செய்வதால் உடலின்பப் பற்றுதான் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. உடலின்பத்தில் இன்றைய மனிதனுக்கு உள்ள பெரும் ஈடுபாடு, மிருகங்களிடம்கூட இல்லை. உங்களுக்குக் குழந்தை வேண்டாம் என்றால், கட்டுப்பாட்டுடன் இருங்கள்; உங்கள் உடலில் ஆற்றல் நிலைக்கும்; சுறுசுறுப்பு இருக்கும்; உங்களுக்குத் தர்மத்தில் ஈடுபாடு, ஈஶ்வரனிடம் நம்பிக்கை வரும். உங்களுடைய மனிதப்பிறவி பயனுடையதாக ஆகும். அடியார்கள் சொல்லியிருக்கிறார்கள்-

கே ஶத்ரவ: ஸந்தி நிஜேந்த்₃ரியாணி
தான்யேவ மித்ராணி ஜிதானி யானி ॥

[ப்ரஶ்னோத்தரீ 4]

மனிதன் புலன்களுக்கு அடிமையாகிப் போனால், அந்தப் புலன்கள் அவனுக்கு எதிரிகளாகின்றன. அதனால், அவனுக்கு இவ்வுலகும், அவ்வுலகும் வீணாகிறது. ஆனால் அவன் பொறிகளின் மேல் வெற்றி கொண்டால், அந்தப் பொறிகள் அவனுக்கு நண்பனாகின்றன. அதனால் அவனுடைய இவ்வுலக, அவ்வுலக வாழ்க்கை செம்மையாகிறது. அதனால் கீதையில்,

உத்₃த₄ரேதா₃த்மனாத்மானம் நாத்மானமவஸாத₃யேத் ।
ஆத்மைவ ஹ்யாத்மனோ ப₃ந்து₄ராத்மைவ ரிபுராத்மன: ॥

[கீ₃தா 6/5]

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

"தன்னைக் கொண்டே தன்னை உயர்த்திக் கொள்ள வேண்டும்; தன் வீழ்ச்சியைச் செய்யக்கூடாது. ஏனென்றால் நாமே நமக்கு நண்பர்; நாமே நமக்கு விரோதி."

வினா: கருத்தடைச் செய்வதால் என்ன கேடு விளையும்?

விடை: கருத்தடைச் செய்வதால் கேடான கேடு உண்டாகிறது. செயற்கையாகக் கருவை நழுவச் செய்வதாலும், கருச்சிதைவு செய்விப்பதாலும் பெண்ணின் உடம்பு கெட்டுப் போகிறது; நலக்குறைவு ஏற்படுகிறது. இளமைக்காலத்தில் உடல்நலக் குறைவினால் பாதிப்பு ஏற்படாவிட்டாலும், கொஞ்சம் வயது முதிர்ந்தபின் அது தலைகாட்டத் தொடங்கும். எதுவரையில் உடம்பில் நல்ல ரத்தம் ஓடிக் கொண்டிருக்கிறதோ, அதுவரை பலக்குறைவு தெரியாது; ரத்த ஓட்டம் குறைந்ததும் சக்திக் குறைவு தெரிய வரும். கருச்சிதைவினால் பலருக்கு வெள்ளை-வெட்டை உண்டாகின்றன. இதைத் தவிர,

கருச்சிதைவு செய்வதால் ரத்தப்போக்குக்கு ஒரு வழி திறந்து விடப்படுகிறது.

குழந்தைப் பிரசவத்தால் பெண்ணின் உடம்பு நலிந்துவிடுவதில்லை. ஏனென்றால் பிள்ளைப்பேறு என்பது இயற்கையானது; குறிப்பிட்ட காலத்தில் ஏற்படுவது. இயற்கையான நிகழ்ச்சிகளால் தானாகவே நலிவு ஏற்படுவதில்லை; நலிவு என்பது செயற்கையான நிகழ்ச்சியால் ஏற்படுகிறது என்பது கருத்து.

வினா: ஓரிரு மகவு ஏற்பட்டதும் பெண் தாயாகிவிடுகிறாள். அதற்குப் பின் அவள் கருத்தடை ஆபரேஷன் செய்து கொள்வதில் என்ன தவறு?

விடை: அவள் முதலில் தாயாகிவிட்டாள் என்பது சரி; இப்போது கருத்தடை ஆபரேஷன் செய்துகொண்டு விட்டதும், அவளுக்குப் "பெண்" என்ற பெயர்கூட இருக்காது. காரணம், சுக்ல-சோணிதம் சேர்ந்து எவளுடைய வயிற்றில் கரு உருவை அடைகிறதோ, அவளுக்குத்தான் "பெண்" என்று பெயர். எவளால் கர்ப்பம் கொள்ள முடியாதோ, அவளுக்குப் பெயர் "பெண்" அல்ல. எவனால் கர்ப்பம் அளிக்க முடியாதோ, அவன் "ஆடவன்" அல்ல. ஆபரேஷன் மூலமாக மகப்பேற்றுக்கான சக்தியை அழித்து விடுவதால், ஆடவனுக்குப் பெயர் அலி என்றாகும். ஆனால் பெண்ணுக்கு என்ன பெயர் ஏற்படுமோ நாம் அறியோம்!

குடும்பக்கட்டுப்பாடு, பெண்குலத்துக்குப் பெரிய அவமானம். ஏனென்றால் இதனால் பெண்குலம் வெறும் போகப் பொருளாக ஆக்கப்படுகிறது. ஒரு மனிதன் வேசியிடம் செல்கிறான் என்றால், அவனென்ன குழந்தையை விரும்பியா செல்கிறான்? ஒருவன், மனைவியிடமிருந்து குழந்தையை

விரும்பவில்லை; மாறாக, இன்பம் அனுபவிக்க மட்டுமே விரும்புகிறான் என்றால், அவன் மனைவியை வேசியாகவல்லவா ஆக்கிவிட்டான்? இது என்ன, பெண்ணினத்துக்குப் பெருமை தரக்கூடிய விஷயமா? தாய்மையில்தான் பெண்ணினத்துக்குப் பெருமை இருக்கிறது; வெறும் போகப் பொருளாக இருப்பதில் அல்லவே அல்ல. ஆபரேஷன் முதலியவற்றின் மூலமாக ஒரு பெண் தன் தாய்மைச் சக்தியை இழந்துவிட்டால், காலுக்குச் செருப்புப்போல உபயோகிக்கத்தக்க ஒரு பொருள் என்ற நிலையை அடைகிறாள். இது பெண்ணினத்துக்கு எவ்வளவு பெரிய அவமானம்; அவமதிப்பு.

***வினா:* இயற்கையாகவே மகப்பேறடையாத பெண்ணைக் குறை கூறலாமா, கூடாதா?**

விடை: இயற்கையாகவே ஒருத்திக்குப் பிள்ளைப்பேறு ஏற்படவில்லையானால், அது அவளுடைய குற்றம் அல்ல. செயற்கை முறைகளால் பிள்ளைப்பேற்றுக்கான ஆற்றலை எவர்கள் அழிக்கிறார்களோ, அவர்களுக்கே குற்றம் - பாபம் ஏற்படுகிறது.

***வினா:* கரு அடைய முடியாதபடி, ஆணுறவுக்கு முன் மாத்திரை சாப்பிடுகிறார்களே, அந்தப் பெண்களுக்குப் பாபம் ஏற்படுமா?**

விடை: ஜீவன், மனித ஶரீரத்துக்குள் வந்து பரமாத்மாவை அடைய முடியும். தன்னையும், பிறரையும் கைதூக்கிவிட முடியும். ஆகவே, தன்னுடைய பாலுறவு ஆசைக்கு ஆட்பட்டு, அந்த ஜீவனுக்கு அப்படி ஒரு வாய்ப்பு ஏற்படாமல் செய்வது நிஶ்சயம் பாபம்தான். கீதையில் பகவான், ஆசையே - புலனின்ப வேட்கை, உல்லாஸ விருப்பம்தான், எல்லாப் பாபங்களுக்கும் காரணம் என்று சொல்லியிருக்கிறார் [3/37]. இந்தப் புணர்ச்சி

வேட்கைதான் எல்லாப் பாபங்களுக்கும் வேர் ஆகும். குடும்பக்கட்டுப்பாட்டின் நோக்கமே புணர்ச்சி இன்பம்தான். ஆகவே மாத்திரைகள் சாப்பிட்டு குழந்தை பிறப்பதைத் தடுப்பது பாபம்தான்.

வினா: ஒரு மனைவி, தன் கணவனுக்குச் சொல்லாமலே கருச்சிதைவு செய்வித்துக் கொண்டால் என்ன செய்வது?

விடை: அந்த மனைவியை ஒரேயடியாக விலக்கிவிட வேண்டும் என்று அறநூல்களில் சட்டம் போடப்பட்டிருக்கிறது- ***"தஸ்யாஸ்த்யாகே$_3$ா விதீ$_4$யதே" [பராஶரஸ்ம்ருதி 4/20].***

கருச்சிதைவு செய்வது பெரிய பாபம்; கணவனிடமிருந்து மறைப்பது குற்றம். மறைத்துச் செய்யப்படும் பாபத்துக்கு மிகக் கடுமையான தண்டனை கொடுக்கப்படும். குழந்தை ஆசை இல்லாவிட்டால், புலனடக்கத்தோடு இருக்கவேண்டும். புலனடக்கம் பாபம் - அநீதி அல்ல; மாறாக மிகப் பெரிய புண்ணியம், பெரிய த்யாகம், உயர்ந்த தவம்.

வினா: இப்போதுள்ள அரசு, கருச்சிதைவு, கருத்தடை ஆகியவற்றைப் பாபமாகக் கருதவில்லை. மாறாக நல்ல செயலாகக் கருதுகிறது. ஆகவே இப்படிச் செய்கிறவர்களுக்குப் பாபம் ஏற்படாதா?

விடை: ஏற்றாலும், ஏற்காவிட்டாலும் பாபம் ஏற்படத்தான் செய்யும். எத்தனையோ பாபங்கள் ஏற்படுகின்றன. அவைகள் யாருடைய இசைவையும், இசைவின்மையையும் சார்ந்திருக்கவில்லை. பாபம் என்பது அதாவது "இந்தக் கார்யம் பாபம்" என்ற நிர்ணயத்தில் வேதம், ஶாஸ்த்ரம், மேலோர் கூற்று ஆகியவைதான் உரைகல் ஆகும்.

பாபச் செயலைச் செய்வதால் பாபம் ஏற்படத்தான் செய்யும். அதனுடைய பலனை அனுபவிக்கவும்

வேண்டும். பலி கொடுக்கப்படும் பிராணியின் பின்னங்கால்களை எந்த மரத்தில் கட்டி வைக்கிறார்களோ, அந்த மரம்கூட, பாபத்தின் காரணமாகக் காய்ந்து போவதை நாம் பார்த்திருக்கிறோம். பணம் வாங்கிக் கொண்டு பிராணிகளை வெட்டும் கசாப்புக்காரனின் கைகள் பின்னாட்களில் செயலற்றுப் போகின்றன என்பதால், அவர்கள் கையில் கத்தியை கட்டிக் கொண்டு பிராணியை வெட்டும் கார்யத்தைச் செய்கிறார்கள். ஓநாய்க்கு ஏழெட்டுக் குட்டிகள் உண்டாகின்றன. மானுக்கோ ஓரிரு குட்டிகள் மட்டுமே. அப்படியிருந்தும் கூட்டம் என்றால் மானுக்குத்தானே தவிர, ஓநாய்க்கு அல்ல. ஹிம்ஸை முதலிய பாபங்களைச் செய்கிறவர்களின் பரம்பரை நீண்டநாள் நீடித்திருப்பதில்லை என்பது இதன் கருத்து.

ஒரு சமயச் சான்றோரிடம் ஒருவன் கேட்டான்- "எந்த ஶாஸ்த்ரத்தில், சமயப் பழக்க வழக்கத்தில் பலி கொடுப்பதற்கு, குர்பானி செய்வதற்கு ஆணை கொடுக்கப்பட்டிருக்கிறதோ, அந்த ஆணைப்படி செய்கிற நபர்களுக்குப் பாபம் ஏற்படாது. ஏனென்றால், அவர்கள் தம்முடைய ஶாஸ்த்ர-ஸம்ப்ரதாய ஆணைப்படியே நடக்கிறார்கள்." அவர் பதில் சொன்னார்- "பலி கொடுப்பவர்களும், குர்பானி செய்பவர்களும், ஆறு மாத காலத்துக்கு மனப்பூர்வமாகப் பகவானின் பெயரை ஜபம் செய்தால், அதற்குப் பின் அவர்கள் பலி கொடுக்க, குர்பானி செய்ய விரும்பமாட்டார்கள்." தெளிந்த அந்தக்கரணம் உடைய நபர், ஶாஸ்த்ரங்களின் ஆணை இருப்பினும், பாபம் செய்யமாட்டார். ஆதலால், பலி

முதலியவைகளுக்கு அனுமதி கொடுத்திருக்கும் ஶாஸ்த்ர ஆணைகளை மதிக்கக் கூடாது.

தர்மஶாஸ்த்ரம் என்று ஒன்று; அர்த்தஶாஸ்த்ரம் மற்றொன்று. மனிதன் செய்ய வேண்டிய கடமைகளைப் பற்றி தர்மஶாஸ்த்ரம் அறிவுறுத்துகிறது. அந்த ஞானத்தால் இஹலோகத்திலும், பரலோகத்திலும் மேன்மை உண்டாகிறது. அர்த்தஶாஸ்த்ரம், கண்ணால் காணக்கூடிய பலனைப் பற்றி விவரிக்கிறது. ஆசை வசப்பட்டு, கண்ணால் காணத்தக்க பலன்களை [செல்வச் செழிப்பு, மகவு, ஸ்வர்கம் முதலியன அடைதல்] வேண்டி, அர்த்தஶாஸ்த்ரக் கூற்றுக்களை ஏற்று பாப கார்யம் செய்கிறவர்கள் பாபத்தில் பங்கு கொள்கிறார்கள். காரணம், அர்த்தஶாஸ்த்ரத்தில் ஆசை, ஆசையோடு கூடிய உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது; ஆசையே எல்லாப் பாபங்களுக்கும் அடித்தளம் [கீதை 3/37]. நூறு வேள்விகள் செய்து இந்த்ரனாக ஆகிறவனுக்கும்கூட, ஶாஸ்த்ர முறைப்படி [வேத விதிப்படி] ஹிம்ஸை உண்டாகிறது. அந்த ஹிம்ஸைக்கான பாப பலனை அனுபவிக்கத்தான் வேண்டும். அதனால்தான் இந்த்ரனுக்கு ஆபத்துக்கள் வருகின்றன. அவனுக்குத் தோல்வி ஏற்படுகிறது. அவன் அச்சத்தால் ஓடித் திரிகிறான். மறைந்து கொள்கிறான். அவன் உள்ளத்தில் பொறாமை தோன்றுகிறது. ஆகவே, ஹிம்ஸைக்கான பலன் கிடைக்கத்தான் செய்யும் - ஹிம்ஸையை ஏற்றாலும் சரி, ஏற்காவிட்டாலும் சரி. ஒரு விஷயத்தைப் பற்றி தர்மஶாஸ்த்ரம், அர்த்தஶாஸ்த்ரம் இரண்டிலும் குறிப்பு இருந்தால், அதில் தர்மஶாஸ்த்ரம் கூறுவதையே கேட்க வேண்டும்.

ஏனென்றால் அர்த்தஶாஸ்த்ரத்தைக் காட்டிலும் தர்மஶாஸ்த்ரம் உயர்வானது; பலம் பொருந்தியது†.

இன்றைய அரசு, கரு வெளியேற்றத்தைப் பாபமாக எண்ணவில்லை; அப்படி எண்ணாததால் பாபம் ஒட்டிக் கொள்ளாது. இப்படி நினைக்க வேண்டாம். பாபம் ஏற்படத்தான் செய்யும் - யார் ஏற்றுக் கொண்டாலும், ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் முற்காலத்தில், அரசகுலத்தினர் தவிர்க்கப்பட வேண்டியவை என்று ஶாஸ்த்ரங்களில் கூறப்பட்ட செயல்களைச் செய்யும்படி குடிமக்களுக்கு ஆணையிட்டார்கள், தூண்டிவிட்டார்கள். அதனால் ஏற்பட்ட பாபம் ராஜா-குடிமக்கள் ஆகிய இருதரப்பினரையும் பற்றிக் கொண்டது. [எடுத்துக்காட்டாக, மன்னன் வேனன், தவிர்க்கப்பட்ட செயல்களைத் தானும் செய்தான்; குடிமக்களைக் கொண்டும் செய்வித்தான்.] இப்படி இன்றைய அரசு கருச்சிதைவு போன்ற தவிர்க்க வேண்டிய கார்யங்களைச் செய்யும்படி தூண்டுகிறது என்றால், அரசாங்கத்துக்கும் பாபம் ஏற்படும்; அந்தக் கார்யங்களைச் செய்கிற பொதுமக்களுக்கும் ஏற்படும்.

வினா: ராமசரித மானஸத்தில்

‘समरथ कहुँ नहिं दोषु गोसाईं ।

रबि पावक सुरसरि की नाईं ॥’

[ப$_3$ாலகாண்ட$_3$ம் 69/4]

என்று வருகிறது. ஆகவே யாருக்கு அரசாட்சி கிடைத்திருக்கிறதோ, பெரிய பதவி கிடைத்திருக்கிறதோ [அரசன், அரசு], அவர்கள் வலிமை பொருந்தியவர்கள். அப்படியிருக்கும்போது, அவர்களைப் பாபம் எவ்வாறு பற்றும்?

---

† *ஸ்ம்ருத்யோர்விரோதே$_4$ ந்யாயஸ்து ப$_3$லவான்வ்யவஹாரத:।*
அர்த$_2$ஶாஸ்த்ராத்து ப$_3$லவத் த$_4$ர்மஶாஸ்த்ரமிதி ஸ்தி$_2$தி: ॥

விடை: அவர்கள் வலிமையுடையவர்கள் அல்லர். பிறருடைய குறைகளைத் தொலைப்பதற்கு ஆற்றல் பெற்றவர்களே வலிமையுடையவர்கள் ஆவர். எப்படியென்றால், சூரியன் துர்நாற்ற நீரை உறிஞ்சி எடுத்துக் கொள்கிறது; புனிதமற்றதை புனிதமாகவும், மாசு நிறைந்ததை தூயதாகவும் ஆக்குகிறது. எல்லாவற்றிலிருந்தும் நீர்ப்பகுதியை உறிஞ்சி விடுகிறது; சமுத்திரத்தின் உப்பு நீரை உறிஞ்சி எடுத்து சுவையான நீராக ஆக்கித் தருகிறது. ஆனால் இப்படிச் செய்தும், சூரியன் ஒருபோதும் தூய்மையற்றதாக, புனிதமற்றதாக ஆவதில்லை. அக்னி, எல்லாக் குப்பைகளையும் கொளுத்திவிடுகிறது; எல்லா வற்றையும் சாப்பிட்டுவிடுகிறது; எல்லாவற்றையும் சுத்தப்படுத்துகிறது; அது அசுத்தமாவதில்லை; அதற்கு மாசு ஏதும் ஏற்படுவதில்லை. கங்காதேவி மாசு படிந்த நீரை புனிதப்படுத்திவிடுகிறாள். பாபங்களைப் போக்கிவிடுகிறாள். ஆனால் அவளுக்குக் குறை ஏதும் நேருவதில்லை. அசுத்தத்தை சுத்தமாக்கிக் கொடுப்பது, அதிலுள்ள மாசுகளைப் போக்குவது; அப்படிச் செய்தும் தான்மட்டும் முன்னைப்போல அப்படியே இருப்பது - இதுதான் வலிமை. எவருக்கு அரசாட்சி, பெரும் பதவி கிடைத்திருக்கிறதோ, அவர் வலிமையுடையவர் - என்பது சரியல்ல.

உலகாயத பதவி, அதிகாரம், பெருமை முதலியன கிடைப்பதால் மனிதன் வலிமையுடையவனாக ஆவதில்லை; ஏனென்றால் அவனுடைய வலிமை பதவி, அதிகாரம் ஆகியவற்றைச் சார்ந்துள்ளது. அவன் பதவி, அதிகாரம் முதலியவற்றுக்கு அடிமை; ஊழியன் கட்டுப்பட்டவன். அதனால் அவன் தானே பலசாலியாக எப்படி ஆவான்? அதாவது தனக்குக் கிடைத்த பொருளினால் தன்னைப் பலசாலியாக எண்ணிக் கொள்பவன், உண்மையில் வலு

இல்லாதவன். ஏனென்றால், அவனிடம் என்ன வலிமை காணப்படுகிறதோ, அது அந்தப் பொருளுக்குரியது; அவனுடையதல்ல. எவர்கள் உண்மையில் வலிமை உடையவர்களோ, அவர்களுடைய வலிமை வேறொன்றின் கட்டுப்பாட்டில் இருப்பதில்லை; மாறாக, தன்னுடைய வசத்திலேயே உள்ளதாக இருக்கும். சூரியன், அக்னி, கங்காதேவியின் வலிமை வேறொருவரின் கட்டுப்பாட்டில் இல்லை; மாறாக, அவற்றிடமே இருக்கிறது. ஆதலால் ஆட்சி, பதவி மயக்கத்துக்குள்ளாகி யார் பாபம் செய்கிறார்களோ, செய்விக்கிறார்களோ, அவர்கள் தமது வலிமையைத் தவறாகப் பயன்படுத்துகிறார்கள். அதற்கான தண்டனையை அவர்கள் அனுபவிக்கத்தான் வேண்டும். அவர்களுடைய வலிமை, பாபங்களை விலக்குவதாக இல்லாமல், பாபத்தைச் செய்விப்பதாக இருக்கிறது. ஆதலால், உண்மையில் வலிமையற்ற அரசாங்கத்தை வலிமையுடையதாகக் கருதி, அதன் தூண்டுதலால், பாபத்தை ஒருபொழுதும் மனிதன் செய்யக்கூடாது.

வினா: அரசாங்கத்தின் உத்திரவுப்படி டாக்டர்கள், கருச்சிதைவு, கருத்தடை ஆபரேஷன் செய்கிறார்கள். அதனால் அவர்களுக்குப் பாபம் ஏற்படுமா?

விடை: அவர்களுக்குக் கட்டாயம் பாபம் ஏற்படும். பாபத்தின் தந்தை பேராசை. இகழ்ச்சிக்குரிய பேராசை காரணமாக அவர்கள் எத்தனை ஜீவன்களை அழித்து விடுகிறார்கள்! இந்த வெறுக்கத்தக்க கார்யத்தைச் செய்து, மஹாபாபம் செய்து ஸம்பாதிக்கப்பட்ட பணத்தைக் கொண்டு உணவு உண்பதால், அவர்களுக்கு மிக்க துன்பநிலை ஏற்படும்.

கருச்சிதைவு செய்பவர்களின் பார்வை பட்ட உணவு, உண்ணத்தகாததாகிறது என்று ஶாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது-

ப்$_1$ருணக்$_1$நாவேக்ஷிதம் சைவ ஸம்ஸ்ப்ருஷ்டம் சாப்யுத$_3$க்யயா ।
பதத்ரிணாऽவலீட$_4$ம் ச ஶுனா ஸம்ஸ்ப்ருஷ்டமேவ ச ॥

[மனுஸ்ம்ருதி 4/208]

"கர்ப்பச் சிதைவு செய்பவனால் பார்க்கப்பட்டது, மாதவிலக்கில் இருக்கும் பெண்ணால் தொடப்பட்டது, பறவையால் சாப்பிடப்பட்டது, நாயினால் தொடப்பட்டது - இந்த உணவை, உண்ணக்கூடாது."

வேலை செய்யும்போது, தம்முடைய நேரத்தைக் கொடுத்து, வேலை செய்து பணம் பெற்றுச் செல்கிறார்கள். தங்கள் தர்மம், கடமை, நற்செயல் கொடுத்துப் பணத்தைப் பெற்றுச் செல்வதில்லை. பாபம், அநியாயம், கொலை, துன்புறுத்தல் முதலியன செய்து பணம் பெறுவது அப்பழுக்கற்ற பாபம். ஆகவே, பாபம், அநியாயம் செய்யும்படி ஒரு யஜமானன் சொன்னால், வேலைக்காரன் வணக்கத்துடன் அந்த யஜமானரிடம் இப்படிக் கூறிவிட வேண்டும்: "நான் தங்கள் ஸேவைக்காக ஒரு மணியோ, இரண்டு மணியோ அதிக நேரம் கொடுக்க முடியும். ஆனால், என்னுடைய தர்மத்துக்கு எதிராகப் பாபம், ஹிம்ஸை செய்வதற்கு நான் கடமைப்பட்டவன் அல்லன். நீங்கள், என்னை வேலையில் வைத்துக் கொள்வதும், வைத்துக் கொள்ளாததும் உங்கள் விருப்பம்."

கருச்சிதைவு, கருத்தடை போன்ற கார்யங்களைச் செய்ய ஒருவர் இணங்காததால், அவர் வேலையிலிருந்து நீக்கப்பட்டார். அவர் வழக்குத் தொடுத்து, அதில் வெற்றி பெற்றார். அதனால், அவரை மீண்டும் வேலையில் வைத்துக் கொள்ளும்படி ஆயிற்று. அரசாங்கம் இப்படி ஓர் உத்திரவு

போடுமானால், அது கிறிஸ்தவர், முஸல்மான், பார்ஸி ஆகிய எல்லோருக்கும் பொருந்துவதாக இருக்க வேண்டும்; ஹிந்துக்களுக்கு மட்டும் என்றிருக்கக் கூடாது. ஒரு ஜாதியை, ஒரு குலத்தினரைக் கொடுமைப்படுத்தி, பாபம் செய்யும்படி அவர்களைக் கட்டாயப்படுத்துவது, பாபம் செய்வதற்கான சட்டம் போடுவது அரசுக்கு ஏற்றதல்ல.

வினா: தவறுதலாக, அறியாமையினால் ஒருத்தி கருத்தடை ஆபரேஷன் செய்து கொண்டுவிட்டாள். இப்போது அவள் என்ன செய்வது?

விடை: ஆபரேஷனில் நரம்பு மட்டுமே துண்டிக்கப்பட்டிருந்தால், அதை மறுபடியும் சேர்த்துவிட முடியும் என்று டாக்டர்கள் சொல்கிறார்கள். ஆனால், கருப்பையே நீக்கப்பட்டிருந்தால் அதற்குப் பரிஹாரமே இல்லை. ஆதலால், வெறும் நரம்புத் துண்டிப்பு கருத்தடை செய்யப்பட்டிருந்தால் அதை மீண்டும் சரிப்படுத்திக் கொண்டுவிடலாம். இம்மாதிரி நடந்திருக்கிறது. இப்படிச் செய்து கொண்டவர்களுக்குக் குழந்தையும் பிறந்திருக்கிறது.

இவ்விதம் கருத்தடையை நீக்கி, தன்னுடைய ஆண்தன்மை, பெண்தன்மையை மீண்டும் பெற்று, முன்பு செய்துவிட்ட குற்றத்துக்காக மிகவும் வருந்தினால், அப்படிப்பட்டவர்கள் கையால் கொடுக்கப்படும் சோறு, தண்ணீர் பிதிரர்களைச் சென்றடையும். ப்ரம்மசர்யத்தை அனுஷ்டிப்பார் களேயானால், தேசு பெருகும். உள்ளாற்றல் பெருகும். சுறுசுறுப்பு பெருகும்.

வினா: அறியாமையினால் ஒருத்தி கருச்சிதைவு செய்துவிட்டாள். இப்போது அவள் என்ன பிராயச்சித்தம் செய்வது?

விடை: ஓர் ஆண்டுகாலம் நாள்தோறும் ஒரு லக்ஷ ராம நாமஜபம் அவள் செய்யவேண்டும். ஆனால், விஷயம் புரிந்தே கருச்சிதைவு செய்து கொண்டவள் இப்படி நாமஜபம் செய்தால், அவளுடைய பாபத்துக்குப் பிராயச்சித்தமாகாது. அவள் பாபத்துக்கான தண்டனையை அனுபவிக்கவே வேண்டும். காரணம், எந்த நாமம் மஹாபாபங்களை அழிக்கவல்லதோ, அந்தப் புனிதமான பெயரின் உதவி கிடைக்கும் என்பதால் பாபம் செய்தால், அது அவரைக் காப்பாற்றாது. அதனால், அவருடைய பாபம் குறைந்து போவதில்லை. மாறாக பசையாக ஒட்டிக் கொள்கிறது. முன்பு நாம மஹிமை தெரியாதபோது, பாபம் செய்வதில் அச்சம் இருந்தது; இப்போது நாமத்தின் துணை உண்டு என்பதால் பாபம் செய்வதில் அச்சம் போய்விட்டது என்றால், நாமத்தைத் தவறான முறையில் பயன்படுத்துவதாகும்; நாமாபராதம் ஆகும். அதற்கான தண்டனையை அவன் பெற்றே ஆகவேண்டும்.

வினா: குடும்பக்கட்டுப்பாடு செய்து கொள்ளா விட்டால், மக்கட்தொகை மிகவும் பெருகிப் போகும். மக்களுக்கு உணவு கிடைக்காது என்றால், மக்கள் வாழ்வது எப்படி?

விடை: இந்தக் கேள்வி கொஞ்சம்கூடப் பொருத்தமில்லாதது; காரணம், எங்கே மனிதர்கள் பிறக்கிறார்களோ, அங்கே உணவும் தோன்றுகிறது. "மனிதர் உற்பத்தியாகட்டும்; உணவு உற்பத்தி வேண்டாம்" என்ற குருட்டுத்தனமான எண்ணம் கடவுளிடம் இல்லை.

प्रारब्ध पहले रचा, पीछे रचा सरीर।
तुलसी चिंता क्यों करे, भज ले श्रीरघुवीर॥

அன்னையின் மார்பில் முதலில் பால் தோன்றிவிடுகிறது; குழந்தை பின்புதான் பிறக்கிறது.

இதிலிருந்து என்ன தெரிகிறது? குழந்தை பிறந்தவுடன் அன்னையின் மார்பிலிருந்து பழைய பாலை வெளியேற்றிவிட்டுக் குழந்தைகளுக்குப் புதுப்பால் ஊட்டுகிறார்கள். நாமும் வெளியே போக வேண்டுமென்றால், முதலில் அங்கே ஏற்பாடு செய்யப்படுகிறது; நாம் பின்னர்தான் போய்ச் சேருகிறோம். பேச்சாளர் உரை முதலில்; பின்னால் பந்தல் போடலாம் - இப்படி நடைபெறுகிறதா? திருமணத்துக்கு வந்துள்ளோர் தங்குவதற்கு இடம், முதலில் நிஶ்சயிக்கப்படுகிறதா? இல்லை, ஊர்வலம் வந்து சேர்ந்த பிறகா? ஒரு விழா நடைபெறுகிறது என்றால் அதற்கான ஏற்பாடு முன்பாகவே செய்யப்படுகிறது. முதலில் விழா; பின்னர் ஏற்பாடு - இப்படி நடப்பதில்லை. எங்கே மரங்கள் அதிகமாக இருக்கின்றனவோ, அங்கே மழை அதிகமாகப் பெய்கிறது என்பதைக் காண்கிறோம்; விஞ்ஞானிகளும் சொல்கிறார்கள். எங்கே மரம் இல்லையோ, அங்கே மழை குறைவாகப் பெய்கிறது. இவ்விதமே, மனிதர்கள் அதிகமாகிப் போனால், உணவுப்பொருளும் அதிகமாக உற்பத்தியாகும். உணவுப்பொருள் பற்றாக்குறை எப்படி வரும்? மனிதர்கள் மரங்களைக் காட்டிலும் கீழ்மையானவர்களா?

வினா: இன்றைக்கு உணவுப்பொருள் ஏன் இவ்வளவு கிராக்கியாகப் போயிருக்கிறது?

விடை: யோசித்துப் பார்த்தால், எப்போது தொடங்கி குடும்பக்கட்டுப்பாட்டுத்திட்டம் செயல்பட ஆரம்பித்ததோ, அது முதல் உணவுப் பண்டங்கள் விலை ஏற ஆரம்பித்தது; தட்டுப்பாடும் ஆரம்பித்தது - என்பது தெரியவரும். மக்கட்தொகை குறைந்து போனால், அப்புறம் உணவுப்பொருள் உற்பத்தி எப்படி அதிகமாகும்? அதாவது குடும்பக்கட்டுப்பாட்டுத்

திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டதிலிருந்துதான், மோசமான இந்த நிலை உண்டாகியிருக்கிறது.

இன்று, "புலால் சாப்பிடு, மீன் சாப்பிடு, முட்டை சாப்பிடு" என்று பிரசாரம் செய்யப்படுகிறது. அப்படியானால், மழையும், விவசாயமும் எதற்கு? காரணம், புலால் உண்பதால் ஆடு, மாடுகள் இல்லாமற்போகும்; பின் அவைகளுக்காக புல் தேவைப்படாது. மனிதர்கள் மாமிசம் உண்கிறார்கள் என்றால் அவர்களுக்கு உணவுப்பொருள் தேவையில்லை. அப்புறம் உபயோகமில்லாமல் புல்லையும், உணவுப்பொருளையும் ஏன் பயிரிடவேண்டும்?

எப்போது மக்கள் அதிகமாகவும், பண்டங்கள் குறைவாகவும் இருக்கின்றனவோ, அப்போது விலை யேற்றம் ஏற்படுகிறது. மக்கள் வேலை செய்யாமல் சோம்பேறித்தனமாய், எதையும் பொருட்படுத்தாமல் இருக்கும்போதுதான் பண்டங்களின் தட்டுப்பாடு ஏற்படுகிறது. இப்போது இதே நிலைமைதான். மக்கள் குறைவாக வேலை செய்கிறார்கள்; அதிகமாகச் செலவு செய்கிறார்கள். அதனால், இத்தனை கிராக்கி ஏற்பட்டிருக்கிறது. வேலை குறைவாகச் செய்தால் பண்டங்களும் குறைவாக உற்பத்தி ஆகும்தானே? ஆகவே, விலையேற்றத்துக்குக் காரணம் மக்கட்தொகை அதிகரிப்பு அல்ல. மாறாக, மக்களிடம் வேலை செய்யாமை, சோம்பல், கவனக்குறைவு ஆகிய குற்றங்கள் பெருகியிருப்பதுதான். அரசுக் கட்டுப்பாடின்மையும் இதற்குக் காரணம்.

வினா: நமக்கு வேலை, தொழில் எதுவும் கிடைக்காவிட்டால், நாம் என்ன செய்வது?

விடை: மனிதன் எந்த இடத்தில் அல்லது தொழிற்கூடத்தில் சேருகிறானோ, அங்கே அவன் தன்

கடமைகளைச் சரியானபடி நிறைவேற்றாமல், சோம்பியும், குழம்பியும் தன் நேரத்தை வீணாக்குவதுதான் வேலை-வெட்டி கிடைக்காததற்குக் காரணம். உண்மையில் வேலைக்குத் தட்டுப்பாடு இல்லை. மாறாக வேலை செய்வோர்களின் தட்டுப்பாடுதான் இருக்கிறது. வேலை நிறைய இருக்கிறது; ஆனால், நேர்மையோடு, ஆழ்ந்த ஈடுபாட்டோடு வேலை செய்கிறவர்கள் குறைவாக இருக்கிறார்கள். நேர்மையான ஒருவனுக்கு வேலை கிடைக்கவில்லை - என்பது ஒருக்காலும் இல்லை. சோம்பல், கவனமின்மை, வேலை செய்வதில் விருப்பமின்மை ஆகிய குறைகள் இருக்கும்வரை, அவனுக்கு வேலை கிடைக்காது.

வினா: கிராக்கியான இந்தக் காலத்தில், அதிகக் குழந்தைகள் உண்டானால், அவைகளை வளர்த்து ஆளாக்குவது எப்படி?

விடை: நீங்களே எண்ணிப் பாருங்கள். தேவைதான் புதிய கண்டுபிடிப்புகளுக்குத் தாய்; ஆகவே, மக்கட்தொகை பெருகும், குழந்தைகள் அதிகமாகும் என்றால் அவைகளுக்கு உணவு-உடைக்கான ஏற்பாடும் கட்டாயம் கண்டுபிடிக்கப்படும். எந்த ஆண்டில் வெட்டுக்கிளிகள் அதிகமாக வந்தனவோ, அந்த வருஷம் விவசாயம் நன்றாக நடந்தது; பஞ்சம் ஏற்பட்டதில்லை என்பது முன்னாட்களில் நம்மால் பார்க்கப்பட்ட விஷயம். வெட்டுக்கிளிகள் வந்ததும் மகிழ்ச்சியோடு மக்கள் சொல்வார்கள்- "இந்தத் தடவை நிறைய மழை பெய்யும்; ஏனென்றால் இத்தனை உயிர்கள் வந்திருக்கின்றன என்றால் அவைகளின் உணவுக்கும் [விவசாயம்] நல்லபடியாக ஏற்பாடு ஆகியிருக்கும்." பகவானுடைய முந்தைய ஏற்பாடு இன்றைக்கும் கட்டாயம் நடக்கும். நீங்கள் குடும்பக்கட்டுப்பாடு

செய்கிறீர்கள்; அதனால், திட்டங்களின் பொறுப்பை உங்கள் மேல் சுமத்திக் கொள்கிறீர்கள். இதன் விளைவு என்னவென்றால், இன்றைய தினம் திட்டங்கள் போடுவதில் சிரமம் உண்டாகிறது. ஆகவே, நீங்கள் உங்கள் மேல் பொறுப்பை சுமத்திக் கொள்ளாமல் தன்னுடைய கடமைகளில் முழுமூச்சுடன் ஈடுபட்டால், உங்களையும், உங்கள் குடும்பத்தினரையும் வளர்க்கும் ஏற்பாடு பகவானின் தரப்பிலிருந்து கட்டாயம் செய்யப்படும்.

முன்பு, மன்னர்-மாமன்னர் வீடுகளில் ஆயிரக்கணக்கான குழந்தைகள் பிறந்து கொண்டிருந்தன; அவைகளின் பாதுகாப்பும்-வளர்ப்பும் நடந்து கொண்டிருந்தது. ஸகர மன்னனுக்கு அறுபதாயிரம் புத்திரர்கள் இருந்தார்கள். மன்னர் அக்ரஸேனருக்கு அநேக பிள்ளைத் தோன்றினார்கள். அவர்களுடைய வம்சத்தில் தோன்றியவர்கள் இன்று அகர்வால் என்று அழைக்கப்படுகிறார்கள். த்ருதராஷ்ட்ரனுக்கு நூறு பிள்ளைகள் இருந்தார்கள். இவ்விதம் ஒரே மனிதருக்கு நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான குழந்தைகள் உண்டாகியிருக்கிறார்கள். ஒவ்வோர் கிராமங்களில், ஒரே மனிதரின் குழந்தைகளே வசிக்கிறார்கள் என்பதை யாரேனும் விரும்பிக் கேட்டால் நான் சொல்வேன்.

உண்மையாகவே பற்றுக்களைத் துறந்து அடியார்களாக இருப்பவர்கள், தங்கள் ஜீவனத்தைப் பற்றி அக்கறை கொள்ளாதவர்கள், அதற்கான முயற்சிகூட செய்யாதவர்கள் - இவர்கள் வாழ்க்கைக்கான திட்டங்களை மக்கட்சமுதாயம் செய்துவிடுகிறது என்பது கண் முன்னால் காணக் கிடைக்கிறது. தங்கள் வாழ்க்கைக்கான செயல்களில் ஈடுபடுகின்றவர்களைக் காட்டிலும் பற்றற்ற

பெரியோர்களின் பராமரிப்புக்கான ஏற்பாடு நன்றாகவே உள்ளது.

நீங்கள் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்: முஸல்மான் ஸஹோதரர்கள் இருக்கிறார்களே, அவர்கள் நான்கு-நான்கு மணம் செய்து கொள்கிறார்கள். ஒரு ஸஹோதரருக்கு நூற்றைம்பது குழந்தைகள் பிறந்தன; ஒரு ஸஹோதரருக்குப் பத்தொன்பது குழந்தைகள் பிறந்து, அவற்றில் இரண்டு மரிக்க, பதினேழு குழந்தைகள் இருக்கிறார்கள் என்று நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். இவ்விதம் பொதுவாக அவர்கள் குடும்பக்கட்டுப்பாடு செய்வதில்லை; ஆனாலும், அவர்களுடைய குழந்தைகளின் பராமரிப்பு நடந்து கொண்டுதான் இருக்கிறது. ஹிந்துக்கள் மட்டும்தானா உணவு சாப்பிடுகிறார்கள், உடை உடுத்திக் கொள்கிறார்கள், கல்விக் கற்கிறார்கள்? ஏனைய மக்கள் என்ன உணவு உண்பதில்லையா, உடை உடுத்துவதில்லையா, கல்விக் கற்பதில்லையா? "குழந்தைகள் பிறப்பது கடவுளின் கட்டளை. அதைத் திருத்தும் அதிகாரம் மனிதனுக்கு இல்லை" என்று, முஸல்மான் ஸஹோதரர்கள் சொல்கிறார்கள். எவர்கள் கடவுளின் சட்டத்தைத் திருத்துகிறார்களோ, அவர்கள் உரிமையில்லாத செயலைச் செய்கிறார்கள். உண்மையில் குடும்பக்கட்டுப்பாடு செய்பவர்களின் மக்கட்தொகை குறைந்து போகிறது. "குடும்பக்கட்டுப்பாடு செய்யாவிட்டால், நமது மக்கட்தொகை பெருகும்; மக்கட்தொகை பெருகுவதால் அரசாங்கம் நம்முடையதாகிவிடும். ஏனென்றால், ஒட்டுமொத்தமான வாக்குரிமை கிடைக்கும்" என்று முஸல்மான்கள் எண்ணியுள்ளார்கள். ஆதலால், அவர்கள் தங்கள் எண்ணிக்கையைப் பெருக்குவதிலேயே அக்கறை

கொண்டுள்ளார்கள். ஆனால், ஹிந்துக்கள் தங்களுடைய சிற்றின்பத்துக்காகக் கருத்தடை, கருச்சிதைவு முதலிய மஹாபாபங்களைச் செய்வதில் கண்ணும், கருத்துமாக இருக்கிறார்கள். வேகமாகத் தங்கள் எண்ணிக்கைக் குறைந்து கொண்டிருக்கிறது - இந்தவிதமாகவும் அவர்கள் பார்வை இல்லை; மேலுலகத்தில் இந்த மஹாபாபத்துக்கான கடுமையான தண்டனை அனுபவிக்க நேரிடும் - இந்தவிதமாகவும் அவர்கள் பார்வை இல்லை. உணவு கொள்ளல், குடித்தல், ஸுகத்தை அனுபவித்தல் என்பதில் மிருகங்களும் பார்வை செலுத்துகின்றன. இதே பார்வை மனிதனுக்கும் இருக்குமேயானால், அது மனிதத்தன்மை இல்லை.

ஹிந்து தர்மத்தில், மனிதப்பிறவி அடைய முடியாதது என்றும், மகிழ்ச்சி எளிதாக அடையக் கூடியது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலால், ஓர் உயிர் மனிதப்பிறவியாக, ஹிந்து தர்மத்தில் வந்து கொண்டிருந்தால் அதனைத் தடுக்கக்கூடாது. நீங்கள் அதைத் தடுத்து அனுப்பிவிட்டால், அந்த ஜீவன் வேறு தர்மத்தைச் சேர்ந்தவர்கள் வீட்டில் பிறந்து, உங்கள் தர்மத்தை ஹிந்துக்களை அழித்துவிடும். ஏனென்றால், ஜீவனின் கடன் உறவு ஒருத்தனோடு மட்டும் இல்லை. மாறாக, பலருடனும் ஏற்படுகிறது.

கௌரவர், பாண்டவர் ஆகிய இருதரப்பினருக்கும் ஒன்பது ஒன்பது அக்குரோணிவிதம் படைகள் இருந்தன. ஆனால், ஒரு அக்குரோணி நாராயணி ஸேனையும், ஒரு அக்குரோணி சல்யனின் படையும் கௌரவர்கள் பக்கம் சென்றால், கௌரவர்களின் படை, பாண்டவர்களின் படையைக் காட்டிலும் நான்கு அக்குரோணி அதிகமாகிவிட்டது. அதாவது, பாண்டவர்களின் படை ஏழு அக்குரோணியாகவும், கௌரவர்களின் படை பதினோரு

அக்குரோணியாகவும் ஆகிவிட்டது. இவ்விதமே, ஹிந்துக்கள் கருத்தடை, ஆபரேஷன் முதலியவற்றால் மகப்பேற்றைத் தடுத்துவிட்டால், அவர்கள் வீட்டில் பிறக்க வேண்டிய குழந்தை வேறு தர்மத்தைச் சேர்ந்தவர் வீட்டில் போய் பிறக்கும். இதுவரை, ஹிந்துக்கள் வீட்டில் ஏறக்குறைய பன்னிரெண்டு கோடி குழந்தைகளின் பிறப்பு தடுக்கப்பட்டிருக்கிறது†. அந்தப் பன்னிரெண்டு கோடி குழந்தைகள், பசுவதைக் காரர்களான வேற்றுமதத்தவர்களின் வீட்டில் பிறப்பார்கள். ஆதலால், வேற்றுமதத்தினரின் எண்ணிக்கை ஹிந்துக்களின் எண்ணிக்கைக்கு மேல் இருபத்திநாலு கோடி அதிகமாகிவிடும். ' வேறு தர்மங்களைச் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை பெருகினால், அவர்கள் ஹிந்துக்களைத் தொலைத்துக் கட்டுவார்கள். ஆகவே, ஹிந்துக்கள் தங்கள் ஸந்ததித் தொடரை நசித்துவிடக் கூடாது; பசுவதைக்காரர்களின் எண்ணிக்கையைப் பெருக்கி, பசுக்கொலை பாபத்தில் பங்குதாரர்களாக ஆகக்கூடாது.

வினா: குழந்தைகள் குறைவாக இருந்தால், அவைகளின் பராமரிப்பு நன்றாக இருக்கும்; குடும்பம் சௌக்யமாக இருக்கும். ஆகவே, குடும்பக்கட்டுப்பாடு செய்வதில் என்ன தவறு?

விடை: குழந்தைகள் குறைவாக இருந்தால் குடும்பம் சௌக்யமாக இருக்கும் என்பது சரியல்ல. எவர்களுக்குக் குழந்தைகள் இல்லையோ, அவர்களும் துக்கப்படுகிறார்கள்; எவர்களுக்குக் குழந்தைகள்

---

† மகப்பேற்றைத் தடுத்து நிறுத்தும் உபாயங்களைச் செய்து கொண்டவர்களுக்கு, இனிமேல் ஏற்படுவதாக இருந்த பல குழந்தைகளுக்கும் தானாகவே தடுப்பு உண்டாகியுள்ளது. ஒவ்வொரு நபருக்கும், இனி ஏற்படுவதாக இருந்த இரண்டு அல்லது மூன்று குழந்தைகள் தடுக்கப்பட்டுள்ளதாகக் கணக்கிட்டால், இந்த எண்ணிக்கை இருபத்திநாலு அல்லது முப்பத்தாறு கோடி வரை செல்லும்.

குறைவாக இருக்கின்றனவோ, அவர்களும் துக்கப்படுகிறார்கள்; எவர்களுக்கு நிறையக் குழந்தைகள் இருக்கின்றனவோ, அவர்களும் துக்கப்படுகிறார்கள். குழந்தை இல்லாதவர்களையும் நாம் பார்த்திருக்கிறோம்; குறைந்த அளவு குழந்தை யுடையவர்களையும் பார்த்திருக்கிறோம்; நிறையக் குழந்தையுடையவர்களையும் பார்த்திருக்கிறோம். அப்படியே, அவர்களுடன் பேசியும் இருக்கிறோம். உண்மையில் குழந்தைகளின் கூடுதல் - குறைச்சல், ஸுக-துக்கத்துக்குக் காரணம் அல்ல. உலகம் முழுவதிலுமிருந்தும், குறைவாகக் குழந்தைகள் உள்ளதால் சௌக்யமாக இருக்கும் ஒரு மனிதரையேனும் காட்டுப் பார்ப்போம். உலகத்தில் என்ன படைப்பிலேயே இல்லை! துக்கத்தின் காரணம் - சிற்றின்ப வேட்கை - சிற்றின்பப்பற்றுள்ள மனிதன் ஒருபோதும் மகிழ்ச்சியுடைவனாக ஆகமாட்டான்; ஆகவே மாட்டான். எவன் புலனின்பப் பற்றுள்ளவனோ, அவனுக்குக் குழந்தைகள் நிறையவோ, குறைவோ அல்லது இல்லவே இல்லையோ, அவன் துக்கப்பட்டுக் கொண்டுதான் இருப்பான். ***"யே ஹி ஸம்ஸ்பர்ஶஜா போ$_4$ாக$_3$ா து$_3$:க$_2$யோனய ஏவ தே ।" [கீ$_3$தா 5/22]*** திருமணத்துக்குப் பிறகு, துவக்கத்தில் பெண்ணிடம் ஆடவனுக்கும், ஆடவனிடம் பெண்ணுக்கும் தனிப்பட்ட கவர்ச்சி இருக்கிறது. ஆதலால், முதலில் தோன்றுகிற குழந்தை சிற்றின்ப வேட்கையாலேயே உண்டாகிறது. சிற்றின்ப வேட்கையால் தோன்றிய குழந்தை பொதுவாக நல்லவனாக இருப்பதில்லை; பற்றுள்ளவனாகவே இருப்பான். இன்றைக்கு எவ்வளவு நல்ல கருத்துக்களின் பிரசாரம் நடைபெற்றிருக்கிறதோ, சமுதாயம் உயர்த்தப் பட்டிருக்கிறதோ, அது எல்லாம் நல்லோர்களின்

மூலமாகவே நடைபெற்றிருக்கிறது. இன்ப நாட்டமுள்ளவன், பேராசைக்காரன், திருடன், கொள்ளைக்காரன் முதலியோரால், சமுதாய முன்னேற்றம் எப்போதாவது ஏற்பட்டிருக்கிறதா? அவர்கள் மூலம் சமுதாய முன்னேற்றம் நிகழ்வதற்கான வாய்ப்பாவது உண்டா? ஆகவே, குழந்தைகள் குறைவாக இருக்கவேண்டும் என்றால், அநேகமாக இன்பப்பற்றுடைய குழந்தையே பிறக்கும்; அதனால் சமுதாய வீழ்ச்சியே ஏற்படும்.

***வினா:* பகவான் ராமனும், பரதனும்கூட குடும்பக்கட்டுப்பாடு செய்திருந்தார்கள் - "து₃இ ஸுத ஸுந்த₃ர ஸீதா[ம்] ஜாயே" என்றும், "து₃இ து₃இ ஸுத ஸப₃ ப்₄ராதந்ஹ கேரே" [மானஸம். உத்தரம் 25/3-4] என்றும் இருப்பதால் இரு குழந்தைகள் மட்டும் பெற்றுக் கொண்டால் என்ன தவறு?**

விடை: ஸ்ரீராமன் கருத்தடை செய்து கொண்டான் என்றோ, ஸீதாதேவி ஆபரேஷன் செய்து கொண்டாள் என்றோ, எந்த ராமாயணத்திலும் சொல்லப்பட வில்லை. இந்த கருத்தடை, ஆபரேஷன் முதலியன நம் கண்ணெதிரே இப்போதுதான் ஆரம்பமாகியிருக் கின்றன. இது வெளிநாட்டுச் சரக்கு; நமது நாட்டுத் தொழில் அல்ல. ராமன், பரதன் முதலிய அவர்களே நான்கு ஸஹோதரர்கள் இருந்தார்கள். பகவான் ஸ்ரீக்ருஷ்ணனுடைய பதினாறாயிரத்து நூற்றெட்டு ராணிகளில் ஒவ்வொருவருக்கும் பத்துப் பத்து மகன்களும், ஒவ்வொரு மகளும் தோன்றி யிருந்தார்கள். சிற்சிலருக்கு இயற்கையாகவே குழந்தைகள் குறைவாகப் பிறக்கின்றன; சிற்சிலருக்கு இயற்கையாகவே குழந்தைகள் அதிகமாகப் பிறக்கின்றன.

***வினா:* குழந்தைகள் அதிகமாகப் பிறந்துவிட்டால், எல்லாப் பொழுதும் அவர்களைச் சீராட்டிப்**

பராமரிப்பதிலேயே கழிந்துவிடும். அப்புறம், பகவானை வழிபடுவது எப்போது?

விடை: நம்முடைய கருத்து என்னவென்றால், நீங்கள் அதிகமாகக் குழந்தைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதல்ல; மாறாக, நம்முடைய கருத்து என்னவென்றால், செயற்கை முறைகளினால் குழந்தை பிறப்பதைத் தடுத்துவிட்டு ஏதோ சிறிது இன்பத்துக்காகத் தங்களுடைய உடல், பலம், சுறுசுறுப்பு ஆகியவற்றைப் பாழாக்காதீர்கள் என்பதுதான். விவசாயம் செய்வோம்; ஏர் செலுத்துவோம். ஆனால் விதை விதைக்க மாட்டோம் - இது அறிவுடைமையா என்ன? ***"ஹதம் மைது₂னமப்ரஜம்"*** - குழந்தை உற்பத்தி ஆகாவிட்டால், மனைவியுடன் உறவு கொள்வது வீண். ஆகவே, நம்முடைய நோக்கம், "நீங்கள் புலன்களுக்கு அடிமையாகாதீர்கள்; அவற்றின் ஆதிக்கத்துக்கு உட்படாதீர்கள். அதற்குமாறாக சுதந்திரமாக இருங்கள்" என்பதுதான்.

வினா: அதிகமான குழந்தைகளை விரும்ப வில்லை; புலனடக்கத்தோடும் இருக்க முடியவில்லை. இந்த நிலைமையில் என்ன செய்வது?

விடை: இது சரியான பேச்சில்லை. நீங்கள் புலனடக்கம் செய்ய விரும்பினால், அடக்கம் அவஶ்யம் உண்டாகும். நான் வெகுகாலத்துக்கு முன் "ப்ரம்மசர்யமே வாழ்க்கை" என்ற பெயருடைய ஒரு புஸ்தகத்தைப் படித்திருக்கிறேன். அதை எழுதியவர் சிவானந்த் என்ற பெயருடைய ஒரு நபர். அவர் அந்தப் புஸ்தகத்தில் இப்படி எழுதியிருந்தார்: "நான் திருமணம் ஆனவன். ஆனால் இருவரும் [நானும், மனைவியும்] ஆலோசனை செய்து, ப்ரம்மசர்யத்தைக் கடைப்பிடித்தோம். அதனால் எனக்கு மிகுந்த நன்மை உண்டாயிற்று. அந்த நன்மை எல்லோருக்கும் கிடைக்க

வேண்டும் என்பதற்காக நான் இந்தப் புஸ்தகத்தை எழுதியிருக்கிறேன்! ஒரு பெண்மணி எம்மிடம் கூறினார்- "எங்கள் அண்மை வீட்டில் ஒரு ஜைனர் குடும்பம் இருந்தது. தினந்தோறும், இரவில் அவர்கள் பேச்சுக்குரல் கேட்டு வந்தது. நீங்கள் இரவு நேரத்தில் தினமும் பேசிக் கொண்டிருக்கிறீர்களே, தூங்குவதில்லையா?" என்று ஒரு நாள், அவர்களைக் கேட்டேன். "எங்களில் ஒருவர் க்ருஷ்ணபக்ஷத்திலும், மற்றவர் சுக்லபக்ஷத்திலும் ப்ரம்மசர்யம் காப்பது என்று திருமணத்துக்கு முன்பே சபதம் செய்திருந்தோம். இப்போது மூன்றாவது பக்ஷத்தை எங்கிருந்து கொண்டு வருவது? ஆதலால் ஒரே அறையில் இருந்தாலும், நாங்கள் எங்களுக்குள், தர்மத்தைப் பற்றிப் பேசுவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறோம்." இதன் கருத்து என்னவென்றால் நீங்கள் குடும்ப வாழ்க்கையில் இருந்துகொண்டே, புலன் கட்டுப்பாடு செய்யமுடியும். நீங்கள் முனைப்போடு இருங்கள், தைர்யத்தைக் கைவிடாதீர்கள்; "நம்மால் புலனடக்கம் செய்யமுடியாது" என்று ஊக்கத்தைக் கைவிடாதீர்கள். நீங்கள் புலனடக்கம் செய்யாவிட்டால் வேறு யார் செய்வார்கள்? உறுதி இருந்தால், நடக்கக் கூடாததுகூட நடந்துவிடும்.

हिम्मत मत छाँड़े नरौं, मुख ते कहतौं राम ।
हरिया हिम्मत से किया, ध्रुव का अटल धाम ॥

ஆகவே ஊக்கத்தோடு இருங்கள்; பகவானிடம் நம்பிக்கை வையுங்கள்; அவரிடம் ப்ரார்த்தனை செய்யுங்கள்: "இறைவனே! புலனடக்கத்தோடு இருப்பது என்று நாங்கள் உறுதிபூண்டிருக்கிறோம். நீங்கள் சக்தியை அருளுங்கள்." இவ்விதம் நீங்கள் எவ்வளவு ஈடுபாடு கொண்டுள்ளீர்களோ, பகவானிடம் நம்பிக்கை வைக்கிறீர்களோ, அவ்வளவுக்கு

அபூர்வமான அற்புதக் காக்ஷிகள் தென்படும்; அவ்விதம் செய்து கண்டு கொள்ளுங்கள்.

முற்காலத்தில் கருத்தடை, ஆபரேஷன் முதலியன இல்லை. அந்தக் காலத்தில் மக்கள் புலனடக்கம் கொண்டிருந்தார்கள் என்றால் இப்போதும் புலனடக்கம் சாத்தியமே. தற்காலத்தில், புலனடக்கம் முதலிய குணங்களையும், தெய்விக சக்திகளையும் தன்னிடம் கொண்டு வருவதில் கஷ்டம் அனுபவிக்க நேரிடுகிறது என்றால், அதற்குக் காரணம் முன்னதாக அடக்கமின்மை முதலிய அஸுர சக்திகளின் இயல்பு நன்றாகப் படிந்துவிட்டது என்பதுதான்.

உண்மை பேசுகிற நபரிடம், "நான் உங்களுக்கு ஆயிரம் ரூபாய் தருகிறேன். நீங்கள் பொய் பேசுங்கள்" என்று சொன்னால், அவர் பொய் பேசமாட்டார். ஆனால் எவர்கள் பொய் - உண்மையைப் பற்றிச் சிந்திக்காதவர்களோ, அவர்களிடம் "நான் உங்களுக்கு ஐந்து ரூபாய் தருகிறேன்; நீங்கள் உண்மை பேசுங்கள்" என்றால், அவர்கள் உண்மை பேசிவிடுவார்கள். எவர்கள் புலால் உண்பதில்லையோ, அவர்களிடம் "நாங்கள் உங்களுக்கு ஆயிரம் ரூபாய் தருகிறோம். நீங்கள் புலால் சாப்பிடுங்கள்" என்றால், அவர்கள் இறந்தாலும் இறப்பார்களேயொழிய மாமிசம் உண்ணமாட்டார்கள். ஆனால் எவர்கள் புலால் உண்கிறார்களோ, அவர்களிடம், "நீங்கள் புலால், மீன் சாப்பிடாதீர்கள். கண்ட இடத்தில் உணவு அருந்தாமல் எங்கள் வீட்டிலேயே சைவ உணவு சாப்பிட்டால், உங்களுக்கு நாள்தோறும் ஒரு ரூபாய் தருவோம்" என்றால், அவர்கள் மாதம் முழுவதும் உங்கள் வீட்டில் உணவு கொள்வார்கள். கள் முதலிய குடிப்பழக்கம் இல்லாதவர்களைப் பயமுறுத்தியும், ஆசைகாட்டியும் "கள் குடியுங்கள்" என்று சொன்னால், அவர்கள் கள்ளுண்ண மாட்டார்கள். ஆனால் எவர்களுக்குக்

குடிப்பழக்கம் உண்டோ, அவர்கள் பக்தர்கள் - மஹாத்மாக்கள் சேர்க்கையால், நோயற்ற வாழ்விற்கு ஆசைப்பட்டு குடிப்பழக்கத்தை விட்டுவிடுகிறார்கள். கருத்து என்னவென்றால், உண்மை பேசுதல், புலால்-குடி மறுத்தல் எளியது. ஆனால் பொய் பேசுதல், புலால்-குடி பழகுவது கஷ்டமானது. அதேபோல புலனடக்கத்தை விட்டுவிடுதல் கடினமானது. புலனடக்கத்தோடு இருப்பது கடினமல்ல. இது அனுபவத்தால் உறுதியாக்கப்பட்ட விஷயம்.

மற்றொரு விஷயம் என்னவென்றால், புலனடக்கம் என்பது தனக்குத்தானே விளக்கமாய் நிற்பது; அடக்கமின்மை என்பது செயற்கையானது; தவறானது. தனக்குத்தானே விளக்கமாய் இருக்கும் ஒரு விஷயம் ஏன் கடினமாகப்படுகிறது? என்று கொஞ்சம் எண்ணிப் பாருங்கள். எவர்கள் புலனடக்கத்தை விட்டுவிட்டு தங்கள் வாழ்க்கையை பொறிகள் வழியிலேயே கழித்துக் கொண்டிருக்கிறார்களோ, அவர்களுக்கு மறுபடியும் புலனடக்கத்தைக் கைக்கொள்வது சிரமமாகி விடுகிறது. ஆனால் முதலிலிருந்தே கட்டுப்பாடான வாழ்க்கை அமைத்துக் கொண்டால் கெட்ட பழக்கங்களை, தீய குணங்களை விடுவதனால் மனிதனுக்கு தீரவீரம், மகிழ்ச்சி ஏற்படுகிறது. ஶாந்தி உண்டாகிறது. புலனடக்கத்தோடு இருக்கும்போது எந்த அளவுக்கு முகமலர்ச்சி, நோயின்மை, சக்தி, தைர்யம், மகிழ்ச்சி அடைகிறோமோ, அந்த அளவுக்கு கட்டுப்பாடு இல்லாதபோது ஏற்படுவதில்லை. நீங்கள் சில நாட்கள் நல்லோர் கூட்டத்தில் இருந்து புலனடக்கம் கைக்கொண்டால், புலனடக்கத்தால் எவ்வளவு நன்மை ஏற்படுகிறது என்பதை அனுபவித்துப் பார்க்கலாம். உலகத்தில் எத்தனை வியாதிகள்

உண்டோ, அவை அனைத்தும், அநேகமாய், புலன் கட்டுப்பாடு இல்லாததாலேயே உண்டாகின்றன. விதி வசத்தால் வியாதிகள் மிகக் குறைந்த அளவே உண்டாகின்றன. புலனடக்கத்தோடு இருப்பவர்களுக்கு வியாதி மிகவும் குறைவு. அடக்கமுடையவர் கவலையில்லாமல் இருக்கிறார். ஆனால், கட்டுப்பாடற்ற மனிதர்களுக்குக் கவலை, அச்சம் முதலியன மிகவும் அதிகமாக ஏற்படுகின்றன. எப்படியென்றால், புலனடக்கமில்லாத ராவணன், ஸீதையை தூக்கிக் கொண்டு வருவதற்காகச் சென்றபோது அச்சத்தால் பீடிக்கப்பட்டு இங்குமங்கும் பார்க்கிறான்.

ஸை 'सो दससीस स्वान की नाईं।
₃ इत उत चितइ चला भड़िहाईं ॥'

[மானஸம். அரண்ய॰ 28/5]

ஆனால் பொறிவயப்படாத ஸீதை, ராக்ஷஸர்களின் ஊரில், ராக்ஷஸர்களின் மத்தியில் உட்கார்ந்திருந்தபோதும் அச்சமின்றி இருக்கிறாள். தனியாகவும், பெண் இனமாகவும் இருந்தும்கூட, அவளுக்கு எவரிடமும் பயமில்லை. அவள் ராவணனைக் கீழ்மகன், வெட்கங்கெட்டவன் என்று சொல்லித் திட்டும் அளவுக்கு அச்சமற்றிருந்தாள்.

'सठ सूनें हरि आनेहि मोही।ரீ।
अधम निलज्ज लाज नहिं तोही ॥' ॥

[மானஸம். ஸுந்த₃ர॰ 9/5]

நமது ஶாஸ்த்ரங்களில் ப்ரம்மசர்யம் மிகவும் போற்றப்பட்டுள்ளது; அயல்நாட்டுப் பெரியோர்களும் இதனை ஆதரித்துள்ளார்கள். முழு வாழ்க்கையில் ஒரே ஒரு தடவை கணவன், மனைவியோடு உறவு கொள்ளவேண்டும் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஒரு தடவை போதாவிட்டால், ஆண்டுக்கு ஒரு தடவை; ஆண்டுக்கு ஒரு தடவை

போதாவிட்டால், மாதத்துக்கு ஒரு தடவை - அதாவது, மனைவியின் மாதவிலக்குக்குப் பின்பு. இப்படி இருக்க முடியாவிட்டால், தன்னுடைய இறுதிப் பயணத்துக்கான புதுத் துணியை வாங்கி வைத்துக்கொண்டு விடலாம்! காரணம் அடிக்கடி புணர்வதால் ஆயுள் விரைவில் வீணாகிறது; மனிதன் விரைவில் [குறைந்த வயதில்] இறந்து போவதற்குப் பல காரணங்கள் இருந்தாலும், அவற்றில் ஆண்மை இழப்பே முக்கிய காரணமாகும். ஆகவே நீண்ட நாள் இருக்கவும், உடல் நலத்தை முன்னிட்டும், நோயின்றி வாழவும் ப்ரம்மசர்யத்தைக் கடைப்பிடிப்பது மிகவும் அவஶ்யம். சிங்கம் வாழ்நாள் முழுவதும் ஒரே தடவைதான் பெண் சிங்கத்தோடு உறவு கொள்கிறது. ஆகவே அதனிடம் வீர்யம் அதிகமாகக் காப்பாற்றப்படுவதால், அதிகமான உடலாற்றல் இருக்கிறது. அதனால் அது தன்னைக்காட்டிலும் மிகப் பெரிய யானையையும் அடித்துப் போடுகிறது. ஆனால், எந்த மனிதன் அடிக்கடி பெண்ணுறவு கொள்கிறானோ, அவனிடம் உடலாற்றல் இருப்பதில்லை; மாறாக பலக்குறைவு வந்துவிடுகிறது.

ப்ரம்மசர்யத்தைக் கடைப்பிடிப்பதால் பெரிய பெரிய வியாதிகள் பீடிப்பதில்லை. ப்ரம்மசர்யத்தைக் கடைப்பிடிப்போரின் குழந்தைகள் ஒளிமிக்கவர் களாகவும், நோயற்றவர்களாகவும் ஆகிறார்கள். ஆனால் ப்ரம்மசர்யத்தைக் கைக்கொள்ளாதவர்களின் குழந்தைகள் ஒளி உடையவர்களாகவும், நோயற்றவர்களாகவும் ஆவதில்லை; அடிக்கடி உறவு கொள்வதால் சுக்ல-சோணிதத்தில் அந்தச் சக்தி இருப்பதில்லை. சிற்றின்பப் பற்றினால் தோன்றும் குழந்தைகள், இன்பப் பற்றுடையவர்களாகவும், நோயுற்றவர்களாகவும் ஆகிறார்கள். ஆதலால், தர்மத்துக்கு முக்கியத்வம் கொடுத்து, மகப்பேற்றுக்கு

முனைந்தால் அந்தக் குழந்தைகள் அறப்பண்புடனும், நோயற்றவர்களாகவும் பிறப்பார்கள். பகவானும், தர்மத்தோடுகூடிய காமமாகத் தான் விளங்குவதாகக் கூறியிருக்கிறார்- *"த₄ர்மாவிருத்₃தே₄ா பூ₄தேஷு காமோऽஸ்மி ப₄ரதர்ஷப₄ ॥"* [கீ₃தா 7/11]

எவன் ஶாஸ்த்ரத்தின் மீதுள்ள மதிப்புக் காரணமாக, அதை அனுசரித்து, குழந்தை பிறக்கவேண்டும் என்று, மாதவிலக்குக்குப் பின் மனைவியோடு கூடுகிறானோ, அவன் குடும்பத்தில் இருந்தாலும் ப்ரம்மசார்யாக கொள்ளத்தக்கவன். ஆனால், எவன் சிற்றின்ப ஆசை, ஸுகத்தில் பற்றுக் காரணமாகத் தன் மனைவியோடு உறவு கொள்கிறானோ, அவன் பாபம் செய்கிறான். கீதை, பொருள் நுகர்ச்சி பற்றி எண்ணுவதாலேயே வீழ்ச்சி ஏற்படும் என்று சொல்கிறது [2/62-63]. காமம் எல்லாப் பாபங்களுக்கும் ஆதாரம்; நரகத்தின் நுழைவாயில் என்றும் [3/36, 16/21] சொல்லியிருக்கிறது. கருத்து என்னவென்றால், சிற்றின்ப நுகர்ச்சி வேட்கையோடு தன் மனைவியோடு உறவு கொள்வது, நரகங்களுக்கு நுழைவாயில் போலாகும்; பாபங்களுக்கும், விபரீதங்களுக்கும் காரணமாகும்.

தீவிரமாக எண்ணிப் பார்த்தால், ப்ரம்மசர்யம் மேற்கொள்வது கஷ்டமானது அல்ல. ப்ரம்மசர்யம் காப்பது, மனிதகுலத்துக்கே உரிய விஷயம். மனிதன் புலனடக்கம் செய்யாவிட்டால் அவன் மிருகங்களைக் காட்டிலும் கேடு கெட்டவனாகிறான். பிராணிகளில் கழுதை, நாய் மட்டமானதாகக் கருதப்படுகிறது. ஆனால், வருஷத்தில் ஒரு மாதம் மட்டுமே அவைகளுக்கு உறவு கொள்வதற்கான காலம். அந்த மாதத்தில் அவைகளை அடைத்து வைத்துவிட்டால் அவைகளின் பொறிகள் அடங்கிப் போகின்றன.

அதாவது சிராவண மாதத்தில் கழுதையையும், கார்த்திகை மாதத்தில் நாயையும், மாசி மாதத்தில் பூனையையும் அடக்கிப் போட்டுவிட்டால், அவைகள் ப்ரம்மசர்யத்தைக் காக்கும்படி செய்துவிட்டால், அவைகளுக்குப் புலன் கட்டுப்பாடு ஏற்பட்டுவிடுகிறது. ஆனால், மனிதனுக்குப் பன்னிரெண்டு மாதங்கள் திறந்திருக்கின்றன. அதனால், மற்ற யாரும் அவனைக் காப்பாற்றிக் கொண்டிருக்க முடியாது; விரும்பினால், அவன் தன்னைத் தானே காத்துக் கொள்ள முடியும். ஆகவேதான் ஶாஸ்த்ரங்களில் மனிதன் ப்ரம்மசர்யம் கடைப்பிடிக்க வேண்டும் என்று கட்டளை இடப்பட்டிருக்கிறது. ப்ரம்மசர்யத்தைக் கடைப் பிடிப்பதால் ப்ரம்ம வித்தையை அடைய முடிகிறது. பேரின்பத்தை அடைய முடிகிறது.

வினா: கணவன் புலனடக்கத்தோடு இருக்கிறான்; ஆனால், மனைவி புலனடக்கம் கொள்ளவில்லை என்றால் என்ன செய்வது?

விடை: மனைவி புலனடக்கம் கொண்டிருக்கவில்லை என்பது ஏற்கத்தக்கதல்ல. உண்மையில் கணவன்தான் மனைவியைக் கெடுக்கிறான். காம வேகத்தைத் தடுக்கும் சக்தி பெண்களிடம் எவ்வளவு இருக்கிறதோ, அவ்வளவு சக்தி ஆண்களிடம் இருப்பதில்லை.

முதலிலிருந்தே புலனடக்கம் கொள்ளப் பட்டிருந்தால், புலனடக்கம் எளிதாக ஏற்படும். புணர்ச்சிப்பற்று அதிகமான பின்னர், புலனடக்கம் கொள்வது கஷ்டமாகிறது. ஆகவே, எப்போது காமத்தின் துடிப்பு இல்லையோ, அப்போது கணவன்-மனைவி இருவரும் அமைதியான உள்ளத்துடன் சிந்தனை செய்யவேண்டும் - "நாம் அதிகக் குழந்தைகளை விரும்பவில்லை என்றால் நாம் புலனடக்கத்தோடு இருக்கவேண்டும்; அதனால், நமது

உடல், உடல்நலம் நன்றாயிருக்கும்." இப்படிச் சிந்தனை செய்து இரவு வேளைகளில் இருவரும் தனித்தனியே இருக்கவேண்டும்.

மனிதன் எப்போதும் புலனடக்கத்தோடு இருக்க முடியும். ஆனால், எப்போதும் புணர்ந்து கொண்டிருக்க முடியாது. இது தனக்குத் தானே நிரூபணமான விஷயம். ஆகவே, புலனடக்க முயற்சியில் மனம் தளரக்கூடாது. கருச்சிதைவு, கருத்தடை போன்ற மஹாபாபங்களிலிருந்து பிழைத்துக் கொள்ளவேண்டும்.

எந்த நாள் வரை, இந்த ஹிந்து சமுதாயம் கருச்சிதைவு போன்ற மஹாபாபங்களிலிருந்து காத்துக் கொள்ளவில்லையோ, அந்த நாள் வரை இதன் மேம்பாடு கஷ்டமாயிருக்கும்; ஏனென்றால், தன்னுடைய பாபமே, தன்னைக் காவு வாங்கிவிடும். இந்த சமுதாயம் தன்னுடைய முன்னேற்றத்தையும், பெருக்கத்தையும் விரும்பினால், இந்தக் கொடுமை யான மஹாபாபத்திலிருந்து, ப்ரம்மஹத்தியிலும் இரு மடங்கு பாபத்திலிருந்து காப்பாற்றப்பட வேண்டும். சென்ற ஆண்டில், பாரதத்தில் இருபத்தியோரு லக்ஷம் கருச்சிதைவுகள் செய்யப்பட்டதாக ஒரு ஸஹோதரர் நம்மிடம் கூறினார். இப்படியாக இவ்வுலகத்தையும், மேலுலகத்தையும் இழக்கச் செய்யும் மாபெரும் கொலையினால் சமுதாயத்துக்கு என்ன நிலை ஏற்படப்போகிறதோ, பகவானுக்கே வெளிச்சம்! தர்மப் பற்றுடைய பாரதத்தில் தர்மத்துக்கு எதிரான எத்தனை செயல்கள் நடந்து வருகின்றன - இதற்கு ஓர் எல்லையே இல்லை! இதன் விளைவு மிகவும் பயங்கரமானதாக இருக்கும். எனவே, காலம் மீறிப் போவதற்குள், விழித்துக் கொள்ள வேண்டும்.

'का बरषा सब कृषी सुखानें ।
समय चुकें पुनि का पछितानें ।।'

யாரையும் திட்டுவதோ, இழித்துக் கூறுவதோ நம்முடைய நோக்கம் அல்லவே அல்ல. மனித உடலைப் பெற்றபின், குறைந்தபட்சம் கருச்சிதைவு போன்ற மஹாபாபங்களிலிருந்து காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்பதே நாம் கூறுவது.

ப$_3$டே$_3$ ப$_4$ாக்$_3$ மானுஷ தனு பாவா ।
ஸுர து$_3$ர்லப$_4$ ஸப$_3$ க்$_3$ரந்த$_2$ந்ஹி கா$_3$வா ॥

[மானஸம். உத்தரம் 43/4]

कबहुँक करि करुना नर देही।
देत ईस बिनु हेतु सनेही॥

[மானஸம். உத்தரம் 44/3]

"து$_3$ர்லபோ$_4$ மானுஷோ தே$_3$ஹோ
தே$_3$ஹினாம் க்ஷணப$_4$ங்கு$_3$ர: ।"

[ஸ்ரீமத்$_3$ப$_4$ாக$_3$வதம் 11/2/29]

லப்$_3$த்$_4$வா ஸுது$_3$ர்லப$_4$மித$_3$ம் ப$_3$ஹுஸம்ப$_4$வாந்தே
மானுஷ்யமர்த$_2$த$_3$மநித்யமபீஹ தீ$_4$ர: ।

[ஸ்ரீமத்$_3$ப$_4$ாக$_3$வதம் 11/9/29]

இவ்விதம் கிடைத்தற்கரியது[†] என்று அறநூல்களில் பலகாறும் போற்றப்பட்டுள்ள மனித உடலுக்குள் ஒரு ஜீவனை வராமல் தடுப்பது, ஜீவனுக்கு இவ்வளவு துர்லபமான உடல் கிடைக்காமல் செய்வது - எத்தகைய மகத்தான பாபம்! இந்த மஹாபாபத்திலிருந்து காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.

† *அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது*

7. சண்டை - சச்சரவுக்குத் தீர்வு

வினா: குடும்பத்தில் மனவேற்றுமை, சச்சரவு, கவலை முதலியன தோன்றுவதற்குக் காரணம் என்ன?

விடை: ஒவ்வொரு பிராணியும் தன் இஷ்டப்படியே பிறர் நடக்கவேண்டும் என்று விரும்புகிறது. தனக்குச் சாதகத்தை விரும்புகிறது; தன்னுடைய ஸுகம்-மகிழ்ச்சியை விரும்புகிறது; தன் கௌரவத்தை விரும்புகிறது; தன் சுயநலத்தை சாதித்துக் கொள்ள விரும்புகிறது - இவ்விதம் தன்னிடத்துள்ள தன்னலம் காரணமாகவே குடும்பத்தில் மனவேற்றுமை, சச்சரவு, கவலை முதலியன தோன்றுகின்றன. எப்படியென்றால், நாய்கள் மிகுந்த அன்புடன் தங்களுக்குள் விளையாடுகின்றன; ரொட்டித் துண்டு எதிரே வந்ததும், சண்டை ஆரம்பமாகிவிடுகிறது. ஆகவே, சண்டைக்குக் காரணம் ரொட்டித் துண்டு அல்ல. மாறாக தன்னிடத்தேயுள்ள சுயநலம்தான்.

குடும்பத்தில் எவன் தன்னுடைய ஸுக-சௌக்யத்தை விரும்புகிறானோ, அவன் குடும்பி அல்லன். வெறுமே ஒரு நபர். குடும்பத்திலுள்ள பெரியவர்கள், சிறியவர்கள், ஸம வயதுக்காரர்கள் - எல்லோருடைய நன்மையை விரும்புகிறவன், நலன் செய்கிறவன் எவனோ, அவனே குடும்பியாகிறான். ஆகவே, எவன் குடும்பத்தில் அமைதியை விரும்புகிறானோ, சச்சரவை விரும்பவில்லையோ, அவன் தன் கடமையிலும், பிறருடைய உரிமையிலும் கவனமாக இருக்கவேண்டும். அதாவது, தன்னுடைய கடமையைச் செய்யவேண்டும். மற்றவர்களுக்கு உகந்ததைச் செய்யவேண்டும். மட்டு-மரியாதை, மகிழ்ச்சி-ஓய்வு கொடுக்கவேண்டும்.

வினா: ஸஹோதரர்கள் தங்களுக்குள் சண்டையிட்டால், தாய்-தந்தையர் என்ன செய்யவேண்டும்?

விடை: தாய்-தந்தையர் நியாயத்தை எடுத்துச் சொல்லவேண்டும். "இளைய மகனிடம், "பரதன், லக்ஷ்மணன், சத்ருக்னனைப் பார். அவர்கள் ராமனிடம் எப்படி நடந்து கொண்டார்கள்? பீமன், அர்ஜுனன் முதலியோர் தங்கள் மூத்த ஸஹோதரன் யுதிஷ்டிரரிடம் எவ்வாறு நடந்து கொண்டார்கள்?" என்று சொல்லவேண்டும். மூத்த பிள்ளையிடம், "நீ ராமனைப் பார். அவர் தன்னுடைய இளைய ஸஹோதரர்களிடம் எவ்வாறு நடந்து வந்தார்? யுதிஷ்டிரர், தன்னுடைய இளைய ஸஹோதரர்களிடம் எந்த முறையில் பழகினார்? ஆகவே, நீங்கள் எல்லோரும் அவர்களுடைய நடத்தையை லக்ஷியமாகக் கொண்டு உங்களது நடைமுறையிலும் கொண்டு வாருங்கள்."

வினா: ஸஹோதர-ஸஹோதரிகள் தங்களுக்குள் சண்டையிட்டால் தாய்-தந்தையர் என்ன செய்வது?

விடை: தாய்-தந்தையர் பெண்ணின் கட்சியில் சேரவேண்டும். ஏனென்றால், அவள் சுவாஸினீ; தானமாக கொடுக்கப்படும் பொருள்†; சில நாட்கள் இருக்கப் போகிறவள். ஆகவே, அவள் ஆதரவு காட்டப்பட வேண்டியவள். பையனோ, குடும்பத்துக்கு உரிமையாளன்; வீட்டிலேயே இருப்பவன். தனிமை யில் பையனுக்கு அறிவுறுத்த வேண்டும். "குழந்தே! ஸஹோதரியை ஆதரவற்றவளாகச் செய்துவிடாதே. அவள் இந்த வீட்டில் வஸிக்கிறவள் அல்லள். இவளோ தன் வீட்டுக்குப் போய்விடப் போகிறாள். நீயோ, இந்த வீட்டுக்கு உரிமைக்காரன்."

---

† மகள், ஸஹோதரி, ஸஹோதரியின் மகள் இவர்களுக்கு போஜனம் செய்விப்பது பிராமணஸமாராதனைக்கு ஒப்பாகும்.

ஸஹோதரி, ஸஹோதரனிடமிருந்து எதனையும் பெறுவதற்கு ஆசைப்படக் கூடாது. ஸஹோதரன் எவ்வளவு கொடுக்கிறானோ, அதிலிருந்து கொஞ்சம் எடுத்துக் கொள்ளவேண்டும். "ஸஹோதரன் வீட்டிலிருந்து எடுத்துச் செல்வதால், நமக்குக் கொஞ்சம்கூடக் கட்டுப்படி ஆகாது. நம்ம வீட்டுப் பொருள்தான் நம்ம கார்யத்திற்கு உதவும்" என்று அவள் எண்ணவேண்டும்.

வினா: பையனும், மருமகளும் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டால், தாய்-தந்தையரின் கடமை என்ன?

விடை: "நாங்கள் எவ்வளவுதான் இதைப் பொறுத்துக் கொண்டிருப்போம்?" என்று தாய்-தந்தையர் அவ்விருவருக்கும் அறிவுறுத்த வேண்டும். இந்த வீட்டின் யஜமானன் நீங்கள்தானே? நீங்கள், உங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டால், குடும்பத்தைக் கட்டிக் காப்பது யார்? ஏனென்றால், சுமை முழுவதும் உங்கள் மேல் அல்லவா இருக்கிறது?

மகனைத் தனியாக அழைத்து, "குழந்தாய்! உன்னுடைய மனைவி உன் பொருட்டாகவல்லவா, தன்னுடைய அப்பா-அம்மா முதலிய எல்லோரையும் விட்டுவிட்டிருக்கிறாள். நீயோ, உன் அப்பாவின் ஸிம்மாசனத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கிறாய். நீ என்ன த்யாகம் செய்துவிட்டாய்? ஆகவே, தன்னலமறுப்பின் உருவமாகத் திகழ்கின்ற மனைவியை உடல், பொருள், உள்ளம் முதலியவற்றால் மகிழ்ச்சியாக வைத்திருப்பது, அவளைப் பராமரிப்பது, உன்னுடைய முதன்மையான கடமை. ஆனா, கேட்டுக்கோ, நீ அவளுடைய கணவன் என்கிறதால், அவளை அடிமையாக்கிக் கசக்கிப்

பிழியக்கூடாது. அவளுடைய விருப்பம் எதில் உள்ளதோ, நீ பற்றேதும் வைக்காமல், அந்தக் கார்யங்களையே செய். எல்லா உயிர்களுக்கும் நலன் செய்வதே மனிதனின் கடமை. நீ மனைவியின் நலனைக்கூட கருத்திற்கொள்ளாவிட்டால் வேறு என்னதான் செய்துவிடப் போகிறாய்?

மகனின் மனைவிக்கு இப்படி உணர்த்த வேண்டும்: "பெண்ணே! உன் கணவன் பொருட்டாகவே, உன்னுடைய அப்பா-அம்மா, அண்ணன்-அண்ணி ஆகிய எல்லோரையும் துறந்தாய்; இப்போது அவனோடு ஒத்துப் போகவில்லை யென்றால், அவனுக்குப் பணிவிடை செய்ய முடியாவிட்டால், வேறு என்னதான் உன்னால் செய்யமுடியும்? ஒருவன் கடலைத் தாண்டி வந்து கரையின் அருகே மூழ்கிப் போனான் என்பது எவ்வளவு வெட்கக்கேடான விஷயம்! நீ செய்ய வேண்டிய கடமை ஒன்றே ஒன்றுதான்.

एकइ धर्म एक व्रत नेमा। कायँ बचन मन पति पद प्रेमा ॥

[மானஸம். அரண்ய॰ 5/4

வினா:* *மகளும், மருமகளும் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டால், அப்பா-அம்மா என்ன செய்வது?

விடை: மகளுக்கு அம்மா அறிவுரை கூறவேண்டும். "இதோ பாரடி! இவள் [மருமகள்] ரொம்ப நவீனமா வளர்ந்தவ. இவள் ஏதாவது சொன்னால், அதைப் பெரிசா நினைச்சு மரியாதை கொடுக்கணும். இவள் வீட்டின் யஜமானி. அதனாலே, என்னைவிட இவளை உயர்வா மதிக்கணும். நீ என்னை மரியாதைக் குறைவா நடத்தினா, நான் ஒண்ணும் சட்டுனு

கோவிச்சுக்க மாட்டேன். ஏன்னா, நீ என்னோட பொண்ணுங்கிற உறவு இருக்கிறதாலே, நீ உரிமை கொண்டாடலாம்."

வீட்டுப் பெண்ணுக்கு அதிக மதிப்புக் கொடுப்பது, மருமகளின் கடமை. ஏனென்றால், அவள் ஒரு விருந்தாளியைப்போல் வந்திருக்கிறாள். அவள் நாத்தனாரின் குழந்தைகளிடம், தன் குழந்தைகளைக் காட்டிலும் அதிக ஆசையோடு இருக்கவேண்டும்†. குழந்தைகள் ஒத்துப்போய்விட்டால், அம்மாவும் ஒத்துப் போவாள் என்பது நிலைநாட்டப்பட்ட ஒரு சட்டம். இப்படியாக, நாத்தனாரை மகிழ்ச்சியாக வைத்திருக்க வேண்டும். மற்றவர்களோடு இணைந்து போவது, தன்னுடைய நலனுக்குக் காரணமாகும்.

மகளிடம் உள்ள பாசம் காரணமாக, அம்மா, மகளுக்கு ஏதேனும் கொடுக்க விரும்பினால், மகள் அதனை ஏற்றுக் கொள்ளக்கூடாது. "என்னுடைய அண்ணி கொடுத்தால் வாங்கிக் கொள்கிறேன். நீ கொடுத்தால், அண்ணி தப்பாக எடுத்துக் கொள்வாள். உங்களுக்குள் சண்டை வந்தால், அப்பாடி! அதுக்காக நான் இங்கே வரல்லேம்மா! அம்மா! உங்கிட்டேயிருந்து எனக்குக் கொஞ்ச காலத்துக்குத்தான் கிடைக்கும். ஆனால் அண்ணி கையிலிருந்து வாங்கிண்டா, ரொம்ப நாள்வரை எனக்குக் கிடைத்துக் கொண்டேயிருக்கும்! அதனாலே, த்யாகம், உலக நடப்பு, சுயநலம் ஆகிய எல்லாக் கோணத்திலிருந்து

---

† நாத்தனாரின் குழந்தைகளிடம், மருமகள், முதல்தரமான அன்பு செலுத்த வேண்டும்; இரண்டாம்தரமாகச் சின்ன மைத்துனர் குழந்தைகளிடமும், மூன்றாம்தரமாகப் பெரிய மைத்துனர் குழந்தைகளிடமும், அடுத்தபடியாக மாமியார் வீட்டுக் குழந்தைகளிடமும், ஐந்தாம்தரமாகத் தன் சொந்தக் குழந்தைகளிடமும் அன்பு செலுத்த வேண்டும்.

பார்த்தாலும், அண்ணி கையிலேருந்து வாங்கிக்கிறது தான் நல்லது!" என்று மகள் தாயிடம் கூறிவிட வேண்டும்.

வினா: அப்பா-அம்மாவுடன் அண்ணன்மார் சண்டை போட்டால், இளைய ஸஹோதரர்களின் கடமை என்ன?

விடை: இளைய ஸஹோதரன், பெரிய ஸஹோதரரின் கால்களில் விழுந்து வணங்கி, "அண்ணா! நீங்களே இப்படி நடந்துகொண்டால், நாங்கள் யாரை லக்ஷியமாகக் கொள்வோம்? ஆகவே, நீங்கள் எங்களிடம் பரிவுகாட்டி, அப்பா-அம்மாவுடன் நல்லவிதமாக நடந்து கொள்ளுங்கள். இப்படிச் செய்வதனால், உங்களுக்கு இரண்டுவிதமான நன்மை உண்டாகும். [1] குடும்பத்திலும், தெருவிலும் உள்ளவர்களிடம் உங்கள் நல்ல நடத்தையின் தாக்கம் ஏற்படும். [2] உங்களுடைய நடத்தையைப் பார்த்து, நாங்களும் அப்படியே நடப்போமாதலால், உங்களுக்கு அந்தப் புண்ணியமும் கிடைக்கும். அதனால், உங்களுடைய நடத்தை ஒரு முன்மாதிரியாக அமையவேண்டும். நாங்கள் உங்களை வேண்டிக் கொள்ளத்தான் முடியும். ஏனென்றால், நீங்கள் நம்முடைய தந்தைக்கு ஈடானவர்" என்று சொல்லவேண்டும்.

வினா: இளைய ஸஹோதரன், அப்பா-அம்மாவிடம் சண்டை போட்டால், பெரிய ஸஹோதரனின் கடமை என்ன?

விடை: பெரிய ஸஹோதரன், இளைய ஸஹோதரனிடம், "இதைப் பாரடா! நானும், நீங்கள் எல்லோரும் குழந்தைகள். நம்மால், அப்பாவும், அம்மாவும் எப்போதும் மதிக்கப்பட வேண்டும்;

போற்றப்பட வேண்டும். எந்த ஶரீரத்தைக் கொண்டு நாம் பகவானை அடைய முடியுமோ, அந்த உடம்பு, நம்முடைய அப்பா-அம்மாவின் கருணையால் கிடைத்திருக்கிறது. அவர்களிடம் நாம் பட்டிருக்கும் கடனிலிருந்து ஒருபோதும் நாம் விடுதலை அடைய முடியாது. ஆனால் நாம் அவர்களுக்கு இணக்கமாக நடந்து, விருப்பப்படி செயல்பட்டால், நம்முடைய கடன் தள்ளுபடி செய்யப்படலாம். தோலைச் செருப்பாக தைத்து தாய்-தந்தையருக்கு கொடுப்போமானாலும் அவர்களுடைய கடனை தீர்த்ததாக ஆகாது. ஏனெனில் அந்த சருமம் எங்கிருந்து வந்தது? அவர்கள் கொடுத்ததையே அவர்களுக்கு கொடுக்கிறோம். நம்முடையதை எதைக் கொடுத்தோம்? நாம் நம்முடையதாகக் கருதுகிறோமே, அதுதான் தவறு. அவர்கள் நம்மை எப்படி வேண்டுமானாலும் நடத்துவதற்கு உரிமை இருக்கிறது" என்று சொல்ல வேண்டும்.

வினா: ஸஹோதரி, அப்பா-அம்மாவுடன் சண்டை போட்டால், ஸஹோதரனின் கடமை என்ன?

விடை: நீதி எங்கிருக்கிறது என்று ஸஹோதரன் பார்க்கவேண்டும். அந்த நீதிக் கண்ணோட்டத்திலும் ஸஹோதரியின் தரப்பில் நிற்கவேண்டும். "இவள் விருந்தாளி மாதிரி வந்திருக்கிறாள். இவளிடம் ஆசை-அன்பு காட்டவேண்டும்" என்று பெற்றோரிடம் கூறவேண்டும். ஆனால் ஸஹோதரி அநியாயமாக நடந்தால், அவளைத் தனியே அழைத்து, "தங்கச்சி! நமக்குள்ளே அன்புதான் சிறப்பானது; சச்சரவு இல்லை. அப்பா-அம்மா மரியாதைக்குரியவங்க. அதனாலே நீ, நான், நாமெல்லோரும் அப்பா-அம்மாகிட்ட மரியாதையா நடந்துப்போம். உப்புப்பெறாத விஷயத்துக்காக அவங்களைக் கேவலப்படுத்துவானேன்?" என்று சொல்லவேண்டும்.

வினா: இளைய ஸஹோதரன், அண்ணியுடன் சண்டை போட்டால், அண்ணனுடைய கடமை என்ன?

விடை: அண்ணன், தம்பியை பயமுறுத்த வேண்டும். "நீ என்ன செய்துண்டிருக்கே? ஶாஸ்த்ரப் படி பார்த்தால், அண்ணாவின் மனைவி அம்மாவுக்கு ஸமானம். லக்ஷ்மணன், பரதன், சத்ருக்னன் ஸீதை யிடம் எப்படி நடந்தார்கள்? அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை அடிக்கடி படி; சிந்திச்சுப் பார். அதனாலே உனக்குள்ளே மாசற்ற எண்ணங்கள் தோன்றும்; உன்னுடைய புத்தி இயல்பாகவே தூயதாகிவிடும்."

வினா: அண்ணன் மனைவியும், தம்பியின் மனைவியும் தங்களுக்குள் சண்டையிட்டால், ஸஹோதரர்கள் என்ன செய்யவேண்டும்?

விடை: அவர்கள் தத்தம் மனைவிக்கு அறிவுரை கூறவேண்டும். இளைய ஸஹோதரன், தன் மனைவியிடம், "இதைப் பார்! எங்க அண்ணா உனக்கு அப்பா மாதிரி - இப்படி நினைச்சு, நீ மரியாதையா நடந்துக்கணும்" என்று சொல்லவேண்டும். பெரிய ஸஹோதரன், தன் மனைவியிடம், "என்னோட தம்பி உனக்குப் பிள்ளைபோல; அவனுடைய மனைவி உனக்கு மகள்போல. அதனால் நீ அவர்களிடத்திலே அன்பாயிருக்கணும். அவனோட மனைவி ஏதாவது சொன்னாலும், நீ அவளை மன்னிச்சுடணும்; ஏனென்றால் நீ பெரியவள். அவளுடைய பேச்சுக்களை நீ பொறுத்துக் கொள்ளாவிட்டால் உனக்கு என்ன உசத்தி? அவளோட பேச்சுக்களைக் கேட்டுக்கிறதனாலேயும், அவளுக்கு அன்பு காட்டுவதனாலேயும்தான், உனக்கு உயர்வு உண்டாகும். கோபம் அடைகிறவன் கடைசியிலே தோற்றுப் போகிறான்; பிறருடைய கோபத்தைத் தைர்யமாகப் பொறுத்துக் கொள்பவன் வெற்றியடைகிறான்.

தங்களுடைய மனைவிகளின் பூசலைத் தங்களிடையேயும் கொண்டு வராமல், இரு ஸஹோதரர்களும் கவனமாக இருக்கவேண்டும். பெண்களிடம், பொறுத்துக் கொள்ளும் ஆற்றல் [இயல்பு] குறைவாக இருக்கிறது; அதனால், தங்களுக்குள் மனத்தாங்கல் ஏற்படாதபடி ஸஹோதரர் கள் விழிப்புடன் இருக்கவேண்டும். மனைவிகள் தங்களுக்குள் ஒத்துப் போக முடியாமற்போனால், தனித்தனியே போக வேண்டியதுதான். ஆனால், தனியே போவதும் அன்புக்காகவே இருக்கவேண்டும். தனித்தனியே இருந்தும் தங்களுக்குள் சச்சரவு தொடர்ந்தால், த்னிக்குடித்தனம் என்னத்துக்கு? ஆகவே, அன்பின் காரணமாகவே ஒன்றாக இருக்கணும்; அன்புக்காகவே தனித்து இருக்கணும். பிரிந்து போகிறபோது, தனது பங்குக்காகச் சண்டை போடக்கூடாது. அண்ணன் என்ன கொடுக்கிறாரோ, அதை மட்டுமே இளைய ஸஹோதரன் எடுத்துக் கொள்ளவேண்டும்; அதுபோல, தன்னைக்காட்டிலும் அதிகமாகத் தம்பிக்குக் கொடுக்கவேண்டும் என்பது தமையனின் எண்ணமாக இருக்கவேண்டும். ஏனென்றால், அவன் சிறியவன்; அன்புக்குரியவன். தன் கணக்குப்படி அதிகமாகக் கொடுத்திருந்தும், சிறிய ஸஹோதரன் சரியாகக் கொடுக்கப்படவில்லை என்று எண்ணினால், மூத்தவன் இளையவனின் கருத்துக்கு மதிப்புக் கொடுக்கவேண்டும்; தன்னுடைய கருத்துக்கு அல்ல.

த்யாகமே மிக உயர்ந்த பொருள். மிக எளிய பொருட்களின் பொருட்டு விருப்பு-வெறுப்புக் கொள்வது மிகப் பெரிய குற்றம். ஏனென்றால், பொருட்கள் இங்கேயே தங்கிவிடும்; விருப்பு-

வெறுப்புகள் தன்னுடன் வரும். ஆகவே, மனிதன் ஒவ்வொரு மூச்சிலும் கவனமாக இருக்கவேண்டும்; தன்னுடைய அந்தக்க்ரணத்தை ஒருபோதும் அசுத்தப்படுத்தக் கூடாது.

வினா: தங்களுடைய குமாரர்கள் தமக்குள் சண்டையிட்டால், ஸஹோதரர்கள் என்ன செய்யவேண்டும்?

விடை: கூடுமானவரையில், தன்னுடைய மகனுக்குப் பரிந்து பேசாமல், ஸஹோதரனுடைய பிள்ளையை ஆதரிக்க வேண்டும். ஸஹோதரனின் மகன் தவறு செய்துவிட்டால், அவனுக்கு அமைதியான முறையில் உணர்த்தவேண்டும். கருத்து என்னவென்றால், தன் சுயநலத்தையும், கர்வத்தையும் விட்டுவிட்டால், எல்லோருடனும் நல்லமுறையில் பழகலாம்.

வினா: அம்மாவும், மனைவியும் [மாமியாரும், மருமகளும்] தங்களுக்குள் சண்டை போட்டால், மகனின் கடமை என்ன?

விடை: இம்மாதிரிச் சூழ்நிலையில், மகனுக்குப் பெரிய ஆபத்து வருகிறது. அம்மாவின் கட்சியை எடுத்து ஆதரித்தால், மனைவி அழ ஆரம்பிக்கிறாள். மனைவியின் கட்சிக்கு ஆதரவு காட்டினாலோ, அம்மாவுக்குத் துக்கம் வருகிறது! "இவன் பெண்டாட்டிதாஸன் ஆயிட்டான்; என் பிள்ளையா இல்லே!" இம்மாதிரியான சமயத்தில், மகன் அம்மாவுக்கே அதிக மரியாதை காட்டி, அம்மாவின் சொற்களைக் கேட்கவேணும். தனியாக மனைவியிடம், "என் அம்மாவைப்போல, மதிப்புக்கும், மரியாதைக்குமுரிய வேறு யாரும் எனக்கும் இல்லே; உனக்கும் இல்லே. அவரைப்போல, நம் இருவருக்கும்

நல்லது செய்யக்கூடியவர், நல்லதை விரும்புகிறவர் வேறே யாரும் இல்லே. அம்மா உன்கிட்ட கசப்பும், உறைப்புமா பேசினாலும் விட்டுடு; மனசுக்குள்ளே உனக்குக் கெடுதல் நினைக்கமாட்டார். மாறாக, எப்போதும் நல்லதையே விரும்புவார். என்னோடு நீ ஒற்றுமையா இருக்கணுமானால், அம்மாகிட்ட ஒற்றுமையா இருக்கணும்." மகன், மனைவியின் கட்டுப்பாட்டில் சிக்கி, அவள் சொன்னாள் என்பதற்காக யாருடனும் சண்டை-சச்சரவு, வெறுப்பு வைத்துக் கொள்ளாமல் இருக்கவேண்டும். மனைவி யின் பேச்சைக் கேட்டு தாயார், ஸஹோதரி முதலியோரை அலக்ஷியப்படுத்துவது, அவமானப் படுத்துவது மிகப் பெரிய குற்றம்.

அம்மாவையும் தனியாக அழைத்து, "அம்மா! இந்தப் பொண்ணு இருக்காளே, அப்பா-அம்மா, அண்ணா-அண்ணி எல்லோரையும் விட்டுட்டு வந்திருக்கிறாள். அதனாலே, நீங்கதான் இவளிடம் கொஞ்சிக் குலாவணும். இவளுடைய கஷ்டங்களைக் கேட்கிறவங்க வேறு யார் இருக்கா? தன்னோட இன்ப-துன்பங்களையெல்லாம் யார்கிட்ட போய்ச் சொல்லுவாள்? நீங்கதான் இவளுக்கு அம்மா. உங்க மனசுக்குக் கஷ்டம் ஏற்படுகிற மாதிரி இவள் நடந்து கொண்டால்கூட, நீங்க பொறுத்துக் கொண்டு மன்னித்துவிடணும். நாம் இரண்டு பேருமே இவளிடத்திலே பாசத்தோட நடந்து கொள்ளவில்லை யென்றால், இவள் எங்கே போவாள்? அதனாலே, அம்மா! இவளை மன்னித்துவிடு. குழந்தையாயிருந்த போது, உங்க மடியிலே எத்தனையோ தடவை நான் மலஜலம் கழிச்சிருக்கேன். அப்போவெல்லாம் நீங்க கோபித்துக் கொள்ளலல்லே. மாறாக, என்னை

மன்னிச்சீங்க. ஏன் அதையெல்லாம் ஒரு குற்றமாகக் கூட எடுத்துக் கொள்ளல்லே. பிரிக்க முடியாத பொருளாக நினைத்து அவளை மன்னித்துவிடுங்க. பல் கடித்து நாக்கு துண்டாகப் போய்விட்டால், பற்கள் மேலே விரோதம் உண்டாகிறதில்லை; அதன் மேலே கோபம் வருகிறதில்லை, இல்லையா? அதுபோல இவளாலே ஏதேனும் அபகாரம் ஏற்பட்டாலும், உங்களுக்குக் கோபம் வரக்கூடாது. ஏனென்றால் இவள் உங்க உடம்பிலே ஒரு பகுதி. எப்படி நான் உங்களுடைய ஓர் அங்கமாக இருக்கிறேனோ, அப்படியே இவள் என்னுடைய அங்கமாக இருக்கிறதாலே, உங்களுடைய அங்கமாகவுமாகிறாள்."

வினா: மனைவியும், மருமகளும் தங்களுக்குள் சண்டையிட்டால் கணவன் [மாமனார்] என்ன செய்யவேண்டும்?

விடை: கணவன் தன்னுடைய மனைவியைக் கடிந்துகொண்டு, மருமகளிடம் "நான் உன்னுடைய மாமியாருக்குப் புத்திமதி சொல்கிறேன்" என்று கூறி ஸமாதானப்படுத்த வேண்டும். தன்னுடைய மனைவியைத் தனியாக அழைத்து, "இதைப் பார்! நீதான் இவளுடைய அம்மா. இவள் தன்னுடைய அப்பா-அம்மா, ஸஹோதரன்-அவருடைய மனைவி முதலியோரை விட்டுவிட்டு, நம் வீட்டுக்கு வந்திருக்கிறாள். அதனால் உன்னுடைய மகளைப்போல இவளை நடத்தவேண்டும்; அன்புகாட்ட வேண்டும். இவள் தன்னுடைய துயரங்களை உன்னிடம் அல்லாமல் வேறு யாரிடம் சொல்வாள்? தனக்கு ஒரு ஆதாரமாக, ஆதரவாக வேறு யாரை அடைவாள்?" என்று சொல்லவேண்டும்.

மருமகளிடம், "இதோ பார்! பெண்ணே! மாமியார் எது செய்தாலும், மருமகளுடைய நன்மைக்காகவே

செய்கிறாள். பிள்ளை பிறக்கிறான்; அது முதற்கொண்டே அவள், எனக்கு மருமகள் வருவாள்; நான் சொல்கிறதைச் செய்வாள்; எனக்குப் பணிவிடை செய்வாள்" என்று எதிர்பார்க்கத் தொடங்குகிறாள். இப்படி ஓர் எதிர்பார்ப்பைக் கொண்டிருக்கும் மாமியார், மருமகளுக்கு நன்மை யில்லாததை எப்படிச் செய்வாள்? நீ இன்னும் குழந்தையாக இருப்பதால், உன் இஷ்டப்படி நடக்கவில்லையென்றால் மாமியாரைப் பற்றித் தவறான எண்ணம் வருகிறது. பெண்ணே! நீ உன் அப்பா-அம்மா ஆகிய எல்லோரையும் விட்டுவிட்டு இங்கே வந்திருக்கிறாய். என்ன ஒரு மாமியாருடன் உன்னால் ஒத்துப் போக முடியாதா? மாமியார் எத்தனை நாட்களுக்கு இருக்கப் போகிறாள்? இந்த வீட்டு யஜமானி நீதான். உங்கள் இருவரிடையே சண்டையைப் பற்றி யாரேனும் ஒரு பொது மனிதன் கேட்டால், தவறு உன்னிடம் என்றுதான் கருதுவான். எப்படியென்றால், வயோதிகம் அடைந்தவர்களும், சிறுவர்களும் தங்களுக்குள் சண்டையிட்டால், குற்றம் குழந்தைகளுடையதாகக் கருதப்படுமே தவிர, பெரியவர்கள் - வயதானவர்களுடையதாக அல்ல. அதனால், இந்த எல்லா விஷயங்களையும் எண்ணிப் பார்த்து, நீ உன்னுடைய நடத்தையை சீர்படுத்திக் கொள்ளவேண்டும். உன் மாமியாருக்குத் தப்பாகத் தோன்றாதபடி நடந்து கொள்ளவேண்டும். எப்போதாவது உன்னிடம் கடுமையாக நடந்தால், மாமியாரின் காலில் விழுந்து அழுது, மன்னிப்புக் கேட்கவேண்டும். இதனுடைய நல்விளைவு மாமியாரின் மனத்தில் ஏற்படும். அதனால், உங்கள் இருவருக்கும் பெருமை. வீட்டிலுள்ளவர்களுக்கு

ஸுகம் ஏற்படும். ஒரு விஷயம் என்னவென்றால், நீ கோபித்துக் கொள்வதால் வீடு முழுவதும் அமைதி இழக்கிறது. வீட்டின் அமைதியின்மைக்கு நீ ஏன் காரணமாக ஆகவேண்டும்? நீ பெரியவர்களுடைய உத்திரவுப்படி நட; காலையிலும், மாலையிலும் பெரியவர்களின் காலில் விழு. மாமியார் என்ன சொன்னாலும், அவள் எதிரே எதுவும் பேசாதே. அவளுக்கு அமைதி ஏற்பட்டதும், உன் மனத்தில் உள்ள விஷயங்களை அவளிடத்திலே மெதுவாகச் சொல்லு. அவள் ஏற்றுக் கொண்டாலும் சரி; ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் சரி. உனக்கு ஒரு குறைவும் ஏற்படாது" என்று அறிவுரை கூறவேண்டும்.

வினா: அன்னையும், தந்தையும் தங்களுக்குள் சண்டையிட்டால், மகனின் கடமை என்ன?

விடை: முடிந்தவரையில் மகன், அம்மாவின் பக்கம்தான் இருக்கவேண்டும். ஆனால், இந்தச் சேதி அப்பாவுக்குத் தெரியக்கூடாது. அப்பாவிடம் இப்படிச் சொல்லவேண்டும்- "அப்பா! நீங்கள் நம் எல்லோருக்கும் யஜமானன். என் அம்மாவுக்கு ஏதாவது சொல்ல வேண்டியிருந்தால், அதைத் தங்களிடம்தானே சொல்ல முடியும்? தங்களை விட்டால், அவர் சொல்வதைக் கேட்பதற்கு வேறு நபர் யார் இருக்கிறார்கள்? திருமணத்தின்போது, அக்னியையும், பிராமணர்களையும் எதிரில் வைத்துக் கொண்டு கொடுத்த உறுதிமொழியைக் காப்பாற்ற வேண்டும். தான் கொடுத்த உறுதிமொழியை அம்மா காப்பாற்றுகிறாரா, இல்லையா? - என்று எண்ணிப் பார்க்காமல், நீங்கள் உங்கள் கடமையை நிறைவேற்ற வேண்டும். நீங்கள் மதிப்புக் கொடுத்தால்தான், எனக்கும், அம்மாவுக்கும் இந்த லோகம் - மேல் லோகம்

இரண்டும் வளமாக அமையும்; இல்லையென்றால், நாங்கள் எங்கேதான் போவோம்? நீங்கள் இல்லாவிட்டால் எங்கள் நிலைமை என்னாகும்? நான் உங்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கவில்லை; வெறுமே, நினைவுபடுத்திக் கொண்டிருக்கிறேன். நான் ஏதாவது உசிதமில்லாதபடி பேசியிருந்தால் என்னை மன்னித்து விடுங்கள். ஏனென்றால், நீங்கள் பெரியவர்-

"க்ஷமா ப₄ட₃னகோ சாஹியே, சே₂ாடனகோ உத்பாத் ।
கஹா விஷ்ணுகோ க₄ட் க₃யோ, ஜோ ப்₄ருகு₃ மாரீ லாத் ॥"

பிருகு முனிவர் தடியால் அடித்தார் என்பதால் பகவான் விஷ்ணுவுக்குக் கௌரவக் குறைவு ஏற்படவில்லை; பதிலாக, மஹிமை பெருகியது. நீங்களே யோசித்துப் பாருங்கள். உங்களுக்கு நான் சொல்லவேண்டுமா? உங்களுக்கே தெரியுமே.

குடும்பத்தில் சச்சரவு ஏற்படக்கூடாது. இதற்காக, ஒவ்வொருவரும் தங்கள் அதிகாரத்தை விட்டுக் கொடுத்து, மற்றவர்களுடைய அதிகாரத்தை நிலை நாட்ட வேண்டும். ஒவ்வொருவரும் தமது மரியாதையையும், பெருமையையுமே விரும்புகிறார் கள். அதனால் நாம் மற்றவர்களுக்கும் மரியாதையும், பெருமையும் அளிக்கவேண்டும்.

வினா: தாயார், தன் மகனின் பக்கத்தில் சேர்ந்து மருமகளைத் துன்புறுத்தினால், மருமகள் என்ன செய்ய வேண்டும்?

விடை: "இவர்கள் இந்த வீட்டின் யஜமானர்கள். நான் வேறொரு வீட்டிலிருந்து வந்திருக்கிறவள். அதனால் இவர்கள் என்ன சொன்னாலும், என்ன செய்தாலும், அவர்கள் சொல்படிதான் நான் நடக்கவேண்டும். அதனால், அவர்களுடன்

அனுசரணையாக இருக்கமுடியும்" - என்று மருமகள் எண்ணவேண்டும். மருமகள், மாமியாரிடம் நல்லமுறையில் பழகவேண்டும்; வெறுப்புக்காட்டக் கூடாது. அவள் தன்னுடைய நல்ல கருத்துக்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருக்க வேண்டும்; சிந்தனையில் மாசுபடிவதற்கு இடம் கொடுக்கலாகாது. "கடவுளே! இவர்களுக்கு நல்ல புத்தி கொடுங்கள்; எனக்கு பொறுமை கொடுங்கள்" என்று பகவானிடம் அவள் பிரார்த்தனை செய்யவேண்டும்.

வினா: தன் கணவனும், மாமனாரும் தங்களுக்குள் சண்டையிட்டால், மனைவி என்ன செய்யவேண்டும்?

விடை: மனைவி, தன் கணவனுக்கு இப்படி அறிவுரை கூறுவதுதான் அவளுடைய கடமை: "வீட்டில் என்னென்ன உள்ளனவோ, அவையெல்லாம் அப்பா வினுடையவை. உங்கள் அம்மாவையும் அப்பாதான் அழைத்து வந்தார். சொத்து-பத்து, நிலம்-நீச்சு, வீடு, கௌரவம் முதலியன எல்லாம் அப்பா சேர்த்து வைத்துள்ளவை. அதனால் எல்லாவிதத்திலும் அவருக்கு மரியாதை காட்டவேண்டும். அவருடைய சொற்களை ஏற்பது நியாயம்; தர்மம்; உங்களுடைய கடமையும்கூட. எழுத்து மூலமான ஒப்பந்தம் எதுவும் இல்லாமலேயே அவர்களுடைய செல்வத்திற்குத் தாமாகவே வாரிசாகிவிட்டீர்கள். ஆகவே அவர்கள் எதைச் சொன்னாலும் மதித்து நடக்கவேண்டும். உங்களுடைய உடலாலும், மனத்தாலும், சொல்லினாலும் அவருக்கு மரியாதை காட்டவேண்டும், எப்போதாவது அவருக்குக் கோபம் வந்து, ஏதாவது சொன்னாரானால், "அவரைப்போல என் நலனில் நாட்டமுடையவர் வேறு யாருமிலர்" என்று எண்ணிக் கொள்ளவேண்டும். ஆதலால் அவருடைய உள்ளம் ஒருபொழுதும் துக்கப்படுத்தப்படக் கூடாது. நானேகூட கொஞ்சம் சரியில்லாதபடி பேசினால் என்னை ஒதுக்கிவிட்டு, அப்பாவின் சொல்லைத்தான் கேட்கவேண்டும்."

வினா: கணவனும், மகனும் தங்களுக்குள் சண்டையிட்டால் அந்தப் பெண் என்ன செய்யவேண்டும்?

விடை: பெண், தன் கணவரின் கட்சியில் இருக்கவேண்டும்; மகனிடம், "பிள்ளாய்! உன்னுடைய அப்பா என்ன சொன்னாலும், ஏது செய்தாலும் உண்மையிலே அவருடைய மனசில் உன்னுடைய நலனில்தான் நாட்டம் இருக்கிறது. ஒருபொழுதும் அவர் உனக்கு நன்மை பயக்காததைச் செய்யமாட்டார்; அப்படி வேறு யாராவது உனக்குக் கெடுதல் செய்தால், அவரால் பொறுத்துக் கொள்ள முடியாது. அதனால், இந்த விஷயங்களையெல்லாம் மனசில் வைத்துக் கொண்டு, உன் அப்பாவுக்குப் பணிவிடை செய்வதில் முனைந்திருக்க வேண்டும். நீ என்னிடம் கொஞ்சம் குறைவாக மரியாதை காட்டலாம்; ஆனால் அப்பாவுக்கு அதிகமாக மதிப்பு அளிக்கவேண்டும். உண்மையில் அவர்தான் நம்முடைய யஜமானர். நீ என்னிடம் மரியாதை குறைவாகக் காட்டினால் நான் கோபித்துக் கொள்ள மாட்டேன்; எப்படியும் உன் அப்பாவுக்குக் கோபம் வரக்கூடாது. முகமலர்ச்சியோடு அவர் இருக்கவேண்டும் என்று நான் விரும்புகிறேன்; மலர்ந்த முகத்தோடு அவர் இருக்கும்படி பார்த்துக் கொள்வது உனக்கும் ஒரு கடமை ஆகும்."

வினா: தன்னுடைய மனைவியும், மகனும் தங்களுக்குள் சண்டையிட்டால், ஆடவனின் கடமை என்ன?

விடை: அவர் மகனிடம், "மகனே! அம்மாவை முகமலர்ச்சியோடு வைத்துக் கொள்வது உன்னுடைய சிறப்பான கடமை. வாழ்க்கையில் ஏற்படும் உறவுகள் எல்லாவற்றிலும், அம்மாவுடனான உறவு உயர்

வானது. அதனால், உன் மனைவியின் வசத்துக்கு ஆட்பட்டு, அம்மாவின் மனத்தைத் துக்கப்படுத்தாதே" - என்று சொல்லவேண்டும்.

மனைவியிடம், "நீ இவனை உன் வயிற்றில் சுமந்திருக்கிறாய்; பெற்றெடுத்திருக்கிறாய்; பால் ஊட்டியிருக்கிறாய். உன்னுடைய மடியில் மலஜலம் கழித்தபோதும் இவனிடம் கோபப்படவில்லை. பதிலாக, முகமலர்ச்சியோடு, ஆர்வத்தோடுகூட துணியைத் துவைத்துப் போட்டிருக்கிறாய். இப்போது இவன் கொஞ்சம் கடுமையாகப் பேசினால், "இவன் என் அன்புக்குரிய பிள்ளை" என்று நினைத்துக் கொண்டு, மன்னித்துவிடு. ஏனென்றால், நீ அம்மா ஆயிற்றே. பிள்ளை, கெட்ட பிள்ளை ஆகலாம்; ஆனால், அம்மா, கெட்ட அம்மா ஆக முடியாது - ***"குபுத்ரோ ஜாயேத க்வசித$_3$பி குமாதா ந ப$_4$வதி" ।***

வினா: குடும்பத்தில் அன்பு, மகிழ்ச்சி, அமைதியை எப்படி கட்டிக் காக்க வேண்டும்?

விடை: மனிதன் தன்னுடைய லக்ஷியங்களை மறக்கும் போதுதான், எல்லா இடைஞ்சல்களும், ஆபத்துக்களும் வருகின்றன. அவன், தன் லக்ஷியத்தில் விழிப்புடன் இருந்து, "எது வேண்டுமானாலும் நடக்கட்டும்; எனக்கு, என்னுடைய ஆன்மிக முன்னேற்றம்தான் குறி" என்றிருந்தால், அவன் ஸுக-துக்கத்தைக் கணக்குப் பார்ப்பதில்லை. ***"மனஸ்வீ கார்யார்தீ$_2$ ந க$_3$ணயதி து$_3$:க$_2$ம் ந ச ஸுக$_2$ம் ॥"*** தன்னுடைய சுயநலத்தையும், செருக்கையும் த்யாகம் செய்வதில், அவனுக்கு எவ்விதக் கஷ்டமும் ஏற்படுவதில்லை. தன்னலமும், செருக்கும் த்யாகம் செய்யப்படுவதால், அவனுடைய கார்யங்களில் எந்த விதமான இடைஞ்சலோ, தடையோ ஏற்படுவதில்லை.

காரியங்களில் பரஸ்பரம் அன்பு பாராட்டுவதில் தடை எப்போது வருகிறது என்றால், எப்போது மனிதன் தன் செருக்கைக் காட்டுகிறானோ, தன்னுடைய விருப்பம் நிறைவேற வேண்டும் என்று விரும்புகிறானோ, தன் நலத்தை சாதித்துக் கொள்ள விரும்புகிறானோ, அப்போதுதான்.

மற்றவர்களுக்கு நன்மை உண்டாக என்ன செய்யவேண்டும்? அவருக்கு க்ஷேமம் உண்டாக, மட்டு-மரியாதை ஏற்பட, ஸுக-சௌக்யம் கிடைக்க என்ன செய்யவேண்டும்? - இந்த எண்ணம் எப்போது நடவடிக்கைகளில் வருமோ, அப்போது குடும்பத்திலுள்ள அனைவரும் மகிழ்ச்சியோடிருப்பார் கள். ஒரு குடும்பி, ஏதேனும் ஒரு சமயத்தில் மகிழ்ச்சி அற்றவனானாலும், அவனுடைய மகிழ்ச்சியின்மை நீடித்து இருக்காது, நிலைத்து நிற்காது. ஏனென்றால், அவன் இதுபற்றி நன்றாக ஆராய்ந்து பார்க்கும்போது, "என்னுடைய நலன், இதில்தான் இருக்கிறது" என்ற எண்ணம் புலனாகும். வேடிக்கை-விளையாட்டில் மனம் ஆழ்ந்து போவதால் சிறுவனுக்குப் படிப்பு வேண்டாததாகப்படுகிறது என்பதை எடுத்துச் சொன்னால், விளைவு அவனுக்கு நன்மையான தாகவே ஆகும். அதுபோலவே, நல்லதான ஒரு விஷயம், ஒருவருக்குக் கெடுதலாகப்பட்டால், அவருக்கு அந்தச் சமயத்தில் அதிலுள்ள நன்மை தெரியாமற்போனாலும், பின்னால் ஒரு காலத்தில் அறிவுக்குப் புலப்படவே செய்யும். ஒருக்கால் அவன் அறிவுக்கு எட்டாமலே போய்விட்டாலும், அவனுடைய நலனையே விரும்புகிற நமக்கு நம்முடைய எண்ணத்திலும், நடத்தையிலும் த்ருப்தி உண்டாகும். நம்முடைய சிந்தனைப்போக்கு உண்மையானது,

திடமானது என்பதில், ஓர் உள்ளார்ந்த ஆற்றல் பெறப்படுகிறது.

தங்களுக்குள் அன்பு பாராட்டுவதாலேயே குடும்பத்தில் ஸுகமும், அமைதியும் நிலைக்கும். சுயநலத்தையும், தற்பெருமையையும் த்யாகம் செய்வதால் அன்பு தோன்றும். எங்கே தன்னலமும், தற்பெருமையும் இல்லையோ, அங்கே அன்பைத் தவிர வேறு என்ன தோன்ற முடியும்? ஒருவன் சுயநல வசப்பட்டு, நம்மை இழிவாய் நடத்தினான் என்றால், "நான் இவனுடன் நல்லமுறையில் பழகுகிறேன். அப்படியும் இவன் என்னிடம் முகமலர்ச்சியோடு இல்லை. என்ன செய்வது?" என்ற எண்ணம் எப்போதாவது தோன்றும். இவ்வித எண்ணம் தோன்றுவதற்குக் காரணம், நமக்குள் மறைந்து கிடைக்கும் ஸுக-வேட்கையே. ஏனென்றால், பிற மனிதருடைய அப்போதைய முகமலர்ச்சியினால், நமக்கு ஒருவித இன்பம் உண்டாகிறது. ஆதலால், இந்த ஸுக-வேட்கையை அடையாளம் கண்டுகொண்டுவிட்ட உடனேயே, அதைத் துறந்துவிட வேண்டும். ஏனென்றால், நம்முடைய கடமையைச் செய்வது, மற்றவர்களுக்கு மரியாதை அளிப்பது, அவர்களிடம் அன்பு செலுத்துவது - இதுவே நாம் செய்யவேண்டியது. நம்முடைய எண்ணம்-நடத்தைகளின் தாக்கம் அவர்மேல் நிகழும். ஆம், கடின சித்தம் உள்ளவராக இருப்பதால், அவரிடம் தாக்கம் ஏற்படாமற்போனாலும் நம்மைப் பொறுத்தவரையில், நல்லதே செய்தோம் - என்ற அளவில் த்ருப்தி உண்டாகும். த்ருப்தி உண்டாவதால் நம்முடைய அன்பு வளரும்; குடும்பத்தில் ஸுகமும், அமைதியும் நிலவும்.

ஸ்வாமி ஸ்ரீராம்ஸுகதாஸ் ஹிந்தியில் அருளிய ஆன்மிகக் கருத்துக்களின் தமிழாக்கம்

		பக்கங்கள்	விலை
1.	கீதா மாதுர்யம்	235	8.00
2.	கர்ம ரஹஸ்யம்	72	3.00
3.	சரணாகதி	84	3.00
4.	உருவ வழிபாடு	64	1.00
5.	தூய்மையான உணவுப்பழக்கம்	64	1.00
6.	திருநாமஜபத்தின் மஹிமை	64	1.00
7.	பிள்ளைகளின் கடமைகள்		
8.	மஹாபாபத்திலிருந்து உன்னைக் காத்துக் கொள்		
9.	"ஒன்றே செய்யின்! நன்றே செய்வீர்!"		
10.	பகவானை அடைவது எளிதே		
11.	பயனுள்ள சொற்பொழிவுகள்		

ஸ்வாமி ஸ்ரீஜயதயால்ஜீ கோயந்தகா ஹிந்தியில் அருளிய ஆன்மிகக் கருத்துக்களின் தமிழாக்கம்

1. கீதை கற்பதன் பயன்கள்
2. ஸத்ஸங்கத்தின் ஸாரமான தத்வங்கள்

ஸ்வாமி ராம்ஸுகதாஸ் ஹிந்தியில் அருளிய ஆன்மிகக் கருத்துக்களின் தமிழாக்கம்

	பக்கங்கள்	விலை
கீதா மாதுர்யம்	235	8.00
கர்ம ரஹஸ்யம்	72	3.00
சரணாகதி	84	3.00
உருவ வழிபாடு	64	1.00
தூய்மையான உணவுப்பழக்கம்	64	1.00
திருநாமஜபத்தின் மஹிமை	64	1.00

விரைவில் வெளிவர இருப்பவை
[ஸ்வாமி ராம்ஸுகதாஸ் அருளியவை]

பிள்ளைகளின் கடமைகள்

மஹாபாபத்திலிருந்து உன்னைக் காத்துக் கொள்

கிடைக்குமிடம்:
கோபால் சேவா டிரஸ்ட்,
82, கிருஷ்ணா டாக்கீஸ் ரோடு,
ஈரோடு - 638 003.
தொலைபேசி: 212902,211668

गृहस्थमें कैसे रहें? (तमिल)

Śrī Hari

Our English Publications